2868

# T. N. L. A Debates

OFFICIAL REPORT

VOL: XI NO: 1

July 1st 1985

D 1
V211, 31 N85

N85. 11.1;1
136407

# தமிழ்நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

# TAMILNADU

# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT


திங்கட்கிழமை, 1985 ஜூலை 1—தொகுதி XI-எண். 1

Monday the 1st July 1985—Volume XI-No. 1.



சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600009

**Legislative Assembly Department, Fort St. George,**

**Madras-600 009**


விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

| | பக்கங்கள். |
|---|---|
| **5. அரசினர் தீர்மானம் :** | 44—58 |
| வணிக ஒற்றுமை இதழ் ஆசிரியர் திரு. பால்ராஜ் மீது உரிமைக் குழு பரிந்துரையின்மீது நடவடிக்கை. | |
| **6. வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு : (தொடர்ச்சி)** | |
| (அ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத்துறை. | 59—69 |
| மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் | 59, 66—69 |
| திரு. ஏ.எஸ். ரவீந்திரன் | 59—61 |
| திரு. சு. பாலன் | 61—65 |
| திரு ஜே. ஹேமச்சந்திரன் | 65—66 |
| (ஆ) கோரிக்கை எண். 30—சமூக நலன். | 70—85<br>86—96<br>96—135 |
| மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் | 70, 123—135 |
| திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் | 70—79 |
| திருமதி. பா. வளர்மதி | 79—85 |
| திரு. ம. ஆபிரகாம் | 86—89 |
| திரு. சா. துரைசாமி | 89—96 |
| திரு. எம். செல்லமுத்து | 96—103 |
| திரு. பாப்பா சுப்பிரமணியன் | 103—108 |
| திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் | 108—114 |
| திரு. பொ. உத்திராபதி | 114—123 |
| **7. அறிவிப்பு :** | 85 |
| பேரவை அலுவல் | |
| **8. அறிக்கை அளித்தல் :** | 96 |
| மின் வெட்டைத் தளர்த்துவது குறித்து மின் துறை அமைச்சரின் அறிக்கை | |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.** | 136 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

**திரு. சுந்தர்லால் குரானா**

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: *(முதலமைச்சர்)*—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகு கழிவு, தொல்பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *(நிதி அமைச்சர்)*—நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: *(மின் துறை அமைச்சர்)*—மின்சாரம், இரும்பு, எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : *(தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)*—தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: *(செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)*—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் : *(தொழில் துறை அமைச்சர்)*—பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : *(உள்ளாட்சித் துறை அமைச்சர்)*—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப் பட்டவை.

8, மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் *(கல்வி அமைச்சர்)*—கல்வி ஆட்சிமொழி தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. **மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம், (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள்பற்றி சட்டம் இயற்றல் உள்பட).

11. **மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுசூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. **மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. **மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. **மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** (கைத்தறித் துறை அமைச்சர்)—கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. **மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

16. **மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** (வணிக வரித் துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

17. **மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** (வீட்டு வசதித் துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. **மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

19. **மாண்புமிகு திரு. த. இராமசாமி:** (மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.



2868

20. **மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** (ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. **மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

22. **மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. **மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி:** (கதர்த்துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. **மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** (பொதுப்பணித் துறை அமைச்சர்)—பொதுப்பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. **மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

**Thiru. SUNDAR LAL KHURANA**

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS :

1. **The Hon. Dr. M. G. RAMACHANDRAN** : (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy, Prohibition excluding grant of Liquor permits, Excise and Passports.

2. **The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN** : (Minister for Finance)—Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps, and Ex-servicemen.

3. **The Hon. Thiru S. RAMACHANDRAN**: (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. **The Hon. K. A. KRISHNASAMY**: (Minister for Labour)—Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. **The Hon. Thiru R. M. VEERAPPAN**: (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits.

6. **The Hon. Thiru K. RAJARAM** : (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. **The Hon. Thiru P. U. SHANMUGAM** : (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. **The Hon. Thiru C. ARANGANAYAGAM** : (Minister for Education)—Education, Official Language, Tamil Development and Culture.

9. **The Hon. Dr. K. KALIMUTHU**: (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

10. **The Hon. Thiru C. PONNAIYAN** : (Minister for Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. **The Hon. Dr. H. V. HANDE** : (Minister for Health)—Health and Enviromental Pollution Control.

12. **The Hon. Thiru S. MUTHUSAMY** : (Miniter for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Acts, Ports and Highways.

13. **The Hon. S. THIRUNAVUKKARASU** : (Minister for Food)—Food, Price Control and Census.

14. **The Hon. Thiru V. V. SWAMINATHAN** : (Minister for Handlooms)—Handlooms and Textiles.

15. **The Hon. Thiru R. SOUNDARARAJAN** : (Minister for Nutritious Meals)—Nutritious Meals.

16. **The Hon. Thiru T. VEERASAMY** : (Minister for Commercial Taxes)—Commercial Taxes.

17. **The Hon. Thiru N. NALLUSAMY** : (Minister for Housing)—Housing and Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

18. **The Hon. Thiru Anoor P. G. JAGADEESAN** : (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries.

19. **The Hon. Thiru T. RAMASAMY**: (Minister for Rehabilitation and Employment)—Employment and Training, Indians Overseas Refugees and Evacuees.

20. **The Hon. Thiru A. ARUNACHALAM** : (Ministes for Adi-Dravidar Welfare)—Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. **The Hon. Thiru M. R. GOVENDAN**: (Minister for Backward Classes)—Backward Classes and Fisheries.



22. **The Hon. Tmt. GOMATHI SRINIVASAN** : (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

23. **The Hon. Tmt. VIJAYALAKSHMI PALANISAMY** : (Minister for Khadi)—Khadi, Bhoodan and Gramdhan.

24. **The Hon. Thiru Y. S. M. YUSUF** : (Minister for Public Works)—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. **The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN** : (Minister for Co-operation)—Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத்தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. சின்னராசு
திரு. செ. செம்மலை
திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்
திரு. மு. இராமநாதன்
திரு. வே. இரா. ஜெயராமன்

### சட்டமன்ற பேரவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### இணைச் செயலாளர்

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

### குழு அலுவலர்கள்

திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி.
திரு. கு. அ. சீனிவாசன், பி.ஏ.

### சார்புச் செயலாளர்கள்

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்.சி. பி.எல்.

**எஸ்டேட் அலுவலர்கள்**

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

திரு. கேசவராம், பி.ஏ.

**பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்**

திரு. பி. கோதண்டராமன்

**துணைச் செயலாளர் (பதிப்பாளர்)**

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

**தலைமை நிருபர்**

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்எல்.பி.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப்பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 1. அப்துல் சமத், திரு. ஆ.கா.அ. | திருவல்லிக்கேணி |
| 2. அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி |
| 3. அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 4. அரிக்குமார், திரு. இரா. | பெரணமல்லூர் |
| 5. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 6. அருணாசலம் திரு. எ. | வரகூர் (செ. வ.) |
| 7. அன்பழகன், திரு. க. | பார்க்டவுன் |
| 8. அன்பழகன், திரு. சே. | ஓமலூர் |
| 9. அன்பழகன், திரு. தி. | நாட்றாம்பள்ளி |
| 10. அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி |
| 11. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லை சாந்தி | ஆண்டிமடம் |
| 13. ஆபிரகாம், திரு. ம. | ஆலந்தூர் |
| 14. ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி |
| 15. ஆறுமுகம், திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 16. ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | ஓட்டபிடாரம் (செ. வ.) |
| 17. ஆறுமுகம், திரு. எ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 18. ஆறுமுகம், திரு. செ. | மதுராந்தகம் |
| 19. ஆறுமுகம், திரு. சேலம், மு. | சேலம்-2 |
| 20. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி |
| 21. ஆனந்தன், திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 22. இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 23. இரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 24. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25. இரத்தினவேலு, திரு. சே. | முசிறி |
| 26. இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ. வ.) |
| 27. இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம் |
| 28. இராசரத்தினம், திரு.எப்.எம். | கொளச்சல் |
| 29. இராசரத்தினம் என்கிற மணி, திரு. எம். | விழுப்புரம் |
| 30. இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர் |
| 31. இராசாம்பாள், திருமதி த. | தலைவாசல் (செ. வ.) |
| 32. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 33. இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 34. இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ. வ.) |
| 35. இராசேந்திரன், திரு.எஸ்.என், | தூத்துக்குடி |
| 36. இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37. இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 40. இராமச்சந்திரன், திரு. சோ. மா. | அண்ணாநகர் |
| 41. இராமச்சந்திரன், திரு. ப.ந. | பட்டுக்கோட்டை |
| 42. இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம் |
| 43. இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 44. இராமநாதன், திரு. மு. | கோயம்புத்தூர் (மேற்கு) |
| 45. இராமலிங்கம், டாக்டர் கே.பி. | ராசிபுரம் |
| 46. இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 47. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48. உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 49. உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50. எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 51. கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52. கதிர்வேலு, திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53. கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54. கந்தசாமி, திரு. பெ. | பொங்கலூர் |
| 55. கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 56. கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 57. காளிமுத்து, டாக்டர். கா. | மதுரை (கிழக்கு) |
| 58. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 59. கிருஷ்ணசாமி, திரு. வி.இரா. | அணைக்கட்டு |
| 60. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம் |
| 61. கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 62. குப்புசாமி, திரு. கு. | ஒட்டன்சத்திரம் |
| 63. குமர குருபர ராமநாதன் திரு. ச. | விளாத்திக்குளம் |
| 64. குமரி அனந்தன், திரு. | ராதாபுரம் |
| 65. குமாரதாஸ் டாக்டர், தே. | கிள்ளியூர் |
| 66. குருசாமி என்கிற அண்ணா தாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 67. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ. வ.) |
| 68. கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம் |
| 69. கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி |
| 70. கோவேந்தன், திரு. எம். ர். | பேராவூரணி |
| 71. சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ. வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 72. சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 73. சண்முகம், திரு. என். | சோளிங்கர் |
| 74. சண்முகம், திரு. ப. உ. | மேல் மலையனூர் |
| 75. சண்முகையா பாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 76. சந்திரசேகரன், திரு. ஆ. | சோழவந்தான் |
| 77. சந்திரசேகர், திரு. மு. | முகையூர் |
| 78. சம்சுல் ஆலம், திரு. வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை |
| 79. சமரசம், டாக்டர் கோ. | காவேரிப்பட்டினம் |
| 80. சரோஜா திருமதி. இரா. | உப்பிலியாபுரம் (ஆ. வா.) |
| 81. சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ. வா.) |
| 82. சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 83. சிந்தன், திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 84. சிவக்குமார், திரு. ஆ. | சமயநல்லூர் (செ. வ.) |
| 85. சிவக்குமார், திரு. எம். | கூனூர் (செ. வ.) |
| 86. சிவஞானம், திரு. என். | திருவோணம் |
| 87. சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 88. சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 89. சிவராஜ், திரு. க. | ரிஷிவந்தியம் |
| 90. சின்னக்குழந்தை, திரு. மு. | ஆரணி |
| 91. சின்னச்சாமி, திரு. ரா. | தர்மபுரி |
| 92. சின்னசாமி, திரு. வே. கு. | பவானிசாகர் |
| 93. சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 94. சின்னராசு, திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96. சுப்புராயர், திரு. சி. | கம்பம் |
| 97. சுப்பராயன், திரு. கு. | திருப்பூர் |
| 98. சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன் திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 99. சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 100. சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 101. சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 102. செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 103. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 104. செங்கோட்டையன், திரு. பெ | கபிலர்மலை |
| 105. செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 106. செல்லமுத்து, திரு. மொ. | திருவாரூர் (செ. வ.) |
| 107. செல்லப்பா, திரு. வி. கோ. | கடலூர் |
| 108. செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 109. சேகர் என்கிற குலசேகரன் திரு. கே. பி. | பொன்னேரி (செ. வ.) |
| 110. சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடனை |
| 111. சோலைராசு, திரு. க. | மருங்காபுரி |
| 112. சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 113. சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114. சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராய நகர் |
| 115. ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி |
| 116. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 117. தங்கமணி, திரு. மு. | மாயூரம் |
| 118. தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 119. தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120. தங்கராசு, திரு. செ. | மங்களூர் (செ. வ.) |
| 121. தங்கவேல்ராஜ், திரு. ப. ம. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 122. தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ. வ.) |
| 123. தமிழ்மணி, திரு. | திருப்போரூர் (செ. வ.) |
| 124. தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ. வ.) |
| 125. தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 126. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127. தியாகராசன், திரு. ர. | விருத்தாசலம் |
| 128. திருஞானம், திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ. வா.) |
| 129. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 130. திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 131. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர் |
| 132. தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு |
| 133. துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம், திரு. | நெல்லிக்குப்பம் |
| 134. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 135. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136. துரைராசு, திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 137. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 138. தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 139. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 140. நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 141. நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142. நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 143. நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ. வ.) |
| 144. நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி—2 |
| 145. நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 146. நாராயணன், திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147. நாராயணன், திரு. பு. கோ. | பவானி |
| 148. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150. பரமசிவம், திரு. பா. ந. | பல்லடம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 151. பரிதி இளம்வழுதி, திரு. | பெரம்பூர் |
| 152. பழனி, திரு. த. | ஆற்காடு |
| 153. பழனிச்சாமி, திரு. கா. செ. | காங்கேயம் |
| 154. பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 155. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 156. பாண்டுரங்கன், திரு. மு. | கலசப்பாக்கம் |
| 157. பாப்பா சுப்பிரமணியன், திரு. | குத்தாலம் |
| 158. பாரதி, திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |
| 159. பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ. வ.) |
| 160. பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161. பாலகிருஷ்ணன், திரு. வ. | சிவகாசி |
| 162. பாலச்சந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம் |
| 163. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 164. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165. பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 166. பாலன், திரு. சு. | எழும்பூர் |
| 167. பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168. பாலுச்சாமி, திரு. ஏ. | பரமக்குடி (செ. வ.) |
| 169. பாலுசாமி, திரு. அ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 170. பிச்சை, திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 171. பிரணவநாதன், திரு. அ. | கடலாடி |
| 172. பிரேம்குமார், திரு. ஆ. | திண்டுக்கல் |
| 173. புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர் |
| 174. பஷ்பராசு, திரு. த. | திருமயம் |
| 175. பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ. வ.) |
| 176. பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 177. பெருமாள், திரு. தெ. | கடையநல்லூர் |
| 178. பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |
| 179. பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | பழனி (செ. வ.) |
| 180. பொன்னுசாமி, டாக்டர். அ. | பெருந்துறை |
| 181. பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 182. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 183. மணவாளன், திரு. எஸ்.பி. | திருப்பத்தூர் |
| 184. மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ. வ.) |
| 185. மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி—1 |
| 186. மனோகரன், திரு. நாஞ்சில் கி. | புரசைவாக்கம் |
| 187. மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 188. மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டம் |
| 189. மாதவன், திரு. செ. | திருப்பத்தூர் |
| 190. மாதையன், திரு. யு. பி. | அந்தியூர் (செ. வ.) |
| 191. மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ. வ.) |
| 192. மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 193. மீனாட்சி சுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 194. முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 195. முகமது சலீம், டாக்டர் த. | பெரியகுளம் |
| 196. முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை |
| 197. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 198. முத்துராமலிங்கம், திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 199. முத்துராமலிங்கம், திரு. பொன். | மதுரை மேற்கு |
| 200. முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 201. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 202. முருகன், திரு. கி. | செய்யாறு |
| 203. முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி |
| 204. முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 205. யசோதா, திருமதி. டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.) |
| 206. ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207. ரவீந்திரன், திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208. ராமஜெயம், திரு. ம. நா. | வானூர் (செ. வ.) |
| 209. ராமன், திரு. கி. | ராஜபாளையம் (செ. வ.) |
| 210. ராஜாபாபு, திரு. ஜெ. | போளூர் |
| 211. ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி |
| 212. ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213. லட்சுமி, திருமதி. பி. | அவினாசி (செ. வ.) |
| 214. வச்சிரவேலு, திரு. எ. | தண்டராம்பட்டு |
| 215. வடிவேல், திரு. கு. | கரூர் |
| 216. வளர்மதி, திருமதி. பா. | மயிலாப்பூர் |
| 217. விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 218. விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | வீரபாண்டி |
| 219. வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 220. வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டிணம் |
| 221. வீராசாமி, திரு. தா. | ஒரத்தநாடு |
| 222. வேங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி |
| 223. வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 224. வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 225. வெங்கடாசலம், திரு. கி. | லால்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| 226. வெங்கடாசலம், திரு. டி. எம். | பர்கூர் |
| 227. வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர். |
| 228. வேணுகோபால், திரு. கே. வி. | தள்ளி |
| 229. ஜான் வின்செண்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 230. ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. | செங்கல்பட்டு |
| 231. ஜெகதீசன், திரு. சு. | அரவக்குறிச்சி |
| 232. ஜெயச்சந்திரன், திரு. சா. | காட்டுமன்னார்கோவில் (செ. வ.) |
| 233. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235. பிரான்சிஸ், திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன், அமைச்சர்.
2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே, அமைச்சர்.
3. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப், அமைச்சர்.
4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி, தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### 1985, ஜூலை 1, திங்கட்கிழமை.

### ஆனி 17, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பதாகும் அறிவு."

சேர்ந்த நிலத்தின் இயல்பால் நீர் வேறுபட்டு அந்நிலத்தின் தன்மை உடையதாகும். அதுபோல் மக்களுடைய அறிவு இனத்தின் இயல்பினை உடையதாகும்.

### 1. அறிவிப்பு.

**பேரவைச் செயலாளராகவும் பேரவைச் செயலகத்தின் ஆணையர்-செயலாளராகவும் திரு. சி. கு. இராமசாமி அவர்கள் பதவியேற்பு.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைச் செயலாளராகவும், பேரவைச் செயலகத்தின் ஆணையர்-செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ள திரு சி. கு. இராமசாமி அவர்கள் நேற்று மாலையில் இருந்து பதவி ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 2. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### பரிசுச் சீட்டு விற்பனையில் வருமானம்

434—(*வினா எண். 816) திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லாட்டரி டிக்கெட் மூலம் அரசுக்கு கிடைக்கும் வரி எவ்வளவு ?

(ஆ) தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு விற்பனையில் 1982—83, 1983—84, 1984—85 ஆகிய ஆண்டுகளில் வருமானம் எவ்வளவு?

[1985 ஜூலை 1

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே (அ) லாட்டரி டிக்கட்டின்மீது விற்பனைவரி மூலம் அரசுக்கு 28–1–84 முதல் 31–3–85 வரை கிடைத்த வருவாய் கீழ்வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| (i) தமிழ்நாடு பரிசுச்சீட்டு மூலம் | .. | ரூ. | 50,11,387 |
| (ii) பிற மாநில பரிசுச்சீட்டுகளின் மூலம் | | ரூ. | 1,24,09,995 |
| ஆக மொத்த வருவாய் | .. | ரூ. | 1,74,21,382 |

(ஆ) தமிழ்நாடு பரிசுச்சீட்டு விற்பனையில் 1982–83, 1983–84 மற்றும் 1984–85 ஆகிய ஆண்டுகளில் கிடைத்த வருமானம் :

| | | | |
|---|---|---|---|
| 1982–83-ல் | .. | ரூ. | 2,76,81,951 |
| 1983–84-ல் | .. | ரூ. | 53,97,031 |
| 1984–85-ல் | .. | ரூ. | 49,46,458 |

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலப் பரிசுச் சீட்டுகளைப் பொறுத்தவரையில் வரி செலுத்தாமல் கள்ளத்தனமாக விற்பனை செய்பவர்களின்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதை வணிக வரித் துறையினர் கண்காணித்து வருகிறார்கள் என்பதோடு மட்டுமல்ல, ஆங்காங்கு வரி கட்டாமல் ஏய்க்கின்றவர்களை கண்டுபிடிக்கின்ற வகையில் ஆங்காங்கு காவல் துறையினர் கண்காணித்து வருகிறார்கள். அப்படி மோசடி செய்பவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அச்சிடக்கூடிய லாட்டரி சீட்டுகளைப் பொறுத்தவரையில் அதிகமாக இலாபம் இல்லை என்ற நோக்கத்தோடு, வெளி மாநிலங்களிலே உள்ள சீட்டுகளை வாங்கி விற்பதில்தான் விற்பனையாளர்கள் அதிகமாக ஆர்வம் காட்டுகிறார்கள். எனவே, இத்தகைய வெளி மாநில சீட்டுகளை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்தி நமது மாநிலத்தில் வெளியிடப்படும் சீட்டுகளை அதிகமாக விற்பதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1985 ஜூலை 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களின் லாட்டரி சீட்டுகளைப் பொறுத்தவரையிலும் அந்தந்த மாநிலங்களால் முடிவு செய்யப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு மாநிலமும் ஒன்றுக்கொன்று உடன்பாடு செய்து கொள்வதன் மூலம் இந்தப் பரிசுச்சீட்டுகள் அந்தந்த மாநிலங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. பிற மாநிலங்கள் 75 இலட்சம், 1 கோடி, 1 கோடிக்கு மேல் என்று லாட்டரி சீட்டுகளை விற்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் அந்த அளவிற்குப் போகக்கூடாது என்று இருக்கிறோம். மத்திய அரசுக்கேகூட நாம் எழுதியிருக்கிறோம், இதிலே ஒரு உச்சவரம்பு கட்டி, இதற்குமேல் லாட்டரிச் சீட்டுகளின் அளவு இருக்கக் கூடாது என்று ஒட்டுமொத்தமாக ஒரு சட்டத்தை மத்திய அரசே கொண்டுவந்து அகில இந்தியாவிலேயும், எல்லா மாநிலங்களிலேயும் வற்புறுத்துவார்களேயானால் ஓரளவிற்கு நன்மை ஏற்படக்கூடும் என்பதைப்பற்றி நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். தமிழகத்தில், சிறப்புக் குலுக்கல் சீட்டு என்று நான்கு தடவைகள் நடத்தி வருகிறோம். ஒவ்வொரு தடவையும் பத்து இலட்சம் முதல் பரிசு என்று வைத்திருந்தோம். 20 இலட்சம் என்ற அளவிற்கு தற்போது உயர்த்தியிருக்கிறோம்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய புதிய உத்தரவின் காரணமாக, அதாவது 20 சதவீதம் டாக்ஸ் என்று லாட்டரிச் சீட்டுகளுக்கு வரி விதிப்பதன் காரணமாக தமிழ்நாட்டிலே லாட்டரிச் சீட்டு ஏஜண்டுகளாக இருந்தவர்கள் கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் தமிழ்நாட்டின் எல்லையில் இவர்களுடைய விற்பனை மையங்களை ஏற்படுத்திக்கொண்டு பழைய அந்த விற்பனையை செய்வதால் தமிழ்நாடு அரசு போட்ட உத்தரவின் நோக்கம் நிறைவேறவில்லை என்பதை அரசு அறியுமா ? அல்லது அதுபோன்ற நிலைகளில், கள்ளத்தனமாக லாட்டரிச் சீட்டுகள் விற்பனை ஆவதைத் தடுப்பதற்கு விற்பனை வரித் துறை நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுவும் வரவேற்கத் தகுந்த அம்சம்தான் என்றாலும் நம்முடைய வருமானம் எந்த நோக்கத்திற்காக, 20 சதம் வரி விதிக்கப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறாத நிலையில், அதை மாற்றி, நாம் எதிர்பார்க்கும் வருமானம் வரக்கூடிய அளவுக்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி மறு பரிசீலனை செய்திருக்கிறதா ? மாநில எல்லைகளிலே விற்பனை மையங்களை ஏற்படுத்திக்கொண்டு பழையபடியே விற்பனை செய்யப்படுவது தடுக்கப்படுகிறதா ? இதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ? வேலை வாய்ப்பு இழந்திருப்பதை நீக்க, ஏதாவது வழிவகை கண்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டுகளைப் பொறுத்த வரையிலும் ஒவ்வொரு மாநில அரசும் வெளியிடுவதை இந்தியா முழுவதும் விற்பதற்கு உரிமை இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலேதான் பிற மாநிலங்களைச் சேர்ந்த பரிசுச் சீட்டுகளுக்கு 20% என்று விற்பனை வரி வைத்திருக்கிறோம். பிற மாநிலங்களிலே அந்த வரி இல்லை. ஆனால், அந்தப் பரிசுச் சீட்டுகளை எந்த மாநிலத்திலும் விற்கலாம். வாங்குகிறவர்களும் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களும், எந்த மாநிலப் பரிசுச் சீட்டையும் எந்த மாநிலத்திலும் வாங்கலாம் என்ற தன்மை இருப்பதன் காரணமாக, அங்கே வாங்குகிறவர்களை, ஏன் கேரள மாநிலத்திலே வாங்கினீர்கள் என்று கேள்வி கேட்க இயலாது. இந்த வரி விதிப்பின் காரணமாக, இரண்டு நன்மைகள் ஏற்படுகின்றன. 28—1—1984 முதல் 31—3—1985 வரை, பிற மாநிலச் சீட்டுகளுக்கு நாம் 20 சதவிகித வரி விதித்ததன் காரணமாக, ரூ. 1,24,50,995 நமக்குக் கிடைத்திருக்கிறது. நம் மாநிலப் பரிசுச் சீட்டை விற்றதன் காரணமாக ரூ. 50,11,357 நமக்குக் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று, இதிலே சிலபல ஏமாற்றுத் தன்மைகளும், மோசடிகளும் மற்றவைகளும் ஆங்காங்கே நடைபெறுகின்றன.

என்றாலும், வரி போடுவதன் மூலமாக, நாம் அதைத் தீவிரமாகக் கண்காணிக்கவேண்டி இருக்கிறது. இதிலே இரண்டு இலாபம்; ஒன்று அரசுக்கு ஓரளவுக்கு நிதி கிடைக்கிறது. மற்றொன்று, மற்ற மாநில பரிசுச் சீட்டுகள் தாராளமாகவும் ஏராளமாகவும் தமிழகத்திலே வந்து, தமிழகத்தினுடைய நிதி வெளியே போகாத அளவுக்குத் தடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்தியாவிலே அதிகமான அளவு பரிசுச் சீட்டுகள் விற்கப்படுகிற சந்தை, தமிழகத்தைப் பொறுத்துதான் ஏற்பட்டு இருக்கிறது. பிற மாநிலங்கள் தங்கள் பரிசுச் சீட்டுகளில் 75, 80 சதவிகித சீட்டுகளை வாங்குகிற இடம் தமிழகம் என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் வைத்துதான் நம்முடைய பரிசுச் சீட்டை, செம்மையாகவும், சிறப்பாகவும் செய்ய ஆராய்கிறோம். பரிசுச் சீட்டு வாங்க வேண்டுமென்ற உணர்வு மக்களுக்கு இருக்கிறது. அந்த உணர்வைப் பிற மாநிலங்கள் பயன்படுத்தாத அளவுக்கு, நம்முடைய மாநிலத்திற்குப் பயன்படும் வகையில், மாற்றியமைப்பதற்கான திட்டத்தை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982—83ஆம் ஆண்டை விட பின்னால் அரசுக்கு வருவாய் கணிசமான அளவு குறைந்திருக்கிறது. அப்படி குறைந்ததற்கு ஏதாவது தனிப்பட்ட காரணம் உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குப் பிறகு 20 சதவிகிதம் என்று வரி விதித்ததன் காரணமாக, முகவர்கள் நம்மோடு சரியாக ஒத்துழைப்பதில்லை. அவர்கள் மறுபடியும் பழைய நிலைமையே வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தை பொறுத்த வரையில் தமிழக பரிசுச் சீட்டுகள் ஏராளமாக விற்க வேண்டுமென்ற காரணத்தால், ஏற்கனவே போட்ட வரியைச் சேர்த்து, ரூ. 1-20 என்று வைக்காமல், ரூ. 1 என்று வைக்கலாமா என்றும், அதற்கு ஆகின்ற 20 சதவீதம் வரியை அரசே பரிசுச் சீட்டுத் துறைக்குச் செலுத்த ஏற்பாடு செய்து, பிற மாநில பரிசுச் சீட்டுகள் ரூ. 1 20 என்ற விலையில் விற்கின்ற நிலை ஏற்பட்டால், தமிழக பரிசுச் சீட்டு அதிகமாக விற்கப்படுகிற நிலை ஏற்படும் என்ற அளவுக்கு விற்பனை செய்ய இயலுமா என்பதைப் பரிசீலனை செய்கிறோம். ஆனால் முகவர்கள் ஒத்துழைப்பதில்லை. பொதுமக்களிடத்திலே இந்த விற்பனை எந்த விதத்திலே விரிவாக்க இயலும்; அதன் மூலமாக ஏராளமானவர்களுக்குக் கிடைக்க இயலும், அதன் மூலமாக வருகின்ற கமிஷன் பலபேருக்கு கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதையும் ஆராயச் சொல்லி இருக்கிறோம். அந்த ஒரு சூழ்நிலை வருமேயானால் அதிலே ஓரளவுக்குத் திருந்தலாம். அல்லது முகவர்கள் தாங்களே ஏற்று நடத்துகிறோம் என்ற நிலைக்குக் கூட வரலாம்.

திரு. நி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு விற்பனையை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகக் குறைவாகத்தான் விற்கப்படுகிறது. இந்த விற்பனையைப் பார்க்கும்போது ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே வருகிற காரணத்தால் வருமானத்தைப் பெருக்குவதற்கு சிறப்பானத் தனித் திட்டம் அமைக்கப்படுமா? தமிழக அரசு பரிசுச் சீட்டு அதிக அளவில் விற்பதற்கு தனி நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழகப் பரிசுச் சீட்டை அதிகமாக விற்பனை செய்ய பரிசு பெறுகின்றவர்கள் எண்ணிக்கையை கூடுதலாக ஆக்கியிருக்கிறோம். முகவர்களுக்குக் கொடுக்கிற கமிஷன் தொகையையும் உயர்த்திக், கூடுதலாக்கி இருக்கிறோம். பிற மாநிலங்களிலிருந்து வருகிற பரிசுச் சீட்டுகள் பல்வேறு நிறங்களில் வண்ண, வண்ணமாக கவர்ச்சிகரமாக வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு ஜனவரி திங்கள் முதல் இந்த குறைபாட்டைப் போக்கி தமிழகப் பரிசுச்சீட்டைப் கவர்ச்சியாகப் பலவண்ணங்களில் வெளியிடுகிறோம். அரசாங்க அச்சகத்தில் வண்ண வண்ண நிறங்களில் அச்சடித்து வெளியிடுவதற்கான வாய்ப்பு

இல்லை என்பதால் தனியார் அச்சகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பல வண்ணங்களில் அச்சடித்து வெளியிட அனுமதி தந்திருக்கிறோம். மேலும் சிறப்பாகவும், கவர்ச்சியாகவும் பரவலாகவும் ஆக விரும்புகிறோம். ஆக, பரிசுச்சீட்டுகள் ஏராளம் விற்க வேண்டும், மக்கள் வாங்க வேண்டும் என்பது நம்முடைய கொள்கை அல்ல. பரிசுச் சீட்டு விற்பனை குறைந்து, அதிலே மக்கள் அதிக பணம் போடாமல் இருந்தால் நல்லதுதான். இருந்தாலும் இப்படி பரிசுச் சீட்டு வாங்க வேண்டுமென்ற உணர்வு மக்களிடம் இருக்கும்போது அதை சரியாகப் பயன்படுத்தி அதன் மூலம் வருகின்ற பணம் தமிழகத்தின் பொதுச் செலவுகளுக்கும் மக்களுடைய பல்வேறுபட்ட வசதிகளுக்கும் பயன்பட ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால் இதிலே நாட்டம் செலுத்தி வருகிறோம்.

### நல்ல நிதி நிர்வாகத்திற்கு ஊக்கம்.

435—(*வினா எண் 1516) திரு. செ. செம்மலை: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்மையான நிதி நிர்வாகம், மக்கள் தொகை பெருக்கக் கட்டுப்பாடு ஆகியவற்றை திறம்பட நிர்வகிக்கும் மாநிலங்களுக்கு ஊக்கத்தொகை (Incentive) எதையேனும் மைய அரசு வழங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அந்த வகையில் தமிழ்நாடு பெற்ற உதவி எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

(அ) கொடுக்கப்படவில்லை.

(ஆ) ஊக்கத் தொகைக்குப் பதில் மக்கள் தொகை பெருக்கக் கட்டுப்பாட்டை திறம்பட நிர்வகிக்கும் மாநிலங்களுக்கு பரிசுத் தொகை கொடுக்கப்படுகிறது. இதுவரை தமிழ்நாட்டிற்கு பரிசு கிடைக்கவில்லை.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, முன்னாள் மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு பிரணாப்முகர்ஜி அவர்கள் பாராளுமன்றத்தில் இப்படிப்பட்ட சிறந்த திட்டங்களை திறம்பட நிறைவேற்றுகின்ற மாநிலங்களுக்கு பரிசுத் தொகை அளிக்கவிருப்பதாக உறுதியளித்தார்கள். ஆனால் அந்த உறுதிமொழி



இதுவரை காப்பாற்றப்படவில்லை என்று கருதுகிறேன். இப்படிப்பட்டத் திட்டங்களை சிறந்த முறையில் நிறைவேற்றுகின்ற நம்முடைய மாநிலத்திற்கு அவர்கள் சொன்ன அடிப்படையில் ஊக்கத்தொகை அல்லது பரிசுத்தொகை வழங்க நிதி அமைச்சர்கள் மாநாட்டிலோ அல்லது தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலோ நம்முடைய மாநிலத்தின் சார்பில் வற்புறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, செம்மையான நிதி நிர்வாகத்தை மேற்கொண்ட மாநிலங்களுக்கு ஊக்கத் தொகை அல்லது பரிசுத் தொகை அளிப்பேன் என்று திரு. பிரணாப்முகர்ஜி அவர்கள் கூறியதாக எனக்கு நினைவு இல்லை. அப்படி கூறவும் இயலாது. ஆனாலும் இப்படிப்பட்ட மாநிலங்களுக்கு எந்த எந்த வகையிலே உதவி செய்யலாம் என்று அவர்கள் முயற்சி செய்யலாம். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் செம்மையான நிதி நிர்வாகத்தைக் கொண்டிருக்கின்றோம் என்று திரு.பிரணாப்முகர்ஜி அவர்களே பாராட்டியிருக்கிறாக்கள்— இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநரும் பாராட்டியிருக்கிறார். 1983—84 ஆம் ஆண்டு கடுமையான வறட்சி எற்பட்ட காலத்தில் கூடுதலாக செலவினங்களைச் சரிகட்ட முடியாத ஒரு கட்டம் வந்தபோது மத்திய அரசு தமிழகத்திற்கு ஓரளவு உதவி செய்ய முன்வந்து, அப்போது அந்த மிகைப்பற்றை நாம் சமாளிக்க வேண்டுமென்று கூறியபோது மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் 55.78 கோடி ரூபாயை திட்டம் சேராத கடனாக கொடுத்து உதவியிருக்கிறார்கள். அதன் காரணமாக மிகைப்பற்றினால் ஏற்படும் தொல்லைகள் இந்த மாநிலத்தில் ஏற்படவில்லை. அந்த வகையில் மத்திய அரசு நமக்கு உதவி செய்திருக்கிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதைப் பொறுத்தவரையில் மத்திய அரசு ஊக்கத்தொகை வழங்காவிட்டாலும் சிறந்த முறையில் ஆண்டுதோறும் இந்தத் திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றுகின்ற மாநிலங்களுக்கு பரிசுத் தொகை வழங்கலாம். 1983—84 மற்றும் 1984—85 ஆம் ஆண்டுகளுக்கு பரிசுத் தொகை இன்னும் அறிவிக்கப்படவில்லை.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, செம்மையான நிதி நிர்வாகம், மக்கள் தொகைப் பெருக்கக் கட்டுப்பாடு ஆகியத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மற்ற மாநிலங்களைவிட சிறந்து முன்னிலையில் நம்முடைய மாநிலம் இருக்கிறது. அந்த வகையில் வளர்ந்து கொண்டிருக்கும் நம்முடைய மாநிலத்திற்கு அளிக்கப்படுகின்ற நிதிஉதவி தற்போதுள்ள அளவுகோலின்படி அதாவது மிகவும் பின்தங்கியிருக்கிற மாநிலங்களுக்குத்தான் அதிகமாக நிதி உதவி என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்வதால் நமக்கு அளிக்கப்படுகின்ற நிதி உதவி குறைந்திருப்பது உண்மையா? அப்படியானால் அந்த அளவுகோலை மாற்றியமைக்க நம்முடைய அரசு

மத்திய அரசை வற்புறுத்துமா? இந்தப் பிரச்சனையில் மத்திய அரசின் நிலை என்ன என்பதை விளக்குவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்கில் ஃபார்முலாவை வைத்துக் கொண்டு கடந்த 7, 8 ஆண்டு காலமாக மத்திய அரசு அந்த வாய்பாட்டின் அடிப்படையிலேதான் நிதி ஒதுக்கீடு செய்து கொண்டுவருகின்றது. நம்முடைய ம நிலத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலம் மட்டுமல்ல, வளர்ச்சி பெற்றிருக்கின்ற சிறப்பான திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றி வருகின்ற மாநிலங்கள் அந்த ஃபார்முலாவின் மூலமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கையினை மேற்கு வங்கம், மஹாராஷ்டிரா, கர்நாடகம், போன்ற மாநிலங்கள் தமிழகத்தோடு சேர்ந்துக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றன. அந்த ஃபார்முலா மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் கோரிக்கை. அப்படி மாற்றியமைக்கப் படுகின்றபோது அந்தந்த மாநிலங்களுடைய ரிசோர்ஸையும் கணக்கிலே எடுத்துக்கொள்ளவேண்டும்.

திட்டங்களைப் பொறுத்தவரையில் இதற்கு முன்னால் எந்தெந்த வகையிலே அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த வகையிலே அவர்களுக்கெல்லாம் ஊக்கம் தருகின்ற முறையில் ஃபார்முலா வகுக்க வேண்டும். தற்போது கடைப்பிடிக்கப்படுகின்ற அந்த ஃபார்முலாவைப் பார்த்தால் பிற்பட்டிருக்கின்ற மாநிலங்களுக்கு அதாவது மக்கள் தொகை அடிப்படையில் பார்க்கின்றபோது 25 சதவீதம், 75 சதவீதம் கூட பிற்பட்ட தன்மை என்ற அளவுக்கு போவதன் காரணத்தால் நம்முடைய மாநிலம் அதிகமாகப் பெறாமல் இருக்கிறது. எனவே அந்த ஃபார்முலாவை மாற்றியமைக்க வேண்டும். சரியான முறையிலே பணியாற்றிக் கொண்டு வருகிறவர்களுக்கு மேலும் சரியாகப் பணியாற்றுவதற்கான ஊக்கத்தைத் தரவேண்டும். அதற்காகப் பின்தங்கிய மாநிலம் வளரவே கூடாது என்பதல்ல, அதற்கு வேறு வகையிலே உதவிகளைச் செய்யவேண்டும். ஆனால் இந்த ஃபார்முலாவைப் பயன்படுத்தி வளர்ந்த மாநிலங்களுக்கு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி என். டி. சி. மீட்டிங்கிலே முடிவு செய்யவேண்டும் என்று 8-வது நிதிக் கமிஷன் சொல்லியிருக்கிறது. அடுத்து கூடுகின்ற மாநில முதலமைச்சர்கள் கலந்துக்கொள்கின்ற, பிரதமர் அவர்கள் தலைமையில் கூட்டப்படுகின்ற நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் என்ற தேசிய வளர்ச்சிக் கூட்டத்திலே தான் இந்த வாய்ப்பாட்டை மாற்றியமைக்கும்படி சொல்ல வேண்டும். எனவே அந்த வகையிலே மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது. அந்த மாநாட்டிலேயும் வற்புறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



### மாம்பலம்-கிண்டி வட்டாட்சியர் அலுவலகம்.

*436—(*வினா எண் 1716)*—**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்பொது வாடகை கட்டிடத்தில் இயங்கிவரும் மாம்பலம்-கிண்டி வட்டாட்சியர் அலுவலகம் சொந்தக் கட்டிடத்தில் இயங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் கட்டுகின்ற பணி எப்போது துவங்கப்பட்டது ? அதனுடைய திட்ட மதிப்பீடு என்ன ? நடப்பு நிதி ஆண்டிலே அந்தப் பணி முடிவடையுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் உங்கள் மூலம் ஒன்றைக் கொண்டுவந்து விவரத்தை அறிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால் சென்னை மாநகரம் விரிவடைந்து கொண்டு வருகின்ற ஒரு முக்கியமான நகரம். அப்படிப்பட்ட சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு 5 தாலுக்காக்களாக இருக்கின்ற சென்னை மாநகரத்தை மேலும் விரிவாக்கம் செய்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதையும் அப்படி இல்லை என்றால் சென்னை மாநகரை அவ்வாறு பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே. கே. நகரில் மருத்துவத் துறைக்குச் சொந்தமான சர்வே எண் 297/1-ல் உள்ள 3 கிரவுண்ட் மற்றும் 400 சதுர அடி நிலப்பரப்புள்ள நிலத்தை வருவாய்த் துறைக்கு மாற்றி மாம்பலம்-கிண்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடுசெய்கின்ற வகையில் அரசு நிலமாற்றம் செய்து ஆணை பிறப்பித்துள்ளது. 1985-86-ஆம் ஆண்டில் இந்த மாம்பலம் - கிண்டி வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு வட்டாட்சியர் அலுவலகம் கட்டவேண்டும் என்றால் 1985-86-ஆம் ஆண்டு விலைவாசிப்படி கிட்டத்தட்ட 26 இலட்சம் ஆகின்றது. சென்னை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஒரு புதிய வட்டம் ஏற்படுத்த வேண்டும் என்றால் அதற்காக இன்னன்ன கூறுபாடுகள் இருக்க வேண்டும், இப்படிப்பட்ட தன்மை இருக்கவேண்டும் என்று கணக்கு இருக்கின்றது. அந்தக் கணக்கின்படிதான் பிரிப்பதும்,

பிரிக்காமல் இருப்பதும் இருக்கின்றது. எனவே அதுபற்றிய செயற்குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்விபோட்டால் பதில் சொல்லலாம். சென்னையிலே இருக்கின்ற 5 வட்டங்களை மேலும் பிரிக்கவேண்டிய அவசியம் இருக்கின்றதா, இல்லையா என்பது பற்றிய செயற்குறிப்பு இருக்கிறதா, இல்லையா என்ற விவரங்கள் இல்லை. எனவே தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9—20)

**திரு. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் குறைவாக இருக்கிற காரணத்தினால், பல்வேறு பிரச்சனைகள் வருகின்றன. அதுவும் உதாரணமாக கல்லூரி களுக்கும், பாலிடெக்னிக்குகளுக்கும் சேருகிற பிள்ளைகளுக்கு ஜாதி சான்றிதழ்கள் வாங்கவேண்டிய அவசியத்தினால் அங்கே கூட்டமாக வருகிறார்கள். ஆனால் வட்டாட்சியர் அலுவலகத்தில் இந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் குறைவான எண்ணிக்கையில் இருப்பதால், காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அதனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை அதிகமாக அரசு நியமிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே கூறிய படி வட்டங்கள் இவ்வளவு இருக்க வேண்டும். அதில் வட்டாட்சியர் இவ்வளவு இருக்க வேண்டும். அதிலே வருவாய்த்துறை மேற் பார்வையாளர்கள் இவ்வளவு பேர் இருக்கவேண்டும் என்று ஒரு கணக்கு இருக்கின்றது. அந்த கணக்கின்படிதான் இப்போது இருக்கிறார்கள். இருந்தாலும் வேலைப் பளுவை கணக்கில் கொண்டு தான் அதற்கான முறையில் ஆங்காங்கே நிய மிக்கப்பட்டு வருகிறார்கள். அதைப் பிரிப்பதற்கோ, விரிவு படுத்து வதற்கோ தேவையான நிலைமைகள் இருக்கிறதா இல்லையா என்கிற செயற்குறிப்பு என்னிடத்திலே இல்லை.

தனிக்கேள்வி போட்டால் தேவைப்படுகிறதா இல்லையா என்று விவரமாக அறிய முடியும். அடுத்து இந்தச் சான்றிதழ்கள் பணிகளை முறையாக விரைவாக தருவதற்காக சில பல ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டிருக்கின்றன. அந்த எற்பாடு களின் படி அதிகக் காலதாழ்வுகள் எற்பட வேண்டாம் என்றும் உள்ளபடியே தொழில் நுட்பக் கல்லூரி போன்ற கல்லூரிகளில் சேருகின்றவர்களுக்கு சான்றிதழ்கள் தேவைப்படுகின்ற காரணத் தினால், அதற்கு தனியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.



இருந்தாலும் எதிர்காலத்திலே பள்ளி இறுதி வகுப்பு வெற்றி பெற்று வெளி வருகிற மாணவர்களுடைய பாஸ் புக்கிலேயே அவர்கள் எந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் என்கிற தேவையான குறிப்புகளையெல்லாம் எழுதி அவைகள் சரியான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுவிடுமேயானால் இவர்கள் இன்ன இன்ன ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி, இதுபோன்ற சான்றிதழ் களை தனியாக வாங்க செல்லத் தேவையில்லை. ஆகவே எஸ். எஸ். எல். சி. அல்லது பிளஸ் 2 வகுப்பு முடித்து வெளி வருகையில் அவர்களுடைய அதற்கான புத்தகங்களிலேயே, தாய், தந்தையர் பற்றிய விவரம், நேட்டிவிட்டி போன்றவைகள் இருப்பதைப்போல், அவர் இன்ன ஜாதியைச் சேர்ந்தவர் என்ற விவரத்தையும் திட்டவட்டமாக குறிப்பிடக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டோமானால், ஒவ்வொரு முறையும் இந்தப் பிரச்சனைக்காக வட்டாட்சியரை அணுக வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை என்று சொல்லி, இதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையம்

437—(*வினா எண். 127—) **திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது வேலை துவக்கப்படும் ?

**மாண்புமிகு. திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) மற்றும் (இ) கேள்விகளுக்கு இடமில்லை.

## குடந்தை நகரில் சாலைகள் பழுது பார்த்தல்

438— (*வினா எண். 1460) — **திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை நகரில் அனைத்து சாலைகளும் மிகவும் பழுதடைந்து உள்ளன என்பது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், பழுதுபார்க்க அரசு ஏதேனும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா ?

(இ) குடந்தை நகராட்சி சாலைகளை பழுதுபார்க்கும்படி அரசு ஏதேனும் உத்தரவு இட்டுள்ளதா ?

(அ) மாண்புமிகு திரு. ப, உ. சண்முகம் : தலைவர் அவர்களே இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) 1983-84 முதல் 1985-86 வரை மொத்தம் ரூபாய் 19.99 இலட்சம் சாலைப்பணிகளிக்காக வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 19 லட்சம் ரூபாய் 1983–84-லே வழங்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் தொகையிலே எவ்வளவு ரூபாய்கள் சாலைகளுக்குப் பயன்பட்டன. அல்லது செலவிடப்படாமல் எவ்வளவு இருக்கிறது என்பது அரசுக்கு தெரியுமா ? அதோடு பொதுவாக நகராட்சிகளின் சாலைகள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை பழுது பார்கப்படுகிறது என்ற விவரத்தையும் அறிவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இன்னும் முடிக்கப் படவேண்டிய வேலைகள் இருக்கின்றன. அங்கே பொறியாளர்கள் இல்லாத காரணத்தினால்தான் காலதாமதம் ஏற்பட்டிருந்தது. பொறியாளர்கள் இப்போது சேர்ந்து விட்டார்கள். இனி முடிக்கப்பட இருக்கின்ற வேலைகள் விரைவிலே முடிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெண்டர்கள் கேட்கும்போது மிகவும் குறைந்த தொகைக்கு எடுத்து விட்டு சில கான்டிராக்டர்கள், பல வருடங்கள் ஆகியும் சாலைகளை பழுது பார்த்தலோ, புதியதாக போடுவதையோ, முடிக்காமல், அப்படியே நிறுத்தி வைத்திருக்கிறார்களே, அந்த நிலை அரசுக்குத் தெரியுமா ? நகராட்சியே நேரிடையாக சாலைகளைப் பழுது பார்த்து புதுச்சாலைகளை போடுவதற்கு அனுமதி இல்லாததன் காரணமாகத்தான் இந்த அவல நிலை என்று சொல்லப்படுகிறதே. ஆகவே நகராட்சியே நேரிடையாக அந்த வேலைகளைச் செய்கிற வகையில் அரசு அனுமதி அளிக்குமா ? பொறியாளர்கள் சேர்ந்து 2 மாதங்கள் ஆகியும் இன்னும் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கிறதே, இந்தக் குறைகள் எல்லாம் போக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற தகவல் என்னிடத்திலே இல்லை. ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தங்களை குறைந்த தொகைக்கு எடுத்து விட்டு இப்போது அதைச் செய்ய முடியாது என்று சொல்வார்களேயானால், அவர்கள் மீது உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும். அரசின் சார்பில் அந்தப் பணிகளைச் செய்து விட்டு, அதற்கான தொகை நஷ்ட ஈட்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.





## குன்னத்தூர் பேருந்து நிலையம்

*439—(*வினா எண். 1793)* **டாக்டர் அ, பொன்னுசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறை தொகுதி குன்னத்தூர் பேருந்து நிலையம் கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு, ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, குன்னத்தூர் பேரூராட்சி எல்லைக்குள் பேருந்து நிலையம் அமைக்க குன்னத்தூர் கிராமம் க.ச. எண். 91/4-ல் 0.225 ஹெக்டேர் விஸ்தீரணமுள்ள இடம் (அதாவது ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றிய சந்தையின் ஒரு பகுதி) பராதீனம் செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**டாக்டர் அ, பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னத்தூர் என்பது கோபிசெட்டிப்பாளையத்திற்கும், திங்களூருக்கும் இடையே இருக்கின்ற சிற்றூராகும். இந்த ஊருக்கு அதிகமான பஸ்கள் வருகின்ற காரணத்தினால், உடனடியாக நடவடிக்கை எடுத்து அங்கே பேருந்து நிலையம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, நான் அதைத்தான் குறிப்பிட்டேன். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவிலே முடிக்கப்படும்.

## மதுரை மாநகரில் வாய்க்கால் சீரமைப்பு

*440—(*வினா எண். 1842)* **திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் பல்வேறு பகுதிகளில் பயனற்றுப்போன பாசன வாய்க்கால்கள், முறையாக செப்பனிடப்படாமல் கழிவுநீர் தேங்கி, கொசுக்கள் பெரும் அளவில் உற்பத்தி

பாவதற்கு வாய்ப்பாக உள்ளமையால், இந்த வாய்க்கால்களை எல்லாம் முறையாகச் சீரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திட்டம் செயல்படுத்தப் படும் ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, (அ) இம்மாதிரி திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திட்டம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கால்வாய்களில் கழிவு நீர் தேங்கியிருப்பதால், கொசு உற்பத்தி அதிகமாகி பல்வேறு தொற்று நோய் பரவுவதற்கு காரணமாக இருப்பதால், இந்தத் துறையைப் பொறுப் பேற்றிருக்கும் அமைச்சர் அவர்கள் இந்தப் பணியை ஏற்றுக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, பாசனக்கால்வாயை சீரமைக்கும் பணி பொதுப் பணித்துறை. கொசு ஒழிப்பு நடவடிக்கை எடுப்பது உள்ளாட்சித் துறை. வடிகால் வாரியம் செய்ய வேண்டிய பணி வடிகால் சீரமைப்பு. ஆகவே ஒட்டுமொத்தமாக இந்தத் துறையின் மூலம் நடவடிக்கை எடுப்பது என்பது இயலாது. என்றாலும், வடிகால் வாரியத்தின் மூலம் மதுரை மாநகருக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் ஆய்விலே இருக்கிறது.

## நர்சரி பள்ளிகள்.

441—(*வினா எண். 1336) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம்** (பேரவைத்துணைத்தலைவர்) மற்றும் **திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள தனியார் நர்சரி பள்ளிகளை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது குறித்து ஆராய்ந்திட அரசு குழு ஏதேனும் அமைத்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, ஆம்.



**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் இப்படி எத்தனை நர்சரி பள்ளிகளை தனியார் நடத்தி வருகிறார்கள் ? இப்படி நடத்தப்படும் தனியார் நர்சரி பள்ளிகளில் முறையாக பயிற்சி பெறாத ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாணவர்களிடத்திலே அதிகமாக கட்டணத்தை வசூலிக்கின்றார்கள். ஆகவே அவைகளைக் கட்டுப்படுத்த மாநிலத்திலுள்ள எல்லா நர்சரி பள்ளிகளையும் ஒரு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து அரசாங்க அனுமதியைப் பெறவேண்டும் என்ற நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, மாநிலத்தில் எவ்வளவு நர்சரி பள்ளிகள் இருக்கின்றன என்ற கணக்கு இப்போது என்னிடத்தில் இல்லை. இதற்காக ஒரு குழு 1976-ல் அமைத்தார்கள். 1977-ல் அந்தக் குழு ஒரு அறிக்கை தந்திருக்கிறது. அதற்குப் பிறகு அந்த அறிக்கை பல்வேறு நிலைகளில் பரிசீலிக்கப்பட்டு, இப்போது அது மசோதா வடிவில் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதன் முக்கிய நோக்கமே, தகுதி பெறாத ஆசிரியர்களை நியமிப்பது, குறைவாகச் சம்பளம் தருவது, மாணவர்களிடம் அதிக கட்டணம் வசூலிப்பது, பள்ளிக்கட்டிடங்கள் பொது சுகாதார வசதி இல்லாமல் இருப்பது போன்ற நிலைகளைக் கருத்திலே கொண்டு, இதை ஒழுங்குபடுத்துவதற்கு இந்த மசோதா கொண்டு வரப்பட இருக்கிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு குறைகளை களைவதற்கு மசோதா கொண்டுவர இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது நர்சரி பள்ளிகள் நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு சென்றுவிட்ட காரணத்தினால், கிராமங்களிலுள்ள நமது அரசு ஆரம்பப் பள்ளிகளின் சூழ்நிலை, சரியில்லாத ஆசிரியர்களின் போதனை நர்சரி அளவுக்கு இல்லாத காரணத்தினால், கூடுதல் கட்டணம் நர்சரி பள்ளி, தனியார்பள்ளிகளில் வசூலிக்கப்படுகின்றது என்றாலும் கூட, அங்கு நன்கு சொல்லித்தருகின்றார்கள் என்ற உணர்வு இன்று பொதுமக்கள் மத்தியில் மிக அழுத்தமாக வளர்ந்திருக்கிறது. அதுவும் நம் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆசிரியர்களை நமது அரசு, அரசு ஊழியர்களாக ஆக்கிய பிறகு, ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர்களின் பணியை பள்ளி நேரங்களில் போதனை தரம் ஆகியவைகளை கண்காணிக்கின்ற பொறுப்பு கல்வித்துறைக்கு குறைந்த நிலையில் இருக்கிறது. ஆகவே, அவர்கள் பணியை முறையாக செய்கின்றார்களா, நல்ல முறையிலே பாடத்தைச் சொல்லித்தருகின்றார்களா, பள்ளிக்கு உரியநேரத்தில் வருகின்றனரா என்பதைக் கண்காணிக்கும்

பொருட்டு, மற்ற துறைகளிலே இருப்பதுபோல், மாவட்ட அளவிலே ஒரு விஜிலென்ஸ் செல் (கண்காணிப்புக் குழு) அமைக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நர்சரி பள்ளிகளுக்கு ஏன் போகிறார்கள். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் சரியாகச் சொல்லித் தருவதில்லையா போன்றவற்றைக் கண்காணிக்க ஒரு விஜிலென்ஸ் குழு அனுப்பி, ஆசிரியர்கள் சரியாக தங்கள் பணிகளைச் செய்யவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றார்கள். நர்சரி பள்ளிகளுக்கு ஏன் போகிறார்கள் என்றால், சில காரணங்களுக்காக அங்கே போகின்றார்கள். அந்த அடிப்படையிலேதான், நம் அரசின் சார்பில் பல நர்சரி பள்ளிகளை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு ஏறக்குறைய 8,000, 10,000 பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நர்சரி பள்ளிகள் தேவை என்பதை உணர்ந்து, அதை அரசே நடத்த வேண்டுமென்று கருதி, அதற்கான நடவடிக்கைகளை அரசே எடுத்துக் கொண்டு வருகிறது. மற்ற பள்ளிகள் சரியாக நடக்கின்றனவா என்பதற்குத் திடிரென்று போய் பள்ளிகளைப் பரிசோதிக்க ஒரு குழு இருக்கவேண்டுமென்ற கருத்தை நான் வரவேற்கிறேன். அதை அரசு பரிசீலிக்கும்.

**நாச்சியார் கோவில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி.**

442—(*வினா எண் 1470) திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவிடைமருதூர் தாலுக்கா, நாச்சியார் கோவில் கிராமத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவுவதற்காக பொது மக்கள் பங்குத்தொகை ரூ. 25,000 அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணம் செலுத்தப்பட்டது ?

(இ) பள்ளி அமைக்க அரசு அங்கீகாரம் அளித்துவிட்டதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 23—6—1984ஆம் நாளன்று செலுத்தப்பட்டுள்ளது.

(இ) இல்லை.



(முற்பகல் 9-30)

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 15 ஆயிரம் மக்கள் வசிக்கும் நாச்சியார் கோவில், மற்றும் அதைச் சுற்றி உள்ள வட்டாரத்திலே இருக்கின்ற 10 கிராமங்களில் வசிக்கின்றவர்கள் எல்லாம் நாச்சியார் கோவிலுக்குத்தான் வரவேண்டும். கிட்டத்தட்ட 900 மாணவ-மாணவியர்கள் அங்கே இருந்து 10 கிலோ மீட்டர் தூரம் தாண்டி குடந்தைக்கோ குடவாசலுக்கோ போகவேண்டிய அவல நிலை இருக்கிறது. ஆகவே அந்த அவல நிலையைப் போக்கவும் அங்கே இருக்கின்ற மகளிருக்கும், இளம் பெண்களுக்கும் வசதியாக இந்த ஆண்டாவது அங்கே பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தித் தருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது பற்றிய கருத்துருக்களைப் பரிசீலனை செய்கிறபோது இந்த உயர்நிலைப் பள்ளி பற்றிய கருத்துருவும் ஆய்வு செய்யப்படும். நிதி நிலைமைக்கு ஏற்ப முடிவு செய்யப்படும்.

**கன்னியாகுமரி-சென்னை படகுப் போக்குவரத்து.**

443—(*வினா எண் 1803) திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்னியாகுமரி முதல் சென்னை வரை கடல் மார்க்க படகு போக்குவரத்து விடும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எப். எம். இராசரத்தினம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி முக்கடலும் முத்தமிழும் இயற்கை வளமும் நிறைந்த மிக முக்கியமான சுற்றுலா மையமாக இருக்கிறது. அந்த மனத்திலே கொண்டு சென்னை—கன்னியாகுமரி கடல் மார்க்கமாக படகுப் போக்குவரத்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? அப்படி விடப்பட்டால் அனைத்துத் தரப்பினர்களும் கவர்ச்சியுடன் பயணம் செய்யக்கூடிய நிலைமையும் பொதுமக்களுக்கு வசதியாக அமையக்கூடிய நிலைமையும் ஏற்படும் என்பதைக் கருத்தில்

கொண்டு அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து சென்னை—கன்னியாகுமரி படகுப் போக்குவரத்து விடுவதற்கு முயற்சி எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அதை இப்போதே உடனடியாகச் செய்வது என்பது கடினம். முதலிலே சென்னைக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே படகுப் போக்கு வரத்து விடுவதைச் சோதனையாகச் செய்யலாம் என்று பூம்புகார் போக்குவரத்துக் கழகம் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. அதை நாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அது வெற்றி கரமாக இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனை பற்றி யோசித்து முடிவு எடுக்கலாம்.

**திரு. எப். எம். இராசரத்தினம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு மிக்க நன்றி. சென்னை—இராமேஸ்வரம் படகுப் போக்குவரத்து சம்பந்தமாக ஆய்வு செய்து அது முடிந்தவுடனே வேகமாக ஆய்வு செய்து சென்னை—கன்னியாகுமரி படகுப் போக்குவரத்து குறித்தும் அறிக்கை அனுப்ப வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அறிவுரை கூறு வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே பரிசோதனைக்காக வந்ததுபற்றியே நாம் இன்னும் முடிவு எடுக்கவில்லை. அதிலே 10.15 லட்ச ரூபாய் ஆண்டுக்கு நட்டம் வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொதுமக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற முறையிலே ஏற்படுத்தப்படுகிறபோது மக்கள் அதில் பயணம் செய்து பழகிய பின்பு அது லாபகரமாக இருக்கும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆய்ந்துதான் பிறகு முடிவு எடுக்கவேண்டியிருக்கிறது. அது முடிந்த பிறகு இதை ஆய்வு செய்வதற்குத்தான் வாய்ப்பு இருக்கிறது. அது வெற்றிகரமாக அமையுமானால் கன்னியாகுமரிக்கு விடுவதற்கு வாய்ப்பு உண்டு.

**திரு. கோ. பெருமாள் பிள்ளை :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரியிலிருந்து அதற்குப் பக்கத்திலே 5 கிலோ மீட்டர் தூரத்திலே அமைந்திருக்கின்ற வட்டக் கோட்டைக்கு உல்லாசப் படகு விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, பயணப் படகுப் போக்குவரத்து விடுவதே கஷ்டம் என்றுதான் சொன்னேன். உல்லாசப் படகுப் போக்குவரத்து விடுவதைப்பற்றி எதுவும் சொல்லமுடியாது. அதற்குச் சுற்றுலாத் துறை மூலமாகக் கேள்வியைப் போட்டால் பதில் பெறலாம்.



## சிங்காரத்தோப்புப் பகுதியில் பாலம்.

444—(*வினா எண் 1824)—திரு. சு. சிவராஜ் மற்றும் திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் ஓட்டி, சிங்காரத்தோப்பு பகுதியில் பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அப்பாலம் கட்டி முடிக்கப் படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நடைபாலத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். வேணுகோபால் :** தலைவர் அவர்களே, 1975ஆம் ஆண்டு அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த திரு. ப.உ.ச. இதற்கு அடிக்கல் நாட்டி இன்றைய வரையில் அது நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அந்தப் பாலத்திற்கு அடியில் தூர் வாரிகள் கொண்டுசெல்ல வேண்டுமென்ற நிலை இருந்தது. பாலத்திற்கு அடியில் தூர் வாரவேண்டுமானால் அதற்காக தூர் வாரிகள் வருகிறபோது பாலம் மேலே நகர்த்தப்படவேண்டுமென்ற முறையிலே நட வடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் துறைமுக அதிகாரிகள் அது சிரமமாக இருக்கும் என்றும், சில நேரத்திலே அது பழுதுபட்டு விட்டால் துறைமுகப் பணிகள் நடப்பதற்குப் பிரச்சினை இருக்கும் என்றும் சொல்லிய காரணத்தினால் அதுபற்றி மறு ஆய்வு செய்யப் பட்டது. மறு ஆய்வு செய்யப்பட்டு பக்கத்திலே பாலம் கட்டலாம் என்று சொல்லி வேலை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் பொது மக்கள் சிங்காரத்தோப்பிலே தான் அதைக் கட்டவேண்டுமென்று மனுக் கொடுத்தார்கள். எனவே அதை மீண்டும் பரிசீலனை செய்து சிங்காரத்தோப்பிற்குப் பக்கத்திலே உள்ள சோனாங் குப்பத்திலே பாலம் கட்டிவிட்டு சிங்காரத்தோப்பிலே ஒரு நடை பாலம் அமைக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்திற்கு 34 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் விரைவிலே தொடங்கப்பட இருக்கிறது.

**திரு. வி. கோ. செல்லப்பா :** தலைவர் அவர்களே, அங்கே நடைபாதை பாலமென்றால், கீழே படகுகள் செல்கிற வசதி

யோடு கூடிய நடைபாதைப் பாலமா? அல்லது சாதாரண நடைபாதைப் பாலமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, படகுப் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் அதற்கு வழிவகை செய்துதான் இந்த நடைபாதைப் பாலம் அமைக்கப்படவிருக்கிறது.

### பள்ளிகளுக்கு வழங்கப் பெற்ற பேருந்துகள்.

445—(*வினா எண். 2185)—**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளுக்கு மான்ய விலையில் அரசுப் பேருந்துகள் வழங்கப் பெற்றுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பழைய பேருந்துகளைக் கீழ்க்கண்ட சலுகை விலையில் போக்குவரத்துக் கழகங்கள் பள்ளி நிறுவனங்களுக்கு அளிக்கின்றன:

| | | டாடா. | லேலண்ட். |
|---|---|---|---|
| | | ரூபாய். | ரூபாய். |
| 1. | அரசைச் சார்ந்த கல்வி நிறுவனங்களுக்கு .. | 45,000 | 50,000 |
| 2. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அரசின் நிதி உதவியால் இயங்கும் நிறுவனங்களுக்கு | 50,000 | 55,000 |
| 3. | அரசால் அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களுக்கு .. | 55,000 | 60,000 |

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளுக்கு அரசு மானிய விலையில் பேருந்துகளை அளிப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தனியார் பள்ளிகளில் மாணவ மாணவியர்களுக்குப் பேருந்து கட்டணத்தை அதிகமாக



விதிக்கிறார்கள். நாம் மானிய விலையில் பேருந்துகளைக் கொடுக்கிறபோது, இவ்வளவுதான் கட்டணம் வாங்க வேண்டுமென்ற அளவில், அரசுப் பேருந்துகளுக்கு இருப்பதைப் போல, கட்டுப்படியாகிற தொகைக்கு மேலே வாங்கக் கூடாது என்ற அளவில் நிபந்தனை எதுவும் அரசு தனியார் பள்ளிகளுக்கு விதித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, பேருந்துகளைக் கொடுக்கிறபோது இத்தனை ஆண்டுக் காலத்திற்கு அந்தப் பள்ளி நிறுவனத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று அந்த உத்தரவாதத்தை அவர்களிடத்திலிருந்து நாம் பெறுகிறோம், ஆனால் கட்டணத்தைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட துறையான கல்வித்துறைதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் சரியான கட்டணத்தை வாங்க வேண்டுமென்று கல்வித் துறையின் மூலமாகத்தான் அறிவுறுத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்ய இயலும்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அரசு தனியார் பள்ளிகளுக்கு எவ்வளவு பேருந்துகளை அளித்து இருக்கிறது? அதே போல அரசுப் பள்ளிகளுக்கு எவ்வளவு பேருந்துகளை அளித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எவ்வளவு பேருந்துகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தனித்தனியாக ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலிருந்தும் கொடுத்த விவரம் மட்டும் இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு எத்தனைப் பேருந்துகள், யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் இல்லை. கேட்பவர்கள் அத்தனை பேருக்கும் கொடுப்பதற்குப் பேருந்துகள் இருக்கின்றன. வேண்டியவர்கள் வாங்கிக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

### மணப்பாறை—துறையூர் பகுதிகளில் வீட்டு வசதி.

446.. (*வினா எண் 1288)—**திரு. க. சோலைராசு** மற்றும் **திரு. செ. இரத்தினவேலு:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மணப்பாறை, துறையூர் ஆகிய இடங்களில் வீட்டு வசதி வாரியம் வீடு கட்டுவதற்கென்று ஒரு விளம்பரம் வெளியிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை மற்றும் துறையூர் வளர்ந்து வருகிற நகரங்களாகும். ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பை ஏற்பதற்கு முன்னாலேயும், அதற்குப் பின்னாலேயும் மணப்பாறைப் பகுதியில் வீட்டுவசதித் துறை அப்படிப்பட்ட வீடுகளைக் கட்ட வேண்டுமென்று மனுக்களைக் கொடுத்திருக்கிறோம். தொடர்ந்து வளர்ந்து வருகிற நகரம் என்பதைக் கருத்தில் கொண்டு அங்கே வீட்டுவசதி வாரியம் வீடுகளைக் கட்ட முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல அதற்காக நிலங்களை எடுக்கிற செயற்குறிப்பை அரசு கொண்டு வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, மணப்பாறை வட்டத்தினுடைய தலைநகராகவும், நகராட்சியாகவும் இருப்பதால் 21 ஏக்கர் 90 சென்ட் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டவிருக்கிறது. ஆர்ஜிதம் முடிந்த பிறகு அபிவிருத்தி செய்து மனைகளாகப் பிரிக்கப்பட்டு, மக்களின் தேவைகளுக்கேற்ப அவர்களுக்கு வழங்கப்படும்.

திரு. செ. இரத்தினவேலு : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் துறையூர் நகரில் பல அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. அங்கே அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடுகளைக் கட்ட நில ஆர்ஜிதம் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே 1978ஆம் ஆண்டில் 100 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்போதுள்ள தேவையை உணர்ந்து கிட்டத்தட்ட 45 ஏக்கர் நிலம் எடுக்கிற முடிவை அரசு எடுத்திருக்கிறது. அதற்குப் பிறகு திட்டங்கள் பற்றிய முழு விவரமும் வெளிவரும்.

(முற்பகல் 9-40)

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு உத்தரவிட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மணப்பாறையில் எத்தனை வீடுகள் கட்டுவதற்கு





உத்தேசம் இருக்கிறது அப்படி கட்டுகிறபோது, அந்த வீடுகளின் அமைப்பு, அதாவது 'ஏ' டைப், 'பி' டைப் ஆகிய இந்த வகையிலே இது எந்த வகையில் வருகிறது என்பதையும், இந்தத் திட்டம் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய விருப்பத்தையும், தேவையையும் அனுசரித்து, முடிவு செய்யப்படும். விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று அரசு கையகப்படுத்தி, கட்டித் தருகின்ற வீடுகளிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வீடு கட்டித்தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மற்றவர்களுக்கு எந்த அடிப்படையோ, அந்த அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு.

**பெரியார்—கோவை மாவட்ட கருப்பட்டி விற்பனை சம்மேளனம்.**

*447—(*வினா எண். 1784)* திரு. ச. பாலகிருஷ்ணன் மற்றும் டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார்—கோவை மாவட்ட கருப்பட்டி விற்பனைச் சம்மேளனம் இலாபத்தில் இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், சம்மேளனம் கடந்த ஆண்டில் பெற்ற இலாபம் எவ்வளவு?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே,

(அ இல்லை,

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் அ. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருப்பட்டி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் நஷ்டத்தில் நடக்கிறது என்ற செய்தி இனிப்பில்லாத செய்தியாகும். அதற்குக் காரணம் என்ன? அதைக் களைய அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெரியார் கோவை மாவட்ட கருப்பட்டி விற்பனை சம்மேளனம் இப்போது நஷ்டத்தில்

இயங்கிக் கொண்டு இருக்கிறது. அதற்குக் காரணம் கள்ளுக்கடைகள் திறக்கப்பட்டதால், பதநீர் இறக்கும் தொழில் செய்து வரும் பனைத் தொழிலாளர்கள் கள் இறக்குவதற்காக வேறு மாவட்டங்களுக்கும், வேறு இடங்களுக்கும் குடி பெயர்ந்து விட்டனர். இதனால் இவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ளது. அவர்களின் இருப்பிடமும் தெரியவில்லை. இதனால் சம்மேளனத்திலிருந்து பெற்ற கடனை உரிய தவணைகளில் வசூலித்துக் கொடுக்கவும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களுக்கும், சந்தேகக் கடன்கள் காப்பு நிதியில் உரிய ஒதுக்கீடு செய்யப்பட்டதும் நஷ்டத்திற்குக் காரணமாக உள்ளது. இதற்கு அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. இந்தச் சம்மேளனம் கருப்பட்டி விற்பனையுடன், பதநீர், பாம்கோலா பனைப் பொருட்கள், பனைத்தும்பு, ஆகியவற்றை விற்பனை செய்து லாபகரமாக இயங்க அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் கோவை மாவட்ட கருப்பட்டி சம்மேளனம் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகள் லாபத்தில் இயங்குவதற்கு ஒவ்வொரு மாவட்டந்தோறும், நல்ல சிறந்த கருப்பட்டி உற்பத்தியாளர்களை அந்தக் குழுவிலே நியமித்து, அவர்களுடைய அறிவுரைகளைக் கேட்டு, சம்மேளனத்தை லாபத்தில் இயக்குவதற்கு ஏதாவது அறிவுரைகள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தினை அரசு ஏற்று அதற்கு நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### திருப்பூர் தொகுதிக்கு பரம்பிக்குளம் ஆளியாறு நீர்.

*448—(*வினா எண். 1160)* திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சட்டமன்றப் பேரவை தொகுதியில் பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட வாய்க்கால் மூலம் எத்தனை ஏக்கருக்கு நீர் பாய்ச்ச அரசு திட்டமிட்டுள்ளது ?

(ஆ) திருப்பூர் தொகுதி PAP வாய்க்காலில் தண்ணீர் எப்போது திறந்துவிடப்படும் ?



மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) தற்போது நடைமுறையிலுள்ள பாசன பரப்பு 443 ஏக்கர் ஆகும். மேலும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ள பாசன பரப்பு 14,106 ஏக்கர் ஆகும்.

(ஆ) திருப்பூர் தொகுதி பி. ஏ. பி. வாய்க்காலில் வழக்கமாக ஜுலை முதல் தேதியிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படவேண்டும். இதை பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட நீர்த்தேக்கங்களின் நீர் இருப்பு, மற்றும் தென்மேற்கு பருவமழை ஆகியவற்றைப் பொறுத்து அரசு முடிவு செய்யும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பருவ மழையைப் பொறுத்துத் தான் முடிவு செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆக 443 ஏக்கர்களில் தற்போது தண்ணீர் பாய்வதற்கான நிலைமை உள்ளது. மீதி உள்ள ஏக்கர்களுக்கு, அதிகமான நிலம் இருக்கிற அந்த இடங்களுக்கும், விரைவில் தண்ணீர் தரவும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 443 ஏக்கர்கள் பயன் அடைந்தாலும் கூட, கிட்டத்தட்ட 14,106 ஏக்கர்கள் பயன் அடைய திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதிலே 9,024 ஏக்கர்களுக்கான பணி முடிவு அடைந்துவிட்டது என்றாலும் முழுக்க பணி முடிவு அடையாத சூழ்நிலையில் எஞ்சிய ஏக்கர்களுக்கு பாசன வசதி செய்து தர முடியாத நிலையில்தான் இந்தத் துறை இருக்கிறது. ஏன் என்றால் பல்லடம் பகுதியில் உள்ள அந்தப் பணி முடிந்தால்தான் அந்த நீட்டிப்புக்கு உரிய நீரை விட முடியும் என்றாலும் வழக்கமாக தண்ணீர் விடக் கூடிய காலமே ஜுலை மாதம் 1ஆம் தேதி ஆகும். அப்படிப் பார்த்தாலும் இன்று தான் ஜுலை மாதம் 1 ஆம் தேதி என்று நான் கருதுகிறேன். இப்போது நீர் நிலைகளில் தண்ணீர் வரத்து சற்று அதிகமாக இருப்பதாக இங்கே தகவல்கள் வந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, காலம் கடத்தாமல் எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவில் நீரை திறந்துவிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தண்ணீர் திறந்துவிடக் கூடிய நிலைகளில் எல்லாம், இருக்கக்கூடிய சூழ்நிலைகளை அனுசரித்து தண்ணீர் வந்தால் வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடமுடியும். தண்ணீர் இல்லாத காலங்களில் திறந்து விடுவதால் எந்தவிதமான பயனும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1985 ஜூலை 1

"ராஜா தோப்பு" அணைக்கட்டு.

449—(*வினா எண். 1278) திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டத்திலுள்ள "ராஜா தோப்பு" என்னுமிடத்தில் சிறு நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் அணைக்கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தலைமைப் பொறியாளரின் ஆய்விலுள்ளது.

ஆவரம்பட்டி கால்வாய்.

450—(*வினா எண். 1489) திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்தலக்குண்டு பகுதியில் உள்ள மஞ்சள் ஆற்றிலிருந்து ஆவரம்பட்டி வரை வெட்டப்பட்டுள்ள பிரதான ஆயக்கட்டு கால்வாயில் ஆவரம்பட்டி வரை தண்ணீர் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மஞ்சளாறு திட்டத்தில், வெள்ளகாலங்களில் கிடைக்கும் உபரி நீரை, ஆவரம்பட்டி கண்மாய்க்கு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை, உபரி நீர் கிடைக்காததால், ஆவரம்பட்டி கண்மாயில் ஆயக்கட்டு நிலங்களுக்கும் நீர் வழங்க இயலவில்லை

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மஞ்சள் ஆறு அதாவது ஆலங்குளம் அணைக்கட்டு என்ற பெயரால் அது காங்கிரஸ் ஆட்சி காலத்தில் இரண்டே முக்கால் லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. கட்டப்பட்ட நாளிலிருந்து இதுவரைக்கும் அந்த ஆவரம்பட்டி கண்மாய்க்கும் நீர் வரவில்லை. சமீபத்தில் சென்ற சட்டமன்றத்தில் 1980 அசெம்பிளியில் கூட அந்த முறைக்கு அங்கே 66 ஆயிரம் ரூபாய்



1985 ஜூலை 1]

ஒதுக்கி வீணாக வைகையில் சென்று விழக்கூடிய தண்ணீரை தடுத்து இந்த ஆரவம்பட்டி கண்மாயில் தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்று திட்டம் போட்டு அதற்கு ஒரு பிக் அப் அணை கட்டுகிறோம் என்றார்கள். நிரந்தரமாக தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மஞ்சள் ஆறு நீர்த்தேக்கத் திட்டத்தை நான் நேரிடையாக பார்த்து இருக்கிறேன். அந்த நீர்த் தேக்கத் திட்டம் 64 கோடியில் கட்டுவிக்கப்பட்டது ஆகும். இதன் கொள் அளவு 487 மில்லியன் கன அடி ஆகும். இதனால் பாசனம் அடையக்கூடிய பகுதி 1 ஆயிரம் ஏக்கர்கள். ஆனால் அந்த மஞ்சள் நீர் தேக்கத் திட்டத்தில் வெள்ளக் காலங்களில் உபரியாக நீர் கிடைக்கும் போது புதிதாக வெட்டப்பட்ட வழ்ங்கும் வாய்க் கால்கள் மூலமாக பிள்ளையார் நத்தம், ஆவரம்பட்டு, எத்திரவேடு கண்மாய்களில் நீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் உபரி நீரே இல்லாத காரணமாகத்தான் அங்கே நீர் செல்லவில்லை என்பதை நான் எடுத்துச் சொல்லுகிற வாதம் ஆகும். ஆகவே, உபரி நீர் இருந்தால்தான் தண்ணீர் செல்ல முடியும். தண்ணீர் இருந்தால்தான் திட்டத்தை நீட்டிக்கவோ, அல்லது திட்டத்தை இன்னும் பெரிய அளவில் செய்யவோ உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியும். உபரி நீர் இல்லாத காரணத்தால் எந்தவிதமான நடவடிக்கையும் தேவையில்லை என்று இந்தத் துறை கருதுகிறது.

செங்கிப்பட்டி பகுதியில் வெள்ள நீர்த் தேக்கம்.

451—(*வினா எண். 1615) திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டி பகுதியில் உள்ள ஏரி குளங்களில் வெள்ளப் பெருக்கு காலத்தில் தண்ணீர் தேக்கி வைக்க அரசு ஏதேனும் திட்டம் மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே செங்கிப்பட்டி பகுதியில் நிரம்ப ஏரிகள் இருக்கின்றன. என்றாலும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மிக உயர்ந்த இடமாக இருக்கிற வெல்லம்

பகுதி அதற்கு பக்கத்தில் இருக்கிற இந்த செங்கிப்பட்டி ஏரியில் ஏதாவது சிறப்பாக ஒரு திட்டத்தை தீட்டி அந்தப் பகுதி மக்களுக்கு பயன்பெறுகிற வகையில் பொதுப்பணித் துறையின் மூலமாக இணைப்புகள் கொடுத்து அந்த ஏரிகள், குளங்களில் எல்லாம் மழை காலங்களில் வருகிற நீரை நிரப்பி பாசன வசதி செய்து தரத் தக்க ஆய்வு செய்து திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக நீர் பிடிப்புப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய அதிகமான அளவு நீரை எடுத்து உபயோகிக்கவேண்டும் என்று அணைகள் சட்டி மற்றும் கண்மாய்கள் அமைப்பது போன்ற வேலைகள் சிறப்பு சிறு பாசன திட்டத்தின்கீழ் அல்லது சிறு பாசன திட்டத்தின்கீழே செயல்பட்டு வருகிறது என்றாலும் இந்த தஞ்சை மாவட்டத்திலுள்ள செங்கிப்பட்டி தொகுதியில் ஏரி, குளங்களில் வெள்ளப் பெருக்கு நீரை தேக்கி வைக்கும் திட்டம் தற்சமயம் இந்தத் துறையால் மேற்கொள்ளப்படாவிட்டாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்தின் அடிப்படையில் இது குறித்து இந்தத் திட்டம் மேற்கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகளை ஆராயும்பொருட்டு தள அதிகாரிகள் பரிந்துரைப் பார்கள் என்பதையும், அதை அடுத்து, அவர்கள் தீவிர நடவடிக்கைகள்மேற்கொண்டு தீவிர ஆய்வுக்குப் பிறகு திட்டம் மேற்கொள்ளப்படவேண்டிய வாய்ப்புகள் இருக்குமானால் அரசு கவனித்து அந்தத் திட்டத்தை கொண்டு வரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வெள்ளப் பெருக்குக் காலத்தில் தண்ணீர் தேக்கி வைக்க ஏதுவாக அரசு உத்தரவின் பேரில், ஏரி குளங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட அங்கே வேலை செய்த புல்டோசர்கள் திடீரென்று வாபஸ் பெறப் பட்டுள்ளன. இன்னும், எஸ்டிமேட் செய்த வேலைகளில் 20 நாள் வேலைகள் பாக்கி இருப்பதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். அதை அரசு அறியுமா ? அதைப் போக்கிட மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டியிலுள்ள பகுதியில் ஏ குளங்களில் வெள்ளப் பெருக்குக் காலத்தில் தண்ணீர் தேக்



வைப்பது பற்றிய திட்டம் பற்றியது ஆகும். மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை என்கிறார். தஞ்சை மாவட்டம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, அதன் அடிப்படையில், தஞ்சை மாவட்டத்தில் அதே செங்கிப்பட்டியிருக்கிறது. வடுவூர் ஏரி இருக்கிறது. மதுக்கூர் ஏரி இருக்கிறது. அதே போல மேலநம்மங்குறிச்சியில் ஏரி இருக்கிறது ; தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் காலம் கடந்து வருவதனால், நீர்ப் பிடிப்பு இல்லாத காலங்களில் தண்ணீர் தேக்கி வைக்க முடியாத நிலை வளர்ந்து கொண்டே வருகிறது. எனவே, தஞ்சை மாவட்டத்தில் அமைச்சரவர்கள் இப்போது நடவடிக்கை எடுக்காமல் இருந்தாலும் கூட, வரக்கூடிய ஆண்டிலாவது தஞ்சை மாவட்டத்திலுள்ள முக்கியமான ஏரி குளங்களை, பொதுப்பணித்துறை மூலம் ஆழப்படுத்தி, நீர்ப் பிடிப்பை உருவாக்கிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அந்த மாவட்டத்திற்குத் தேவையான நீர்ப்பாசனத்தை நாம் வழங்குவதன் மூலமாகத் தான் தமிழகத்திற்குத் தேவையான நெல்லை உருவாக்கித் தரமுடியும் என்ற விவரத்தினைத் தெரிந்து வைத்திருப்பதன் அடிப்படையில், தஞ்சை மாவட்டத்திலிருக்கக்கூடிய, சிறிய பெரிய கால்வாய்ப் பாசனங்கள், மற்றும் இதர பாசன ஆதாரங்களை எல்லாம் பற்றியும், அவற்றைப் பாதுகாப்பதைப் பற்றியும் அல்லது அந்தப் பாசனத் திட்டங்களை எல்லாம் எப்படிப் பேணுவது என்பதைப் பற்றியும், புதிதாக எப்படிப்பட்ட பாசனத் திட்டங்கள் எல்லாம் கொண்டு வரலாம் என்பதைப் பற்றியும் ஆய்வு செய்வதற்கும், அதைப் பற்றி விவாதிப்பதற்கும், முடிவு எடுப்பதற்கும் விரைவிலே தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் பிரதிநிதிகள், உழவர் பெருமக்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, அந்த கருத்துக்களை எல்லாம் விவாதிக்கக்கூடிய அளவுக்கு ஒரு கருத்தரங்கினை விரைவிலே நடத்தக்கூடிய ஒரு எண்ணம் எனக்கு இருக்கிறது. அதை விரைவாக துறையிடத்தில் எடுத்துச் சொல்லி, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. எம். செல்லமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் வெறும் காவிரிப் பாசனத்தை

மட்டும் தான் நம்பி இருக்கிறது. அங்கே இருக்கின்ற குளங்கள் எல்லாம், ஒவ்வொரு கிராமங்களிலும் ஒரு ஏக்கர், 2 ஏக்கர் போன்ற அளவில் இருக்கின்றன. பல ஆண்டுகளாக அவை எல்லாம் தூர்ந்து போய் இருக்கின்றன. அவற்றை எல்லாம் ஆழப்படுத்திக் கொடுப்பதோடு, தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடிய அனைத்து ஏரிகளும், குறிப்பாக, தஞ்சைக்கு பக்கத்தில் இருக்கக்கூடிய வல்லம், மாரியம்மன் கோயில் பக்கத்திலிருப்பது, வடுவூர் ஏரி போன்ற பெரிய ஏரிகளை எல்லாம் ஆழப்படுத்தி னால், ஊற்றுக்கு நீர் கிடைப்பது மட்டுமல்லாமல், இன்னும் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதே, அதைப்பற்றி ஒரு சிறப்புத்திட்டம் தயார் செய்து, தஞ்சை மாவட்டத்தில் நீர் ஆதாரங்களை உருவாக்கு வதற்கும், குளங்களை, ஏரிகளை ஆழப்படுத்தித் தரவும் முயற்சிகளை அரசும், அமைச்சர் அவர்களும் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல, சிறப்பு மாநாடு என்று சொல்லக்கூடிய அளவிற்கு, சிறப்புக் கருத்தரங்கு நடத்தக் கூடிய அந்த நேரத்தில், சிறப்புத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னால், அங்கே சிறப்பாக விவாதித்து சிறப்பான முடிவுகள் எடுக்கப்படும்.

**திரு. மா. மணிமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக வெள்ளத்தால் பாதிக்கப்படுவது திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டங்களினுடைய வடிகால் நீர் தான். எனவே, அப்படி வடிகாலாக வந்து, சோழம் பட்டி, மேலமுத்துவாரி, அய்யனார்வாரி போன்ற ஏரிகளாக மாறி தஞ்சை மாவட்டத்தில் காவிரி, வெண்ணாறு போன்ற பகுதிகளில் எல்லாம் பயிர்களை நாசப்படுத்திக் கொண்டு வருகிறது. அந்த வடிகாலை இரண்டு வகையாக, அதாவது, ஒன்று, ஆற்றில் அகலப்படுத்துகின்ற திட்டம், இரண்டாவதாக, ரிசர்வாயரை உருவாக்கி பாசனத்திற்குப் பயன் படுத்தலாம் என்பது. இந்தத் திட்டத்தைப்பற்றி 40 ஆண்டுகளாக ஆய்வு செய்திருக்கிறார்கள். இந்த ஆய்வின்படி அதை வடிகாலாகப் பயன்படுத்துவதற்கான திட்டம் இருக்கிறதா அல்லது நீர்த் தேக்கமாக உருவாக்கி பாசனத் திற்குப் பயன்படுத்துகின்ற திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தின் கீழ்ப்பகுதியில் ஏரிகள் குறைவாக இருக்கின்றன. குளங்கள் தான் அந்த ஊர்களில் ஏரிகளைப் போல, சின்ன சின்ன குளங்கள்தான்—இருக்கின்றன. அவைகளைக் கசிவுநீர்க் குட்டைத் திட்டத்தின்கீழ் ஆழப்படுத்து வதன் மூலம் குடிதண்ணீருக்கும் பயன்படுத்துகின்ற முறையில் அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினரவர்கள் நீண்ட நேரம் எடுத்துக் கொண்டபோதிலும், இந்த மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியாக கேட்டிருப்பதால் தற்போது என்னிடத்தில் பதில் இல்லை. தனியாக கேள்வி போட வேண்டுமென்பதையும், அப்போது என்னால் பதில் சொல்ல முடியும் என்பதையும் தெரி வித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். தியாகராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தஞ்சை மாவட்டத்தில் உழவர் பெருங்குடி மக்களையும், அதிகாரிகளையும் கொண்ட கருத்தரங்கை நீர்ப்பாசன முறையைப்பற்றி நடத்துவதாகக் கூறினார்கள். அதைப்போன்று மற்ற மாவட்டங்களிலும் அந்த முறையை விஸ்தரிப்பு செய்து, தென்னார்க்காடு போன்ற மற்ற வறட்சிப் பகுதிகளிலேயும் அந்த மாநாடு நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வறட்சி மாவட்டம் என்று சொல்லி விட்டார்கள். வறண்ட பகுதிகளிலே இருக்கின்ற நீர் நிலைகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதுபற்றிய கருத்தரங்கு கள் அல்லது இருக்கின்ற தண்ணீரை பயன்படுத்திக்கொண்டு கூடுதலான திட்டங்களை எப்படி தீட்டுவது என்பதைப் பற்றியும் அவ்வப்போது ஒவ்வொரு ஆண்டும் அல்லது குறிப்பிட்ட காலங் களில் பாசனக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுக்கொண்டு வரு கின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இருக் கின்ற நிலைமைகள் வேறு. ஆகவே, சிறப்பாக, தனியாக ஒரு மாநாடுகூட அல்ல - கருத்தரங்கு அல்லது ஆய்வுக்கூட்டத்தை நடத்துகின்ற எண்ணம் எனக்கிருக்கிறது என்பதைத்தான் தெரிவித்துக் கொண்டேன்.

மணியாச்சி பாசனத் திட்டம்.

452—(*வினா எண். 1650) **திரு. பு. கோ. நாராயணன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்திலுள்ள மணியாச்சி பாசனத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மணியாச்சிபள்ளம் அல்லது மணியார் பள்ளம் நீர்த் தேக்க திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆரம்ப நிலை ஆய்வுக்கட்டத்தில் உள்ளது.

திரு. பு. கோ. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, பவானி வட்டத்தில் எந்த எந்தப் பகுதிகள் இந்தத் திட்டத்தினால் பயன்பெற இருக்கின்றன; எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்பதைப்பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத்தில் வாயிலாக சுமார் 1,672 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். அதாவது, பெரியார் மாவட்டம், பவானி வட்டம் பார்கூர் மலைத்தொடர், மணியார் பள்ளம் ஓடையின் குறுக்கே சுமார் 175 மிக அடி கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுமார் 6 கிலோ மீட்டர் நீளமுள்ள ஓர் பிரதான கால்வாய் வெட்டி சுமார் 2,100 ஏக்கர் நிலங்களுக்கும் இத்துடன் இணைந்த வரட்டுப் பள்ளம் நீர்த்தேக்கத்தின் மூலம் சுமார் 1,672 ஏக்கர் நிலங்களுக்கும் ஆக மொத்தம் 3,772 ஏக்கர் நிலங்களுக்கும் பாசன வசதி செய்துதர உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பு. கோ. நாராயணன் : தலைவரவர்களே, பவானி வட்டம் வறட்சிப் பகுதிகள் அதிகமாக நிறைந்த பகுதி, விவசாயிகள் நீண்டகாலமாக இந்தத் திட்டத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதன் அவசியத்தை உணர்ந்தும், விவசாயிகளின் நலன் கருதியும் இந்த திட்டத்தின் ஆய்வை விரைவுபடுத்தி சீக்கிரமாக இந்தத் திட்டத்தைத் துவக்குவதற்கு அரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுதுதான் பிள்ளையார் சுழியே போட்டு இருக்கிறோம். ஆரம்பக் கட்ட ஆய்வுகள் நடந்து கொண்டு வருகின்றன. அந்த ஆரம்பக்கட்ட ஆய்வுக்குப் பிறகு தான், அதனால் குறைந்தபட்சம் எதிர்பார்த்த பலன் கிடைக்குமா இல்லையா என்பதைப்பார்த்து, அதை அனுசரித்துத்தான் விரிவான ஆய்வுக்கு விடுவதா வேண்டாமா என்பதைப்பற்றி முடிவெடுக்க வேண்டும். ஆரம்ப காலக் கட்ட ஆய்வு பலன் உள்ளதாக அமைவதற்கு, அவருடைய விருப்பத்திற்கேற்ப பிரார்த்தனை நடத்தலாம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது பிள்ளையார் சுழி போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். பிள்ளையார் சுழி





போடும் வழக்கம் அமைச்சருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே. தமிழ்நாட்டின் வழக்கத்திற்கு ஏற்ப சொன்னேன்.

### சஞ்சீவராயன் அணைக்கட்டு.

453—(*வினா எண். 2235) திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரம் வட்டம், பேட்ரஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த ''சஞ்சீவராயன் அணை'' கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் சஞ்சீவராயன் பள்ளம் ஆற்றில் ஏரி அமைக்கும் திட்டம், வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் செயற்படுத்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

(முற்பகல் 10-10)

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, ஆய்விலே இருப்பதாகச் சொன்னார்கள். ஆய்விலே இருக்கிறது என்றால், மதிப்பீடு போடப்பட்டதா? மதிப்பீடு போடப்பட்டிருந்தால் எவ்வளவு மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது? எந்த ஆண்டு அதை எடுத்துச் செயல்படுத்த அரசு முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ரூ. 33 இலட்சம் மதிப்பிடப்பட்டிருக்கிறது. 212 ஹெக்டேர் இதனாலே பயன் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டிலே அது எடுக்கப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் எந்த எந்த மாவட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன? கடந்த ஆண்டில் செலவிட்ட தொகை எவ்வளவு ? இந்த ஆண்டு எவ்வளவு தொகை செலவிடப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், இராமநாத புரம் மாவட்டம், காமராஜ் மாவட்டம், பசும்பொன் முத்து ராமலிங்கம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் கடந்த ஆண்டு ரூ. 534.16 இலட்சம் செலவிடப் பட்டது. இந்த ஆண்டு ரூ. 516 இலட்சம் செலவிடப்பட இருக்கிறது.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பாதுகாப்புப் பகுதிகளில் தர்மபுரி மாவட்டத்தை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எங்க ளுடைய தர்மபுரி மாவட்டத்திலே, என்னுடைய மொரப்பூர் தொகுதியிலே, ஒபுல்நாயக்கன்ஹள்ளி என்ற அணை அஸ்த்தகிரி என்ற ஏரிகட்ட வேண்டுமென்று சம்பந்தப்பட்ட இலாக்கா அதிகாரி களால் பரிசீலிக்கப்பட்டு, அந்தப் பரிசீலனை அரசுக்கு அனுப்பப் பட்டு, அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுவதாகவும் நான் அறிகிறேன். மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லா விட்டாலும் வறட்சிப் பகுதியான தர்மபுரி மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு கவுண்டர் அவர்கள் இதற்கு முன்னுரிமை கொடுத்து தனிக் கேள்வி போட்டால், அதற்கு விவரம் சேகரித்து அளிக்க லாம்.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தாமபுரி மாவட்டத்தைச் சேர்ந்திருக்கிற காரணத் தாலே, இந்த வறட்சிக்கு இலக்காகும் மாவட்டப் பகுதியிலே தர்மபுரி மாவட்டம் சேர்ந்திருக்கிறது. ஊராட்சி ஒன்றியச் செங்கல்வராயன் பாலத்திலே கட்டக்கூடிய ஏரியைப் போல, தர்மபுரி மாவட்டத்திலே வேறு எந்த. எந்தப் பணிகளை இந்த ஆண்டு அரசு எடுக்க இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டு விரிவான பதிலைப் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இன்று பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, அந்த வெள்ளப் பெருக்கின் காரணமாக, பயிர்ச் சேதம் அடைந்து வருகிறது. அதனாலே அந்தமாதிரி இடங்களில் அணைகளைக் கட்டி, அந்தச் சேதத்தைத் தடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட் டிருக்கிறது. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே



இப்படி முல்லை ஆற்றிலே ஏற்பட்டிருக்கக்கூடிய வெள்ளப் பெருக்கைத் தடை செய்வதற்கு அணை கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அது அரசினுடைய கவனத் திற்கு வந்திருக்கிறதா ? ஆகவே, அப்படிப்பட்ட அணையைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சருக்குத் தனியாகக் கேள்வி போட்டு பதிலைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைத் குறிக்கும்.]

### 3. உரிமைப் பிரச்சினை

### ''துக்ளக்'' இதழ் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கோவிந்த ராசன் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையைப் பேரவை யில் எழுப்ப என் அனுமதியைக் கேட்டு, முன் அறிவிப்பு கொடுத் துள்ளார். இப் பிரச்னையில் பேரவையின் தலையீடு ஏன் அவசியம் என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள் கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 245-ன்கீழ் கீழ்க்கண்ட அவை உரிமைமீறல் பிரச்னையைப் பேரவையில் எழுப்ப தங்கள் இசைவைக் கோரு கிறேன். துக்ளக் பத்திரிகை மீது அவை உரிமை மீறல் பிரச்னை ஒன்று பேரவைத் தீர்மானம் மூலம் பேரவையின் அவை உரிமைக் குழுவின் ஆய்விற்கு அனுப்பப் பெற்றுள்ளது. அதன் பின்னரும் மீண்டும் உரிமை மீறல் செயலை மீண்டும் 1–7–1985 தேதியிட்ட இதழில் அப்பத்திரிகை செய்துள்ளது.

அதன் அட்டைப் படத்தில் சட்டமன்றம் போன்றும் அதன் நுழைவாயிலில் சட்ட சபை என்றும் அதன்முன்னர் இரண்டு கழுதைகள் நிற்பது போன்றும் அவைகளில் ஒன்று ''கொஞ்சம் இரு, சபாநாயகர் பேசராரு 'கேட்சலாம்'' என்றும் மற்றொரு கழுதை ''வேண்டாம் ஓடிப் போயிவிடலாம், பேசறதுக்கெல்லாம்

நம்பமேலே பழி வரும், நாமதான் கத்தறோம் என்று சொல்லு வாங்க வா வா'' என்று பதிலளிப்பது போலும் கட்டடத்தில் உள் இருந்து ',ஏய் கொன்னுபுடுவேண்டா ஓ'' என்று குரல் எழுப்புவது போன்று கேலிச்சித்திரம் போடப்பட்டுள்ளது. இது மீண்டும் சட்டமன்றப் பேரவையை அவதூறு செய்வது போலவும் பேரவை ஏற்கனவே எச்சரித்துள்ள நடவடிக்கைக்கு உள்நோக்கம் கற்பிப்பதாகவும் அமைந்துள்ளது.

இது அவை நடவடிக்கையையும், அவை உரிமைக் குழுமுன் ஆய்வில் இருக்கும் பிரச்சனைகளையும் திசைதிருப்பும் நோக்குடன் விமர்சனம் செய்யப் பட்டுள்ளது. எனவே, துக்ளக் பத்திரிகை ஆசிரியரும் பதிப்பாளரும் அவை உரிமை மீறல் செயலைப் புரிந்துள்ளார். இப்பிரச்சனையை மேலும் ஆராய அவையில் தலையீடு அவசியமாதலால் இதுபற்றி மேலும் ஆராய இதற்குத் தங்கள் இசைவினை தர வேண்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற அவை உரிமை மீறல் பிரச்சனை பற்றி இந்த மன்றம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டத்தில் இருக்கிறது. அவர்களே குறிப்பிட்டிருப்பதுபோன்று இந்த அவையினுடைய மதிப்பையும் மரியாதையையும் குறைக்கின்ற வகையில் துக்ளக் பத்திரிகையில் ஏற்கெனவே செய்தி வெளியிடப்பட்டு, அதுபற்றி அவை உரிமைப் பிரச்சனை இந்த அவையிலே கொண்டுவரப்பட்டு, அது உரிமைக் குழுவிற்கு விசாரணை செய்யப்பட அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த அவையிலே எடுக்கின்ற தீர்மானத்தைப் பற்றியோ. இந்த அவையில் நடைபெறுகின்ற நடவடிக்கைகள் பற்றியோ எடுக்கின்ற முடிவுகள் பற்றியோ செய்திகள் வெளிவருகின்ற போது அதனுடைய மதிப்பு, மரியாதை குறையாத வகையில் ஒருவர் கருத்து சொல்ல, கருத்து வெளியிட ஒரு ஜனநாயக நாட்டில் உரிமை இருக்கிறது. அந்த வகையில் அவை எடுக்கிற முடிவை பற்றியோ, தீர்மானத்தைப் பற்றியோ பொதுமக்களுக்கு தன்னுடைய எண்ணத்தை எடுத்துச் சொல்ல உரிமை இருக்கிறது. ஆனால் அவை உறுப்பினர்களுடைய தரத்தைக் குறைத்துச் சொல்வது, உறுப்பினர்களுடைய மரியாதையைக் குறைத்துச் சொல்வது, மதிப்பைக் குறைப்பது, உள் நோக்கம் கற்பிப்பது, கேலி செய்வது, கிண்டல் செய்வது போன்றவைகளைச் செய்ய உரிமை இல்லை. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி அவையின் மதிப்பைக் குறைக்கின்ற வகையில், கண்ணியத்தைக் குறைக்கின்ற வகையில் கருத்து வெளியிடப்பட்டிருப்பதால் இது அவை உரிமையை மீறிய செயலாகிறது. துக்ளக் பத்திரிகையில் இந்த அவையின் மதிப்பை, மரியாதையை அவமதிப்பதுபோல் கழுதைப் படம் எல்லாம் போட்டு, அது கத்துவதை எல்லாம் போட்டு, சபையில் இப்படிப்பட்ட நடவடிக்கை நடக்கிறது



என்று போட்டு, அவையின் தரத்தைக் குறைத்துஎடுத்து சொல்வது உள்ளபடியே இந்த அவையின் உரிமையை மீறிய ஒரு செயல் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு ஜனநாயக நாட்டில் சட்டமன்றமும் பாராளுமன்றமும் மிக முக்கியமான, மரியாதைக்குரிய, மதிக்கப்பட வேண்டிய அமைப்புகள். அந்த மதிப்பும் மரியாதையும் காப்பாற்றப்பட வேண்டும், அந்தமுறையிலே இந்த மன்றத்தின் உரிமை, மதிப்பு மரியாதை எல்லாம் காப்பாற்றப்பட வேண்டும். அதைப் போன்று அவை உறுப்பிளர்கள், அவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்ற அவைத் தலைவர் ஆகியவர்களுடைய மதிப்பும் மரியாதையும் காப்பாற்றப்பட்டாக வேண்டும். ஆனால் துக்ளக் பத்திரிகையில் வந்திருக்கிற செய்தி அவையின் கண்ணியத்தைக் குறைப்பதாக இருக்கிறது, மரியாதையைக் குறைப்பதாக இருக்கிறது, மதிப்பைக் குறைப்பதாக இருக்கிறது. எனவே பேரவைத் தலைவர் இதை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புவது பற்றி முடிவு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பிரச்சனை அவை பேரவையின் உரிமையை மீறிய செயலாகத் தோன்றுவதால் பேரவையின் தலையீடு தேவை என்று நான் கருதுகிறேன். எனவே, ஏற்கெனவே அவையினால் அனுப்பி வைக்கப் பெற்றுள்ள பிரச்சனையோடு இதனையும் ஆய்ந்து அறிக்கை அனுப்ப, இதனை அவை உரிமைக் குழுவிற்கு விதி 252-ன் கீழ் நான் அனுப்பி வைக்கிறேன்.

(முற்பகல் 10-10)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் ஊழியர்கள் உண்ணாவிரதம் குறித்து நான் ஒரு அறிவிப்பு கொடுத்திருந்தேன். . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது.

### 4. கவன ஈர்ப்புகள்

#### (அ) ஆசிரியரல்லாப் பணியாளர்கள் சங்கப் போராட்டத்தால் தேர்வு ஒத்திவைக்கப் பெறுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் எப். எம். இராசரத்தினம், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

[1985 ஜூலை 1

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இவ்வாண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற மாநில அளவிலான ஆசிரியரல்லாத அலுவலர் சங்கப் போராட்டம் காரணமாக குமரி மாவட்டம் இலக்குமிபுரம் கலை விஞ்ஞானக் கல்லூரியில் நடைபெற வேண்டிய மதுரைப் பல்கலைக் கழக இளநிலை பட்டப்படிப்புத் தேர்வு நடைபெறாமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு. திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்ககண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஏப்ரல் மாதம் 18, 19 மற்றும் 20–4–1985 ஆகிய நாட்களில் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் சங்கப் போராட்டம் காரணமாக பல்கலைக்கழகத் தேர்வுகள் நடைபெறுவதில் பாதிப்பு இருந்ததாகவும், மறு தேர்வு நடத்துமாறும் பல்கலைக் கழகத்திற்கு கல்லூரி முதல்வரால் தெரிவிக்கப்பட்டது. ஜூன் 13, 14 மற்றும் 15–6–1985 ஆகிய நாட்களில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் இக்கல்லூரி மாணவர்களுக்காக மறு தேர்வுகள் நடத்தப்பட்டன. மறுதேர்வுகளுக்குரிய தேதிகள் அறிவித்த பின் 22–4–1985 அன்றும் தேர்வுகள் நடத்துவதில் பிரச்சனை இருந்ததாக கல்லூரி முதல்வர் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திடம் வேண்டியதாகவும் தெரிய வருகிறது. முதலில் எழுதிய கடிதத்தில் ஏப்ரல் மாதம் 18, 19, 20 ஆகிய நாட்களில் தேர்வுகள் பாதித்துள்ளன என்று முதல்வர் கூறியுள்ளார். பின்னர் 22-4-1985 அன்று தேர்வு பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறிய வேண்டுகோளினை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பரிசீலித்து வருகிறது.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் 18,19,20, 22 ஆகிய தேதிகளில் மாநில அளவில் ஆசிரியர் அல்லாத அலுவலர்கள் சங்கப் போராட்டம் நடைபெற்றது. இதன் காரணத்தால் அந்த நான்கு நாட்களிலும் இலக்குமிபுரம் விஞ்ஞான கலைக்கல்லூரியில் மாணவர்கள் பல்கலை கழகத் தேர்வு எழுதவில்லை. போராட்டத்தை நடத்தியவர்கள் அலுவலர்கள். அதனால் பாதிக்கப்பட்டவர்கள் கள்ளம், கபடம் அற்ற மாணவர் சமூகத்தினர். இதுபற்றி பல்வேறு புகார்களைக் கொடுத்தும் அந்தக் கல்லூரி ஆசிரியர் மன்றமும், மாணவர் மன்றமும், கல்லூரியினுடைய அலுவலர்களும் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கும் கோரிக்கை வைத்தும் பயன் இல்லை. அந்தத்



1985 ஜூலை 1]

(திரு. எப். எம். இராசரத்தினம்)

தேர்தலைப் பொறுத்தவரையில் 2½ மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. தேர்வு எழுதுவதற்கு மறுதேதி அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு அந்தத் தேர்வு முடிவு அறிவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத் தேர்வு நடைபெறுகிற போது ஒரு குறிப்பிட்ட பிரிவினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டாலோ அல்லது அதை பகிஷ்கரித்தாலோ மற்றவர்கள் ஒத்துழைப்பு தருவார்களேயானால் நாம் முன் வந்து அந்த தேர்வுகளை நடத்தியிருக்கிறோம். அவ்வாறு பல்கலைக் கழகம் தேர்வை நடத்தியிருக்கின்றது. ஆனால் இப்படி குறிப்பிட்ட ஒரு கல்லூரியில் மட்டும் மாணவர்கள் ஒத்துழைப்பு தராத காரணத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த மாணவர்களுடைய கோரிக்கையை ஏற்று 13, 14, 15 ஆகிய நாட்களில் மறு தேர்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போது புதிதாக, அதாவது 18, 19, 20 ஆகிய மூன்று நாட்களில் தேர்வு நடத்தப்படவில்லை என்று சொன்னதற்கு பிறகு அதற்காக 13, 14, 15 ஆகிய மூன்று நாட்கள் குறிப்பிடப்பட்டு தேர்வு நடத்தப்பட்டிருக்கின்றது. அவர்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கின்றது. திடீரென்று 22 ஆம் தேதி தேர்வு நடக்கவில்லை என்று புதிதாக ஒரு கோரிக்கையை முன் வைத்து இப்போது கேட்டிருக்கிறார்கள். இது மிகப்பெரிய தவறாகும்.

ஒரு பல்கலைக் கழகத்தின் தேர்வு உடனுக்குடன் நடக்கக்கூடிய ஒன்றல்ல. ஒரு நாள் தேர்வு நடத்துவது என்றால் எத்தனையோ தேர்வு வினாக்களை வைத்து, அதன் பின்னர்தான் கேள்வித்தாள் தயாரிக்கவேண்டியிருக்கின்றது. அவ்வாறு தயாரித்து தேர்வு வைத்த பின் திருத்தவேண்டியிருக்கின்றது. அதற்கப்புறம் தேர்வு முடிவினை வெளியிடவேண்டும். இவ்வளவு பெரிய பிரச்சனைகள் இருக்கின்ற சூழ்நிலையில் இதுபோன்ற பிரச்சனைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டியபொறுப்பு எல்லா துறையினருக்கும் இருக்கின்றது அதிலே முக்கியமான பொறுப்பு மாணவர்களுக்கு இருக்கின்றது. மாணவர்கள் அந்தப் பொறுப்பை உணராமல் இருந்தால் அவர்களுடைய எதிர்காலம் எப்படி எல்லாம் பாதிக்கப்படும் என்பதற்கு இந்த ஒரு நிகழ்ச்சியே எடுத்துக்காட்டாகும். இப்போது 22 ஆம் தேதி என்று சொல்கிறார்கள். இதுபற்றி ஏன் முதலிலேயே சொல்லவில்லை, அதற்காகவே ஒரு விசாரணை நடத்தவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த கோரிக்கை வந்து இருக்கின்றது. இருந்தாலும் பல்கலைக் கழகம் அந்தக் கோரிக்கை குறித்து பரிசீலிக்கும்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனாலே அட்மிஷன் கூட பாதிக்கப்பட்ட சூழ்நிலை அந்தப் பகுதியிலே இருக்கிறது, எனவே அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்கலைக் கழகம் மறு தேர்வு நடத்துவதற்கான தேதியை உறுதியாக அறிவிக்க வேண்டும் என்று மாணவர்களுடைய

(திரு. எப். எம். இராசரத்தினம்)

நலம் பேணும் அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா அல்லது மறு தேர்வு நாள் நிச்சயமாக அறிவிக்கப்படும் என்ற உறுதி மொழியை அமைச்சர் அவர்கள் வழங்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே முதலிலே இது நம்முடைய அதிகாரத்திலே இல்லை. அது தன்னாட்சி பெற்ற நிறுவனம். அதிலே என்னென்ன சிரமங்கள் இருக்கிறது என்பதை உணர்ந்து அவர்கள் செய்யவேண்டும். செய்ய வில்லை என்றும் சொல்ல முடியாது. முதலிலேயே 3 நாட்களுக்கு மறு தேர்வுகள் நடத்தியிருக்கிறார்கள். அப்போதே சொல்லியி-ருந்தால் இந்த 22-ஆம் தேதிக்கும் சேர்த்து நடத்தியிருக்கலாம். அப்போது சொல்லாமல் இருந்து விட்டு, இப்போது புதியதாக சொல்கிறார்கள். அது ஏன் ? என்ன காரணம் என்பதைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்று நான் முன்பே கூறினேன். இந்தப் பிரச்சனை காரணமாக எந்தக் குறிப்பிட்ட மாணவரும் பாதிக்கப் படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, மதுரை பல்கலை கழகத்தை கேட்பதற்கான நடவடிக்கையை நாம் எடுக்கலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே இன்று அந்த இலக்குமிபுரம் கல்லூரியில் உள்ள மாணவர்கள் நிலைமை பாதிக்கப்பட்டிருக்கிறது. எனக்குள்ள தகவல் அந்தக் கல்லூரி நிர்வாகத்தினுடைய சில முயற்சிகள் காரணமாகத்தான் அந்த தேர்வு நடைபெறவில்லை என்பதையும் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படக்கூடிய முறையில், மீண்டும் தேர்வு எழுத வாய்ப்பு வேண்டும் என்று கோரிக்கையை அந்த மாணவர்கள் வைத்ததன் பிரகாரம், அவர்களுடைய எதிர் காலம் பாதிக்கப்படாமல் இருக்கக்கூடிய முறையில் விரைவிலே தேர்வு நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, போராட்டம் காரணமாக பாதிக்கப்பட்டிருந்தால்தான் மதுரை பல்கலைக் கழகமே அது குறித்துநடவடிக்கை எடுக்கலாம். ஆனால் இப்படி ஒவ்வொரு கல்லூரியும் ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி ஏதாவது ஒரு தேர்வை நடத்தாமல் விட்டு விட்டு, பிறகு மறு தேர்வு நடத்தவேண்டும் என்று கேட்குமேயானால், பல்கலைக் கழகம் வருஷம் பூராவும் பரிட்சைகளை நடத்திக் கொண்டிருக்க வேண்டியது வரும். இப்போதே 100-க்கணக்கான தேர்வுகளை 100-க் கணக்கான கல்லூரிகளுக்கு நடத்திக் கொண்டிருக்கிறது.

ஆகவே இப்படி கல்லூரி மேனேஜ்மெண்ட் காரணமாகவோ, மாணவர்கள் காரணமாகவோ, யார் காரணமாக இருந்தாலும் சரி பரிட்சைகளை தடை செய்யவேண்டும் என்று முயல்வதால் மாணவர்கள் பாதிக்கப்படுவது நிச்சயம். அவர்களுக்கு நிவாரணம் தருவதும் மிகமிகக் கடினமாகும். ஆனால் இந்தப் பிரச்சனையில்



(திரு. செ. அரங்கநாயகம்)

பல்கலைக் கழகம் முடிந்ததைச் செய்திருக்கிறார்கள். இதிலே திடீரென்று 22-ஆம் தேதியும் பரிட்சை நடக்கவில்லை என்று அவர்கள் கூறுவதே விசாரணைக்குரியது. முன்பே அதை ஏன் செய்யவில்லை முன்பே 3 பரிட்சைகளுக்கு மறு தேர்வு நடத்தப் பட்டிருக்கிறது. அதையே பல்கலைக் கழகத்தினர் மிகவும் மனிதாபிமான உணர்வோடு செய்திருக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது தேர்வுகளை புறக்கணிக்க வேண்டும் என்ற நடவடிக்கையில் யாரும் ஈடுபடவேண்டாம். அப்படி ஈடுபடுபவர்களை ஆதரித்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு தெரிவிக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### (ஆ) பவானிசாகரில் இயங்கி வரும் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் வே. கு. சின்னசாமி, மா. சின்னராசு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதை கொண்டு வருவார்.

**திரு. வே. கு. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பவானிசாகரில் பல ஆண்டுகளாக நடை பெற்றுவரும் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தை சென்னைக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைக் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்-வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை

பவானி சாகரில் இயங்கி வரும் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தை அபிவிருத்தி செய்து, அதை ஒரு ''உச்ச நிலை நிறுவனமாக'' மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில்

இருந்தது, பயிற்சி சம்பந்தமான ஆராய்ச்சிகளும் மற்றும் வெளியிலிருந்து பல துறையில் சிறப்புப் பெற்ற விரிவுரையாளர்களையும் அழைத்து சிறந்தமுறையில் பயிற்சி அளிப்பதும் அதன் முக்கியமான அம்சமாக இருந்தது. பவானிசாகர் சென்னைக்கு வெகுதூரத்தில் இருப்பதாலும் போக்குவரத்து வசதி அதிகம் இல்லாத இடத்திலிருப்பதாலும் உயர்மட்ட அலுவலர்களை அங்கு பயிற்சிக்கு அனுப்புவதிலும் வெளியிலிருந்து சிறந்த விரிவுரையாளர்களின் சேவையைப் பெறுவதிலும் மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டன. ஆதலால் பவானிசாகரிலுள்ள பயிற்சி நிலையத்தை கீழ்க்கண்டவாறு இருவகையாக பிரிவு செய்து ஒன்றை அங்கேயே இயங்கவும் மற்றுமொன்றை சென்னை அருகில் அமைக்கவும் கொள்கையளவில் ஒப்புதலளிக்கப்பட்டது.

1. ஊரக விரிவாக்கப் பயிற்சிநிலையம், பவானிசாகர் (வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு கீழுள்ள அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க)

3. மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், சென்னை (வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் அவர்களுக்கும் மேற்பட்ட அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்க).

பவானிசாகரிலுள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம் அதற்கு உரிய விரிவுரையாளர்கள், பணிமனை கட்டிடங்களோடு தொடர்ந்து அங்கேயே செயல்படும் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் மட்டும் சென்னைக்கு அருகில் மாற்றப்பட்டு அதனுடைய செயல்பாடு அபிவிருத்தி செய்யப்படும். இது மைய அரசு வழங்கும் புதிய நிதி (European Ecoomic coiporation Aid programme) ஆதாரங்களைக் கொண்டு செய்யப்பட்டு இந்நிலையம் ஒரு ''உச்ச நிலை பயிற்சி நிலையமாக'' (Apex Institution) மாற்றப்படும். இவ்வாறு செய்வதினாலும் சென்னைக்கு அருகில் மாற்றப்படுவதாலும் வளர்ச்சி அலுவலர்களுக்கும் மற்றும் உயர்மட்ட அலுவலர்களுக்கும் நல்ல முறையில் பயிற்சி அளிக்க வாய்ப்பையும் வசதியையும் இந்நிலையம் அளிக்கும்.

(முற்பகல் 10—20)

திரு. வே. கு. சின்னசாமி : தலைவர் அவர்களே, பவானிசாகருக்கு போவதற்கு சரியான பஸ் போக்குவரத்து வசதி இல்லையென்றும், அதிகாரிகள் வந்து செல்வதற்கு சிரமம் ஏற்படுகிறது என்றும் அறிக்கையில் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் பவானிசாகரிலுள்ள பயிற்சி நிலையத்தை இருவகையாகப் பிரித்து ஒன்றை பவானிசாகரிலும் மற்றொன்றை



சென்னையிலே அமைக்கவும் கருதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிக்கையில் தந்திருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, பவானிசாகர் என்பது வளர்ச்சியில்லாத ஒருடவுன்ஷிப் ஆகும். அங்கே பொதுப்பணி துறைக்கு சொந்தமாக நிறைய இடங்கள் இருக்கின்றன. அங்கே கட்டிடங்களைக் கட்டுவதற்கு வசதி இருக்கிறது. கிராமப்புறங்கள் முழுமையாக வளர்ச்சி அடையவேண்டுமென்பது மாண்புமிகு முதல்வர் அவர்களின் எண்ணமாகும். ஆகவே அங்கேயிருக்கிற நிலையத்தை சென்னைக்கு மாற்றுவதற்கு பதிலாக, வேறு நல்ல முடிவை எடுக்கவேண்டும். ஏற்கனவே சென்னையில் போதிய இடவசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே இங்கே வந்து தங்குகிறவர்களுக்கு வசதி குறைவாக இருக்கும். அதோடு தமிழக அரசுக்கென்று இரண்டாவது தலைநகரம் தனியாக அமைக்கலாம் என்பது அரசின் பரிசீலனையில் இருப்பதாகவும் அறிகிறேன் அதோடு பவானிசாகரை சுற்றுலா மையமாக மாற்றவிருப்பதாக மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சத்தியமங்கலம் வந்திருந்த போது அறிவித்திருக்கிறார்கள், இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு இதில் முடிவு காணவேண்டும். அதேபோல அங்கே செயல்விளக்கப் பண்ணைகள் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நடந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாக சுருக்கமாக கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. n. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பவானிசாகர் கிராமப்புறமாக இருந்தாலும் வளர்ச்சியடைய வேண்டும் என்பதில் அரசுக்கு அக்கறை உண்டு. ஆகவே தான் இருக்கிற மையத்தை இரண்டாகப் பிரித்து, கட்டப்பட்டிருக்கிற கட்டடங்களை உபயோகித்துக் கொள்வது, அங்கே ஊரக விரிவாக்கப்பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சென்னையிலே கொண்டு வந்து ஒரு பகுதியை வைப்பதாக இல்லை. சென்னைக்கு அருகிலே கொண்டுவந்து இன்னொரு கிராமத்திலே தான் வைக்கப் போகிறோம். இன்னொரு பகுதியும் கிராம வளர்ச்சிக்குத் தான் பயன்படுத்தப்படப் போகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் சென்னைக்கு அருகில் இருந்தால் பலவகையிலும் உதவியாக இருக்குமென்று மத்திய அரசு கருத்து தெரிவித்துள்ளது. இதற்கு மத்திய அரசே உதவி முழுவதும் அளிக்கவிருப்பதால், அதை ஏற்றுக் கொள்வதென்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, பவானிசாகரில் இருக்கிற அந்தப் பயிற்சி நிலையம் தொடர்ந்து பவானிசாகரிலேயே முழு அளவிற்குப் பயன்பாடு உள்ளதாக அமைக்கப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் இந்த மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தை சென்னைக்கு மாற்றப்படும்

வணிக ஒற்றுமை பத்திரிகையின் ஆசிரியர் மற்றும் வெளியிடுபவருமான திரு. பால்ராஜ் மேற்படி கட்டுரையை எழுதியதற்கு தானே பொறுப்பாளி என்றும் தெரிவித்துள்ளார். எனவே அவையை அவதூறு செய்யும் நோக்குடன் கட்டுரை எழுதியது அவை உரிமை மீறிய செயலாகும். மேலும் தனது சாட்சியத்தில் அவ்வாறு எழுதியதற்கு தான் வருத்தப்படவில்லை என்றும் அதற்காக மன்னிப்புக் கேட்கத் தயாராக இல்லை என்றும், என்ன தண்டனை அளித்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளதாகவும் அவர் கூறியுள்ளது, தனது செயலை நியாயப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஜனநாயகத்தில் பாராளுமன்றங்கள் மாநில சட்டமன்றங்கள், மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன. அவைகள் மீது மக்களின் நம்பிக்கையைக் குறையச் செய்வதோ, அல்லது அவைகள் மீது ஒரு வெறுப்பை மக்கள் மத்தியிலே வேண்டுமென்றே ஏற்படுத்துவது ஜனநாயகத்திற்கு ஊறு விளைவிப்பதாகும். பொதுவாக என்ன காரசாரமான விமர்சனங்களைச் செய்தாலும், பேரவை அவைகளைப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் உள்நோக்கம் கொண்டு வேண்டுமென்றே களங்கம் கற்பித்து அவர்கள் செய்தது தவறு என்று சுட்டிக் காட்டிய பின்பும், அந்தத் தவறையே நியாயப்படுத்துவது என்பது அவர்களை தண்டிக்காமல் விடுவோமேயானால் அவர்களைப் பின்பற்றி மற்றவர்களும் இம்மாதிரியான தகாத செயல்களில் இறங்க ஏதுவாகும். மேலும் இம்மாதிரியான தவறுகள் மற்றவர்களுக்கு ஒரு தவறான எடுத்துக்காட்டாக அமையும் என்ற ஒரு நோக்கத்தினால், இந்தப் பத்திரிகையின் வெளியீடுகள் மிகக் குறைவாக இருப்பினும், அவருக்கு கடுமையான தண்டனை விதிக்கலாம் என்றாலும், பேரவை தனது கண்ணியத்தையும் பெருமையையும் கருத்தில் கொண்டு அவ்வாறு கடுமையான தண்டனையின்றி, ஒரு எச்சரிக்கையாக வெறும் கால சிறை தண்டனை அளிக்கலாம் என்று பேரவைக்கு பரிந்துரை செய்தது. அவை உரிமைக் குழுவின் அறிக்கை 28-3-1984 அன்று அவையிலும் அளிக்கப்பட்டது.

இதற்கிடையே 15-11-1984.ல் ஏழாவது சட்டப் பேரவை கலைக்கப்பட்டுவிட்டது. எட்டாவது சட்டமன்றப் பேரவை கூடிய பின்பு, கடந்த பேரவையில் அளிக்கப்பட்ட குழு அறிக்கையின் மீது இந்த அவையில் இப்போது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தன்மையினுடைய அடிப்படையிலேதான் இந்த தீர்மானத்தை நான் முன்மொழிந்து இருக்கிறேன்.

(முற்பகல் 10–30)

மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள் இதற்கு ஒரு திருத்தம் தந்து இருக்கிறார்கள். அந்தத் திருத்தத்திலே, இந்த தண்டனையினுடைய நாட்களைக் குறைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே எழுதியிருக்கின்ற தன்மைகள் மற்றவைகளை கூர்ந்து கவனித்தால் இன்னும் அதிகமான தண்டனை கடுமையான தண்டனை தான் கொடுத்து இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இந்தப் பிரச்சினையை பொறுத்து ஒரு இளகிய மனது கொண்டு இருந்தாலும், பிரச்சினையைப் பற்றி நோக்கும்போது எதிர் காலத்தில் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.





ஆனால் இது பற்றி அவை உரிமைக் குழு விசாரித்தபோதும் அவர்கள் சாட்சியம் அளித்தபோதும் இருக்கின்றவைகளை இந்த அவைக்கு உரிமைக் குழுவினுடைய பரிந்துரைகளை வைத்த போது மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் அறிந்து இருப்பார்கள். அவை இது பற்றி ஒரு முடிவு எடுக்கும் வரையில் இதை பத்திரிகையில் வெளிவரக் கூடாது என்ற நிலைமையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் தரப்பட்டிருக்கிறது. எனவே, இப்போது நான் குறிப்பிடுகின்றவற்றை அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை முழுவதும் சொல்லாமல் இருப்பது நல்லது. ஒரு செண்டன்ஸ் மட்டும் சொல்லி விடுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நீக்கவேண்டும் என்றும் நானே சொல்லியிருக்கிறேன். இந்த அவை தெரிந்து கொள்ள வேண்டும், பிரச்சினையின் சீரியஸ் தன்மையை புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இப்போது நான் சொல்கிறேன். இவற்றை எல்லாம் அவைக் குறிப்பில் ஏற்றவேண்டாம் என்பதை தெரிவித்துக்கொண்டு சொல்லுகிறேன், **

மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளுவது எல்லாம் இதில் உள்ளபடியே கடும் தண்டனையாகத்தான் நாம் விதிக்க வேண்டும். ஆனால் வெறும் காவல் தண்டனையாகத்தான் கொடுத்து இருக்கிறோம்.** இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு நாவலர் அவர்கள் பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது பற்றிக் குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன். அவைகளை பத்திரிகையும் வெளியிட வேண்டாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இங்கே அவை உரிமை மீறல் நடைபெற்றிருக்கிறது என்ற கருத்திலே எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. பத்திரிகையினுடைய ஆசிரியர் பால்ராஜ் இங்கே இருக்கக்கூடிய சட்டமன்றத்தையும், சட்டசபை உறுப்பினர்களையும் குறிப்பிட்டு இருக்கக்கூடிய வார்த்தைகள், 'டிக்னிஃபைடு லாங்குவேஜ்' என்ற ஒரு கண்ணியமான வார்த்தைகளாகச் சொல்லாமல், கண்ணியக் குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்கிறார் என்ற முறையில் அது சபையினுடைய அவையின் உரிமையை மீறிய செயல் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

ஆனால், இதற்கிடையிலே, அதற்குத் தண்டனை வழங்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்று கேட்டால், தண்டனை வழங்கப்படவேண்டும் என்ற கருத்திலேயும் மாறுபாடு கிடையாது. ஆனால், அந்தத் தண்டனை வழங்குகிற முறையிலே இருக்கக் கூடிய ஒரு சீரியஸ்னெஸ், க்ரேவ்னெஸ்—அதனுடைய கடுமையைத் தான் இங்கே சுட்டிக் காட்ட நான் விரும்புகிறேன்.

இங்கே அந்த ரெக்கமண்டேஷனிலேயே, உரிமைக் குழுவினுடைய பரிந்துரையிலே என்ன சொல்கிறார்கள் என்றால், ஒரு வார காலம் போதும்—சபையினுடைய கண்ணியம் கருதி, சபையினுடைய கௌரவம் கருதி, ஒரு வாரம் போதும் என்கிறார்கள். நாவலர் அவர்கள் படித்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். படித்தும் கூட, ஒரு வாரம் போதாது : தண்டனையை அதிகப்படுத்தினால் தான் சரியாக இருக்கும் என்ற கருத்திலே 14 நாட்கள் போட்டிருக்கிறார்கள்.

நம்முடைய மரியாதைக்குரிய நாவலர் அவர்களுக்கு நல்ல முறையிலே திருக்குறள் தெரியும். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று அவர் மற்றவர்களுக்கு எல்லாம் அடிக்கடி உபதேசம் செய்வார்கள். அந்த ஒரு அணுகுமுறையை இதிலே கையாள வேண்டும் என்பதைத்தான் நான் அன்போடு கேட்டுகொள்கிறேன்.

அதற்குப் பொருள், சபையின் உரிமையை மீறுபவர்களை நாம் தண்டிக்கக் கூடாது என்பதோ அல்லது அவர்கள் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் மேலும், மேலும் அவை உரிமை மீறல் செய்கின்ற காரியத்தைச் செய்வதற்கு அனுமதிப்பது ஆகும் என்ற நிலையிலேயோ நான் அதைச் சொல்லவில்லை. எனவே, தயவு செய்து உள்நோக்கம் கற்பிக்க வேண்டாம். அவை உரிமை மீறிய பால்ராஜ் அவர்களுக்காக நான் வாதாடவில்லை.







ஆனால், அதே நேரத்தில் ஒன்றை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். உதாரணமாக, இங்கே பல பத்திரிகைகள் மீது உரிமைப் பிரச்சினைகள் வந்திருக்கின்றன. அப்போது எல்லாம் நம்முடைய அணுகுமுறை என்ன என்பதைத் தயவு செய்து நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அருள் கூர்ந்து கவனிக்க வேண்டும். அவர் இப்போது ஸ்பீக்கர் அல்ல. ஜூடிஷியல் ஆபீசர் என்ற நிலையிலே இப்போது அவர் இருந்து கொண்டிருக்கிறார். ஆகவே, இந்தத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிற 14 நாட்கள் என்பதைக் குறைத்துத் தீர்ப்பு வழங்குகிற உரிமை, ஸ்பீக்கர் என்றாலும், ஜூடிஷியல் ஆபீசர் என்ற முறையில், தங்களுக்கு இப்போது அந்தக் கடமை உண்டு.

ஆக, நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது என்னவென்று கேட்டால், மெயில் பத்திரிகை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவகாரத்திலே ஹவுஸ் தான் தீர்மானிக்கிறது. நான் பண்ணுவது அல்ல.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் சபையின் மூலமாக தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவை முன்னவருக்கு அல்லது சபையைக் கேட்டுக் கொள்கிறேன். அந்தத் திருத்தத்தைக் கொண்டு வர விரும்புகிறேன். இதிலே குறிப்பாக, மெயில் பத்திரிகை மீது, அண்ணா பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினைகள் வந்த நேரங்களில் எல்லாம் நானே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆர்ட்டிகிள் 14-ஐ நாம் இங்கே பேசுகிறாற்போல் இருக்கிறது. (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை அவைப் பிரச்சினை தான். யாருடைய தனிப்பட்ட பிரச்சினையும் அல்ல. இதிலே மற்ற வழக்கை கம்பேர் பண்ணுகிறாற்போல் இருக்கிறது அது வேண்டாம். (குறுக்கீடு) இது ஹவுஸின் பிரச்சினை ; உறுப்பினரின் கண்ணியப் பிரச்சினை. ஒவ்வொரு வழக்கின் தன்மையைப் பார்த்து, நாம் தண்டனை வழங்குகிறோம்.

**Dr. K. SOURIRAJAN :** Sir, the House has delegated the powers to the Privileges Committee. The Committee has given its decision. How can we have another discussion on the matter on which the Committee has already taken a decision. We cannot have a discussion on the ruling or decision given by the Privileges Committee, since you have delegated the powers to the Committee. The hon. Member cannot question the authority.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார். அது பற்றிப் பேசி

[திரு. செ. செம்மலை]

விட்டார்கள். எனவே, அந்தத் திருத்தத்தை அவை ஏற்றுக் கொள்கிறதா, இல்லையா என்பது தான் இப்போது இருக்கிற பிரச்சினை. அதைத் தாங்கள், அவைத் தலைவர் அவர்கள், அவையினுடைய முடிவிற்கு விட்டுவிட்டால் பிரச்சினை தீர்ந்து விடுகிறது. எனவே, இனிமேல் மேற்கொண்டு, இதுபற்றி பேச வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10-40 மணிக்கு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் பிரச்சினையை நீங்கள் வேறு விதமாக அணுகுங்கள். இது நம்முடைய மன்ற உறுப்பினர்களுடைய பிரச்சினை. கண்ணியப் பிரச்சினை. இதை நாம் விவாதிக்கிறதினாலே என்ன அர்த்தம் ஆகிறது என்றால், பொதுவாக, ஏற்கனவே, எதையும் எழுதலாம் என்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறது. அது குறித்து இந்த அவை எதையும் செய்ய முடியாது என்று வெளியிலே இருப்பவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீதி மன்றத்திற்கு எப்படிப் பயப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நீதிபதியின் முன்னால் அப்படியே ஆடிப்போய் நிற்பார்கள், கன்டெம்ப்ட் ஆப் கோர்ட், என்று கேசிலே வருகின்றபொழுது அப்படி நிற்பார்கள். ஆனால் நம்முடைய மன்றம் வீனியன்டாக இருக்கிறது என்பதற்காக எதையும் எழுதலாம், எந்தக் கார்ட்டூனையும் போடலாம் என்ற நிலைமை இருக்கிறது.

அவையில் நமது உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று அவையை நம்பி உறுப்பினர்களாகிய நாம் இருக்கிறோம். நாம் எல்லா உறுப்பினர்களின் சார்பாகவும்தான் பேசிக்கொண்டு இருக்கிறோம். எனவே, விவாதம்கூட வேண்டாம். என்னுடைய கருத்துகூட, கடுங்காவல் தண்டனை கொடுத்திருக்க வேண்டும். சிம்பிள் இம்பிரிசன்மெண்டு என்று கொடுத்தால் உள்ளே போய் சாப்பிட்டுவிட்டு வெளியிலே வந்து திரும்பவும் எழுதுவார்கள்,

**திரு அ. ரகுமான்கான் :** பேரவைத் தலைவரவர்களே, நான் இந்தப் பிரச்சினையில் உங்களைக் கேட்டுக்கொள்வது, அவை உரிமை மீறல் நிகழ்ச்சியைப் பல பத்திரிகைகள் செய்த நேரத்தில் எப்படி நடந்து கொள்ளப்பட்டது என்பதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேனே தவிர வேறொன்றுமில்லை. அதில் சொல்லப்பட்ட கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நாம் பேசியது அவைக்காகத்தான் பேசினோம். எனக்காக அல்ல. இந்த முடிவை உங்களுக்கே விட்டு விடுகிறேன். பத்திரிகைகளில் எழுதுவது



என்பதைப் பொறுத்தவரையில் அந்தப் பேனா ரொம்ப வேகமாக இருக்கிறது. எல்லோருக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும், என்னை உட்படத்தான் கேட்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் தலைவரவர்களே, நான் சொல்ல வந்ததைத் தாங்களோ அல்லது உறுப்பினர்களோ தப்பாகப் புரிந்து கொள்ளக்கூடாது, உரிமை மீறல் நடந்திருக்கிறது : தண்டனை வழங்கப்படவேண்டும். ஆனால் அதே நேரத்தில், அந்தத் தண்டனையைக் குறைத்து வழங்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு கேட்டுக்கொள்வதற்குக் காரணம் சொல்கிறேன். அப்படித் தண்டனையைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்பதற்குக் காரணம், அவரைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அல்ல. இன்னும் சொல்லப்போனால், இதேபோன்று பத்திரிகைகள் உரிமை மீறல் செய்திருந்த காலத்தில் எப்படி நடந்து கொள்ளப்பட்டது என்பதைக் குறித்து வாசிக்க இருந்ததை, உங்களுடைய வேண்டுகோளை ஏற்று நான் வாசிக்க விரும்பவில்லை. உங்களுக்கு முன்பிருந்த சபாநாயகர்கள் தீர்ப்பு வழங்கியிருக்கின்றபொழுது அதில் ஒரு அபாயத்தையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையிலும் சரி, அப்படி ஒரு அபாயம் இருக்கிறது. நான் அவர்களைப் பாதுகாப்பதற்காகச் சொல்வதாகக் கருதக்கூடாது. அம்மாதிரியான வாதத்தைத் துவக்குவதற்கும் நான் தயாராக இல்லை.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதிலே தொடர்புடையவர், எனக்கு அதிக தண்டனை கொடுங்கள் என்று கேட்கிறார் ; ஆனால் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களோ அந்தத் தண்டனையைக் குறையுங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். இது அவரை உற்சாகப்படுத்துவது ஆகாதா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்திடைய தலைவரவர்களே, நான் வாதாடவில்லை. நாவலர் அவர்கள் வாசித்ததில் இருந்து உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர் சொன்ன வாசகத்தை சபையில் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாம் இந்த முறையில் பேசிக்கொண்டிருந்தால், இரண்டு பேர் இப்படிப் பேசினார்கள், ஆனால் பலபேர் சேர்ந்து தண்டனை கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லக்கூடிய நிலைதான் ஏற்படும். இரண்டு வாரங்களுக்கு முன்பு எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்ட விஷயங்கள் வாரப் பத்திரிகைகளில் கூட வருகின்றன. எனவே, பயம் எங்கே இருக்கிறது? நாம் ஒன்றும் செய்யமாட்டோம் என்ற நிலையில் தான் இருந்து

கொண்டிருக்கிறார்கள். சப்.மாஜிஸ்ட்ரேட், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் ஆகியவர்களுக்கு உள்ள பவராவது நமக்கு வேண்டாமா? இதைப் பற்றி கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். இந்த அவையில் எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்டு, வெளியிடக் கூடாது என்று சொன்னதற்குப் பிறகுகூட வாரப் பத்திரிகைகளில் எல்லாம்கூட வெளியிட்டு, இஷ்டத்திற்கு எழுதுவது என்றால் நமக்கு யார் பாதுகாப்பு கொடுப்பது? எனவேதான் நாம் அதை ரெகுலேட் செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரியாதது அல்ல குற்றவாளியாக இருந்தாலும்கூட சில முறைகள் கடைப்பிடிக்கப்பட்டுதான் தீர்ப்பு வழங்குவது வழக்கம். தாங்கள் சட்டத்தில் உள்ளதை அறிவீர்கள், இன்னும் சொல்லப்போனால் அந்த உரிமை, அந்த ஆப்பர்சூனிட்டி, அந்தச் சந்தர்ப்பம் இருக்கிறதே அதை நாம் அவர்களுக்குத்தரவேண்டுமென்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே நம்முடைய நாவலர் அவர்கள் படித்தவற்றில் முக்கியமான சிலவற்றை விட்டு விட்டார்கள். நானும் அதைப் படித்துப் பார்த்தேன். இதைச் சொல்வதால் நான் அவர்களுக்காக வாதிடுவதாகப் பொருள் அல்ல. அவர் சொல்கிறார்,

* *

(கூச்சல்–குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குறிப்பிலிருந்து நீக்கி விடவேண்டுமென்று எதற்காக வாதாடுகிறோமோ அது மறுபடியும் பத்திரிகையிலே வந்து, பொதுமக்களுக்குத் தெரியக் கூடாது என்பதற்காகத்தான் நான் நீக்கிவிடுங்கள் என்று சொல்லியே குறிப்பிட்டேன். திரு. ரகுமான்கான் மீண்டும் அதைச் சொல்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : இதையும் நீக்கிவிடுங்கள். நான் வாசித்துக் காட்டுகிறேன். 234 பேர்களையும் நான் குறிப்பிடவில்லை, சிலபேரைத்தான் சொன்னேன் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 234 பேர்களையும் சொல்லவில்லை, சில பேர்களைத்தான் சொன்னேன் என்று சொன்னார்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



என்கிறார். ஒருவரைப் பற்றி மட்டுமே சொன்னால் கூட இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கமே தவிர, வேறல்ல. அவர் சொல்கிறார். நான் நல்ல எண்ணத்தோடுதான் சொன்னேன் என்று. அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் ஏற்றுக்கொள்கிறாரா? சட்டமன்ற மரபைக் காப்பாற்ற வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கம்' என்று அவர் சொல்கிறார் என்றால், சட்டமன்ற மரபைக் காப்பாற்றுவதற்கு இப்படித்தான் எழுதுவதா? எவ்வளவோ பத்திரிகைகள் எழுதுகிறார்கள், சட்டமன்ற மரபை, மதிப்பைக் காப்பாற்ற வேண்டுமென்று. இதுவா காப்பாற்றுகிற முறை? மாண்புமிகு திரு. ரகுமான்கான் அந்தச் சொற்றொடரை ஏற்றுக் கொள்கிறாரா? 234 பேர்களைச் சொன்னாலும் சரி, ஒரே ஒரு உறுப்பினரைச் சொன்னாலுங்கூட இந்த அவையினுடைய உரிமையை மீற கூடியதுதான். இதே அவையிலே, உரிமை மீறலிலே பல சமயங்களிலே நாம் மன்னித்து விட்டிருக்கிறோம். எடுத்துக் கொள்ளாமலே விட்டிருக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் எச்சரித்து விட்டிருக்கிறார். பல சமயங்களிலே, பத்திரிகைகளை பல சமயங்களில் அந்தந்தத் தன்மையைப் பொறுத்து வந்திருக்கிறது. உரிமைக் குழுவில் குழு தீர்மானம் செய்கின்ற பொழுது இருந்த நிலைமையை ஒட்டி ஒரு வாரம் என்று போட்டோம். அதற்குப் பிறகு தொடர்ந்து வருகின்ற பொழுது பல பத்திரிகைகள் இந்த அவையை அவமானப்படுத்துவதன் காரணமாக, 2 வார காலமாவது என்று இந்தத் தீர்மானத்தை நாம் மாற்றியிருக்கிறோம்.

எவ்வளவோ பிரச்னைகள் வந்தபொழுது ஒரு முன்னாள் முதலமைச்சரைப் பற்றி குற்றச்சாட்டு, அதை விசாரிக்க வேண்டுமென்று சொன்னபொழுது கூட, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை; இந்த அவையிலே பேசப்பட்டம்த போதுமானது; அதோடு நிறுத்திவிடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

எவ்வளவோ அணுகுமுறைகளை நாம் கையாண்டிருக்கிறோம். இந்த பிரச்சனையிலே எத்தகைய அணுகுமுறை கையாளப்பட வேண்டும் என்பதுதான் முக்கியமே தவிர, பிரச்சனைக்குப் பிரச்சனை உரிமைக் குழுவும் ஆராய்கிறது, அவையும் ஆராய்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்வது போன்று இந்த அவையினுடைய உறுப்பினர்களையும் மற்றவர்களையும் பாதிக்கக்கூடிய எந்த ஒரு பிரச்சனை, எப்படி வந்தாலுங்கூட இதைப் போன்று எழுப்பலாம். இதைப்பற்றி தீர்ப்பு அளிக்கலாம் அவையினுடைய மதிப்பு காப்பாற்றப்படவேண்டுமென்பதுதான் முழு நோக்கம். அதுதான் அத்தனை பேருடைய

டாக்டர். இரா. நெடுஞ்செழியன்

நோக்கமும். அதிலே வேறு எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆகவே எதிர்காலத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும் மன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நாவலர் அவர்கள் சொன்னதை நான் அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் உரிமைப் பிரச்சனை என்று பார்த்தால், பத்திரிகைகள் சட்டசபையிலே அங்கம் வகிக்காத எதிர்க் கட்சிகள். அவைகளுடைய விமர்சனங்கள், சட்டசபையிலே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகள்................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்றத்தை விமர்சிக்கலாம், ஆனால் குறை சொல்லும்போது அவையின் கண்ணியத்தைக் குறைக்கக்கூடிய அளவுக்கு எந்தப் பத்திரிகைக்கும் உரிமை கிடையாது. அதிலேதான் நான் 'ஸ்டெடி'யாக இருக்கிறேன். இங்கே உறுப்பினர்களுக்காகச் சொல்கிறேன், இப்பொழுது நான் என்னைப் பாதுகாக்க வேண்டுமென்றால் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** அரசியல் சட்டத்திலே 19-வது பிரிவிலே ரீசனபிள் ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ரீசனபிள் ரெஸ்ட்ரிக்ஷன்ஸுக்கு உட்பட்டு, ப்ரீடம் ஆப் ரைட்டிங், எழுதுகின்ற உரிமை, சர்க்காரை விமர்சிக்கின்ற உரிமை...

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கானுடைய உணர்வை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் முதலிலேயே சொன்னேன். சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிறோம் என்றால், அந்தத் தீர்மானத்தினுடைய முடிவு நாட்டைப் பாதிக்கும் என்று எழுத உரிமை உண்டு, அந்தத் தீர்மானம் வேண்டாம் என்று எழுத உரிமை உண்டு ஆனால் உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது. சட்டமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் என்ன நோக்கத்திற்காக இதைக் கொண்டுவந்தார்கள் என்று சொல்வதுதான் தவறே தவிர, விமர்சிப்பதிலே தவறே இல்லை, சட்டமன்றம் முடிவுக்கு வந்த பிறகு கேட்க வேண்டும்; சட்டமன்றம் முடிவு செய்து கொண்டிருக்கும்போது தங்களுடைய கருத்தை எழுதக் கூடாது; சட்டமன்றம் ஒரு முடிவெடுத்து நிறைவேற்றிய பிறகு சொல்லலாம்.

15 ஏக்கர் தான் ஸ்டாண்டர்ட் என்று நாம் தீர்மானிக்கிறோம் என்றால், இல்லை, கூடவே கூடாது, 60 ஏக்கர் இருக்கவேண்டும் என்று சொல்லலாம். ஸ்டான்டர்ட் ஏக்கர் கொடுக்கவே கூடாது, எல்லாவற்றையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று





[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

கிரிட்டிசைஸ் செய்ய எல்லோருக்கும் உரிமை உண்டு. அப்படிப்பட்ட கிரிட்டிசிசத்தை நாம் எல்லோரும் வரவேற்கிறோம். ஆனால், உள் நோக்கத்தோடு, இழிவுபடுத்துகிற, மதிப்பைக் குறைக்கிற நோக்கத்தோடு இருப்பதற்காகத்தான் உரிமைப் பிரச்னை வந்திருக்கிறதே தவிர, எல்லா அரசியல் கட்சி உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுதான் இந்தத் தீர்மானத்திற்கு வந்தார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்ற நடவடிக்கைகளைப்பற்றி விமர்சனம் பண்ண, கொஸ்டின் பண்ண நீதிமன்றத்திற்குக் கூட உரிமை இல்லை. சட்டமன்ற நடவடிக்கைகளை தரக்குறைவாக விமர்சனம் செய்தால் அது உரிமை மீறல் என்றுதான் வரும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞர். அதே நேரத்தில் வழக்குகளைப் பார்த்து, எதற்கு ஆஜராக வேண்டுமென்று முடிவு செய்து ஆஜராக வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். எந்த வழக்கு கிடைத்தாலும் ஆஜராவது நல்ல வழக்கறிஞருக்கு அழகல்ல. இந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் அவரே தண்டனை வேண்டுமென்று கேட்டு, அதற்கு அவை முன்னவர் அவர்களால் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது திரு. ரகுமான்கான் அவரது தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று ஏன் வாதாடுகிறார் என்று தெரியவில்லை. அதிலே எனக்கு சந்தேகம் ஏற்படுகின்றது. அவருடைய வாதத்தைப் பார்க்கிறபோது அவருக்கும் இவருக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, சட்டம் படித்த தங்களுக்குத் தெரியும். குற்றம் சுமத்தப்பட்டவருக்குத் தண்டனை வழங்குவதில் கருத்து வேறுபாடு இல்லை. எனக்கும் அவருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ஒரு நாயைக் கொல்வதாக இருந்தாலும், பைத்தியம் பிடித்த நாய் என்றால் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று காரணம் சொல்லி, அதன் உண்மைத் தன்மையைச் சொல்லி. அதன் பிறகுதான் 'நேச்சுரல் ஜஸ்டிஸ்' என்ற அடிப்படையிலே முடிவு செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக் குழு அது பற்றி விசாரித்து சொல்லியிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் சொல்வதை இரண்டு நிமிடம் கேட்டுவிட்டு, நான் என்ன சொல்கிறேன் என்பதைத் தெரிந்த பின்னால் சரியாக இருந்தால் சபைக் குறிப்பில் வைத்துக்கொள்ளுங்கள், இல்லை என்றால் நீக்கி விடுங்கள். அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்ட பிரச்சனையை அவர்கள் விசாரித்து, உரிமை மீறப்பட்டிருக்கிறது, தண்டிக்கப்பட வேண்டும், தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று பிரிவிலேஜ் கமிட்டியில் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்த முறையிலே தண்டிக்கப்பட வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது, அவை முன்னவர் அவர்களால். எனக்கு இருக்கிற அச்சம் என்னவென்றால், 'போனஃபைடி கிரிட்டிசிஸத்தை'க் கூட 'ப்ரீச்ஆஃப் பிரிவிலேஜ்' என்று சொல்லி பத்திரிகை உரிமை பறிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய கண்ணியம் பாதுகாக்கப்பட வேண்டும், நம்முடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே நீதிமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் ஒரு வேறுபாடு உண்டு. நீதிமன்றத்தில ஒரு 'சான்ஸ்' கொடுத்து, குற்றவாளி என்று கருதப்படுகின்றவர் என்ன சொல்கிறார் என்று கேட்டு, தீர்ப்பு வழங்குவார்கள். ஆனால் சட்டமன்றத்தில், ஒரு செயல் தவறு என்று தெரிந்தால், நேரடியாக தண்டனை வழங்க உரிமை உண்டு. உதாரணமாக, மேலே இருக்கிறவர் கீழே ஒரு பொருளை வீசி எறிந்தார் என்றால் அவரை கைது செய்து, அறையில் வைத்து ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் சிறைக்கு அனுப்ப தலைவருக்கு உரிமை உண்டு. ஏற்கெனவே இரண்டு தடவைகள் அப்படி நடைபெற்றிருக்கின்றன. ஒரு வாரமும், இரண்டு வாரமும் உள்ளே அனுப்பி இருக்கிறோம். தவறு என்று தெரிந்தால் விசாரிக்காமலே தண்டனை கொடுக்கலாம். ஆனால் இந்தப் பிரச்சனையைப் பொறுத்த வரையில் நாம் அப்படிச் செய்யவில்லை விசாரணை எல்லாம் வைத்து, விசாரித்து, தண்டனை வழங்கப்படும் என்று உச்சுறுத்தப்பட்டு, அதன் பிறகுதான் இந்தத் தீர்மானமே வருகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்கள் நான் சொல்வதைப் புரிந்துகொள்ள வேண்டும். இதில் உங்களுடைய கண்ணியம், அவையின் கண்ணியம் எல்லாம் அடங்கியிருக்கிறது. (திரு. ஜே. ஹேமச்சந்திரன் எழுந்தார்) தீர்மானத்திற்கு திருத்தம் கொடுத்திருந்ததால் திரு. ரகுமான்கான்





அனுமதிக்கப்பட்டார். நீங்கள் திருத்தம் கொடுக்கவில்லை, எனவே இதில் உங்களுக்கு அனுமதி இல்லை. உங்களுடைய ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் இப்படிப்பட்ட பிரச்சனைகளில் இந்த அவையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்றவேண்டும். இது விற்காத ஒரு பத்திரிகை. 50 காப்பிகள் அடிப்பார்கள் என்று நம்புகிறேன். அதற்கு ஒரு பெரிய விளம்பரத்தைத் தேடிக் கொடுக்காதீர்கள். நாம் இங்கே உட்கார்ந்து விவாதிப்பது மக்களுடைய நன்மைக்காக. இங்கே நாம் பேசுவதை திரித்து வெளியிடுகிற மூளைத் தெளிவு அவர்களுக்கு இருக்கிறது. நாம் இங்கே சண்டை போடுவது போல் கடுமையாக விவாதிக்கிறோம் என்றால் இது சொத்து சண்டையா? சண்டை நடக்கிறது என்று போடுகிறார்கள். கூச்சல்-குழப்பம், அமளி என்று போடுகிறார்கள். மக்களுக்காகத்தான் நாம் இருக்கிறோம். எனவே இதை ஊக்குவிக்க வேண்டாம். தயவு செய்து ஒத்துழையுங்கள்.

**THIRU A. RAHMANKAN:** I want to get a Ruling from the Chair.

*7-வது சட்டசபைக் கூட்டத் தொடரிலே கொண்டுவரப்பட்ட பிரிவிலேஜ் மேட்டர் பற்றிய ரிப்போர்ட்டை 8-வது கூட்டத் தொடரிலே வைக்கலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வைக்கலாம். ஏற்கெனவே இரண்டு வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. அ. ரகுமான்கான் : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றையும் அரசியலாக்கப் பார்க்காதீர்கள். பேரவையிலுள்ள 234 மாண்புமிகு உறுப்பினர்களது கண்ணியம், கவுரவம் காக்கப்பட வேண்டும். வெளியிலே உள்ள தனிப்பட்ட ஒருவர் இந்த அவையைப் பற்றி, அவை உறுப்பினர்களைப் பற்றி எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்பதைப் பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னால் அனுமதிப்பதற்கில்லை. Perverted intelligent people are doing that. As a Member of this House Thiru Rahmankhan should not encourage these perverted people.

*பேரவையின் அனுமதியுடன் திரு. அ. ரகுமான்கான் அவர்களின் திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பெற்றது.*

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி ''28-3-1984-ஆம் தேதியன்று ஏழாவது சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கப்பெற்ற 'வணிக ஒற்றுமை' திங்களிதழ் மீதான உரிமை மீறல் பிரச்சனை குறித்த ஏழாவது சட்ட மன்றப் பேரவை அவை உரிமைக் குழுவின் அறிக்கையை பேரவை ஏற்றுக் இப்பேரவையின் உரிமையை மீறிய செயலுக் காக 'வணிக ஒற்றுமை' திங்களிதழின் ஆசிரியரும், பதிப்பாளரு மான திரு. பால்ராஜ் அவர்களைக் கைது செய்து சென்னை மையச் சிறையில் இரண்டு வார காலம் வெறும் காவலில் வைக்கப் படவேண்டுமென்று இப்பேரவைத் தீர்மானிக்கிறது.''

*தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற் றப்பெற்றது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத் தீர்மானம் குறித்து நடைபெற்ற விவாதம் முழுவதையும் பத்திரிகையாளர்கள் வெளி யிடவேண்டாம். In the interest of the public I am ordering that the entire proceedings need not be published. It is enough only if the main portion relating to the 'sentence' is published- உறுப்பினர் களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காகத்தான் நான் இதைச் செய்கிறேன். இதுபோன்று நீதிமன்றத்திலும் கூட நடந்திருக் கின்றது. அதை முன்மாதிரியாக வைத்துத்தான் சொல்கிறேன்.... (குறுக்கீடு)................

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*





**6. வரவு–செலவுத் திட்டம், 1985–86 வாக்கெடுப்பு — தொடர்ச்சி**

**(அ) கோரிக்கை எண். 44— எழுதுபொருள்–அச்சுத் துறை.**

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள்–அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,99,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 44—எழுது–பொருள்–அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 16,99,21,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக் கையும் வெட்டுத் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பு** அச்சடித்து ஏற்கெனவே பேரவை உறுப்பினர் களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. அக்குறிப்பை நான் இங்கே ஆற்றிய உரையாகக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எழுதுபொருள் –அச்சுத் துறையின் சார்பாக ஒரு மணி நேரம் மட்டும்தான் விவாதம் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(முற்பகல் 11–00)*

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழுது–பொருள்–அச்சுத் துறையின் மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக சில கருத்துக்களை எடுத்துக் கூற ஆசைப் படுகிறேன்.

---

** ........ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

இந்தத் துறைக்கான பணிகளைப்பற்றிக் குறிப்பிடும்போது ஆய்வு உரையிலே தமிழ்நாடு சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்களின் விவாதங்கள் அச்சிடப்பெறுவதாக குறிப்பிட்டுள்ளார்கள். அந்த விவாதங்களை அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்குவது துரிதமாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால் நாம் இந்த 8-வது சட்டமன்றப் பேரவையிலே மார்ச் மாதம் பதவி ஏற்றோம். இன்று வரை நடைபெற்ற விவாதங்கள் அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, அதைத் துரிதமாகச் செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே மேலும் பணிகளைப்பற்றிக் குறிப்பிடும்போது பல்லவன் போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச் சீட்டுகள், எல்லா வழித்தட அடையாள வில்லைகள்—சீட்டுகள் அச்சிடப்பெறுவதாகக் குறிப்பிடப்பெற்றிருக்கிறது. அரசு துறையைச் சார்ந்த போக்குவரத்துக் கழகங்கள் அனைத்திற்குமே தினசரி பயணச் சீட்டுகளை அரசுத் துறை அச்சகமே அச்சிட்டால் சில குறைபாடுகளும், முறைகேடுகளும் தவிர்ப்பதற்கு ஏதுவாகும். எனவே, எல்லா அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பயணச்சீட்டுக் களையும் அச்சுத் துறையிலேயே அச்சிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை நகரைப் பொறுத்தமட்டில் தொழிலாளர் நலன் கருதி, தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களால் ஓய்வு அறை, சிற்றுண்டிச்சாலை போன்றவை கட்டப்படுவதாக இந்த ஆய்வு அறிக்கையிலே இருக்கின்றது. அதைக்கூட அரசுத் துறையிலேயே அச்சக ஊழியர்களின் கூட்டுறவுச் சங்கத்திலேயே ஏற்று நடத்துவதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடியிருப்புகளைப் பொறுத்தமட்டில், இந்த ஆய்வு உரையிலேயே 5,056 பணியாளர்கள் பணி புரிகிறார்கள் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் 300 வீடுகள் மட்டுமே இருப்பதாகவும் மேலும் 232 குடியிருப்புகளைக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது இருக்கிற தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையை கணக்கில் வைத்துப் பார்க்கும்போது மிக மிகக் குறைவாக இருக்கிறது. அதேநேரத்தில் இந்த வசதியும் சென்னையிலே பணி ஆற்றக்கூடிய அச்சகத் தொழிலாளர்களுக்கு மட்டுமே இருக்கிறதாக தெரிய வருகிறது. எனவே அந்தக் குடியிருப்பு வசதிகளை புதுக்கோட்டை, சேலம், திருச்சிராப்பள்ளி, விருத்தாச்சலம், மதுரை ஆகிய இடங்களிலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கும் விரிவு படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, தொழிலாளர்களுக்கு பன், தேனீர் போன்றவற்றை இலவசமாக வழங்குவதற்குப் பதிலாக மாதம் 10 ரூபாய் வீதம் படி வழங்கப்படுவதாகவும், மேலும் உலோகப் புகையினால் உடல் நல இன்னல்களுக்கு ஆட்படக் கூடிய பணியாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க பால் வழங்குவதற்குப் பதிலாக நாளொன்றுக்கு 60 காசுகள் வீதம் வழங்கப்படுவதாக இதிலே அறிவிக்கப்பட்டுள்ளது. இது முறையானதுதானா என்பதை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். பணமாகக் கொடுத்தால் எந்த நோக்கத்திற்காக அந்தத் தொகை கொடுக்கப்படுகிறதோ அதற்கு பயன் இல்லாமல் போய்விடும். ஆகவே, தயவுசெய்து அந்தத் தொகையைக் கொடுப்பதைக் காட்டிலும் அவர்களுக்கு அந்தந்தப் பொருள்களாகவே வினியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கட்டிடங்களைப் பொறுத்தவரையில் இந்தத் துறைக்கு சொந்தக் கட்டிடமே இல்லை. ஆணைக்கார தோட்டத்தில் இருக்கும் அரசு கிளை அச்சகத்திற்கு வாடகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.18,848 கொடுக்கப்படுவதாக இதிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. இவ்வளவு தொகை கொடுத்து வாடகை இடத்திலே இருப்பதைக் காட்டிலும் அரசின் சொந்தக் கட்டிடத்தில் இதை அமைக்க துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல மற்ற இடங்களிலும் வாடகைக் கட்டிடங்களில் இருப்பதை மாற்றி தயவுசெய்து அவைகளுக்குச் சொந்தக் கட்டிடங்களைக் கட்டி அரசின் செலவைக் குறைக்க அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. சு. பாலன் : துணைத் தலைவர் அவர்களே, எழுதுபொருள்-அச்சுத்துறை மானியக் கோரிக்கையில் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க முன்வருகிறேன். எழுதுபொருள்-அச்சுத்துறை 1985-86-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் 17 கோடியே 2 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறையின்பால் தீவிரமான கவனம் இந்த அரசுக்கு இல்லை என்பதை முதலில் இந்தக் குறிப்பு காட்டுகிறது.

கடந்த ஆண்டு 15 கோடியே 19 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அது திருத்திய மதிப்பீடாக 17 கோடியே 35 லட்சத்து 30 ஆயிரமாக உயர்ந்துள்ள நிலையில் இந்த அரசாங்கம் வளர்ந்துவரும் தேவைகளை, ஏறிவரும் விலைவாசி ஆகியவைகளை சரியாகக் கணக்கிட்டு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், எழுதுபொருள் சரக்குகளை வாங்குவதற்கும் வழங்குவதற்கும் கடந்த ஆண்டு 7 கோடியே 47 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய் வரவு-செலவுத திட்டத்தில் ஒதுக்கப்பட்டு, திருத்திய மதிப்பீட்டில் 9 கோடியே 57 லட்சத்து 66 ஆயிரம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இந்த நிலையில் இந்த ஆண்டு 9 கோடியே 3 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவைகளைப் பார்க்கிறபோது காகிதம் மற்றும் எழுதுபொருள் விலைகள் வெகுவாக உயர்ந்திருக்கிறதை கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. அதற்கேற்ப வரவு-செலவுத் திட்டம் தயார் செய்யப்படவில்லையென்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

மேலும், ஒதுக்கப்பட்ட 17 கோடி ரூபாயில் 6 கோடியே 27 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் சம்பளமாகப் போய்விடுகிறது. ஆகவே ஒதுக்கிய நிதி தேவைகளை ஈடு செய்யக் கூடியதாக இல்லை. இந்த ஆண்டு பட்ஜெட்டிலே ஏறக்குறைய இந்தத் தொகை ஒரு சதவீதம் கூட இல்லை, முக்கால் சதவீதத்திற்கும் குறைவானது என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அரசு அச்சகங்களைப் பொறுத்தவரையில் பணியாளர்களுக்குத் தரப்படும் வசதிகள், சலுகைகள் பொறுத்தவரையில் எல்லோருக்கும் முன்மாதிரியாக இருக்கவேண்டும். இந்த அரசாங்கம் தொழிலாளர்களிடம் நடந்துகொள்கிற முறை வெட்கப்படக்கூடிய ஒன்றாகும். கடந்த ஆண்டு கொள்கைக் குறிப்பில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிற சிலவற்றைத் தந்திருக்கிறார்கள். அதே விவரத்தை இந்த ஆண்டு கொள்கைக்குறிப்பிலும் கொடுத்திருக்கிறீர்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால் சென்னை தண்டையார்பேட்டையில் 300 வீடுகளுக்கு மின்வசதி, குடிதண்ணீர், தெருவிளக்கு வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்று கூறி இருக்கிறீர்கள். இந்த அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் அந்தக் குடியிருப்புகளை எப்படிக் கட்டமுடியும் என்பது உள்ளபடியே இந்த ஆட்சியிலே ஒரு அதிசயம் தான்.

அடுத்தபடியாக கடந்த ஆண்டு தொழிலாளர்களுக்கு 232 குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறி இருக்கிறீர்கள். இந்த ஆண்டு அந்த 232 குடியிருப்புகளைக் கட்ட 125 லட்சம் ரூபாய் செலவிடக் கருதப்பட்டுள்ளதாகக் கூறி இருக்கிறீர்கள். நான் இரண்டு விஷயங்களைக் கேட்க விரும்புகிறேன். இது தொழிலாளர் நலனில் அக்கறை செலுத்துகிற அரசு என்றால் சென்னை போன்ற பெரிய நகரங்களில் அவர்களுக்கு வீட்டு வசதி செய்து தருவது என்ற நல்ல முடிவை மேற்கொண்டபிறகு, அதைகொள்கைக் குறிப்புப் புத்தகங்களில் அச்சடித்து எங்களுக்கு வழங்கப்பட்டுவிட்ட பின்னால் அதிலே காலதாமதம் காட்டுவது ஏன்? சென்ற ஆண்டு பரிசீலனையில் இருந்து, இந்த ஆண்டு 125 லட்சம் ரூபாய் செலவு மதிப்பீடு என்று கொள்கைக் குறிப்புப் புத்தகத்திலே ஏறி இருக்கிறதே தவிர, நாட்டிலே நடைமுறைக்கு வந்திருக்கிறதா? இந்த வீடு தருகிற விவகாரம் ஆண்டுதோறும் கொள்கைக் குறிப்பிலே



இடம் பெறாமல் நடப்பு ஆண்டிலே அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றை வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். கடந்த ஆண்டு தொழிலாளர்களுக்கு பன், தேநீர், பால் இலவசமாகத் தருவதாக கொள்கைக் குறிப்பிலே கூறி இருக்கிறீர்கள். அதே வகையில் எழுத்துக்கு எழுத்து மாறாமல் இந்த ஆண்டும் கூறப்பட்டுள்ளது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் பன்னுக்கும், தேநீருக்கும் ஒருவருக்கு மாதம் 10 ரூபாய் வீதம் படி வழங்குவதாகக் கூறி இருக்கிறீர்கள். அருள்கூர்ந்து அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு மாதம் தேநீர் கடைக்குப் போய் பன்னும் டீயும் காசு கொடுத்து சாப்பிட்டுப் பார்க்கவேண்டும். ஒரு பன் விலை 30 காசு; சிங்கில் டீ 40 காசு. ஆக மொத்தம் 70 காசுகள். 10 நாட்களுக்கு 7 ரூபாய் அளவில் ஒரு மாதத்திற்கு 21 ரூபாய் ஆகிறது. ஆஸ்தானப் புலவர்களுக்கெல்லாம் மாதம் ஆயிரம் ரூபாய் என்று தருகிறீர்கள். இந்த அரசாங்கம் கை நோக, கண் நோக பணியாற்றும் அந்தத் தொழிலாளர்களிடத்தில் பரந்த மனப்பான்மையோடு நடந்து கொள்ளக் கூடாதா? இன்னல்களுக்கு ஆட்படக் கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு அவர்களைப் பாதுகாக்கும் வகையில் 250 மில்லி லிட்டர் பாலுக்குப் பதிலாக நாளொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும் 60 காசுகள் வழங்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. பக்கத்திலே நம்முடைய மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். என்ன விலைக்கு அவர்கள் துறையில் பால் விற்கிறார்கள் என்பதை தயவு செய்து கேட்க வேண்டும்.

(முற்பகல் 11-10)

சூடான பால் 1 ரூபாய், குளிர்ந்த பால் 2 ரூபாய். ஒன்று அந்தத் தொழிலாளர்களுக்கு பாலுக்குப் பதிலாக மாதம் 60 ரூபாய் வழங்குங்கள் அல்லது ஆவின் பாலை 60 காசு என்ற விலையில் வழங்கச் சொல்லுங்கள்.

அடுத்து சீருடை வழங்குவது பற்றி இங்கே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். கடந்த ஆண்டு கொடுத்த கொள்கைக் குறிப்பைப் படித்தேன். இந்த ஆண்டும் படித்தேன். அதைப் படித்துப் பார்த்த பிறகு ஒரு முடிவுக்கு வந்து இருக்கிறேன். கடந்த ஓர் ஆண்டு முழுவதும் இந்தத் துறை தூங்கிக் கொண்டு இருக்கவேண்டும் அல்லது பொறுப்பிலே இருப்பவர்களுக்கு எல்லை மீறிய அலட்சியம் இருக்க வேண்டும். இது நல்லதல்ல, நாட்டுக்கும் நல்லதல்ல. எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் ஏதோ பேசுகிறோம் என்று எண்ண வேண்டாம். நான் அமைச்சர் அவர்களை அருள்கூர்ந்து கேட்டுக் கொள்வது, இந்தப் புத்தகத்தில் 20வது பக்கத்தில் 6வது பாராவைப் படித்துப் பார்க்கவேண்டும். இந்தத் துறையில் பணியாளர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்கும் திட்டம் படிப்படியாகநிறைவேற்றப்பட்டு வருகிறது; இதுவரை 1,018 பணியாளர்களுக்கு சீருடைகள்

[திரு. சு. பாலன்.]

வழங்கப்பட்டுள்ளன. மேலும் 953 பணியாளர்களுக்கு சீருடை வழங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சென்ற ஆண்டும் சொல்லியிருக்கிறீர்கள். இந்த ஆண்டும் அதையே மீண்டும் ஒரு எழுத்துக்கூட மாறாமல் சொல்லியிருக்கிறீர்கள். இது நியாயமா? நெறியா? சரியா?

அடுத்து, அரசு வட்டார அச்சகம் ஒன்று மதுரையில் இருக்கிறது. இதிலே ஆரம்பத்திலே 243 பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள், சென்ற ஆண்டு. ஆனால் இந்த ஆண்டு 243 தொழிலாளர்கள் எண்ணிக்கையை 213 ஆக குறைத்து இருக்கிறீர்கள். 30 தொழிலாளர்களுடைய நிலை என்ன என்பதைப் பற்றி எந்தவிதமான குறிப்பும் இல்லை. இது அச்சுப்பிழையா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, சென்னை சூளை ஆனைக்காரன் தோட்டத்தில் ஒரு அச்சகம் தனியார் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இது 1974 ஆம் ஆண்டு முதல் அங்கே இயங்கிக் கொண்டு வருகிறது என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இதற்கு மாத வாடகையாக 18,848 ரூபாய் கொடுக்கப்பட்டு வருவதாகவும் இங்கே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இதனைச் சொந்த கட்டிடத்தில் அமைக்கும் வகையில் சென்னையைச் சுற்றியுள்ள பகுதியில் தகுதியுள்ள இடத்தைத் தேர்ந்து எடுப்பது துறையின் பொறுப்பாகும் என்று கூறியிருக்கிறீர்கள். இதற்கு என்று சொந்தக் கட்டிடம் கட்டப் போகிறீர்களா? அப்படி கட்டுவதாக இருந்தால், அதற்குத் தகுந்த இடம் வேண்டும் என்றால், நம்முடைய நகர்ப்புறத்தை அடுத்துள்ள ஆலந்தூர் போன்ற பகுதிகளில் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து சொந்தக் கட்டிடம் கட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், நம்முடைய அரசுத் துறைக்கும் சொந்தக் கட்டிடம் கிடைக்கும். அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வேலைப் பளு, மற்றும் இரவுப் படி போன்றவைகள் மிகக் குறைவாக இருக்கிறது. எனவே அதை குறைந்தபட்சம் நாள் ஒன்றுக்கு 7 ரூபாய் என்றாவது கொடுக்க வேண்டும்.

அவர்களுக்கு மருத்துவ விடுப்பு தற்போது 12 மாதம் என்று இருக்கிறது. அதை அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதைப் போல 18 மாதம் என்று மாற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கண் பார்வையற்ற தொழிலாளர்களுக்கு கருணை காட்டி, அவர்களுக்கு ஓர்க் டர்ன் என்று கொடுக்காமல், மனிதாபிமானத்தின் அடிப்படையில் கருணையோடு நடந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏறிவரும் விலைவாசிக்கு ஏற்ப அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். காரணம் இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது என்னவென்றால் 1971 ஆம்



(திரு. சு. பாலன்.)

ஆண்டிற்குப் பிறகு, நாடாளுமன்றத்திற்கும், சட்டப் பேரவைக்கும் ஒன்றாகப் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றது இதுவே முதன் முறையாகும். இதனால் 6.5 கோடி வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. கடும் முயற்சியால் இப்பணி செய்து தரப்பட்டது என்று அந்தத் தொழிலாளர்களைப் பாராட்டி இருக்கிறீர்கள். அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கண் மருத்துவத்திற்கு வேண்டிய செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அடுத்து, கடைசியாக நான் சொல்ல விரும்புவது, உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற லெட்டர் பேட் பற்றி, நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கொடுக்கப்படுகிற அந்த அச்சுத்தாள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. அரசாங்கத்தில் எவ்வளவோ புத்தகங்களை நல்ல முறையில் அச்சடிக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற இந்த லெட்டர் பேடையும் நல்ல காகிதத்தில் நல்ல முறையில் எழுதுவதற்கு, பேப்பரை மாற்றி, அச்சடித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அச்சுத் துறை சம்பந்தமான கொள்கை விளக்கக் குறிப்பில் இன்று இந்த சென்டிரல் பிரஸ்ஸில் என்ன என்ன வகையான தரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். இன்று ஒரு மிக முக்கியமான பிரச்சினை. மாணவர்களை பொறுத்தவரையில் அவர்களுக்கு தேவையான டெக்ஸ்ட்டு புக்குகள் இன்று காலாகாலத்தில் கிடைக்கவில்லை என்ற ஒரு பிரச்சினை இருக்கிறது. பள்ளிகள் திறந்த பிறகும் கூட இன்று மாணவர்களுக்கு தேவையான டெக்ஸ்ட்டு புக்குகள் கிடைக்கவில்லை.

இன்று பி.டி.சி. சீசன் டிக்கெட், லாட்டரி சீட்டு மற்றும் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான அப்ளிகேஷன் பார்ம்ஸ் இவைகளை தயாரிக்கக்கூடிய இந்த அச்சகத்தில் மாணவர்களுக்குத் தேவையான டெஸ்ட்டு புக்குகள், நோட்டு புக்குகள் தயாரிப்பதற்கான ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏற்கனவே இது சம்பந்தமாக கொள்கை விளக்கக் குறிப்பில் இன்னொரு பக்கத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் இங்கே தேவையான, அச்சகத்திற்கு தேவையான பொருட்களை இன்று ஓப்பன் டெண்டரில் வாங்குவதாக சொல்லப்படுகிறது. "All the articles of Stationery except paper, boards, typewriters, duplicators, Khadi and Handloom clothing, Press and Jail-made articles are purchased

annually from open market by inviting tenders." இந்த டெண்டர் முறையை கைவிட்டு இன்று சில இடங்களில் தனியார்கள் கூட்டுறவுச் சங்கங்களை வைத்து அவர்கள் இப்படிப்பட்ட பொருட்களைக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். குறிப்பாக இன்று டெக்ஸ்ட் புக்குகள் தயாரித்துக் கொடுப்பதற்கும், நோட் புக்குகள் தயாரித்துக் கொடுப்பதற்கும், இன்று சில தனியார் சங்கங்கள் அல்லது கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி அந்த கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இன்று அப்படிப்பட்ட புத்தகங்களை தயாரித்துக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் இப்போது அரசு ஒரு கொள்கையை ஏற்படுத்துவதற்கு முயற்சிப்பதாக தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது சேஷசாயி பேப்பர் மில்லுக்கு இந்த புத்தகங்களை தயாரிப்பதற்கான, பேப்பர் தயாரிப்பதற்கான முழு பொறுப்பும் அவர்களுக்கு விட்டுவிடப்படும் என்பது. அப்படி சேஷசாயி பேப்பர் மில்லுக்கு இப்படி டெஸ்ட் புக், நோட் புக் தயாரிப்பதற்கான, பேப்பர் தயாரிக்கக்கூடிய பொறுப்பை கொடுக்கக் கூடிய முறையில் ஏதேனும் யோசனை இருந்தால் அதை செயல் படுத்துவதை தடுத்து-அதை கொடுத்துக் கொண்டு இருக்கக்கூடிய தனியார்கள், கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கும். அவர்களுக்கு வேலை இழப்பு ஏற்படும். ஆகவே, இன்றைக்கு அப்படிப்பட்ட யோசனை அரசுக்கு இருந்தால் அல்லது அப்படி கருத்து அரசுக்கு இருக்கு மானால் அதை பரிசீலனைச் செய்ய வேண்டும்.

தற்போது டெக்ஸ்ட் புக், நோட் புக் தயாரிப்பதற்கான பேப்பர் களை இன்று தயாரித்து கொடுக்கக் கூடியவர்கள் பாதிக்காத முறையில் அந்த விஷயங்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.

நோட் புக்ஸ், டெஸ்ட் புக்ஸ் தயாரித்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பை அரசு ஏற்று, அரசு அச்சுத் துறையில் செய்து காலா காலத்தில் மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய முறையில் ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானிய கோரிக்கையைப் பொறுத்த வரையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையோடு நான் முன் மொழிந் தேன். கேட்கின்ற தொகையும் குறைவு, அந்தத் துறை செய்கின்ற செயல்பாடுகளும் விவாதத்திற்கு உரியவையாக அமையவில்லை. ஆகையால் இதிலே ஒரு விவாதமே தேவைப் படாது என்று கருதினாலும் எதிர்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதமே வைக்காமல் மானியத்தை தந்து விட்டால் என்ன செய்வார்களோ என்று கருதி விவாதித்துத் தர வேண்டும் என்ற முறையை காப்பாற்றுகின்ற முறையில், பல கருத்துக் களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.



(முற்பகல் 11-20)

இந்த எழுதுபொருள் அச்சுத்துறை என்பது. ஆங்கிலத்திலே சொல்வார்கள், ''ஹவுஸ் கீப்பிங் ஃபங்ஷன்'' என்று, அதுபோல், அரசாங்கத்தில் இருக்கின்ற முக்கியமான துறைகளுக்குத் உள்ளி ருந்து காரியம் ஆற்றக்கூடிய ஒருவகையான துறையாகும். பல் வேறு துறைகளுக்குத் தேவைப்படுகின்ற காகிதங்களும், அச்சிட்டுத் தர வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற புஸ்தகங்களும், அதேபோல் வரவு செலவுத் திட்டங்கள் அச்சடித்துக் கொடுப்பது, இரகசியமாக அச்சடிக்கவேண்டியதை அச்சிட்டுக் கொடுப்பது, ஆகியவற்றை எல்லாம் செய்து தருகின்ற ஒரு "ஹவுஸ் கீப்பிங் ஃபங்ஷன்" தான் இந்த அரசு அச்சகத் துறையின் தன்மையாகும்.

இத்துறைக்கு, ஒரு சதவீதத்திற்கும் குறைவாக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னைக் கேட்டால் இன்னமும் கூட குறைய வேண்டும். அது எவ்வளவுக்கெவ்வளவு குறைகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு திறமையாக அது செயல்படு கிறது என்று பொருள் ஆகும்.

அடுத்தபடியாக, இதிலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு பல்வேறு வசதிகளை செய்து தரவேண்டுமென்று மாண்புகு உறுப்- பினர் ரவீந்திரன் அவர்களும் பாலன் அவர்களும், ஹேமச்சந்திரன் அவர்களும் பேசுகிறபோது எடுத்துச்சொன்னார்கள். ஒரு நல்ல நிர்வாகத்திற்கு இலக்கணம், அந்த நிர்வாகத்தை நடத்துகின்றவர் கள் அதில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மன நிறைவோடு பணியாற்றச் செய்வதிலே தான் இருக்கின்றது.

ஒரு முறை அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடுகிறபோது, ஒரு நிறுவனத்திலே பணியாற்றுகின்ற பாட்டாளிகள், நம்மால் தான் இந்த முதலாளி லாபம் சம்பாதிக்கிறான் என்ற போக்கைக் கொள்ளக்கூடாது. அதேநேரத்தில், ஒரு முதலாளி, நம்மாலே தானே இவர்களுக்கு எல்லாம் பிழைப்பு என்று தொழிலாளர் களைப் பார்த்து எண்ணவும் கூடாது. இரு தரப்பாரும் சேர்ந்து ஒரு குடும்பம் எவ்வாறு இயங்குகிறதோ, அதைப்போல் இயங்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை நிர்வாகத்திற்கு இலக்கணம் தந்தார்கள்.

அதை வேறு மொழியிலே சொல்லப் போனால், ஒரு நிறுவ னத்தை நடத்துகின்ற தலைமை இயக்குநர், அல்லது நிர்வாக இயக்குநர் எவ்வாறு இயங்கவேண்டும் என்றால் அந்த இயக்கு நரைப் பற்றி தொழிலாளர்களிடத்தில் வாக்கெடுப்பு நடத்தினால், எல்லாத் தொழிலாளர்களும் அவரையே தேர்ந்தெடுக்கின்ற அளவுக்கு, அவர் செயல்பட வேண்டும் என்பார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், இயந்திரங்களைக் காப்பாற்றுவதில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருக்கிறோமோ, அதைப் போல் இயந்திரங்களை இயக்குகின்றவர்களையும் நல்ல முறையிலே அவர்களுக்குரிய குறைகளைத் தீர்த்து பணியாற்ற வேண்டும் என்பதுதான் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசின் கொள்கை ஆகும்.

ஆகவே, ஊதிய உயர்வானாலும் சரி, பாலூட்டுகின்ற காரியமானாலும் சரி, பன் தருவதானாலும் சரி, டீ வழங்குவதானாலும் சரி, இரவு நேரப் படியானாலும் சரி, வீடு கட்டுகின்ற திட்டமானாலும் சரி, குடியிருப்புக்களுக்கு வேண்டிய மின் விசிறிகள், விளக்குகள் அமைப்பதானாலும் சரி, இவைகள் எல்லாம் அந்தத் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் மூலம் முறையாக எடுத்து வைக்கின்றபோது, குறை தீர்க்கின்ற அரசாக இந்த அரசு அமையும் என்ற ஒட்டுமொத்தமான உறுதியினை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பாடப் புத்தகங்களை அச்சடிக்கின்ற பணியினை அரசு அச்சகத் துறை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எந்த அளவுக்கு இயலும் என்பதை அரசு அச்சகத்துறை கட்டாயம் ஆராயும் எந்தவிதப் பணிகள் அரசினால் மேற்கொள்ளப்படுகிறதோ, அந்தப் பணிகள் தனியாரிடத்திலே கொடுப்பதற்கு மாறாக, நமது அச்சகத்துறையே ஈடுபட்டுச் செய்திட, செயல் திறனை அதிகமாக்கிட வாய்ப்புகள் இருக்குமென்றால், அவற்றை எல்லாம் எடுத்து பல்வேறு துறைகளிலே இருந்து பெற்று, ஒவ்வொன்றாக செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

சான்றாக, போக்குவரத்துக் கழகங்களிலே டிக்கட்டுகள் அச்சடிப்பதானாலும் அல்லது அரசாங்கத்தின் பல்வேறு துறைகளினாலே தனியார் அச்சகங்களுக்கு தருகின்ற பணிகளை ஒவ்வொன்றாக எடுத்து அரசு அச்சகங்களே மேற்கொள்வதற்குறிய வாய்ப்பை ஏற்படுத்தி உற்பத்தி திறனை ஊக்குவிப்பதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கையை வருங்காலத்திலே எடுக்கும்.

வாடகைக் கட்டிடங்களிலே இருப்பதை சொந்தக் கட்டிடம் ஆக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். வாடகைக் கட்டிடத்திலேயிருந்து, சொந்தக் கட்டிடம் என்று சொல்கிற போது, நிறைய முதலீடு தேவைப்படும். முதலீடு பல்வேறு பெரிய காரியங்களுக்குத் தேவைப்படுகிற காரணத்தினால், அரசு அச்சகத் துறைக்கு அதற்காக அவ்வளவு பெரிய மூலதனம் போடுவது என்பது இயலாத காரியம்.

நான் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவது, இந்த அச்சகத் துறையைப் பொறுத்த வரையில் எந்தெந்த அளவுக்கு உற்பத்தித் திறனைப் பெருக்க



முடியுமோ, எந்தந்த அளவுக்கு உரிய வாய்ப்பை அளிக்க முடியுமோ, நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த முடியுமோ, அந்த முறைகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, எழுதுபொருள் துறையைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நல்ல காகிதம் வேண்டுமென்று சொன்னார்கள். புத்தகங்களை உரிய காலத்தில் அச்சடிக்கும்பொழுது நல்ல காகிதத்தில் அச்சடித்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மக்கள் பிரதிநிதிகளாக வந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எந்த காரணத்தைக் கொண்டு எந்தச் சங்கடமும் வந்துவிடக்கூடாது என்ற அக்கறை இந்த அரசுக்கு உண்டு. எந்தெந்த அளவிற்கு நல்ல காகிதத்தை, உயர்த்தரமான காகிதத்தை, பளபளப்பான காகிதத்தைப் பயன்படுத்த முடியுமோ அவற்றைநிச்சயமாகஎழுதுபொருள் துறை பயன்படுத்தி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உதவி செய்யும் என்று கூறி, இவ்வளவுக்கும் பிறகு இதில் வெட்டுத்தீர்மானம் தேவைதானா என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு, வெட்டுத்தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

திரு. கே.எம். தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண் 44 எழுதுபொருள்— அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,99,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடைப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்த மானிய கோரிக்கை இப்போது எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**(ஆ) கோரிக்கை எண். 30—சமூக நலன்** [1985 ஜூலை 1

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 78,05,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

**திரு. கே.எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி—மைலம் ஒன்றியம், பந்தமங்கலம், கேணிப்பட்டு, பெரியாண்டப்பட்டு, சின்னவளவனூர் ஆகிய கிராமங்களில் மகளிர் மன்றங்களுக்கு தையல் கருவிகள், குடிசைத் தொழில் செய்ய கடன் வழங்குதல் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,05,94,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப் பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை **நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய கருத்துக்களைச் சொன்னபிறகு இறுதியாக என்னுடைய பதிலை அளிக்கின்றேன் என்பதைக் குறிப்பிட்டு அமர்கிறேன்.

***திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு சட்டமன்றத் துணைத்தலைவரவர்களே நம்முடைய அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒருசில கருத்துகளை சொல்வதற்கு நான் விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையில் பெண்களுக்காகப் பல நல்ல காரியங்கள், சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது என்பது இந்தப் புத்தகத்தின் வாயிலாகத் தெரிகிறது. இந்தச் சிறப்புத் திட்டங்களின் மூலமாகக் கிராம நூர்பு மையம், தீப்பெட்டித் தொழில், பட்டு நூல் எடுத்தல், தையல் தொழில் போன்றவைகளை நாம் அந்தப் பெண்களுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

அப்படிக் கொடுத்துக்கொண்டு வருகின்றபோது, கடந்த காலங்களில் ஒவ்வொரு கிராமத்திலேயும் ஆங்காங்கு பதிவு செய்யப்பட்ட மாதர் சங்கங்களின் மூலமாக இருபது, முப்பது பேர்களுக்கு தையல் தொழிலில் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தோம். அவ்வாறு பயிற்சி கொடுத்த பிறகு, அவர்களுக்கு அந்த தையல் இயந்திரங்

* ......ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



களைச் கடனாகக் கொடுத்தோம். கொஞ்ச நாட்களுக்கு அவை ஓடியதே தவிர, மற்ற நாட்களில் தையல் மெஷின்களைக் காணோம். மாதர் சங்கங்கள் மூலமாகக் கற்றுக்கொடுக்கப்பட்ட அந்த தொழிலும் இல்லை.

பெண்களின் முன்னேற்றத்திற்காகக் கிட்டத்தட்ட 78 கோடி, 79 கோடி ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறோம். இன்றைக்குள்ள சூழ்நிலையில் இவ்வளவு கொடுத்திருந்தும் பெண்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. அது மட்டுமல்லாமல், படித்து உத்தியோகம் பார்க்கின்ற பெண்களாக இருந்தாலும்கூட கணவனுக்கும், அந்தப் பெண்ணுக்கும் பிடிக்காமல் பல கோளாறுகளும், பல சங்கடங்களும் ஏற்பட்டு, இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்த பிறகும்கூட, உத்தியோகம் பார்த்து கைநிறையப் பணத்தைச் சம்பாதித்து வீட்டிற்குக் கொடுத்தாலும்கூட, தகராறுகள் ஏற்பட்டு குழந்தைகளோடு அவர்களை வெளியேற்றுகின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கின்றது. இப்படிபட்ட நிலையில், அவர்களுக்குத் தொழில் கொடுக்கின்ற முறையில், கிராமங்களில் தையல் தொழில் கற்றுக்கொடுக்கிறோம். அயல் நாடுகளில் சில துணிகளை அவர்கள் அதிகமாக விரும்புகின்ற ரெடிமேட் துணிகளை நிறையக்

(முற்பகல் 11-30)

கேட்கிறார்கள். அந்த அளவிற்கு, இந்த தையல் தொழில் மூலமாக, தையல் தொழிற்சாலை மூலமாக, பெண்களை நிறைய பணியாற்றவைத்து, அதன் மூலமாக வெளிநாடுகளுக்குத் துணிகளை அனுப்பக் கூடிய நிலைமைகளை உருவாக்கிக் கொடுத்தால் அது உண்மையிலேயே பல பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தும். இன்றைக்குப் பெண்கள் பி.ஏ. படிக்கின்றார்கள், எம்.ஏ. படிக்கின்றார்கள், பி.எஸ்.ஸி. படிக்கிறார்கள், பி.எட். படிக்கிறார்கள். ஆனால் பெண்களிடத்திலிருந்து வரக் கூடிய அப்ளிகேஷன்கள் எல்லாம், வேலை வாய்ப்பு வேண்டுமென்பதுதான். என்னுடைய குடும்ப நிலை இப்படி இருக்கிறது, நான் மிகவும் கஷ்டப்படுகின்றேன், தாய் தந்தையர் மிகவும் கஷ்டப்பட்டு படிக்கவைத்தார்கள், ஒரு நிலையிலும் நான் சுகம் காண முடியவில்லை என்று கண்ணீர் விடுகிறார்கள். நேற்றையதினம் கூட பழனியிலே ஒரு பெண், பி.ஏ. படித்தவள், தயவு செய்து தேவஸ்தானத்திலே கூட்டுகின்ற வேலையாவது வாங்கிக் கொடுங்கள் என்று மனு கொடுத்தார். நான் தேவஸ்தானத்திற்கு அனுப்பியிருக்கின்றேன். அதைத்தான் செய்ய முடியும், வேறு எந்த வேலை வாய்ப்பும் கொடுக்க முடியாத நிலைமைதான் இருக்கிறது.

பெண்கள் தையல் வேலை செய்வதற்கு, பட்டு நூல் தயாரிப்பதற்கு, தீப் பெட்டித் தொழிற்சாலை வைத்துக் கொள்ள டிரெயினிங் கொடுக்கிறோம். 'விடோஸ், டெஸ்டிடியூட்ஸ், டெசர்ட்டர்ஸ்' இவர்களுக்கெல்லாம் கன்டென்ஸ்ட் கோர்ஸ் வைத்து,

எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்ய வைக்கிறோம். பிறகு வேலை வாய்ப்பு கிடைத்துவிடுகிறதா? வேலை கிடைக்கவில்லை. டிரெயினிங்கிற்கு அனுப்பக் கூடிய பெண்களை, பயிற்சிப் பள்ளிகள்கூட எடுக்க மறுக்கிறார்கள். 1 , 5 கூட எடுப்பதில்லை இன்றைக்கு பயிற்சி அளித்து உடனடியாக அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய நிலைமையை இந்த அரசாங்கம் உருவாக்கினாலொழிய அந்த பெண்களுடைய முன்னேற்றத்திற்கு நாம் எந்த காரியமும் செய்தவர்கள் ஆகமாட்டோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே. அவர்களுக்கெல்லாம் நாம் பயிற்சி கொடுத்து வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சத்துணவு மையங்களை ஊருக்கு, ஊர் கொண்டு வந்து, கிட்டத்தட்ட 84,000க்கு மேற்பட்டவர்கள் அங்கே வேலை செய்கிறார்கள். அந்த வேலை செய்யக் கூடிய நிலைமையில், அங்கே குழந்தைகளுக்குப் பகல் உணவுதான் கொடுக்கப்படுகிறது. காலையிலே, கேள்வி நேரத்திலே சொன்ன மாதிரி, நர்சரி பள்ளிகளை, ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஆரம்பிக்க வேண்டும். படித்திருக்கின்ற பெண்கள் கணக்கை, ஜில்லாவாரியாக தாலுக்கா வாரியாக யூனியன் வாரியாக எடுத்து, அவர்களுக்கு எங்கேயாவது, ரூ. 500, ரூ, 300 கொடுத்து வேலை வாய்ப்பு கொடுக்கக் கூடிய நிலைமையை உருவாக்கினாலொழிய அந்த பெண்கள் முன்னேற முடியாது.

அதுவும் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் படித்து வேலை செய்கிற பெண்கள்கூட, கை நிறைய சம்பாதித்துவிட்டு, கணவன்களிடம் கொடுத்தாலும் கள்ளச்சாராயம் இருக்கிற காரணத்தால் அந்தக் கள்ளச்சாராயத்தை குடித்துவிட்டு, உத்தியோகம் பார்க்கின்ற, படித்த பெண்களை, அடிக்கின்ற அடியைப் பார்த்தால் சகிக்க முடியாத நிலைமையிலே இருக்கிறது. ஆகவே இதையெல்லாம் போக்க வேண்டுமென்றால், நாம் சற்று சிந்தித்துப் பார்த்து, பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக் கூடிய அளவிலே, I.C.D.S. திட்டத்தின்கீழ் 39 யூனியன்களை எடுத்து, அதிலே 100 பாலவாடிகளை ஆரம்பித்திருக்கிறோம். அதிலே நிலக்கோட்டையும் சேர்ந்திருக்கிறது. 100 பாலவாடிகளை ஆரம்பித்து, அங்கன்வாடிகளை நியமித்திருக்கிறோம். அங்கே 200 பேர்கள் வேலை செய்கிறார்கள். அந்த அடிப்படையிலே மத்திய அரசு உதவி நமக்கு கிடைக்கிறது. மத்திய அரசு உதவி கிடைக்கிற காரணத்தால் 374 யூனியன்களிலும் இந்த ஐ.சி.டி.எஸ். திட்டத்திலே நிறைவுசெய்யக் கூடிய அளவு செய்து மத்திய அரசாங்கத்தோடு பேசி, அவர்களிடமிருந்து எவ்வளவு பணம் நீங்கள் ஒதுக்குவீர்கள் என்று கேட்டு, பணம் வாங்கி, இந்த திட்டத்தை நம் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்துவோமானால் பல ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியும் என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் சொலலிக் கொள்ள விரும்புகிறேன்.





அதைக் கண்டிப்பாக செய்தாக வேண்டும். அப்படிச் செய்தாலொழிய இதற்கொரு விமோசனம் இல்லை. ஏற்கனவே இந்த I.C.D.S. மூலமாக, 3 வயதிலேயிருந்து 5 வயதுக்குள்ளாக பிறகு 5 வயதிலிருந்து 10 வயதுக்குள்ளாக, இந்த நிலைமைகளையெல்லாம் சமூகநல போர்ட் மூலமாகவே ஆசிரியர்களை நியமனம் செய்து, அவர்களைப் பணியாற்ற வைத்து, அந்த குழந்தைகளைப் பராமரிக்கும் நிலைமைகளை உருவாக்கினால்தான் இந்த திட்டத்திற்கு நல்ல விமோசனம் கிடைக்கும் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்லாமல், பல கிராமங்களில் இரவுப் பள்ளிகள் வைத்திருக்கின்றோம் அதிலே பல பெண்கள் படிக்கிறார்கள். அதிலே அவர்களுக்கு வேலை வாய்பு கொடுக்ககூடிய நிலைமைகளை உருவாக்கலாம்.

அது மட்டுமல்ல. வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறோம். இன்றைக்கு ஆயிரக்கணக்கான விதவைகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்த விதவைகளுக்கு வேலைவாய்ப்பளிக்க பயிற்சி கொடுக்கிறோம் பயிற்சி கொடுக்கும்போது பல பெண்கள் குழந்தைகளோடு வருகிறார்கள். விதவைகளுக்கு பயிற்சி கொடுக்கும் நிலையங்களுக்கு விதவைகள் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளோடு வருவார்களானால் அந்தக் குழைந்தைகளை பராமரிக்கும் பொறுப்பை சமூகநல போர்டு ஏற்றுக்கொள்ள வேண்டும். ரஷியாவில் இருப்பதைப்போல் செய்யவேண்டும் ரக்ஷியாவில் தாயும் தகப்பனும் வேலைக்கு சென்றால் கூட ஒரு வயது, 6 மாத குழந்தைகள் எல்லாம் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. சமூகநல போர்டு ஏற்றுக்கொண்டு பராமரிப்பு செய்வதால் அந்த தாய் தகப்பனுக்கு கவலை இல்லாமல் வேலை செய்ய முடிகிறது. அதை போன்று இங்கேயும் சமூகநல போர்டுகள் அந்த விதவைகள் குழந்தைகளை பராமரிக்க ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜில்லா வாரியாக சமூகநல போர்டு ஏற்படுத்தி, விதவைகள் தெருவிலே அலைந்து திரிந்து, திண்டாடுவதைத் தடுக்க, அவர்களுடைய குழந்தைகளை காப்பாற்ற, அவர்கள் தங்கள் காலிலே நிற்கின்ற அளவுக்கு அவர்களுடைய குழந்தைகளை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு புத்தகம், துணிமணிகள் வழங்கி, நல்ல கல்வி வசதி அளிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் அந்த ஏழை தாய்மார்கள், விதவைகள் கண்ணீர் வடிக்காமல், இன்னல் படாமல் இருப்பார்கள் 'என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்'.

அது மட்டுமல்ல, பெண்களுக்கு போதுமான பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு பெண்கள் தனியாகச் சென்றால் பல இன்னல்களுக்கு, பல்வேறு தொந்தரவுகளுக்கு ஆளாகிறார்கள். நான் ஏற்கனவே இந்த மன்றத்திலே பலமுறை

இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டால் தீங்கிழைத்தவர்களுக்கு தூக்குத்தண்டனை விதிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும். இல்லை என்றால் பெண்கள் சமுதாயத்தில் நிம்மதியாக வாழமுடியாது. கல்யாணம் ஆகாத பெண்கள் விதவைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். மகாத்மா காந்தியடிகள் சுதந்திரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது சொன்னார்கள். இந்திய நாட்டிலே இளமங்கை ஒருத்தி தன் உடல் எல்லாம் வைரத்தாலும் தங்கத்தாலும் செய்த நகைகளைப் போட்டுக் கொண்டு இரவு 12 மணிக்கு தன்னந்தனியாக பயம் இல்லாமல் சென்றுவரும் சூழ்நிலை வரவேண்டும். அதுதான் உண்மையான சுதந்திரம், அந்த சுதந்திரத்தைத்தான் நான் விரும்புகிறேன் என்று உத்தமத் தலைவர் காந்தியடிகள் சொன்னார்கள்.

ஆனால் இன்றைக்கு கணவனோடு, குழந்தைகளோடு ஒரு பெண் போனாலும் கணவனை கட்டிப்போட்டு, அந்தப் பெண்ணைத் தூக்கிக் கொண்டுபோய் மானபங்கம் செய்கிறார்கள் இதற்கு என்று ஒரு போர்டு ஏற்படுத்தி, இப்படிப்பட்ட சூழ்நிலையில், எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் தப்பு செய்தார் என்று தெரிந்தால், அவர்களுக்கு தூக்குத் தண்டனை இல்லாவிட்டாலும், கடுமையான தண்டனையாவது வழங்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் பெண்களுக்கு தகுந்த பாதுகாப்பு கொடுக்கின்ற வகையில் சட்டம் போட்டு, தகுந்த ஏற்பாடுகளைச் செய்தால்தான் பெண்கள் ஓரளவுக்கு நிம்மதியாக வாழ முடியும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுல்ல, இன்றைக்கு நாம் நூற்பு நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். நூற்பு நிலையங்களை பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாக ஏற்படுத்தியிருக்கிறோம். அங்கே நூற்கக் கூடியவர்களுக்கு ஒரு சிட்டாவுக்கு அதிகமாகச் சம்பளம் கொடுக்கிறோம் என்று காதி அமைச்சர் அவர்கள சொன்னார்கள். ஒரு கிராமத்தில் ஆரம்பிக்கிற நூற்பு நிலையத்தில் 30 பெண்கள் வேலைசெய்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் கொஞ்சம் அதிகமாக கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அது மட்டுமல்லாமல் அங்கே தறிகள் வைத்து நெசவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த மாதிரி இருந்தால்தான் ஏதாவது அவர்களாகவே தொழில் செய்து, தங்கள் வாழ்க்கையை நல்லமுறையில் நடத்திக் கொள்ள வாய்ப்பு இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விதவைப் பெண்களின் குழந்தைகளுக்கு தாலிக்கு தங்கம் வாங்க ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம். அதற்காக நிறைய விதவைப்பெண்கள் அப்ளிகேஷன் போடுகிறார்கள். அதிலே பொறுக்கி எடுத்து, நாம் மாநிலம் முழுவதுமாக 50 அல்லது 60 பேர்களுக்குத்தான் கொடுக்க கூடிய வாய்ப்பு இருக்கிறது. அத்தனை பேர்களுக்கும் கொடுக்கும் சூழ்நிலை இல்லை. ஒரு திட்டம்





கொண்டு வந்தால் அதன்படி தகுதிபடைத்த அத்தனை பேர்களுக்கும் உதவிசெய்ய எற்பாடு வேண்டும். எத்தனைபேர் மனு செய்தாலும், அவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழே இருந்தால், அத்தனை பேர் களுக்கும் கொடுக்க வேண்டும். அந்த வகையில் விதவைப்பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு திருமணம் செய்து கொடுக்க முடியாத நிலையில் இருப்பதால்தான் அப்ளிகேஷன் போடுகிறார்கள். அந்தப் பெண்களுக்கு எல்லாம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

முதியோருக்கு பென்ஷன் கொடுக்கிறோம். பழைய காலத் தில் 100 பேர்களுக்குத்தான் ஒரு ஜில்லாவில் சாங்ஷன் செய்யப் பட்டிருந்தால் அவர்களில் யாராவது இறந்தால்தான் மற்றவர் களுக்கு சாங்ஷன் செய்யும் வாய்ப்பு இருந்தது. இப்போது அப்படிபட்ட நிலைமை இல்லை. தகுதி படைத்த எத்தனை பேர் மனு போடுகிறார்களோ அத்தனை பேர்களுக்கும் கொடுக்கும் திட்டத்தை இன்றைக்கு வைத்துருக்கிறோம்.

(முற்பகல் 11-40)

அந்த அடிப்படையில் விதைவைகளினுடைய குழந்தைகளைப் பொறுத்த வரையில் எத்தனை பெண்கள் மனு போட்டாலும் அவர்கள் அனைவருக்கும் இந்த பணத்தைக் கொடுப்பதை பொறுத்த வரையில் எந்தவிதமான தயக்கமும் காட்டாமல் அவர்களுக்கு உதவி செய்து ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கன்டென்ஸ்ட் கோர்ஸ் என்ற வகையில் கொடுக்கப்பட்டு வந்த உதவித் தொகையினைப் பொறுத்தவரையில் 50 ரூபாய் எனபதை 75 ரூபாயாக ஆக்கியிருக்கிறோம். பத்து வருஷங்களுக்கு முன்பு அவ்வாறு 40, 50 ரூபாய் கொடுத்தால் போதும், இப்போதுள்ள நிலைமையில் அந்த பணத்தை வைத்துக் கொண்டுதான் சாப்பாடு போட வேண்டும், புஸ்தகம் வாங்கவேண்டும், துணி மணிகளை வாங்கவேண்டும், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றால் அது இயலாத காரியம், எனவே அவர்களுக் குக் குறைந்தது மாதம் ரூ. 150 என்ற அளவுக்கு அதிகரித்துக் கொடுத்தால்தான் சரியாக இருக்கும். எனவே அந்த வகையிலே அந்த தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்த ஊனமுற்றோர் பலர் இருக்கிறார்கள். அவர் களில் ஊனமுற்ற பெண்களைப் பொறுத்தவரையில் பயிற்சி நிலையங்களில் அவர்களுக்கு நாம் பயிற்சி கொடுக்கிறோம். ஆனால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதில்தான் தயக்க மாக இருக்கிறோம். குருட்டுபெண்கள், ஊமைப் பெண்கள் காது செவிடான பெண்கள் போன்றவர்களுக்கெல்லாம் பயிற்சி நிலையத்தின் மூலம் படிக்க வைக்கிறோம். படித்துவிட்டு அவர் கள் வெளியே வரும்போது அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்

வில்லை. இவ்வாறு வேலைவாப்பு இல்லாததன் காரணத்தால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே படித்துவிட்டு அவர்கள் வெளியே வரும்போது அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக கூடிய வகையில் திட்டமிடவேண்டும். அதுமட்டுமல்ல, ஊனமுற்ற ஆண்களைப் பொறுத்தவரையிலும் அவர்களுக்கு பல்வேறு வகைகளில் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் தான் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பணியாற்றக் கூடிய பெண்களுக்காக ஆங்காங்கே ஹாஸ்டல் நடத்துகிறோம். அந்த ஹாஸ்டல்களைப் பொறுத்த வரையில் மத்திய அரசு 75 சதவீதம் கொடுக்கின்றது. மாநில அரசு 15 சதவீதம் கொடுக்கின்றது, தனியார்கள் 10 சதவீதம் கொடுக்கிறார்கள். ஆனால் அவற்றைத் தனியார்தான் நடத்தவேண்டும் என்ற சூழ்நிலை இல்லை, பல் வேறிடங் களில் அரசாங்கத் துறையில் பணியாற்றக் கூடிய பெண் களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குத் தங்குவதற்கு உரிய இடங்கள் இல்லாததன் காரணத்தால் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஒவ்வோரு ஜில்லாவிலும் அப்பேர்ப்பட்ட பெண்களுக்காக முழுத் தொகையையும் மாநில அரசே போட்டு, மத்திய அரசின் உதவி யையும் பெற்று கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்தால், அங்கே இரண்டு வார்டன்களை நியமித்து அவர்களுக்குச் சம்பளத் தையும் கொடுத்து விட்டால், அங்கே தங்குகின்ற பெண்கள் அங்கே சாப்பாட்டிற்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுத் தங்குகின்ற வகையில் சிறப்பான முறையில் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த இல்லங்களை ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படுத்துகின்ற வகையில் அதிகமான அளவில் அமைக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பெண்களுக்கான எலக்ட்ரானிக், மற்றும் ஐ.டி.ஐ. சில ஜில்லாக்களில் இருக்கின்றது. ஆனால் பெண்களுக்கென்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு அந்த ஐந்தாண்டுத் திட்டங் களின் மூலமாக எத்தனையோ ஆயிரம் பெண்களுக்கு உதவுகிறோம். இத்தனை பெண்களுக்கும் பயிற்சி கொடுத்தார்கள் என்ற நிலை மையை உருவாக்குகின்ற வகையில் ஐ.டி.ஐ. நிலையத்தை மாநிலத் திலும் ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒவ்வொரு தாலுக்காவிலும் கொண்டு வரக்கூடிய நிலைமையை உருவாக்கினால் 8-வது படித் திருக்கக்கூடிய பெண்களுக்கும்கூட ஒரு வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடிய நல்ல நிமைை ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்பகிறேன்.

இன்றைக்கு எலக்ட்ரானிக்ஸ் போன்றவை தொழில் துறையிலே வந்தாலும்கூட சமூக நலத்துறையின் மூலம் அதைச் செய்தால் மத்திய அரசின் உதவியும் கனிசமாகக் கிடைக்கும். அந்த வகையிலே ஏற்பாடு செய்தால் மிகச்சிறந்த முறையில் நிலைமைகள் ஏற்படும். இவ்வாறு செய்து பெண்களுக்கு அதிகப்



படியான வேலைவாய்ப்பும், சுய வேலைவாய்ப்பும் உண்டாக்கிக் கொடுக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பதிவு செய்யப்பட்ட மாதர் சங்கங்களில் உள்ள விதவைப் பெண்களில் 5 நபர்களுக்கு மட்டும் பால் மாடுகள் வாங்கிக் கொடுக் கிறோம். இது போதாது, அந்த சங்கங்களில் எத்தனை விதவைகள் இருக்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் வாங்கிக்கொடுக்கும் நிலை ஏற்படவேண்டும். பெண்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களை ஆராய்ந்து எத்தனை பெண்கள் இந்தச் சங்கங் களில் இருக்கிறார்களோ அவர்கள் அத்தனை பேர்களுக்கும் சோஷியல் வெல்ஃபேர் போர்டின் மூலமாக உதவி செய்யவேண்டும். சமூக நலத்துறையிலிருந்து 3,000 ரூபாய் ஒரு பால் மாட்டிற்குக் கொடுக்கவேண்டும். அதிலே 1,500 ரூபாய் இனாமாகவும் மீதி 1,500 ரூபாயைக் கடனாகவும் கொடுக்கலாம் என்ற வகையில் நிலைமையை உருவாக்கி அதன்படி கொடுத்துதவினால் நிச்சயமாக அந்தப் பெண்களின் வாழ்வில் முன்னேறுவதற்குரிய வாய்ப்பு ஓரளவுக்குக் கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும் கிறேன்.

கிராமங்களில் இருக்கிற கிராம சேவிக்குகளுக்கும், மகளிர் செவிலியர்களுக்கும் உண்மையிலேயே அங்கேவேலையைக் காணோம். அவர்கள் எந்த வேலையும் செய்வதாகத் தெரியவில்லை. ஆகவே இதுமாதிரியான சங்கத்தின் மூலமாகக் கண்டிப்பாக அந்தப் பெண் களுக்கு இந்தத் தொழில் துறைகளிலே அவர்களுடைய கவனத்தை சற்றுத் திருப்பி, அந்தத் தொழில்களைச் கற்றுக் கொள்வதற்கும், மற்றும் பால் பண்ணை வைத்தல், ஆடு வளர்த்தல், மாடு வளர்த் தல் போன்ற சிறு சிறு கிராமத் தொழில்களை செய்யக் கூடிய அளவிற்கு அவர்களை உருவாக்கி அதன் மூலமாக அவர்கள் தொழில்களை சுயமாகச் செய்வதற்கு வாய்ப்பு எற்படுத்திக் கொடுத் தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி நாட்டில் இன்றைக்கு எத்தனையோ சிறு சிறு கைத்தொழில்கள் இருக்கின்றன. அந்தச் சிறு தொழில்களை இந்தச் சங்கத்தின் மூலமாக அவர்கள் செய்வதாக இருந்தால் கூட அந்த அந்தத் துறைகளுக்கு வேண்டிய சாமான்களை, அந்தந்த தொழில்களுக்கு தேவையான உபகரணங்களைக் கொடுத்து இந்த மாதிரி சங்கங்களுக்கு தேவைப்படும் மேசை, நாற்காலிகளைக் கூடச் செய்யச் சொல்லலாம். இவைகளுக்கு எல்லாம் அந்தப் பெண்களுக்குப் பயிற்சி கொடுத்து அந்தத் தொழில்களை ஊக்கு விப்பதோடு, அந்தப் பெண்களுக்குச் சுய வேலை வாய்ப்பு செய்யக் கூடிய வகையிலும் எற்படுத்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தச்சுத் தொழில், தையல்தொழில், பாய் நெய்வது, உலோகப் பொருள்கள் செய்வது போன்ற பல தொழில்களைப் பற்றி இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழில்களை யெல்லாம் அவர்கள் பயிற்சி இல்லாமல் எப்படிச் செய்வார்கள். ஆகவே அந்தத் துறைகளிலே பயிற்சி பெற்ற படித்த பெண்களை, ஏற்கெனவே அந்தத் துறைகளில் வேலைபார்த்துக் கொண்டிருக்கும் பெண்களை வைத்து இதுபோன்ற தொழில்களில் கிராமப்புற பெண் களுக்கு பயிற்சியை முதலிலே ஏற்படுத்திக் கொடுத்தால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அதை அவர்களால் செய்ய முடியும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பழைய காலத்திலே எல்லாம் பெண்கள் சுற்றுலா செல்வது என்றால் கல்விச் சுற்றுலா போன்ற வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு பஸ்களை ஏற்பாடு செய்துக் கொண்டு ஆங்காங்கே போய் பார்த்து அவைகளைப் படித்துக் கொள்வார்கள். இப்போது அவைகளையெல்லாம் நிறுத்தி விட்டார்கள் என்று அறிகிறேன். அவைகளையெல்லாம் நிறுத்தாமல் தொடர்ந்து இதுபோன்ற கல்விச் சுற்றுலாக்களில் பெண்கள் ஈடுபடும் வகையில் வழிவகை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

இதோ இன்னும் கொஞ்சம் தான்; முடித்து விடுகிறேன்.

அடுத்து பழங்குடியினர், அரிசனமக்கள். எங்களுடைய ஜில்லா வில் பண்வணக்காடு, தாண்டிக்குடி போன்ற பகுதிகளில் பிரம்பு வேலை செய்பவர்கள் இருக்கின்றார்கள். ஏற்களவே அவர்கள் செய்த தொழில் நசிந்துவிட்ட காரணத்தால் இன்று கஷ்டம் அடைகின்றார்கள். ஆகையால் நசிந்துபோன தொழிலை புதுப் பித்து உதவும் வகையில் காரியம் ஆற்ற வேண்டும். ஆகவே, அந்தத் தொழிலைத் தெரிந்தவர்கள் இப்போது தொழில் இல்லா மல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அப்படி எங்கெங்கே எல்லாம் அந்தத் தொழில்கள் செய்யப்பட்டு, பிறகு விடுபட்டுபோய் இருக் கிறதோ, அங்கேயெல்லாம் மறுபடியும் அவைகளுக்கான நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொண்டு, பெண் களுக்கென்று 5 ஆண்டுத் திட்டங்களை தனியாகப் போட்டு, எல்லா இடங்களிலும் உள்ள எல்லாத் தரப்பு பெண்களுக்கும், எந்த வகையில் எந்த அளவுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களோடு பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்களோடு பேசி—நான் இங்கே இருக்கின்ற பெண் அதிகாரிகளை கேட்டுக் கொள்கிறேன். ஐ. ஏ. எஸ். அதிகாரி களும் வந்திருக்கிறார்கள். இந்தப் பெண் அதிகாரிகள் எல்லாம் எல்லோருடனும் கலந்து பேசி—ஒரு நல்ல முடிவைச் செய்து, 5 ஆண்டுகளுக்குள் தமிழகத்திலே இருக்கிற, படிக்காத பெண்களுக்கு மட்டும் அல்லாது படித்த, பி. ஏ., எம்.ஏ., பட்டதாரிகளான



பெண்களுக்கும் எந்த வகையில் வேலை வாய்ப்புக் கொடுக்கமுடியும் என்பதைப்பற்றி சிந்தித்து, அதற்குச் சிறப்பான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள் கிறேன். நன்றி, வணக்கம்.

*திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களின் முன்னேற்றத்திற்காக கொண்டு வரப்பட்டுள்ள இந்த சமூக நல மானியத்தில் என்னுடைய சில கருத்துகளை எடுத்து வைக்க நான் விரும்புகிறேன். எங்கும் கலந் திருந்தாலும், எல்லோருக்கும் ஒரே நேரத்தில் அன்பு செலுத்துவது என்பது முடியாத நிலையிலே இறைவன் தாயைப் படைத்தான் என்பது வெள்ளைக்காரனின் புனிதப் பழமொழி. எனவே தாய் மார்களின் அன்புக்கு பாத்திரமாகிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பெண்களின் மேம்பாட்டிற்கு இந்த சமூக நலத்துறை நிச்சயமாக உதவியாக அமையும் என்று மிக்க சிறப்பான நல்லெண்ணத்துடன் இந்தத் துறையைக் கொண்டு வந்தார்கள். தமிழகத்தை இதற்கு முன்பு ஆண்டுக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியானாலும் சரி, அல்லது அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இந்த சமூக நலத்துறைக்கென்று தனியாக ஒரு அமைச்சகம் இருந்தது இல்லை. ஆனால் 1977-லே எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகுதான், சமூக நலத்துறைக்கு என்று தனி பெண் அமைச்சரை நியமித்து பெண் குலத்தின பெருமையை உயர்த்தியிருக்கிறார்கள். அதற்காக தாய் களுடைய சார்பில் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக்கும், புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நான் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன.

மாறி வருகிற சமூக அமைப்பினை மனத்திலே கொண்டு பெண்கள் சமூக, பொருளாதார நிலையில் உயர்வதற்கும் அவர்களுக்கு வழி காட்டவும் ஊக்கத்தையும் ஆக்கத்தையும் ஏற் படுத்திக் கொடுப்பது இந்த சமூக நலத்துறை.

(முற்பகல் 11-50)

சமூக நலன் என்றாலே சத்துணவுத் திட்டமென எண்ணிப் பார்க்கின்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டுள்ளது. மகளிர் நலம் நாடும் புரட்சித் தலைவர் அரசு மகளிர்களுக்காக நல்ல பல திட் டங்களைப் பொருளாதாரத் துறையில் இன்றைக்குத் தீட்டி இருக்கிறது. நல்லதொரு சமுதாயம் அமைந்திட மாதர்களின் முன்னேற்றம் அவசியம். அதிலே நம்முடைய தமிழக அரசு எவ்வளவு அக்கறை காட்டி வருகிறதென்பதை நாம் கண் முன்னாலே வைத்திருக்கிற சமூக நல மானியத்தில் இன்றைக்கு கோரிக்கையாக எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.

[திருமதி பா. வளர்மதி] [1985 ஜூலை 1

அநாதைகள் ஆண்டவனின் குழந்தைகள் என்பதற்கேற்ப இந்த அரசு அவர்களுக்கு பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்களைத் தீட்டி இருக்கிறது. அநாதைப் பெண்கள், விதவைகள் உதவி பெறும் வயது தற்போது 40 என்று வரையறுக்கபபட்டிருக்கிறது. அதை 30 வயதாக குறைத்திட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர் களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

1976-ம் ஆண்டில் இந்தத் திட்டத்தினால் 10 ஆயிரம் பெண்கள் பயன் அடைந்தார்கள். ஆனால் 1983-84-ம் ஆண்டில் ஏறத்தாழ ஒரு லட்சம் பேர்களுக்கு மேல் பயன் பெற்றிருக் கிறார்கள். குழந்தைகளுக்கு தற்போது இலவச நோட்டு புத்தகங் கள் வழங்கப்பட்டு வருகின்றது, அவர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் சீருடை வழங்குகிற பொறுப்பையும் புரட்சித் தலைவர் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

விதவை மறுவாழ்வுத் திட்டங்களைத் தீட்டியிருக்கிற புரட்சித் தலைவர் அரசு மறுமணம் புரிகிற தம்பதிகளுக்கு வழங்கும் தேசியப் பத்திரங்களை ரூ. 10 ஆயிரத்திற்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல விதவைகள் தங்களுடைய பெண்களுக்கு திரு மணத்திற்காக செலவுசெய்ய புரட்சித் தலைவர் அரசு இலவச மாக ஆயிரம் ரூபாய் வழங்குகிறது. ஆனால் இன்றைக்கு இருக் கிற சூழ்நிலையில் திருமணத்திற்கு செலவு செய்ய ஆயிரம் ரூபாய் போகாது என்பதால் அதனை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தும் படி அமைச்சர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

1983-84-ம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக ரூபாய் 5 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1985-86-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருக்கும் 5 லட்சம் ரூபாய் இந்தத் திட்டத்திற்கு போதுமானதாக இருக்காது என்று நான் கருதுகிறேன். எனவே இதற்கு அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அநாதைப் பெண்கள், விதவைப் பெண்களின் அவல நிலை யைப் போக்குவதற்கு பல சுயவேலை வாய்ப்புத் திட்டங்களை ஏற்படுத்துவது அவசியமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னக் குவளையில் தான் இறைவன் ஏழைகளுக்கு காட்சி அளிக்கிறான் என்று காந்தி அடிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்,



1985 ஜூலை 1] [திருமதி .பா. வளர்மதி]

" உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு "

என்பது வள்ளுவரின் வேதவாக்கு. 70 கோடி எண்ணிக்கையை மக்கள்
மக்கள் தொகை எட்டிக் கொண்டிருக்கிற இந்திய நாட்டிலே மக்கள்
பெருக்கம் ஒருபுறம். கூறமுடியாத வறுமையின் கொடுமைகள் மறு
புறம். இந்த இரண்டு சூழ்நிலையில் பிறந்திருக்கிற குழந்தைகள்
ஒட்டிய வயிற்றோடும், உலர்ந்த உதடுகளோடும் இருக்கிற அவல
நிலையைப் போக்குவதற்காகத் தான் மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டது சத்துணவுத் திட்டம்.
'கொடிது கொடிது வறுமை கொடிது, அதிலும் கொடிது
இளமையில் வறுமை' என்ற நிலையில், பசித்தால் அழமட்டும்
தெரிந்திருக்கிற வயதிலே, பசிக் கொடுமையை அனுபவத்தில்
முதல்வர் அவர்கள் அறிந்தார்கள். எனவே தான் தாய்க்
குலத்தின் கண்ணீரைத் துடைப்பதற்காக சத்துணவுத் திட்டத்தை
புரட்சித் தலைவர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.
1982-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் ஆரம்பித்திருக்கிற முதல்வர்
குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 36 மாதங்களாக வெற்றி
நடைப்போட்டு நடந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும்
முன்னேறிக் கொண்டே இருக்கிற இந்தத் திட்டத்தை வெளி
மாநிலங்களிலிருந்து வருகிறவர்களும், தலைவர்களும் கூட பாராட்டு
கிறார்கள். கிராமப் பகுதியில் 23,040 மையங்களும், நகரத்தில்
ஏறத்தாழ 5,000 மையங்களும் நடந்து வருவதாகவும், 24 லட்சம்
குழந்தைகள் பயன் பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் ஒரே கல்லில் இரண்டு
மாங்காய்களை அடிக்கும் வகையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு
வந்திருக்கிறார்கள். குழந்தைகள் நன்மை பெறுவதோடு,
சத்துணவு சாப்பிடுவதோடு, அதன் தொடர்பாக பல்லாயிரக்
கணக்கான பேர்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு
கிடைக்கிறது. நான் இங்கே குறிப்பிட விரும்புவது, சத்துணவு
மையங்களில் நியமிக்கப்படுகிறவர்களை முழுக்க முழுக்க விதைவ
களாகவும், ஆதரவற்றவர்களாகவும் நியமிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். தற்போது பி.ஏ. எம்.ஏ. படித்தவர்கள்
எல்லாம் இதில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உண்மை
யான உள்ளத்தோடு இந்த நிலையங்களில் செயல் படுவார்களா
என்பது தான் எனக்கிருக்கிற சந்தேகம். எனவே இப்படிப்பட்ட
மையங்களுக்கு சாதாரணமானவர்களை நியமிக்க வேண்டும்
என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்
களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

யுனெஸ்கோ நிறுவனம் கூட குழந்தைகளுக்கு ஒரு வேளை
உணவுக்காக செலவிடப்படும் 44 பைசாவிலே நல்ல சத்துணவை
அளிக்கலாம் என்று கூறியுள்ளது. இப்படிப்பட்ட திட்டங்களை
அவர்கள் உணவு ஊட்டும் திட்ட[illegible]ாக புரட்சித் தலைவர் அவர்கள்

வகுக்கவில்லை. சாதி சமய வேறுபாடு இன்றி இளைய பருவத்தில் இருந்து குழந்தைகள் படித்து உண்டு அவர்களுக்கு நல்ல நிலையை உருவாக்கவேண்டும் என்பதற்காக இந்தச் சத்துணவுத் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு புரட்சிகரமான முறையிலே ஒரு மாறுதலை ஏற்படுத்தி, இன்றைக்கு அது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தைப் பற்றி வக்கணையாகப் பேசியவர்கள் எல்லாம் இன்று வாயடைத்துப் போயிருக்கிறார்கள். எடுத்து எறிந்து பேசியவர்கள் எல்லாம் இன்றைக்கு எழுந்திருக்க முடியாத நிலையில் முடங்கிப் போயிருக்கிறார்கள். புதிய சகாப்தத்தை நடத்துவதற்குப் புறப்பட்டு இருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள், இந்தத் திட்டத்தின் மூலமாக தாய்மார்களின இதயங்களிலே நீங்காத இடந்தைப் பெற்றிருக்கிறார்கள். புள்ளி விவரக் கணக்கைப் பார்த்த பொருளாதார மேதைகள் கூட இன்றைக்கு தங்களுடைய புத்தியை தெளிய வைத்துக்கொள்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இலக்கியத்திலே பசிப்பிணி மருத்துவனைப் பற்றி படித்திருக்கிறோம். பார்த்தது இல்லை. ஆனால் இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் பசிப் பிணி மருத்துவராக, இலக்கியத்திலே சொன்னதைப் போல அவர்களை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். புரட்சித் தலைவர் அறிவித்து இருக்கிற இத்தகைய சிறப்புமிகு திட்டம் ஏழை எளியவர்களின் ஆவலைத் தூண்டி இருப்பதோடு அறிவாளிகளின் பாராட்டுதலையும் பெற்றிருக்கிற திட்டமாகும்.

இன்றைக்குக் காலையிலே கூட செய்தியிலே குறிப்பிடுகிற போது, மதுரை மாநகரத்தில் பார்வையற்றோர் மாநாடு என்று ஒரு மாநாட்டிலே பார்வையற்றவர்களுக்கு பல சலுகைகளை அறிவிக்க வேண்டும் என்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டு இருப்பதாக செய்தியிலே சொன்னார்கள். நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது, பார்வையற்ற பெண்களுக்கு, நரிக்குறவர்களுடைய சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு புரட்சித் தலைவர் அரசு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை கொண்டு வந்திருப்பதை போல, பார்வையற்ற பெண்களை திருமணம் செய்து கொண்டு இருப்பவர்களுக்கும் தமிழக அரசாங்கம் பல்வேறு பகுதிகளில், அது எந்த பகுதியாக இருந்தாலும், அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்கு சமூகநல வாரியம் சிபாரிசு செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றவர்களின் அவல நிலையைப் போக்குகின்ற வகையில் புரட்சித் தலைவர் அரசு எடுக்கின்ற நடவடிக்கைகள் பற்றி இந்த மானியக் கோரிக்கையில் மிகத் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டு இருக்கிறது. புரட்சித் தலைவர் அரசு பெரும் பங்கு பெற்று, பல்வேறு திட்டங்களின் மூலம் உதவினாலும் கூட இன்னும் அவர்கள் நல்ல நிலைமைக்கு உயரவில்லை. ஆண்ட



வனுடைய செல்லக் குழந்தைகளாக அவர்களைப் பார்க்க வேண்டும் என்று அன்னை தெரசா அவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு உடல் வருத்திக்கொள்ளாமல் செய்யப் படுகின்ற வகையில் எல்லாத் துறைகளிலும் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், தனியார் நிறுவனங்களிலும் அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு தமிழக சர்க்கார் முயற்சி எடுக்க வேண்டும், அதற்கு சிபாரிசு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1985-86 ஆம் ஆண்டில் இந்த திட்டத்திற்காக ஒதுக்கியுள்ள ரூபாய் 186.81 லட்சம் முந்தைய ஆண்டில் ஒதுக்கியதைவிட அதிகமாக இருக்கிறது மன வளர்ச்சிக் குன்றியவர்களுக்கும், பார்வையற்ற, காது கேளாதவர்கள் போன்றவர்களுக்கு சிறப்பான பல திட்டங்களை இந்த அரசு அறிவித்து இருக்கிறது. இப்படி புரட்சித் தலைவர் அறிவித்திருக்கிற இந்த திட்டங்களைப் பார்க்கின்றபோது, உண்மையிலே மகிழ்ச்சி தரக்கூடிய திட்டமாக இன்றைக்கு அறிவிக்கப்பட்டு இருக்கிறது. தனித்து இயங்கவும், மற்றும் தன்னம்பிக்கை அடையச் செய்வதும், உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டத்தின் எண்ணமாகும். அவர்களின் வாழ்க்கையை அவர்களே நடத்திச் செல்ல வருமானம் கிடைக்கும் பணியில் அவர்களை அமர்த்தி அவர்கள் சிறப்புறுவதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்யவேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அமெரிக்க ஐக்கிய அரசின் தேசிய ஊனமுற்றோர் நிறுவனம் இந்தத் திட்டங்களுக்காக நிதி அளிப்பதற்கு முன்வந்துள்ளதை நாம் எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். வெளியிலிருந்து வருகின்ற பெண்கள், மற்ற நகரங்களைவிட சென்னை நகரத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களாக ஊழியர்கள் அதிகமாக இருக்கிறார்கள் எளவே அவர்கள் அரசு ஊழியர்களாக வங்கிகளில் தனியார் நிறுவனங்களில் வேலை பார்க்கும் திருமணம் ஆகாத பெண்களுக்கு சென்னை நகரில் இன்னும் பல விடுதிகளைத் திறக்க வேண்டும். தற்போது விடுதிகள் கட்டுவதற்கு 75 சதவீதம் மைய அரசு அளிக்கிறது. ஆனால் முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை வழங்குகின்ற திட்டத்தின் கீழ் முதியோர்களுக்காக வழங்குகின்ற தொகையை வெகு விரைவிலே சம்பந்தப்பட்ட முதியோர்களுக்கு அளிப்பதற்கு மாநில அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் துரிதப்படுத்த வேண்டும். காரணம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, ஒரு வருடத்திற்கு இவ்வளவு பேர் முதியோர் உதவித் தொகை வழங்கப்பட வேண்டும்

[திருமதி பா. வளர்மதி]

என்று ஒரு வரைமுறை இருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தின் மூலமாக அதை அதிகப்படுத்தி, முதியோர் உதவித் தொகையை ஆதரவற்றவர்களுக்கு, அனாதைகளுக்கு, அவர்களுக்கு வழங்கக் கூடிய உதவித்தொகையை விரைவிலே தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அது மட்டும் அல்ல, அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கைத்தறி ஜனதா வேட்டி, சேலை ஆண்டுக்கு 2 முறை தரப்படுகிறது. பொங்கல், சுதந்திர தினம் ஆகிய 2 தினங்களில் தரப்படுகிறது. அதை தீபாவளிக்கும் சேர்த்தும் 2 தடவையாக தருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு சமுதாயம் நல்ல முறையில் அமைய ஒரு நாடு முன்னேற்றப்பாதையில் செல்ல இளம் சிறுவர்கள் அடிப்படை காரணம். அந்த சிறுவர்கள் சூழ்நிலையின் காரணமாக தவறு செய்தால் அவர்களை செம்மைபடுத்த அவர்கள் வாழ்வு சீராக அமைய இந்த சீர்திருத்தப் பள்ளியை அரசு நடத்தி அவர்களை முன்னேற்றுகின்ற வழி பாதையில் நடத்திச் செல்ல முன் வரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரதட்சிணை கொடுமைப்பற்றி இந்த சமூகநலத்துறை மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது இந்த சந்தர்ப்பத்தில் நான சில கருத்துக்களை மட்டும் சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வசதி இல்லாத காரணத்தால் தங்கள் வாழ்க்கையின் வசந்தங்களை வாசல் கதவுகளிலே கழித்துவிட்ட எத்தனையோ முதிர் கன்னிகள் இன்னும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். வரதட்சிணை பேயின் கோரப்பிடியில் சிக்கி எத்தனையோ பெண்கள் நெருப்பு ஆற்றில் நீந்திக் கொண்டு இருக்கிறார்கள். பத்திரிகைகள் தருகின்ற பட்டியல்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு போகிறது. இவர்கள் செய்வது தற்கொலைகள் மட்டும் அல்ல, மாறாக வழி வழி வந்த நமது நாட்டின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் கொலை செய்து கொண்டு இருக்கிறது.

சட்டமும், காவல் துறையும் பல சட்டங்களைப் போட்டாலும் இந்த கொடுமைகளை கட்டுப்படுத்துவதற்கு முடியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வது வரதட்சிணை கொடுமைக்கு காரணமானவர்களை தடுப்புக் காவல் சட்டத்தில் கைது செய்யப்படவேண்டும்.



[திருமதி பா. வளர்மதி]

அது மட்டும் அல்ல, லஞ்ச ஒழிப்புக்கும், மது விலக்குக்கும் தனியாக காவல் பிரிவு இருந்து அவர்களின் பேரில் நடவடிக்கை எடுப்பதைப்போல வரதட்சிணை ஒழிப்புக்கும் தனியாக காவல் பிரிவு ஏற்படுத்த வேண்டும் என்றும், அந்த வரதட்சிணை ஒழிப்புக்கு தனியாக போடுகின்ற காவல் பிரிவுக்கு பெண்களே காவலர்களாக இருந்து அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் இந்த வரதட்சிணை ஒழிப்பில் மிக தீவிரமாக அக்கறை காட்ட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சமூக நலத்தைப் பொறுத்த வரையில் சகோதரிகள், விதவைகள், ஆதரவற்றவர்கள், உடல் ஊனம் உற்றவர்கள், கால் இழந்தவர்கள், கண் இழந்தவர்கள், வயோதிகர்கள், தாய் முகம் தந்தை முகம் காணாத அனைத்து குழந்தைகள் பற்றி நான் கூறிய சில கருத்துக்களை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு அந்த கோரிக்கைகளை உங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு தயவுசெய்து அவைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்பதையும் கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்த மாண்புமிகு துணைத்தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

## 7. அறிவிப்பு

### பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : இன்றைக்கு கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி பேரவை நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்

| | |
|---|---|
| 2—7—85 செவ்வாய்க்கிழமை<br>3—7—85 புதன்கிழமை | மானிய கோரிக்கை எண் 2 மாநில ஆயத்தீர்வை<br>மானிய கோரிக்கை எண் 9 மாநில ஆட்சித்தலைவர்கள், அமைச்சர்கள் தலைமை இட பணியாளர்கள். |
| 4—7—85 வியாழக்கிழமை | மானியக் கோரிக்கை எண் 48, ஊரகத் தொழில்கள். மானியக் கோரிக்கை எண் 57, ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவுகள். |

மற்ற மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்வதில் மாற்றம் இல்லை.

### 3. உரிமைப் பிரச்சினை (தொடர்ச்சி.)

### துக்ளக் இதழ் மீது (தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினையில் அந்த ''துக்ளக்'' நாளிதழில் வந்து இருக்கின்ற கேலிச் சித்திரம் பற்றி சொன்ன வாசகங்களை பத்திரிகையாளர்கள் வெளியிடாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லுகின்ற இந்த தீர்ப்பு அல்லது கருத்து அதில் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால் ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரத்திற்கு முன்னால் இந்த அவையில் நடைபெற்ற ஒருநிகழ்ச்சியைப்பற்றி இவ்வளவு நேரம் கழித்து ஒரு முடிவை சொல்லுகிறபோது பத்திரிகைகாரர்கள் அவற்றில் பலவற்றை முன்கூட்டியே அனுப்பி அது ஏறத்தாழ அச்சிட்டு வெளி வரக்கூடிய நிலைமை இருக்கும்.

அப்படித் தவறி அச்சிலே வருமானால், அதைத் தாங்கள் எடுத்துக் கொள்ளாத அளவுக்கு, இரண்டு மணி நேரம் தாமதம் ஆனதற்கு நமக்கு ஏற்பட்ட பரிசு என்று எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

### 6. வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு (தொடர்ச்சி.)

கோரிக்கைகள் எண் 30—
சமூக நலன்—தொடர்ச்சி.

**திரு. ம. ஆபிரகாம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சமூக நலத்துறை மானியக் கோரிக்கையில், 78,05,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் என்று கேட்டுள்ளதன் மீது என்னுடைய கருத்துக்களை நான் சார்ந்து இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தக் கோரிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்க குறிப்பில். மகளிர் மற்றும் குழந்தைகள் புறக்கணிக்கப்பட்டால் எந்த ஒரு சமுதாயமும் நிலைக்கவோ மற்றும் முன்னேறவோ முடியாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த மகளிர் மற்றும் குழந்தைகள் புறக்கணிக்கப்படாமல் இருப்பதற்கு, அரசாங்கமே நாடு முழுவதும் இருக்கின்ற மகளிர்களையுக், குழந்தைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அது முடியாது அந்த மகளிரையும், குழந்தைகளையும் காப்பது குடும்பத் லைவன்.



அந்தக் குடும்பத் தலைவனை நீங்கள் குடிக்க விட்டு, அவனை மயக்கத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறீர்கள். அவன் குடித்துவிட்டு வந்து குடும்பத்திலே செய்கின்ற கலவரங்களினால். நாடு பூராவும் இருக்கின்ற தாய்க் குலம் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறது. அதை மனதிலே கொள்ள வேண்டும். மகளிருக்காக நாங்கள் இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி நாடு முழுவதும் நன்மைகள் செய்கிறோம் என்று நீங்கள் விளம்பரம் செய்கிறீர்கள். ஆனால் நாடு முழுவதும் இருக்கின்ற மகளிருக்கு எல்லாம் அவைகள் போய்ச் சேருகின்றனவா என்பதை ஒருகணம் நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். தாய்க் குலம் வடிக்கின்ற கண்ணீரைத் துடைப் பதற்குத் தான் மது கடையைக் கொண்டு வந்தேன் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடும்பத் தலைவனைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விதவைகளுக்கு எப்படி குடும்பத் தலைவன் இருப்பார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**திரு. ம. ஆபிரகாம் :** அந்தக் குடும்பத் தலைவன் குடித்து உடல் நலம் கெட்டு அவன் மாளுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அதற்குப் பிறகு தான் இந்த நாட்டிலே விதவைப் பட்டியல் வருகிறது. ஆகவே, விதவைகளைப் பற்றி அமைச்சரவர்கள் குறிப் பிட்டார்கள். அந்த விதவைகளை நாடு முழுவதும் காப்பாற்று கின்ற அளவுக்கு இந்த மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகை போதுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

நீங்கள் இந்தப் புத்தகத்திலே குறிப்பிட்டு இருப்பது ஒரு மாவட்டத்திலே உள்ள கணக்கு கூட இல்லை. ஒரு மாவட்டத் திற்குத் தான் பொருந்தும். ஆனால், மாநிலம் முழுவதும் 100, 200 என்று விதவைகளுக்குத் தருகிறோம் என்று சொல்கிறீர்கள்.

அதுமட்டும் அல்ல. இந்த மானியக் கோரிக்கையில் இந்த சமூக நலத் துறையோடு, இன்னொன்று பற்றிக் கூற விரும்புகிறேன். சத்துணவுத் திட்டம் இதிலே பின்னிப் பிணைந்து இருக்கிறது. இம்மி கூட இடைவெளி இல்லாமல் காணப்படுகிறது. இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 78,05,94,000 ஆகும்.

ஆனால் பல்வேறு தலைப்புகளில் கீழ் சத்துணவு திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் பொது சுகாதாரப் பகுதி என்ற தலைப்பில் 2 கோடியே 11 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய். குழந்தைகள் நல ஒருங்கிணைந்த மேம்பாட்டு பணிகளில் ஊட்டச் சத்துணவுத் திட்டம் 1 கோடியே 24 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய். தமிழ்நாடு சத்துணவுத்

திட்டம் 9 கோடியே 15 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய். பாலர் பள்ளிகள் தொடங்குதல் என்ற பெயரில் 38 கோடியே 77 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய். செய்முறை சத்துணவுத் திட்டம் 41 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய்

குழந்தைகள் காப்பகங்களில் உணவு அளித்தல்80 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய். முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் உணவு அளிக்கும் திட்டம் என்ற பெயரில் 79 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய். முன்னாள் ராணுவத்தினரின் விதவைகளுக்கு உணவு அளிக்கும் திட்டத்தின் கீழ் 4 ஆயிரம் ரூபாய். பாலர் பள்ளிகளில் பகல் நேர கவனிப்பு நிலையங்களிலும் பாலர்களுக்கு உணவு அளித்தல் 1000 ரூபாய். தமிழ் நாட்டில் 2 முதல் 4 வயது வரையுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் திட்டத்திற்கு 2 கோடியே, 6 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய்.

(பிற்பகல் 12-10)

இப்படிப் பல்வேறு தலைப்புகளின்கீழ், திட்டப் பணிகளிலேயும் சரி, திட்டம் சாராத பணிகளிலேயும் சரி, சத்துணவுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பல்வேறு தலைப்புகளின் கீழ் மொத்தம் 52,37,66.000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது: இந்தத துறைக்கு ஒதுக்கிய 78 கோடி ரூபாயில் ஏறக்குறைய 70 சதவீதத்தை பல தலைப்புகளின் கீழ் சத்துணவே சாப்பிட்டு விடுகிறது. இந்தத் துறையில பணியாற்றும் அலுவலர்களுக்கு ஊதியம் மற்றும் நிர்வாகச் செலவுகளுக்காக 1,29,47,000 ரூபாய் என்று குறிப்பு தந்திருக்கிறீர்கள். இதுகூடலாமே தவிர குறையாது. பார்வையற்றோர் பெண்கள்பள்ளி,சீர்திருத்தப்பள்ளி, உடல் ஊனமுற்றோருக்கான கல்வி நிலையம், பார்வை இழந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு, விதவை மறுமண ஊக்குவிப்புபோன்ற இப்படிப்பட்ட பல்வேறு பணிகளுக்கும் செலவிடப்படும் தொகை, ஏறத்தாழ ஒதுக்கப்பட்ட மொத்த தொகையில் 30 சதவீதம்தான். இதில் எதை சாதித்து விட முடியும் என்று எண்ணுகிறீர்கள்? உள்ளபடியே இந்தத் துறை ஏழை எளியவர்களுக்கு உதவுகிறதோ இல்லையோ, ஆனால்ஏராளமான விளம்பரம் செய்து கொள்வதற்கு உதவுகிறது என்பது மட்டும் உண்மை.

சத்துணவு சரியாக நடக்கவேண்டும், சமூக நலனும் சீராக செயலாற்றப்படவேண்டும். சத்துணவுக்கு என்று அமைச்சர் வேறு இருக்கிறார். எனவே, சத்துணவுத் துறையின் கீழ் அதற்கான தொகை செலவிடப்பட்டு, இந்தத் துறையைக் காப்பாற்ற வேண்டுமென்று நான்இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுது தான் அமைச்சருக்கும் வேலைப்பளு குறையும், சமூக நலத்துறையும் செம்மையாகச் செயல்படுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.



விதவைகள் அல்லது அனாதைப் பெண்கள் போன்ற இப்படிப்பட்டவர்கள் குடும்பத் தலைவனோடு வாழ்ந்து கொண்டிருந்தாலும் குடும்பங்களிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் விதவைகளாக மாறுகின்ற அளவிற்கு நாட்டிலே உள்ள குடும்பத் தலைவர்கள் குடித்து விட்டு கும்மாளம் அடிக்கிறார்கள். இந்த சமூகம் எதிர்காலத்தில் சிறப்பாக வாழவேண்டுமென்றால், இந்தச் சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போல, எதிர்காலத்தில், ''தமிழர் நாகரீகம் தொன்மை வாய்ந்ததும், போற்றுதற்குரியதும் ஆகும். மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் பேணுதலில் உள்ள கடமையை இவ்வரசு நன்றாக உணர்ந்துள்ளது.'' என்று குறிப்பிட்டிருப்பதைப் போல உண்மையிலேயே இந்தக் கடமையை இவ்வரசு நிறைவேற்ற வேண்டுமென்றால் மதுக் கடைகளை நீங்கள் மூடுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இது போன்ற ஏழை எளியவர்கள், மகளிர் விதவைகளாக மாறும் சூழ்நிலை நாட்டிலே வருகிறது. இதன் மூலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் அளித்த வாக்குறுதியை வருகின்ற செப்டம்பர் திங்களில், அண்ணா பிறந்த நாளில் மதுக் கடைகளை மூடுவேன் என்று அறிவித்திருக்கிறீர்களே, அந்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று கேட்டு, எதிர்காலத்தில் சமுதாயம் நன்றாக இருக்க வேண்டுமென்றால், நீங்கள் மதுக்கடைகளை மூடுங்கள், மூடுங்கள் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலம் பற்றிய மானியக் கோரிக்கையில் ஒருசில உணர்வுகளை எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்பாகப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள், குடிப்பழக்கத்தைப் பற்றியும், அதனால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பற்றியும் கூறி, அந்தக் கடைகளை மூடிவிடுங்கள் என்ற அந்த கோரிக்கையையும் வலியுறுத்திச் சொன்னார்கள்.

புரட்சித் தலைவரவர்களைப் பொறுத்த மாத்திரம், குடிப்பழக்கம் கூடாது. குடி கெடுக்கும் குடியைத் தடை செய்ய வேண்டுமென்பதற்காகக் கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள்.

ஆனால், இந்த சமுதாயத்தில் ஒரு தலைமுறை குடிப்பழக்கம் என்பதே தெரியாமல் இருந்தவர்களைக் குடிப் பழக்கத்திற்கு ஆளாக்கியவர்களே இன்றைக்கு இந்தப் பிரச்சனையை எடுத்துச் சொல்வது வேடிக்கையாகவும் விந்தையாகவும் இருக்கிறது. சுற்றுப் புறங்களிலேயெல்லாம் மதுக்கடைகள் மையத்திலே இருக்கின்ற தமிழகத்திலே மாத்திரம் மதுக் கடைகளைத் திறந்தால் அதனால் என்ன நஷ்டம் என்று வாதிட்டவர்கள், அதற்கு மற்ற மாநிலங்களை

யெல்லாம் உதாரணமாகக் காட்டியவர்கள் இன்றைக்கு இந்தப்
பிரச்சனையை எடுத்துச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.
புரட்சித் தலைவர், மது விலக்குக் கொள்கையில் தீவிரமாக
உள்ளவர். மது அருந்தினால் தண்டனை என்று சட்டம் கொண்டு
வந்த நேரத்தில் அதைக் குறை கூறினீர்கள், குற்றம் சொன்னீர்கள்,
என்ன பாவம் செய்தார்கள், எதற்காக இந்தத் தண்டனை என்று
பேசினீர்கள். அன்றைக்கு நாங்கள் அதை நடைமுறைப்படுத்திய
நேரத்தில் அதற்கு நெறிமுறைகளைச் சொல்லி, இந்த சமுதாயம்
திருந்த வேண்டுமென்ற முறையைப் பின்பற்ற அரசு எடுக்க
வேண்டிய நடைமுறைகளை எல்லாம் சொல்லாமல், அன்றைக்கு
அதை குறை சொன்னீர்கள், புரட்சித் தலைவர் ஏதோ சர்வாதி
காரியைப் போல் நடப்பதாகச் சொன்னீர்கள், இப்படியெல்லாம்
சொல்லிய பிறகு புரட்சித் தலைவர், ஏழை மக்கள் திருந்த
வேண்டுமென்ற அடிப்படையில் மதுக் கடைகளைத் திறந்திருந்
தாலும், அதற்கு சில நெறி முறைகளைச் சொல்லி அதனால்
ஏற்படுகின்ற விளைவுகளைப்பற்றி இன்றைக்குப் பிரச்சாரம் செய்து
வருகிறார்கள்.

மேலும் ஒன்றைச் சொன்னார்கள். சமூக நலத் துறை என்பது
ஏதோ விளம்பரத்திற்காகப் பயன்படுகிறது என்று சொன்னார்கள்.
புரட்சித் தலைவர் இனிமேல்தான் விளம்பரம் தேவை என்ற
நிலையில் இல்லை. பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை.
நெல்லுக்கும் பயிருக்கும் தங்கள் குடும்பப் பெயரை வைத்துக்
கொண்டது போல், நாங்கள் அதுபோன்ற செயல்களில் ஈடுபட
வில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

சமூகநல மானியக் கோரிக்கையில் பல்வேறு உணர்வுகளை,
இந்த அரசு வழங்கி வருகின்ற சலுகைகளை அறிவித்து இருக்கிறார்
கள். ரூ. 20 என்று இருந்ததை, ரூ. 30 ஆக உயர்த்தி, விண்ணப்-
பித்த அத்தனை பேர்களுக்கும் முதியோர் உதவித் தொகையும்
விதவைகள் உதவித் தொகையும் கிடைக்க வழி செய்த மாண்புமிகு
தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு விதவைகளுக்கும் முதியோர்
களுக்கும் வழங்கப்படுகின்ற உதவித் தொகை, குறிப்பாக, சென்னை
மாநகரத்தில் 3 மாத காலமாக,வழங்கப்படாமல் மக்கள் அவதிப்படு
கிறார்கள். அதைத் துணைத் தலைவர் வாயிலாக, சமூக நலத் துறை
அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, புரட்சித் தலைவரின் கவனத்
திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த முதியோர் உதவித்
தொகை பெறுகின்றவர்கள் 3 மாத காலத்தில் பல்வேறு சிரமங்
களுக்கு ஆளாக்கப்பட்டு இன்றைக்கு அவதிப்பட்டுக் கொண்டிருக்
கிறார்கள். எனவே, அந்தக் குறையை உடனடியாக நிவர்த்தி
செய்கின்ற வகையில், முதியோர் உதவித் தொகை வழங்க நடவ
டிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
விண்ணப்பித்த அத்தனை பேர்களுக்கும் உதவித் தொகை கிடைக்க
கடந்த சட்டமன்றத் தொடரில் வழிவகை செய்து அறிவித்தார்கள்.
அந்த அடிப்படையில் மாம்பலம்-கிண்டி தாசில்தார் அலுவல
கத்தில் ஏறத்தாழ 700-க்கும் மேற்பட்டவர்கள் முதியோர் உதவித்
தொகை, விதவைகள், உடல் ஊனமுற்றோர் அத்தனை பேரும்,
விண்ணப்பித்திருக்கின்ற விண்ணப்பதாரர்கள், இன்னும் உதவித்
தொகை பெறாமலிருப்பதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்
திற்குக் கொண்டு வந்து, உடனடியாக, அவர்களுக்குக் கிடைக்க
வழிவகை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அரசு, விதவைகள், முதியோர்கள், உடல்
ஊனமுற்றோர் என்று அத்தனை பேர்களுக்கும் உதவிகள் வழங்கிக்
கொண்டிருக்கின்றது. அந்த உதவிகளை எல்லாம் ஒரு சிலர் பெறக்
கூடிய சூழ்நிலையும் அதே நேரத்தில் வயது முதிர்ந்தவர்கள்
எல்லாம் தாசில்தார் அலுவலகங்களுக்கும் மற்ற இடங்களுக்கும்
சென்று தங்களுடைய நிலைகளை எடுத்துச் சொல்லி, விண்ணப்
பத்தைப் பூர்த்தி செய்து கொடுக்கின்ற சூழ்நிலை இல்லாத
காரணத்தால், தமிழகத்திலே இருக்கிற 234 தொகுதிகளிலும்
இன்றைக்குச் சத்துணவுக்கூடங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிற
பணியாளர்களை வைத்து ஒரு சர்வே செய்ய வேண்டும். எல்லா
தொகுதிகளிலும் எத்தனை பேர்கள் வயது முதிர்ந்தவர்கள், உடல்
ஊனமுற்றோர், அநாதைகள், விதவைகள் என்கின்ற எண்ணிக்கை
யை எடுத்து, தமிழகத்தினுடைய மொத்த எண்ணிக்கையை வைத்து
அதற்கேற்றாற்போல், நிதி ஒதுக்கீடு செய்து பணியாற்றினால்
நிச்சயமாக இந்தத் திட்டம் நல்லபடியாக போய்ச் சேரும். ஆகவே
அந்த வகையில் சில மாறுபாடுகளை சமூக நலத் துறை செய்தால்
நிச்சயமாக பலன் கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் நான்
தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12–20)

அதைப்போல இன்றைக்கு வங்கிக் கடன் உதவி வழங்க சமூக
நலத்துறை பரிந்துரை செய்கிறது. ஆனால் அந்தப் பரிந்துரையை
வங்கிகள் முறையாக நடைமுறைப்படுத்தவில்லை. எனவே
வங்கிகள், சமூக நலத் துறை அதிகாரிகளால் பரிந்துரை
செய்யப்படுகின்ற அத்தனை மனுக்களுக்கும் கடன் உதவி
கட்டாயம் வழங்க வேண்டுமென்ற நடைமுறையை அமுல்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு வேலை வாய்ப்பகங்களில் பெண்
களுக்கு எல்லாம் மிகப்பெரும் சிரமம், தொல்லை ஏற்பட்டிருக்
கிறது. அவர்களுடைய எதிர்காலம் என்னவாகும் என்ற சூழ்நிலையில்

இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாக பதிவு செய்திருந்தாலும் வேலை கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. எனக்கு திருச்சியிலிருந்து ஒரு பெண் கடிதம் எழுதியிருக்கிறார். விமலா என்பது அந்தப் பெண்ணின் பெயர். பி. ஏ. படித்திருக்கிறார். வேலை வாய்ப் பகத்தில் பதிவு செய்து 10 ஆண்டுகள் ஆகியும் வேலை கிடைக்க வில்லை. அதனால் திருமணம் நடத்த முடியவில்லை. நான் என்ன செய்வது ? மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் ஏதாவது உதவி செய்யுங்கள் என்று கடிதம் எழுதியிருக்கிறார்.

அதைப்போன்று என்னுடைய தொகுதியில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. 10 ஆண்டு, 12 ஆண்டு காலம் ஆனபின்னாலும் பலருக்கு வேலை கிடைக்கவில்லை. எம். ஏ. படித்தவர்கள் இருக் கிறார்கள், பி. ஏ. படித்தவர்கள் இருக்கிறார்கள், தொழில் நுட்பக் கல்வி படித்தவர்கள் இருக்கிறார்கள், புகுமுகத் தேர்வு பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு வேலை இல்லாமல், திருமணம் ஆகாமல் சிரமப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள். சமூக நலத் துறை இப்படிப்பட்ட பெண்களுக்கு பல்வேறு இடங்களில் வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை கொடுத்து, அவர்களுடைய எதிர்காலம் கருகிவிடாமல் இருக்க, முறையாக திருமணம் நடைபெற ஏதாவது ஒரு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு திருமணங்கள் எல்லாம் கட்டாய மாகப் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற முறையைக் கொண்டுவர வேண்டும். இல்லை என்றால் ஒரே ஆள் 4 திருமணம், 7 திருமணம், 20 திருமணம் என்று செய்துகொண்டிருப்பார். அதை மாற்ற, எல்லாத் திருமணங்களும் சட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதைப்போன்று இன்றைக்கு விதவைகள், உடல் ஊனமுற்ற வர்கள் போன்றவர்கள் எல்லாம் அவர்களுடைய குழந்தைகளுக்குத் திருமணம் செய்கிறபோது அல்லது சமூகத்தில் நலிந்தவர்களுடைய குழந்தைகளுக்குத் திருமணம் நடைபெறுகிறபோது அவர்களுடைய திருமணத்திற்குப் பயன்படுத்த மாங்கல்யம் வாங்க வரிவிலக்கு அளிக்கவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களையும் கலந்து, சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் அத்தனை பேர்களுடைய திருமணங்களுக்கும், அவர்கள் படுகின்ற இன்னல்களைப் போக்க, சிரமத்தைப் போக்க, மாங்கல்யம் வாங்க வரிவிலக்கு அளிக்க ஏதாவது ஒரு முறையைப் பின்பற்ற சமூகநலத் துறை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதைப்போன்று விதவைகள் எல்லாம் அவர்களுடைய கணவன் இறந்த பின்னால், அவர்களுடைய பிள்ளைகள் சிறுவர் களாக இருந்தால், அவர்களால் நிலத்திலே பயிர் செய்ய முடியாத சூழ்நிலையில் தங்கள் நிலத்தை குத்தகைக்கு விடுகிறார்கள். பின்னால் அந்தக் குழந்தை மேஜரான பிறகு அந்தக் குத்தகை நிலத்தை திரும்ப கேட்கும்போது குத்தகைதாரர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். எனவே விதவைகளுடைய குத்தகை நிலத்தை தாராளமாக திரும்பப் பெறுகின்ற அளவுக்கு விதிவிலக்கு அளிக்க சட்டமாற்றம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு விதவைகள் எல்லாம் பணியில் அமர்த்த அவர்களுக்கு வயது நிர்ணயம் கூடாது. 40 வயதிலே ஒரு பெண் கணவனை இழந்துவிட்டால், விதவையாக இருந்தால், அரசு அலுவலகங்களில் வேலை பார்க்கும் தகுதி பெற்றிருந்தால், படித்த பெண்ணாக இருந்தால். அவர்களுடைய வயது வரம்பைப் பார்க்காமல், அவர்களுடைய கல்வித் தகுதிக்கு ஏற்ற பணியில் அமர்த்த வேண்டும். அந்த வகையில் அவர்களுடைய வயது உச்சவரம்பு நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டத் தொழில் மையங்கள் என்பதைப்போல ஒவ்வொரு மாவட்டத்திலும் விதவைகள், அனாதைகள், ஆதரவற்றோர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு என்னென்ன சலுகைகள் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன என்ற அந்த முறைகளை எல்லாம் சொல்லி அவற்றைப் பரப்புவதற்கான வழி செய்யக் கூடிய வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வழிகாட்டி நிலையங்கள் அமைக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாவட்டத் தலைநகரங்களில் மகளிர் தங்கும் விடுதி களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கின்றது. ஆறு என்று இந்த அரசின் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அதனை அதிகப்படுத்த வேண்டும். இது மிக முக்கியமான பணி யாகும். சமுதாயத்தில் இருக்கின்ற அனைத்து மக்களும் தங்களுடைய பெண்கள் வேலைக்குச் செல்கின்ற நேரத்தில் வெளியூர்களிலே போய் தங்கவேண்டிய நிலைமைகள் ஏற்படு கின்றன. அவ்வாறு தங்குவதில் பல சிரமங்கள் ஏற்படுவதன் காரணத்தால் அரசு சார்பாக அதிகப்படியான ஹாஸ்டல்களை அமைத்து அலுவலகங்களில் பணியாற்றக்கூடிய திருமணம் ஆகாத பெண்கள் வெளியே தங்கக்கூடாது. அனைவரும் அங்கேதான் தங்கவேண்டும் என்ற கட்டாயமான நடைமுறையை அமல்படுத்த அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சா. துரைசாமி] [1985 ஜூலை 1

வரதட்சணை கொடுமை என்பது சமுதாயத்தின் மிக, மிகக் கொடூரமான நிலைமையில் இருக்கின்றது. எனவே வரதட்சணைக் கொடுமையை நீக்க நாம் வழிவகை செய்யவேண்டும். அதற்கு முன்மாதிரியாக ஒரு உச்சவரம்பு நிர்ணயிக்கவேண்டும். அதாவது திருமணங்களைப் பொறுத்த வரையில் உணவுக்கு இவ்வளவு, உடைக்கு இவ்வளவு, நகைகளுக்கு இவ்வளவு என்கிற ஒரு உச்சவரம்பு வைத்து அதிகமாக செலவு செய்யாமல் தடுத்து திருமணத்திற்கு என்று இவ்வளவுதான் செலவு செய்யவேண்டும் என்று நிர்ணயித்து அதனைக் கட்டாயமாக்கவேண்டும். அப்படியும் மீறி யாராவது அதிகமாகச் செலவு செய்தால் அவர்களைத் தண்டிக்கக் கூடிய வகையில் ஒரு நடைமுறையை நடைமுறைப்படுத்தினால் இந்த வரதட்சணைக் கொடுமை என்பதை ஓரளவுக்காவது ஒழித்து இந்தச் சமுதாயத்தைக் காப்பாற்றலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பல்வேறு சூழ்நிலைகளில் இளம் பெண்கள் திருமணம் ஆனதற்குப் பிறகு தீக்குளித்தும், தூக்குப் போட்டுக் கொண்டும் சாவதைப் பொறுத்தவரையில் பத்திரிகைகளில் படிக்கிறோம். அவைகள் எல்லாம் வரதட்சிணைக் கொடுமையால் என்பதை உணர முடிகிறது. எனவே இந்த தீ விபத்து, தூக்கு போட்டுக்கொண்டு சாவது என்பதைப் பொறுத்தவரையில், அதாவது திருமணம் ஆன பெண்களுக்கு இவ்வாறு நேர்வதைப் பொறுத்தவரையில் அனைவரின் உடல் நிலையைப் பரிசோதனை செய்வது மட்டுமல்லாமல் அது குறித்து தீவிரமான புலன் விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவும் வழிவகை செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் எல்லா கிராமங்களிலும், நகரங்களிலும் அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ தடுப்பு ஊசி போடுவது என்ற அளவுக்கு சமூக நலத் துறையும் குடும்பநலத் துறையும் இணைந்து தீவிரமாகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்னை மாநகரத்தில் மிகவும் மோசமான முறையில் பிச்சைக் காரர்கள் தொல்லை எங்கு பார்த்தாலும் தாங்க முடியாத அளவுக்குப் பெருகிக்கொண்டு வருகின்றது. இரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்ட் போன்ற இடங்களில் மட்டுமல்லாது சிக்னலிலே வாகனங்கள் நிறுத்தப்படுகின்றபோதும் அங்கேகூட பிச்சை கேட்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. இவ்வாறு பிச்சையை ஒரு தொழிலாகக் கொண்டு செய்கின்ற நிலைமை இருக்கின்றது.



1985 ஜூலை 1] [திரு. சா. துரைசாமி]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வெளிநாட்டவர்கள் எல்லாம் நம்மைப் பார்த்து பிச்சைக்கார நாடு என்று சொல்கிற வகையில் இன்றைக்கு சென்னை மாநகரிலே மட்டுமல்லாது தமிழகம் எங்கும் இந்தப் பிச்சைக்காரர்களுடைய தொல்லை அதிகமாக பாதித்துக்கொண்டிருக்கின்றது. அதைக் கட்டுப்படுத்த வேண்டும். பிச்சைக்காரர்களுக்கான மறு வாழ்வு இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த இல்லங்களில் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் போன்றவர்களைச் சேர்க்கவும், வெறும் பிழைப்பிற்காகப் பிச்சை எடுப்பவர்களைச் சிறையிலே தள்ளவும் வேண்டும். அந்த வகையிலே சமூக நலத் துறை கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சமூக நலத் துறையின் வாயிலாக புரட்சித் தலைவர் அவர்களின் அரசு மிக அற்புதமான வகையில், திறமையான வகையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களுக்கெல்லாம் இலவச வேட்டி, சேலை வழங்கி வந்தது. அந்தப் பணி இப்போது நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். தயவுசெய்து அந்தப் பணியைத் தொடருங்கள். இத்தகைய திட்டங்களின் காரணத்தினால் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை நாட்டிலே இருக்கின்ற கோடிக்கணக்கான மக்கள் வாயார, நெஞ்சார வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு வாழ்த்துவதற்கு ஒரு முக்கியமான காரணம் இந்த வேட்டி, சேலைகள் வழங்கியமைதான். கிராமங்களில் இருக்கின்ற ஏழைகள் எல்லாம் இன்றைக்குப் புரட்சித் தலைவரை, மகராசன் இந்தத் துணியைக் கொடுத்தார், உடுத்திக்கொண்டிருக்கிறோம் என்று ஆனந்தமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை எல்லாம் அளிக்கக்கூடிய அப்படிப் பட்ட உயரிய பணிகளை தொடருங்கள் என்று சொல்லி, சமூக நலத் துறையின் வாயிலாக பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நாம் தீட்டிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் இதுபோன்று நாங்கள் சொன்ன சில கருத்துக் களையும் பரிசீலனை செய்து அவைகளையும் கொண்டு வந்தால் நலமாக இருக்கும்.

(பிற்பகல் 12—30)

உடல் ஊனம் உற்றோர், விதவைகள் ஆகியோர்களுக்கு எல்லாம் அரசின் சலுகைகள் முழுமையாகப் போய்ச் சேர வேண்டும் என்றால், இந்த தமிழகம் முழுமைக்கும் இருக்கிற ஒட்டு மொத்தமான எண்ணிக்கையை சர்வே செய்து அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு தொகை இவ்வளவு என்று நிர்ணயம் செய்தால் நன்றாக இருக்கும்.

[திரு. சா. துரைசாமி] [1985 ஜூலை

அதேபோல தையல் இயந்திரங்களை வழங்குகிறார்கள். போதிய பயிற்சி இல்லாமல் அந்த மெஷின்கள் வழங்கப்படுவதால், அந்த விதவைகள் அதைப் பயன்படுத்தாமலேயே வைத்திருக்கிறார்கள். எனவே யாருக்கு தையல் மெஷின் வழங்கினாலும், 3 மாத காலம் அதிலே பயிற்சி பெற்ற பிறகு அவர்களுக்கு அந்த மெஷினைக் கொடுக்க வேண்டும் என்ற வகையில் ஏற்பாடு செய்து வழங்கினால், எத்தனையோ நற்பணிகளை செய்து இன்றைக்கு தமிழகம் முழுவதும் புகழ் சேர்த்துக்கொண்டிருக்கும் புரட்சித் தலைவரின் புகழ், மேலும் மேலும் அது வளரச் செய்யும் என்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

### 8. அறிக்கை அளித்தல்.

### மின்வெட்டைத் தளர்த்துவது குறித்து மின் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு மின்துறை அமைச்சர் பேரவைக்கு ஒரு அறிக்கை வைப்பார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தென் மேற்குப் பருவ மழையையொட்டி, மின் இருப்பு நிலைமை கூடுதலாகி உள்ளது. ஆகவே, தற்பொழுது அமலில் உள்ள மின்வெட்டு, கீழ்க்கண்டவாறு தளர்த்தப்படுகிறது :—

(1) எல்லா உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கும் மின் வெட்டை 30 சதவீதத்திற்குக் குறைத்தல்.

(2) விவசாய பம்புசெட்டுகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிற்கும் பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் (மொத்தம் 14 மணி நேரத்திற்கு) மின்சாரம் வழங்குதல்.

(3) கிராமப்புற மின் இணைப்புகளோடு இணைக்கப்பட்ட உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்குதல்.

இவ்வாணை 2–7–1985 முதல் அமலுக்கு வருகிறது.

### 6. வரவு—செலவுத் திட்டம் 1985–86 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

### கோரிக்கை எண். 30—சமூக நலன் (தொடர்ச்சி)

*திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறையின் மானியக் கோரிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



1985 ஜூலை 1] [திரு. எம். செல்லமுத்து]

இந்த சமூக நலத்துறையில் பிரதானமாக குறிப்பிட்டிருப்பது பெண்களுடைய நலனும், குழந்தைகளுடைய நலனும் தான். இந்த சமூக நலத்துறையில் குறிப்பிட்டிருக்கிறபடி - பெண்களுடைய நலன் குறித்தும் குழந்தைகளுடைய நலன் குறித்தும் பல்வேறு விவரங்களை இதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த சாதனைகளின்படி ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் நிச்சயமாக உண்மை நிலை அவ்வாறு அந்த அளவுக்கு இல்லை என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம்.

குறிப்பாக தமிழகத்திலே பெண்களுடைய நிலையை எடுத்துக் கொண்டால், மிகப் பெரிய அவலமான நிலையில் தான் அவர்கள் இருப்பதை நாம் பார்க்க முடிகிறது. குறிப்பாக வரதட்சிணைக் கொடுமை காரணமாக மிகப் பெரிய கொடுமைகளுக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்ல, சமூகத்திலே இருக்கிற சொத்துடமை சமூக அமைப்பின் காரணமாகக் கூட பெண்கள் தாக்கப்படுகின்ற கொடுமைகளையும் பெண்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வரதட்சிணைக் கொடுமைகள் என்று பார்க்கிறபோது இன்றைக்கு தமிழகத்திலே சர்வசாதாரணமாக ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகள் ஸ்டவ் வெடிப்பு-அதனால் சாவு, தூக்குப் போட்டுக்கொண்டு இறந்துவிட்டார்கள் என்று சொல்லி, மிக அதிக அளவில் கொடுமைகளை பெண்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி அந்தப் பெண்கள் படுகிற இத்தகைய இன்னல்களை தடுக்கக்கூடிய அளவுக்கு சட்டங்கள், அதன் விதி முறைகள் இல்லை என்று சொல்லுகிறபோது அவர்கள் மிக அவலமான நிலைமையிலே நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை சொல்லத்தான் வேண்டும்.

திருமணம் என்று வந்தாலே பெண்களைப் பெற்றவர்கள் எல்லாம் மிகப் பெரிய நெருக்கடிக்கு தள்ளப்படுகிற சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். நன்கொடை என்ற பெயராலே வரதட்சணை என்ற பெயராலே மிகப் பெரிய கொடுமைகள் பெண்களுக்கு இழைக்கப்படுகின்றன. அதே போல வேலை வாய்ப்புத் துறை என்று எடுத்துக் கொண்டாலும் சரி, பயிற்சி துறை என்று எடுத்துக் கொண்டாலும் சரி, லஞ்ச லாவண்யங்கள் நாட்டிலே தலை விரித்தாடுகின்றன. வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்த்துத்தான் வேலை தருகிற சூழ்நிலை உருவாகியிருக்கிற காரணத்தினால் ஏழ்மை நிலையிலே இருக்கிற பெண்கள் இந்த அரசால் கொடுக்கப்படக் கூடிய சலுகைகளைப் பெற முடியாத நிலைமைக்குப் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சமுதாயத்தை பேணிக் காப்பதற்கும், அதன் முன்னேற்றத்திற்கும் குழந்தைகளின் நலனும், பெண்களின் நலனும் மிகவும்

சிறப்பாகவும், சீராகவும் காக்கப்பட வேண்டும் என்று இந்தக் கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டிருந்தாலும் நடைமுறையில் பார்க்கும்பொழுது பெண்களின் நிலைமை அவ்வாறு இல்லை. அரசே கூட அப்படிப்பட்ட நிலைமைகளை சில சமயம் உருவாக்குகிறது என்பதற்கு சில உதாரணங்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக இன்றைக்கு ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமானம் என்ற முறையில் வேலை வாய்ப்பு, சம்பளம் மற்றவற்றில் ஒன்றாகவே செய்வதாகச் சொல்கிறோம். ஆனால் இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு வந்திருக்கிற குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தைப் பாருங்கள். நம்முடைய சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அதுவும் கிராமப் பெண்களை நன்கு அறிந்தவர்கள். பெண்கள் காலையிலிருந்து 7 மணி நேரம் குனிந்து கொண்டே நடவு நடவேண்டும். ஏர் உழுதல் மற்ற வேலைகளைச் செய்பவர்களுக்கு 11 ரூபாய் என்று இருக்கிறது. பெண்களுக்கு 8 ரூபாய் என்று இருக்கிறது. இந்தப் பாகுபாடு செய்துவிட்டு, எங்களுடைய நலம் பெண்கள் நலமென்று சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்குமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆண்களும், பெண்களும் எந்த வேலையைச் செய்தாலும் சமமான கூலி தரவேண்டுமென்று உத்தரவாதமான நடவடிக்கையை ஆட்சியும் அரசும் செய்யவேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல கொத்து வேலையை எடுத்துக் கொண்டால், கொத்தனாருக்கு 25 ரூபாய் சம்பளம் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்தக் கொத்தனார் கூட வேலை செய்கிற பெண் தொழிலாளி, கலவை கலந்து கொடுத்தாலும் அல்லது சித்தாள் வேலை பார்த்தாலும், மண் சுமந்தாலும் அவர்களுக்கு ஒரு சம்பளம், இவர்களுக்கு ஒரு சம்பளம் என்ற பாகுபாடு இருக்கிறது. எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் சமூக நலத்துறை, வேலை வாய்ப்புத் துறை இப்படி எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் பெண்களை கீழ் நிலைப் படுத்துகிற நிலையில்தான் இருக்கிறோம். அவர்களின் நிலையை உயர்த்துவதற்கு குறிப்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்திருந்தாலும், இதுபோன்ற அடிப்படை விஷயங்களில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும்.

இந்தப் பெண்களுக்காக கொண்டு வரப்படுகிற சட்டங்கள் சரியாக அமல்படுத்தப்படுகிறதா என்று பார்த்தால் நிச்சயமாக அமல்படுத்தப்படவில்லையென்பதுதான் எங்களுடைய அனுபவம். குறிப்பாக பெண்களை வரதட்சணைக் கொடுமையிலிருந்து காப்பாற்றுவதற்கும், அவர்களுக்கு ஏற்படுகிற பிரச்சனைகளை தீர்ப்பதற்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்கென்றே தனி நீதிமன்றங்களையும், பெண் நீதிபதிகளையும் ஏற்படுத்த வேண்டும். அதேபோல காவல் துறை, மற்ற துறைகளில் அவர்



களுடைய வழக்குகளை விசாரிப்பதற்கு தனியாக பெண் ஊழியர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சமுதாயத்திலே பல நெருக்கடிகள் காரணமாக பெண்கள் கணவனால் கைவிடப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பெண்கள் தங்கள் பெற்றோர்களிடமும் போக முடியவில்லை. இந்த நிலையில் சிக்கித் தவிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் ஒவ்வொரு தாலுகா தலைநகரிலும் ஒரு மையத்தை ஏற்படுத்தி அந்தப் பெண்கள் தங்கள் முறையீடுகளைச் சொல்வதற்கும், ஒரு சில நாட்கள் அங்கு தங்கிச் செல்வதற்கும் வழிவகை செய்யவேண்டும். அதேபோல வீடுகளிலிருந்து ஓடி வருகிறவர்களை பாதுகாக்கக் கூடிய இல்லங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பெண்களுடைய பொருளாதார நிலைமை, சமூக நிலைமை, இவைகளை எல்லாம் பற்றி ஆரய்ச்சி செய்து நல்ல முடிவு காணுவதற்கு சமூக சேவை ஸ்தாபனங்கள் மனோ தத்துவ நிபுணர்கள், வழக்கறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று 1975-ம் வருடத்தில் மத்திய அரசு எல்லா மாநில அரசுகளுக்கும் ஒரு குழு அமைக்க வேண்டுமென்று தகவல் தந்திருந்தாலும் அப்படிப்பட்ட குழு அமைக்கப்பட இல்லை. எனவே அந்தக் குழுவை அரசு உடனடியாக அமைக்க வேண்டும். அப்படி அமைத்து அவர்களுடைய கல்வித் திறன், பொருளாதார நிலை ஆகியவைகளை எல்லாம் ஆய்வு செய்து, அவற்றைப் பற்றி சட்டமன்றத்தில் ஆண்டுதோறும் விவாதிக்கிற சூழ்நிலையை ஏற்படுத்தி, அவர்களுடைய தகுதியை உயர்த்துவதற்கும், பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களுடைய வளர்ச்சி பற்றி ஆராய்வதற்கான ஒரு குழுவை ஏற்படுத்தி அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு பெண்களை கேவலப்படுத்துகிற அளவிற்கு சுவரொட்டிகள், வால்-போஸ்டர்கள், கேசட்டுகள் என்று இப்படி எல்லா வழியிலும் செய்கிறார்கள். அந்த அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. இவற்றை அரசு பரிசிலனை செய்து அப்படிப்பட்ட கேவலமான போஸ்டர்களையும், விளம்பரங்களையும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றைக்கு பெண்களுக்கு இருக்கிற நிலைமைகள் காரணமாக, அவைகளைப் பயன்படுத்தி தமிழகத்திலே நடந்த மிகப் பெரிய கோரமான நிகழ்ச்சியை பத்திரிகையிலே பார்த்தோம்.

ஒரு நடிகா பெண்களுக்கு போதை மருந்துகளைக் கொடுத்து வசப்படுத்தி, நிர்வாண படம் எடுத்ததாகச் சொல்கிறார்கள். இது ஒரு நடிகை மட்டும் செய்யக்கூடிய காரியமா? நான் அப்படி நம்பவில்லை. இதற்குப் பின்னால் உள்ள சக்திகள் முழுவதையும், ஆராய்ந்து அவர்கள் அனைவரையும் தண்டிக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்து, இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–40)

விதவைகளுக்கு, அவர்களுடைய நலனுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒரு உணவகம் என்று சொல்லி, 72 நடத்துவதாகச் சொல்கிறார்கள். இதிலே 25 சதவீதம் மானியம் என்று சொல்கிறார்கள். 75 சதவீதம் அரசாங்க வங்கிகளிலேயிருந்து கடன் அளிப்பதற்கு ஏற்பாடு செய்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். மற்ற ஊரக வளர்ச்சித் திட்டத்திற்காக கொடுக்கக் கூடிய அரசாங்கத்தினுடைய பணத்தை அரசு மானியம் பெறுவதற்காக இதிலே நடவடிக்கை எடுக்கிறார்களே தவிர, உள்ளபடியே தொழில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லை. அதைப்போல இல்லாமல், இதை இன்னும் அதிகரித்து அந்தப் பெண்களுக்குக் கிடைப்பதற்கும், எல்லாத் தாலுக்கா நகரங்களிலேயும், குறைந்தபட்சம் ஒவ்வொரு தாலுக்கா தலைநகரங்களிலேயும் ஒரு உணவகத்தை நடத்துவதற்கான முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சத்துணவு மையத்தைப் பற்றி இதிலே அதிகமாக சொல்லப்பட்டு இருக்கிறது. சத்துணவைப் பற்றிச் சொல்லுகிறபோது, இது குழந்தைகளுக்கு அவசியம் இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்தச் சத்துணவு நிரந்தரமானது என்று இந்தக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லுகிறபோது, அங்கே பணிபுரியக் கூடிய ஊழியர்களுடைய மனோநிலை சரியாக இருந்தால்தான், ஒரு திட்டம் நல்ல முறையில் செயல்பட முடியும். இந்தத் திட்டத்தைப் போட்டு இருக்கிற அரசு, அங்கே அமைப்பாளர்களாக இருக்கின்றவர்களுக்கு 150 ரூபாய் என்றும், ஆயாக்களுக்கு 60 ரூபாய் என்றும் சம்பளமாகத் தருகிறார்கள். இதிலே ஏறத்தாழ 1½ லட்சம் பேர்கள் வேலை செய்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் எல்லாம், கோவை மாநகரத்திலே ஒரு மாநாட்டைக் கூட்டி, அவர்களுடைய கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள். அவர்கள் கேட்பது எல்லாம் எங்களையும் அரசு ஊழியர்களாக அங்கீகாரம் செய்யுங்கள், அதேபோல் எங்களுடைய வேலைக்குப் பாதுகாப்பு அளியுங்கள், எங்களுடைய பணியைப் பாதுகாக்கவேண்டும் என்று





சொல்கிறார்கள். இன்றைக்கு சத்துணவு மையங்களில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அதிலே இருக்கிற பெண்கள் மிரட்டப்படுகிறார்கள். எப்படி சமூக விரோதிகளால் மிரட்டப்படுகிறார்கள் என்று விவரங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். எனவே அப்படிப்பட்ட மிரட்டலில் இருந்து பாதுகாப்பும், அரசு ஊழியர்களாக அவர்களுக்கு அங்கீகாரமும், அவர்களுக்குப் போதுமான சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று அங்கே இருக்கக் கூடியவர்கள் எல்லாம் நன்றாகச் சமைக்கத் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். அங்கே சத்துணவு சாப்பிடக் கூடிய நிலைமையை நீங்கள் பார்க்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். சத்துணவைப் பற்றி வானளாவப் புகழ்ந்து பேசுகிறீர்கள். அதை நான் குறை கூறவில்லை. இருந்தாலும் சொல்கிறேன். திருவாரூரிலே வடபாதி மங்கலம், சோமசுந்தரம் ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் 1,754 மாணவர்கள் படிக்கிறார்கள். அங்கே சத்துணவு சாப்பிடுவது 450 பேர்கள்தான். நானே அங்கே சென்று விசாரிக்கிறபோது, ஏன் நீங்கள் எல்லோரும் சாப்பிட வேண்டியதுதானே என்று கேட்கிறபோது, அவர்கள் சொல்கிறார்கள், அங்கே சமைக்கக் கூடிய அரிசி, பருப்பு, அதனுடைய காய்கறி எல்லாம் எங்களுக்கு ருசியாக இல்லை, எனவே நாங்கள் சாப்பிடுவதைவிட பட்டினியாக இருக்கலாம் என்று சொல்லி, இப்போது 450 பேர்தான் சாப்பிடுகிறார்கள். அப்படி ஊட்டச்சத்து கொடுக்கக்கூடிய அந்தக் காரியத்திற்கு நன்றாக சமைக்கத் தெரிந்த சமையல் வல்லுநர்களைப் போடவேண்டும். அல்லது அவர்களுக்கு சமையல் செய்வதற்கு டிரெயினிங் கொடுத்து, அந்த ஊழியர்களை நியமிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அப்படிச் செய்வதோடுமட்டுமல்லாமல், அதிலே பணி புரியக்கூடிய அந்தப் பெண்கள் எல்லாம் எந்தவித மிரட்டலுக்கும் ஆளாகாமல், எந்தவிதமான உருட்டலுக்கும் ஆளாகாமல் யாருடைய நிர்ப்பந்தத்திற்கும் ஆளாகாமல் அவர்கள் வேலைகளை அவர்கள் சிறப்பாகச் செய்வதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனவே அவர்களுக்கு அரசாங்க ஊழியர்களைப் போல அந்தஸ்து கொடுப்பதற்கான காரியத்தைக் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே குழந்தைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ் நாட்டிலே 14வயதுக்கு கீழே உள்ள குழந்தைகளிடம் யாரும் வேலை வாங்கக்கூடாது என்று இருந்தாலும், அது தீப்பெட்டித் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, ஹோட்டலாக இருந்தாலும் சரி, அச்சுக்கூடமாக இருந்தாலும் சரி, அல்லது வீட்டு வேலைகளாக இருந்தாலும் சரி, இன்றைக்கு குழந்தைகள் வேலை செய்யவில்லை என்று அரசாங்கம் ஒப்புக்கொள்கிறதா? அல்லது இதைப்பற்றி ஆய்ந்திருக்கிறதா? எனவே

சென்னை 600 008.
134107

சமுதாயத்தில் இருக்கிற வறுமையின் காரணமாக
குழந்தைகளின் உழைப்பை சுரண்டக் கூடிய ஒரு சூழ்நிலை
சமுதாயத்திலே இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது. அவைகளை
எல்லாம் தடுத்து, அவர்களுக்கு எல்லாம் வாய்ப்பு அளித்து,
அவர்கள் எல்லாம் படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கக் கூடிய
முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிக் குழந்தைகள்
வேலை செய்தாலும், அவர்களுக்குப் போதுமான சம்பளம்
கொடுப்பதற்கு இல்லை. எனவே அந்த நிலைமையை மாற்ற
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் முதியோர் உதவித் தொகை பற்றி சொல்
கிறார்கள். ஆதரவு அற்ற முதியோர்கள் உடல் நலம் அற்ற
முதியோர்கள். ஆதரவு அற்ற விதவைகள், ஆதரவு அற்ற
விவசாயத் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்
என்ற வகையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இவர்களுக்கு
35 ரூபாய் மானியத் தொகை வழங்கப்படுகிறது. வேட்டி, சேலை
வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். நான் இன்றைக்கு
தாலுக்காக்களில் பார்க்கும்போது என்னுடைய தொகுதியில் சில
கிராமங்களில் போய் பார்க்கும்போது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு
தான் கொடுக்கப்படுகிறது. குறிப்பாக திருவாரூர் தாலுக்காவில்
500 பேருக்குதான் கொடுக்கிறார்கள். தகுதி வாய்ந்தவர்கள்
அதிகமானபேர் மனு செய்கிறார்கள். ஆனால் மனு செய்த
அவ்வளவு பேர்களும் தகுதி பெற்றவர்கள் தான், வயதானவர்கள்
தான். ஆனால் சிலருக்குத்தான் கொடுக்கப்படுகிறது. பலருக்கு
கொடுக்கவில்லை. அப்படி கொடுக்கப்படுகின்றபோது வாங்கிச்
சாப்பிடுகிறவர்களைப் பார்த்து வாங்க முடியாதவர்களின்
நிலைமை இன்றைக்கு மிகவும் மோசமாக இருக்கிறது. சிக்கலாக
இருக்கிறது. பத்திரிகையில் விளம்பரம் வருகிறது, ஆதரவு அற்ற
அனைவருக்கும் உடை, உணவு, பணம் தரப்படுகிறது என்று
வருகிறது. ஆனால் பலபேருக்கு கொடுக்கவில்லை. நாங்கள்
எல்லாம் தொகுதியில் போய் பணி செய்கின்றபோது மிகப்பெரிய
சங்கடங்களை அனுபவிக்கிறோம். எனவே தகுதி உடைய மனு
செய்த அத்தனை பேருக்கும் இந்த உதவித் தொகையை கொடுப்
பதற்கு வழி வகை செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த மகளிர் மன்றங்களை எல்லாம் பதிவு செய்து
3 ஆண்டுகளுக்குப் பிறகு தான் அவர்களுக்கு இந்த மானியத்தை
இந்தத் துறையின் மூலம் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள்.
குறிப்பாக கொரடாச்சேரி ஒன்றியம் காவலக்குடி கிராமத்தில்
இருக்கின்ற வெண்ணிலா மகளிர் மன்றம் 30–6–84-ல் பதிவு
செய்தார்கள். அங்கே நாங்கள் எல்லாம் சமூகநலத் துறைக்கு
எழுதினால் 3 வருடம் ஆனால்தான் உங்களுக்கு உதவி செய்யப்
படும் என்று சொல்கிறார்கள். 30 பெண்கள் கொண்ட மன்றம்



ஊரில் உள்ள பெரியவர்கள் எல்லாம் சேர்ந்து அது அமைக்கப்
பட்டு இருக்கிறது. அது சிறப்பாக செயல்படுகிறது. அவர்கள்
தையல் பயிற்சி எல்லாம் கொடுக்கிறார்கள். அதில் 24 பேர்
பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அதை அங்கீகாரம் செய்ய
மாட்டேன் என்கிறார்கள். உடன் அம்மன்றத்தை அங்கீகரித்து
உதவி செய்யவேண்டும். என்றைக்கு ஒரு மன்றத்தை ஆரம்பித்து
பதிவு செய்கிறார்களோ அன்றைக்கு அவைகளுக்கு எல்லாம்
அங்கீகாரம் கொடுத்து அரசு சலுகைகள் கிடைப்பதற்கு ஏற்பாடு
செய்யவேண்டும்.

அதேபோல் விழி இழந்தவர்களுக்கு ஒரு பள்ளி திருவாரூரில்
இருந்தது. என்ன காரணத்தாலோ அதை தஞ்சைக்கு மாற்றுவ
தாக சொல்கிறார்கள். தயவு செய்து அந்தப் பகுதியில் உள்ள
விழி இழந்தவர்கள் எல்லாம் அங்கே இருக்கவேண்டும் என்று சொல்
கிறார்கள். அந்த வகையில் திருவாரூரிலே அந்த பள்ளி
இருப்பதற்கான சூழ்நிலைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
உருவாக்க வேண்டும் என்றும் அதிகாரிகளும் அதற்கு வேண்டிய
உத்தரவுகளை போடவேண்டும் என்றும் கேட்டு வாய்ப்புக்கு நன்றி
தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லமுத்து அவர்கள்
பேசுகின்றபோது ஏதோ ஒரு பள்ளியில் சென்று பார்த்ததாகவும்,
அங்கே 1,300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிப்பதாகவும், அதில்
400 பேர்கள் மட்டும் தான் சத்துணவு சாப்பிடுவதாகவும் அதற்கு
காரணம் சத்துணவு போடுவதில் ஏதோ கோளாறு என்றும்
சொன்னார்கள். அரசு சத்துணவு எப்படித் தயாரிக்க வேண்டும்
என்ற வழி முறைகளை ஏற்படுத்தி அந்த வழி முறைகளின்படி
தான் சத்துணவு என்று நிர்ணயித்து போடுகிறதே தவிர அவர்கள்
அவர்கள் டேஸ்ட்டுக்கு ஏற்ப தயாரித்துப் போடுவது அல்ல
என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நான் பல்வேறு சத்துணவுக்
கூடங்களை சென்று பார்த்து இருக்கிறேன். சென்ற இடங்களில்
ஒரு வேளை குழந்தைகளோடு உட்கார்ந்து சாப்பிட்டும் இருக்
கிறேன். சத்துணவு மிக சிறப்பாக இருப்பதாக அனைவருமே
பாராட்டுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பார்வைக்கு மட்டும்
இப்படி இருப்பது கவலை அளிப்பதாக இருக்கிறது.

**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, காலை முதல் மாலைதொட்டு கண இரவு விடிய மட்டும்
ஏழை எளியவர்கள் வாழ்வு உயர எந்நாளும் உழைத்து வரும்
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பொன் நகர்
ஆட்சியில் சமூக நலனுக்காக கிட்டத்தட்ட 68 கோடி ரூபாய்
ஒதுக்கி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு மகளிர்
நலம், குழந்தைகள் நலம், ஊனம் உற்றவர்கள் நலம், தமிழ்நாடு
சமூகநல வாரியம், முதியோர் உதவித் தொகை, சீர்திருத்தப்

பள்ளி போன்ற பல்வேறு துறையின் வாயிலாக இந்த 68 கோடி ரூபாயை செலவு செய்வதற்காக ஒரு மானியக் கோரிக்கையினை இன்றைய தினம் எங்களுடைய புரட்சித் தலைவருடைய போர்ப் படை தளபதியில் ஒருவராக இருக்கின்ற மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ரூபாயைக் கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு குத்தாலம் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற திட்டங்களில் சத்துணவுத் திட்டம் மிகப்பெரிய திட்டம் ஆகும். காந்தியார் அவர்கள் ஒரு முறை ஒரு பத்திரிகை நிருபருக்கு பேட்டி அளிக்கும்போது ஒன்றைச் சொன்னார்கள்.

(முற்பகல் 12—50)

'ஹம் ஏக் பாரத மாதா கி பச்சே ஹை; ஹம் பாயீ, பாயீ ஹை; ஹம் கோ சோட்டா, ஹம் கோ படா நஹீன் ஹை' நாம் எல்லோரும் பாரதத் தாயினுடைய குழந்தைகள்; நாம் எல்லோரும் சகோதரர்கள்; நமக்குள்ளே ஏற்றத் தாழ்வு கிடையாது என்ற நிலைமை என்று வருகிறதோ, அன்று தான் இந்த நாடு சுதந்திரம் பெற்றதாக ஆகும் என்று அவர்கள் சொன்னார்கள்.

அந்த அளவுக்கு ஒரு ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள், எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும், அந்தத் திட்டம் உலகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய அளவுக்கு அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை எடுத்துச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு: 'A man who can discharge his duties, which he has taken up, honestly and honourably to his best of his ability, becomes a great man in the society' என்று சொல்வார்கள். ஒரு மனிதன் தான் எடுத்துக்கொள்கிற கடமையை தனி மனித ஒழுக்கத்தோடு, தன்னலம் அற்ற தொண்டாற்றி, தன்னுடைய திறமை பூராவையும் தன்னுடைய கடமைகளுக்காகச் செயல்படுத்துகிறபோது அதற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறபோது, அவன் சமுதாயத்திலே பெரிய மனிதன் ஆகிறான் என்பது பொருள். அதற்கேற்ப, எந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும், அந்தத் திட்டத்தில் தனிக் கவனம் செலுத்தி, அதன் மூலமாக, இன்றைய தினம் உலகமே வியக்கும் அளவுக்கு உலகத்திற்கே வழிகாட்டியாக புரட்சித் தலைவர் அவர்



களுடைய அரசு செயலாற்றி வருகிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவன்போடு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதன் வாயிலாகத் தான், தமிழகத்திலே இருக்கிற கோடிக் கணக்கான தாய்மார்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சத்துணவுத் திட்டத்தைப் புரிந்துகொள்ளாதவர்களும், பொறாமைப் படுபவர்களும் இந்தத் திட்டத்தைப் பார்த்து, தட்டு தூக்குகிற திட்டம், பிச்சைக்காரத் திட்டம் என்றெல்லாம் கேவலமாகவும், கிண்டலாகவும் பேசிய ஒரு காலமும் இருந்தது.

புரட்சித் தலைவர் அவர்கள் அந்தத் திட்டத்தை அறிவித்த நேரத்தில், செய்து காட்ட முடியாதவர்கள், செய்வதற்குத் தெம்பற்றவர்கள் இந்தத் திட்டத்தைப் பார்த்து, எம்.ஜி.ஆர். அவர்கள் ஏதோ சினிமா என்று நினைத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை அறிவித்துவிட்டார் என்றார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலமாக இன்றைய தினம் கோடிக் கணக்கான குழந்தைகளுக்கு உணவு அளிக்க முடியுமா என்று கேவலமாக எள்ளி நகையாடிய நேரத்தில், புரட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்; நான் பச்சிளம் குழந்தையாக பசி, பசி என்று பசியின் கொடுமையாலே கதறிய நேரத்தில், என்னுடைய தாய் பக்கத்து வீடுகளுக்கு சென்று இரவலாக அரிசியை வாங்கி வந்து, அந்த அரிசியைச் சமைத்து, எனக்கு உணவு அளித்த காட்சியை நான் பார்த்திருக்கிறேன்.

என்னுடைய தாயைப் போல தமிழகத்திலே கோடிக்கணக்கான தாய்மார்கள் இருக்கிறார்கள். என்னுடைய தாய்க்கு ஏற்பட்ட அவல நிலைமை இனி தமிழகத்தில் நான் முதலமைச்சராக இருக்கிறவரையில் எந்தத் தாய்க்கும் ஏற்பட விடமாட்டேன்; அப்படி அந்தத் திட்டத்தை நான் செயல்படுத்த முடியவில்லை என்று சொன்னால், ஆட்சிப் பொறுப்பிலேயிருந்து வெளியேறுவதற்கு தயாராக இருக்கிறேன் என்பதைக்கூறி எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

இந்தத் திட்டம் ஒரு சாதாரணத் திட்டம் அல்ல. முழுமையாக தாய்மார்கள்—குறிப்பாக கிராமங்களிலே இருக்கிற தாய்மார்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற ஒரு திட்டம் என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சாதாரணமாக கிராமத்தில் இருக்கிற தாய்மார்கள், தங்களுடைய 2 வயது, 3 வயது குழந்தைகளைக் காலையிலே பால் கொடுத்து விட்டு, வீட்டிலே விட்டுவிட்டுப் போவார்கள். ஒரு சில

தாய்மார்கள், 5-வது, 6-வது பள்ளியிலே படிக்கின்ற மாணவக் குழந்தைகளை அழைத்து, அந்த 4 வயது பிள்ளையை மாணவனிடம் ஒப்படைத்து விட்டு அவர்கள் நடவு வேலைக்கு செல்வார்கள்.

அப்படி நடவு வேலைக்குச் செல்கிறபோது, அங்கே நடவு நட்டுக் கொண்டிருக்கிறபோது, அந்தத் தாய்மார்களுக்குத் தங்களுடைய குழந்தைகள் ஞாபகம் வந்துவிடும். வீட்டுக்கு எதிரிலே கிணறு இருக்கிறதே, குழந்தைகள் என்ன ஆயிற்றோ என்று தாங்கள் நடவுகூட நடமுடியாமல் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த காட்சியெல்லாம் தமிழகத்தில், அனைத்துக் கிராமங்களிலும் இருந்தது.

10, 11 மணி ஆகிவிட்டால் அந்தப் பச்சிளங் குழந்தை அழ ஆரம்பிக்கும். அந்த பச்சிளங் குழந்தையை அந்த 5-வது 6-வது படிக்கின்ற அந்தப் பையன் தட்டித் தட்டிக் கொடுத்துப் பார்ப்பான். 12 மணிக்குப் பிறகு, இருவருமே சேர்ந்து ஒருவருக்கொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுது, அங்கே பசியின் கொடுமையாலே அந்த இரண்டு குழந்தைகளும் மயங்கி அப்படியே தூங்கிவிடும் கொடுமை இந்த நாட்டிலே இருந்தது.

அப்படிப்பட்ட கொடுமைகளுக்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டும். அங்கே வயல்களிலே வேலை செய்கின்ற தாய்மார்களுடைய கண்ணீரைத் துடைக்கவேண்டும் என்பதற்காகத் தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இப்படிப்பட்ட ஒரு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதன் மூலம் கிட்டத்தட்ட 28,106 சத்துணவு மையங்களை புரட்சித் தலைவருடைய அரசு துவக்கி இருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மலை ஜாதியினர் 5,383 பேரும், விதவைகள் 1,083 பேரும், ஆதரவற்ற மகளிர் 1,173 பேரும், இப்படி ஏசப்பட்ட பேர், ஒட்டுமொத்தமாக ஒரு 56 ஆயிரம் பேர் வேலை செய்யக்கூடிய அளவுக்கு புரட்சித் தலைவருடைய அரசு திட்டம் தீட்டிச் செயல்பட்டு வருகிறது. அதிலே தாழ்த்தப்பட்டோர், விதவைகள், ஆதரவற்றோர் ஆகியவர்கள் உதவியாளர்களாகவும் அமைப்பாளர்களாகவும் ஒட்டுமொத்தமாக கிட்டத்தட்ட 84,000 பேர்கள் என்ற அளவிற்குத் தாய்மார்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் அளவிற்கு புரட்சித் தலைவரவர்களின் இந்தச் சீரிய திட்டம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திட்டம் அறுசுவை உண்டியோடு சாப்பிடுகின்றவர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவேளை



உணவுகூட கிடைக்காமல், வாடி வதங்கிக் கொண்டிருக்கின்ற ஏழை எளிய மக்களின் குழந்தைகளுக்காக, வறுமைக் கோடு என்பது தங்களுக்குத்தான் சொந்தம் என்று உறவாடிக் கொண் டிருக்கின்ற ஏழ்மை வாழ்க்கையிலே அடிபட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற பாட்டாளி வர்க்கத்திற்காகத்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றதே தவிர, அந்த ஏழைக் குழந்தைகளுக்காகத்தான் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக் கின்றதே தவிர, வசதி படைத்தவர்களுக்காக இந்தத் திட்டம் கொண்டு வரப்படவில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியிலே தான் ஊனமுற்றிருக்கும் முதியோர்களுக்கும், விதவைகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. ஆதரவற்ற முதியோர் களுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 1,42,729 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆணை வழங்கப் பட்டுள்ளது. அதைப்போல, ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர் களுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 17,406 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. ஆதரவற்ற விதவைகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 79,826 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. ஆதரவற்ற விவசாயிகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 40,527 விவசாயி கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற அரசு ஆணையிட்டுள்ளது. அதைப்போன்று முதியோர் உதவித் தொகையை கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு விஸ்தரித்தல் திட்டத்தின் கீழ் அவர் களுக்கும் விஸ்தரிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இவர்களெல் லாம் இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியிலேதான் உதவித் தொகைகளைப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள்.

பிள்ளையை பெற்றதால்தான் பலபேர் கண்ணீர் விட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு பாடல்கூட உண்டு, "பிள்ளை யைப் பெற்றால் கண்ணீரு; தென்னையைப் பெற்றால் இளநீரு" என்று. அதைப்போல நிலைமைதான் நாங்கள் சிலபல இடங் களுக்குச் செல்லுகின்ற நேரத்தில் சொல்லப்படுகிறது. நான் செல்லுகின்றபொழுது சில முதியவர்கள் என்னிடத்திலே மனுவைக் கொடுத்துவிட்டு, "எனக்கு நீங்கள் உதவித் தொகை பெற்றுத் தாருங்கள், எனக்கு தள்ளாத வயதாகிவிட்டது; 70 வயதுக்குமேல் ஆகிறது" என்று சொல்கிறார்கள். அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து கேட்டேன், "உங்களுக்குக் குழந்தைகள் இருக்கின்றனவா, பிள்ளைகள் இருக்கின்றார்களா" என்று. அதற்கு அவர்கள் சொல்வார்கள், "பிள்ளை இருக்கிறது அப்படி பிள்ளையைப் பெற்ற காரணத்தினால்தான் நான் இன்றைக்கு இங்கே பசியோடு, தள்ளாடிய உடலோடு இருக்கிறேன்,

பிள்ளையைப் பெறாவிட்டால் நாங்கள் பெறாத பிள்ளையாக இருக்கின்ற புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எனக்கு உணவு அளித்திருப்பார்கள்" என்று சொல்லி, பிள்ளையைப் பெற்ற தாகக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிள்ளையைப் பெற்றிருந்தாலும், அந்த பிள்ளைகள் அவர்களைக் கைவிட்டு விட்டிருந்தால், அப்படிப்பட்ட முதியோர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்களின் மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களை நான்கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியிலே இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொரு கருத்தையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

அதாவது, சென்ற ஆண்டில் மாணவர்களைப் பொறுத்த வரையில் 90 விழுக்காடு வருகை தந்திருந்தால் மட்டுமே அவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் தரப்பட வேண்டுமென்ற ஒரு உத்தரவு இருக்கிறது. அந்த உத்தரவு ஒரு சிறப்பான உத்தரவுதான். ஆனால் அந்த உத்தரவின் மூலமாக இந்த ஆண்டில் நூற்றுக்கு ஐந்து விழுக்காட்டைச் சேர்ந்தவர்கள் கூட அந்த இலவச புத்தகங்களைப் பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, இங்கே நான் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் கவனத்திற்கு இதை தெரியப்படுத்திக் கொள்கிறேன். சென்ற ஆண்டில் 60 விழுக்காடு அளவே பள்ளிக்கூடத்திற்கு வருகை தந்திருந்தாலும் கூட அவர்களுக்கும் இலவசப் புத்தகம் தரப்பட வேண்டுமென்ற உத்தரவை இங்கே பிறப்பிக்க வேண்டுமென்று நான் இந்தச் சபையின் மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்காகக் காரணம் என்னவென்றால், எங்கள் பகுதியில் இப்படிப் புத்தகப்பிரிவுக்காக நிறைய புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன பள்ளிகளுக்கு. ஆனால், இந்தத் தகுதியின் அடிப்படையில் பார்க்கின்றபொழுது மாணவர்களுக்கு அந்தப் புத்தகங்கள் கொடுக்சப்பட முடியாத சூழ்நிலையிலே இருக்கிறது என்பதை நான் மிகமிகப் பணிவன் போடு இந்தச் சபைக்குத் தெரிவித்து, வாய்ப்பு தந்த பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1-00)

*திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் சம்மந்தமான மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றியைத்





தெரிவித்துக் கொள்கிறேன். ஜனதா கட்சியின் சார்பாக என்னு
டைய கருத்துக்களை எடுத்து வைக்கிறேன். சமூகநலத் துறை
பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 60 பக்கங்கள் கொண்ட
விளக்கக்குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது மிக நல்ல முறை
யிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பல திட்டங்கள்
சொல்லப்பட்டிருக்கிற அளவிலே, நல்லமுறையிலே நடைபெற
வில்லையென்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டியிருயிக்கிறது.

அதே போல், விளம்பரமாகவும் இருக்கிறதோ என்று கூட
நான் ஐயப்படுகிறேன். காரணம், சட்டமன்றத்திலே விவாதிக்கப்
படுவதற்கு முன்பாக, எவ்விதத்திலும் வெளியிடக் கூடாது என்ற
அறிவிப்பு கொடுக்கப்பட்டு, நமக்குப் புத்தகம் கொடுக்கப்பட்
டிருக்கிறது. ஆனால், சென்ற 27-6-1985 அன்று பொதுப்
பணித் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையில்
விவாதத்திற்குப் பதிலளிப்பதற்கு முன்பாகவே அன்று இரவு
வானொலியிலே 6-30 மணி செய்தியிலே மாண்புமிகு பொதுப்
பணித் துறை அமைச்சர் அவர்கள் இன்ன, இன்ன வகையில்
விவாதத்திற்குப் பதில் சொன்னார்கள் என்று அறிவிக்கிறார்கள்.
அப்படியென்றால், இந்தப் புத்தகம் அதற்கு முன்பாகவே
வானொலிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கமே, அதை
முன்பாகவே வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறதோ என்று தெரிய
வில்லை. அதை மறுநாள் காலை 6-50 நியூசிலே சொல்லி இருக்
கலாம். ஆனால், முன்பாகவே, 6-30 மணி நியூசிலே சொல்லப்
பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர்
அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்
தினைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். காலை நம்முடைய மானி
யக் கோரிக்கையின் மீது விவாதம் துவங்கியவுடன் நான் உரை
யாற்ற வேண்டிய கருத்துக்கள் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்
குத் தரப்பட்டிருக்கிறது. அச்சடித்து தரப்பட்ட அந்த கருத்
துக்கள் எல்லாம் ஏற்கனவே என்னால் உரையாற்றப்பட்டதாகக்
கருதப்பட்டு, அவைக் குறிப்பிலே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று
வேண்டுகோளையும் நாங்கள் வைக்கிறோம். அந்தக் கருத்தினை
நீங்களும் ஏற்று, அவைக் குறிப்பிலே ஏற்றியிருக்கிறீர்கள்.
இன்றும் அதேபோல் அவைக்குறிப்பிலே ஏற்றியிருக்கிறீக்ர்கள்.
அவைக்குறிப்பிலே ஏற்றப்பட்ட அந்த கருத்துக்கள், பத்திரிகைகள்
வாயிலாகவோ அல்லது வேறு வானொலி வாயிலாகவே வெளி
உலகத்திற்கு எடுத்துச் சொல்லப்படுவது என்பது வழக்கம்.

அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் அது வெளி உலகத்
திற்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, தவறான குற்றச்
சாட்டை உறுப்பினர் அவர்கள் சொன்னால், அது முறையாக
இருக்காது. இன்னும் ஒருபடி மேலாகப் போய்ச் சொல்ல வேண்டு
மென்றால், அன்றையதினம் மாலையிலே மானியக்கோரிக்கை

நடைபெற்றது. அன்று சரியாக 3-40 மணிக்கு நான் இந்த வளாகத்திலே இருந்தேன். 3-45 மணிக்கு இருக்கையிலே இருந்தேன். ஆனால், அது வானொலியாக இருந்தாலும், பத்திரிகையாக இருந்தாலும், என்னுடைய வருகையைப் பொறுத்தமட்டிலும் காலம் கடந்து வந்த அமைச்சர் என்று தலைப்பே போட்டு, 4-03 க்குத்தான் சம்பந்தப்பட்ட அமைச்சரே வந்தார் என்ற தவறான குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அதையெல்லாம் பெரிது படுத்திப் பேச வேண்டியது அவசியந்தானா தேவைதானா என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. எ.எஸ்.ஏ ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது ரேடியோவிலே முன்னதாகவே சொல்லி இருக்கிறார்கள் என்பதுதான் குறை. விவாதத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்பாகவே வானொலியில் சொல்லிவிட்டார்கள் என்பது நான் சொன்னது. அமைச்சர் அவர்கள் விளக்கமாகவே சொல்லிவிட்டார்கள், முன்பாகவே அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டேன் என்று. அந்தத் தீர்மானத்தை விவாதிப்பதற்கு முன்பாக, வெளியிடக் கூடாது என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காலையிலேயே இங்கே அது ரெக்கார்ட் ஆகிவிடுகிறது, சயந்திரம் வெளியே வந்து விடுகிறது.

**திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் :** உங்கள் விளக்கத்திற்கு நன்றி. இந்த மானியக் கோரிக்கையிலே கொடுத்திருக்கிற, பல பெண்களுக்கான திட்டங்களிலே, 100 பேர்கள், 200 பேர்கள்தான் இந்த மாநிலம் முழுவதும் பயன் பெற்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பனை பொருள் தொழில், எழுதுபொருள் உற்பத்தி, பட்டு நூல் எடுத்தல், இன்னும் தையல் தொழில், கூட்டுறவுச் சங்கங்கள், இப்படிப் பல பிரச்னைகளிலே இந்த அரசாங்கத்தினுடைய சமூக நலத் துறை 100, 200 பேர்களுக்குத்தான் வேலை கொடுப்பதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே எழுதியிருக்கிறார்கள்.

தீப்பெட்டி தொழிற்சாலைப் பற்றி அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், பல்வேறு காரணங்களுக்காகப் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்று. இப்போது 40 தொழிற்சாலைகள்தான் நடப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இந்தத் தீப்பெட்டி தொழிற்சாலையானது அவர்கள் அமைத்திருக்கும் மாவட்டம் சம்பந்தப்பட்ட மாவட்டம் அல்ல என்று நான் நினைக்கிறேன். அது காமராஜ் மாவட்டத்திலோ, மற்றும் விருதுநகர் தவிர, சிவகாசி, சாத்தூர் போன்ற பகுதிகளில், அமைத்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும் என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால், அங்குதான் பல்லாயிரக் கணக்கான தீப்பெட்டி தொழிற்சாலைகள் இருக்கின்றன. லட்சக்



கணக்கான மக்கள் அத்தொழிலில் ஈடுபட்டு, தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, பணிபுரியும் பெண்களுக்கு விடுதிகள் கட்டிக் கொடுப்பதற்குத் தனியார்களுக்கு வாய்ப்புகொடுப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. 15% மாநில அரசும், 75% மத்திய அரசும் கொடுப்பதாக இருக்கிறது. பணி புரியும் பெண்களுக்கு இடத்தை அந்த டிரஸ்டே அளிக்குமா, அல்லது அரசாங்கத்தால் அனுப்பப்படுகிற பெண்களுக்குத்தான் இடம் கொடுக்கப்படுமா என்ற விவரம் இல்லை. அந்த விவரத்தை நான் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், மகளிர் மன்றங்கள் செயல்படுவது குறித்தும் இதிலே இருக்கிறது. குழந்தைகள் பாதுகாப்பு இல்லம் என்று இருக்கிறது; பிச்சைக்காரர்கள் பாதுகாப்பு இல்லம் என்று இருக்கிறது. குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்குத்தான் அங்கு வாய்ப்பு இருப்பதாக, இந்தப் புத்தகத்திலே அப்படிப்பட்ட வாசகம் இருக்கிறது.

அது எனக்குப் புரியவில்லை. குற்றவாளி என்று தீர்ப்பு சொன்னால்தான் அங்கே கொண்டு செல்வார்களா அல்லது மதுரை, பழனி, திருப்பரங்குன்றம் போன்ற இடங்களில் வரிசையாக இருப்பவர்களை எல்லாம் பிடித்துக் கொண்டு போவார்களா என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று தமிழ்நாட்டில் பெண்களுக்கு ஏற்படுகின்ற அனைத்துப் பிரச்சனைகளையும் விசாரிக்க, முடிவு செய்ய மாவட்டத் தலைநகர்களில் தேவையான அமைப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்கிற அமைப்புகளால் பலன் ஏற்பட வழியில்லை.

குழந்தைகள் சத்துணவு பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஏறத்தாழ 23 இலட்சம் குழந்தைகள், 3 இலட்சம் முதியோர் ஆக மொத்தம் 26 இலட்சம் பேர்களுக்கு சத்துணவு பயன்படுவதாகச் சொன்னார்கள். மிக்க மகிழ்ச்சி. ஆனால் எந்த முறையில் இது செயல்படுகிறது என்று விளக்கமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. 2 வயது முதல் 4 வயதுவரை உள்ள குழந்தைகள் காப்பகங்களிலும் முதியோர் பென்ஷன் வாங்குகிற அத்தனை முதியவர்களுக்கும் அளிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு ஊரிலே இந்த நடைமுறை இல்லை, ஒரு ஊரிலே இருக்கிறது. இப்படி சில இடங்களில் இருக்கிறது, சில இடங்களில் இல்லை.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1985 ஜூலை 1

இந்தச் சத்துணவு சாப்பிட குழந்தைகளை ஒரு மைல், இரண்டு மைல் தூரத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படி என்றால் அந்தக் குழந்தைகளை எடுத்துச் செல்லுகின்ற தாய்மார்களுக்கு சத்துணவு உண்டா என்றால் இல்லை.

குழந்தைகளுக்கு ஒழுங்காகச் சாப்பாடு போடப்படுகிறதா என்று சத்துணவு மைய பொறுப்பாளர்களைக் கேட்டால் சரியாக நல்லமுறையில் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஊர் மக்களைக் கேட்டால் முறையாகச் சாப்பாடு போடவில்லை என்று சொல்கிறார்கள். சரியாகச் சாப்பாடு போடவில்லை என்று ஊர் மக்கள் சொல்கிறார்களே என்று பொறுப்பாளர்களைக் கேட்டால் குடும்பநல அறுவை சிகிச்சைத் திட்டத்திற்கு மாதம் ஒரு ஆள் பிடித்துக்கொண்டு போகவேண்டிய கட்டாயம் எங்களுக்கு இருக்கிறது; ஆதற்கு 250 ரூபாய் தேவைப்படுகிறது; எங்களுக்கு 150 ரூபாய்தான் சம்பளம், நாங்கள் என்ன செய்வது; இதிலிருந்துதான் சரிகட்ட வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். சத்துணவு மையப் பொறுப்பாளர்கள் ஆள் பிடித்துச் செல்ல வேண்டும் என்ற நிலையை மாற்ற வேண்டும். மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் கூட இதுபற்றி கூறியிருக்கிறார். சத்துணவு போடும் பணியை அவர்கள் முறையாக, ஒழுங்காகச் செய்ய வேண்டும். அதற்கு தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி முதியோருக்கு மாதம் 35 ரூபாய் கொடுக்கப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு 50 ரூபாய் கொடுக்கிறார்கள். ஒரு நேரத்திற்கு வசதியாகச் சாப்பிட வேண்டுமென்றால் 25 ரூபாய், 30 ரூபாய் ஆகிறது. ஆனால் முதியோருக்கு ஒரு மாதத்திற்குதான் 35 ரூபாய் கொடுக்கிறார்கள். இது மிகக் குறைவாக இருக்கிறது. குறைந்தது மாதம் 100 ரூபாயாவது கொடுக்கவேண்டும்.

இந்த முதியோர் பென்ஷன் கடந்த மூன்று மாதங்களாகக் கொடுக்கப்படவில்லை என்று புகார் வந்திருக்கிறது. ஏன் கொடுக்கப்படவில்லை எள்று தெரியவில்லை. உடனடியாக எல்லோருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முதியோர் பென்ஷன் எந்த அடிப்படையில் வழங்குகிறார்கள் என்று தெரியவில்லை. தகுதி படைத்த எல்லோருக்கும் வழங்குகிறார்களா அல்லது தகுதி படைத்தவர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மட்டும் வழங்கி வந்து, அவர்களில் யாராவது இறந்து விட்டால் அந்த இடத்தில் வேறு நபர்களை சேர்த்துக்கொள்கிறார்களா எள்று தெரியவில்லை. எல்லோருக்கும் சாப்பாடு கொடுக்கப்படுகிறது; ஆனால் எல்லோருக்கும் 35 ரூபாய் கொடுக்கப்படவில்லை. இதை எல்லாம் சீர்படுத்தி, முறையாக



1985 ஜூலை 1] [திரு. ஏ. எஸ். ஏ, ஆறுமுகம்]

அப்ளிகேஷன் வந்தால் அதை எல்லாம் ஒழுங்காக விசாரித்து, அப்ளிகேஷன் வந்த ஒரு மாதத்திற்குள் பென்ஷன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியானால்தான் அந்த முதியோர் வாழ்க்கை ஓரளவுக்கு செம்மைப்படும்.

முதியோர் பென்ஷன் வழங்க 65 வயது என்று வைத்திருக்கிறார்கள். 58 வயதில் ரிட்டயர்மெண்ட் என்று அரசாங்கம் விதி வைத்திருக்கிறது. அதனால் 58 அல்லது 60 வயதிலாவது முதியோர் பென்ஷன் வழங்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல. வயது வரம்பு சான்றிதழ் பெறுவதில் முதியோருக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது; முறையாகக் கிடைப்பதில்லை. ஆகவே, ஆங்காங்கே இருக்கிற வில்லேஜ் ஆபீசரிடம் அல்லது சட்டமன்ற உறுப்பினர்களிடம் வயது பற்றிய சான்றிதழ் பெற்றால் போதும் என்று சொல்லி, அந்த வகையில் சான்றிதழ் பெற்று வருகின்ற முதியோருக்கு பென்ஷன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

விதவைகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. நேற்று கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் என்மூலம் ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்திலே பணி புரிகின்றவர்கள் இறந்து விட்டால் அவர்களுடைய மனைவிகளுக்குப் பென்ஷன் வழங்குவதில் பெருத்த சிரமம் இருக்கின்றது. ஆண்டுக் கணக்கில் அதிலே தாமதம் ஏற்படுகின்றது. அதனை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

5,000 பேர்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற வகையில் திட்டமிட்டிருக்கிறீர்கள். ஆனால் அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களில் எந்தவிதமான காரியமும் சரியாகச் செய்யப்படவில்லை. அங்கே ஊசி போடுகின்ற மருந்துகள் இல்லை. மாற்று மருந்து கூட அதற்கு இல்லாத நிலைமை இருக்கின்றது. அங்கே விசாரித்தால் மருந்து வராததற்கு நாங்கள் பொருப்பில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். மேலும் சுகாதாரப் பணியாளர்கள் 14 நாட்களுக்கு ஒரு தடவை வருவது என்ற வகையில் டைம் டேபிள் போட்டு வைத்திருக்கிறார்கள். அதாவது ஒரு தடவை ஒரு ஊருக்கு வந்தால் அடுத்த தடவை வருவதற்கு 14 நாட்கள் ஆகின்றன. ஒரு நாள் விட்டு ஒரு நாள் வந்து பார்த்தால் தானே கிராமத்தில் இருக்கக்கூடிய மக்களின் சிரமத்தைத் தீர்க்க முடியும். எனவே சுகாதாரப் பணியாளர்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் வரக்கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் பல காரியங்கள் நல்ல முறையில் செய்யப்படுகின்றன என்றாலும் கூட அவை முறையாகச் செயல்படாமல் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. அவற்றை முறையாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் சமூக நலத் துறையிலே பல்வேறு பிரிவு மக்களுக்குச் சலுகை தருவதற்காக 78 கோடியே 5 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் நிதியினைக் கேட்டு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சமூக நலத் துறையினைப் பார்க்கிறபோது இங்கே குறிப்பிடப்பட்டிருக்கக் கூடிய விவரங்களை எல்லாம் முழுமையாகப் படித்துப் பார்க்கின்றபோது இந்த 78 கோடி என்பது கடலிலே பெருங்காயத்தைக் கரைத்து விட்டால் எப்படி இருக்குமோ அப்படித்தான் இந்த நிதி ஒதுக்கீடு இருக்கின்றது.

ஆதிதிராவிடர் நலத் துறைக்கு என்று ஒதுக்கினாலும் சரி, சமூக நலத் துறைக்கென்று ஒதுக்கினாலும் சரி நிதித் துறையிலே இருந்து மிகக் குறைவாகத்தான் நிதி வழங்கப்படுகிறதே தவிர அந்தத் துறைகளுக்கு ஏற்ற சலுகை வழங்கக் கூடிய அளவுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று நான் வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். எனவே அடுத்த ஆண்டாவது இந்த நிதியினைப் பொறுத்தவரையில் முழுமையாக பயன் அளிக்கத் தக்க அளவுக்கு அதிகப்படியான மக்கள் பயன் பெறத்தக்க அளவுக்கு நிதி வழங்க வேண்டும் என்று நான் நிதித் துறையைக் கேட்டுக்கொள்கிறேன். சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் குறிப்புகளை முழுமையாகப் பார்க்கின்றபோது தமிழகத்தில் மகளிர், குழந்தைகள், ஊனமுற்றோர், முதியோர் இன்னும் பல்வேறு பிரிவினர் எல்லாம் அதாவது அனேகமாக கிட்டத்தட்ட இந்த ஆட்சியில் முழுமையாகப் பயன் பெற்று விட்டதாகத்தான் இந்தக் குறிப்பு காட்டுகிறது. அது உண்மைதானா என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். அதற்குமேல் நான் இந்த விஷயத்திற்குள் போக விரும்பவில்லை. காரணம் நேரம் இல்லை.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கிராமப்புறத்திலே இருக்கின்ற பெண்களைப் பொறுத்தவரையில் வருஷத்திலே 140 நாட்களுக்குத்தான் அவர்களுக்கு வேலை கிடைக்கும். மீதி நாட்களில் வேலை கிடைப்பதில்லை. எனவே அந்த மீதி நாட்களில் அவர்களுக்கெல்லாம் வேலை தரக்கூடிய வகையில் தீப்பெட்டி போன்ற தொழில்களை ஏற்படுத்துவதற்குரிய வகையில் அந்த மாவட்டத்திற்கு கலெக்டராக வந்திருந்த திரு. முருகராஜ் அவர்கள் தொழில் வாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையில் ஏற்பாடு



களைச் செய்திருந்தார்கள். அடுத்த வந்த கலெக்டர் இவற்றைப் பொறுத்தவரையில் இதற்கான லைசென்ஸ் வழங்காமல் வழங்கி விட்டதாகச் சொல்லி பெரும்பாலான இடங்களில் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்தச் சலுகைகள் நிறுத்தப்பட்டு விட்டன. ஓரிரு இடங்களில்தான் இன்றைக்கு இருக்கிறது. ஆகவே அதை மீண்டும் தஞ்சை மாவட்டம் முழுவதும் வேலை இல்லாமல் இருக்கக் கூடிய அந்தப் பெண்களுக்கு, குறைந்த வருமானமாவது வரக்கூடிய அந்தத் தொழிலை மீண்டும் துவக்க வேண்டும் என்ற இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பள்ளிகளில் படிக்கின்ற மாணவர் மாணவியர் களுக்கு தையல் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக சீருடைகளைத் தைத்து வழங்குகிறார்கள். நான் சென்ற ஆண்டு கூட இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறேன். கூட்டுறவு சங்கத்தின் மூலமாக தைத்துக் கொடுக்கக்கூடிய அந்த உடைகள் குறிப்பாக அவர் களுக்கு பொருத்தமாகவே இருப்பது இல்லை. குறிப்பாக திருத் துறைப்பூண்டியில் படிக்கக்கூடிய மாணவ மாணவிகளை உதா ரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள். 10 வயது மாணவனுக்கு 6 வயது மாணவன் போட்டுக் கொள்ளக்கூடிய சட்டையைத்தான் கொடுக்கிறார்கள். 13 வயது சிறுமிக்கு, 8 வயது மாணவி போட்டுக் கொள்ளக்கூடிய பாவாடையைக் கொடுக்கிறார்கள். அந்த அளவுள்ள வேறு மாணவி அந்த பள்ளிக் கூடத்தில் இருந் தால் அந்த குழந்தைகள் அதை மாற்றிப் போட்டுக் கொள்கிறார் கள். ஆனால், இல்லை என்றால் அது வீணாகிறது. அந்தக் குழந்தைகளுக்கு பயன் தராமல் போகிறது. இதற்குக்காரணம் குறிப்பிட்ட அளவை வைத்துக்கொண்டு, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் உடைகளை தைத்து விடுவதுதான்.

ஆகவே நான் கேட்டுக் கொள்வது, ஒவ்வொரு பள்ளியிலேயும் இருக்கிற அந்தக் குழந்தைகளுக்கு என்ன அளவு துணி தேவையோ அந்த துணியோடு, தையற் கூலியையும் சேர்த்துக் கொடுத்து விட்டால், இப்போது இருக்கும் நாகரிகத்திற்கேற்ப, கொடுக்கக் கூடிய துணியை அவர்களே தைத்துப் போட்டுக் கொள்வார்கள். ஏனென்றால் இப்போது கொடுக்கக்கூடிய துணி பெரும்பாலான குழந்தைகளுக்கு பொருந்துவதே இல்லாத சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே அதை அமைச்சர் அவர்கள் நேரிடையாகப் பார்த்து, மாற்றிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல ஆதரவற்றோர், விதவைகள் ஆகியோரின் மகள்களுக்குத், திருமணத்திற்காக 1981-82 ஆம் ஆண்டின் கணக்கின்படி ஆண்டு வருமானம் 3000க்கு மேற்படாதவர்களுக்கு ரூ. 1,000 உதவித் தொகை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரூ. 3,000 ஆண்டு வருமானம் என்கிற அளவு வருமானம் நடைமுறையிலே சாதாரணமாக வரக்கூடிய வருமானம். ஆண்டு வருமானம் ரூ. 5,000

என்று உயர்த்த வேண்டும். அத்தோடு சில விதவைத் தாய் மார்களுக்கு 2, 3 பெண்கள் கூட இருக்கலாம். ஒரு பெண்ணும் இருக்கலாம். விட்டுப் பிரிந்த கணவர் சொத்து எதுவும் வைக் காமலே சென்றிருக்கக் கூடிய நிலைமைதான் கிராமப்புறங்களில் அதிகமாக இருக்கிறது. ஆகவே அந்த ஆயிரம் ரூபாய் உதவிப் பணத்தை 2 ஆயிரமாக உயர்த்துவதோடு, ஒரு வருடத்திற்கு ஆயிரம் பெண்களுக்குத்தான் என்று வரம்பு வைத்திருப்பதையும் மாற்ற வேண்டும்.

கிராமப்புறங்களில் 67 லட்சம் விவசாய மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதிகளில் அதிகமாக விதவைத் தாய்மார்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த ஆயிரம் என்ற உச்ச வரம்பை நீக்கி விட்டு, மனுச் செய்த தகுதியான அத்தனை விதவைத் தாய்மார்களின் பெண்களுக்கும் அவர்கள் பரிசீலனை செய்து உண்மையானது என்று ஏற்றுக் கொண்டால், இந்தச் சலுகை அனைவருக்கும் கிடைக்கும்படிச் செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல விதவையாக இருக்கும் ஒரு பெண் மறுமணம் செய்து கொண்டால், அதற்கு 18 முதல் 20 வயது என்று வரை முறை வைக்கப்பட்டிருக்கிறது. இதை அப்படியே ஏற்றுக்கொண்டு அமல் படுத்தினால் அதிகமான எண்ணிக்கையில் அவர்கள் உதவிப் பெற வாய்ப்பு கிடைக்காமல் போய்விடும். ஆகவே அதை 25 வயது வரை என்று உயர்த்தினால் பெருமளவில் அவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்க வாய்ப்பு இருக்கும். அந்த அடிப்படையில் அந்த வயதை உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோல விதவையை மறுமணம் செய்து கொண்ட நபருக்கு 5 ஆயிரம் ரூபாய், 7 ஆண்டு பத்திரம் கொடுப்ப தாக இதில் இருக்கிறது. ஆனால் மனுப் போட்டால் கூட கிடைப் பதே இல்லை. குறிப்பாக என்னுடைய சொந்த ஊரிலேயே ஒரு விதவைப் பெண்ணைத் தன்னுடைய சொந்த மாமன் மகனே திருமணம் செய்துக்கொண்டார். அந்தப் பையனுக்கு மனு போட்டு 1½ வருஷம் ஆகிறது. இது வரையில் விசாரணைக்குக்கூட வரவில்லை. இப்படி ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான மனுக்கள் தேங்கிக் கிடப்பதை முதலில் விசாரித்து, அந்தத் துறை அதிகாரிகள் இந்தச் சலுகை அந்த மக்களுக்கு வேகமாக கிடைக் கும் வகையில் விரைவாக மனுக்களை பைசல் செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





(பிற்பகல் 1-20)

5 ஆயிரம் என்பது போதாது. அதை ஏழு வருடத்திலே தான் திருப்பிக் கொடுக்கப் போகிறோம். இந்தத் தொகையை 7 ஆயிரமென்ற பத்திரத்தை உயர்த்த வேண்டும். வயதை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல முதியோர்களுக்கு சத்துணவு மையத்திலிந்து உணவு கொடுக்கிறோம். இப்போது கொடுப்பது 200 கிராம் அரிசி, பருப்பு 15 கிராம், எண்ணெய் 3 கிராம், காய்கனி 50 கிராம் என்று கொடுத்திருக்கிறீர்கள். அது போதாது. அங்கேயிருக்கிற பிரச்னை களை சொல்ல விரும்பவில்லை. இப்போது இருக்கிற விலைவாசி இரண்டு மடங்கு ஏறிவிட்டது. முன்னாலே இருந்த விலைவாசியை வைத்து நீங்கள் பொருள்களை வழங்குகிறபோது அங்கு பற்றாக் குறை இருக்கிறது. அதை நீக்க வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதேபோல குழந்தைகளுக்கு சத்துணவு கொடுப்பதில் அரிசி 80 கிராம், பருப்பு 10 கிராம், எண்ணெய் 3 கிராம், காய்கனி 50 கிராம் என்று மொத்தம் 44 பைசா அளவில் தான் கொடுக் கிறோம். அந்த அமைப்பாளர்களுக்கு இப்போது இருக்கிற சம்பளப் படி கொடுக்கிறோம். இந்தப் பொருள்கள் பூராவும் அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகிய மூன்றையும் பொதுவான இடத்தில் வைக்க வேண்டும். இப்போது இருக்கிற அமைப்புபடி சத்துணவு அமைப் பாளர்கள் வீடுகளுக்கு எடுத்து போய் விடுகிறார்கள். வீட்டிலிருந்து எவ்வளவு கொண்டு வருகிறார்கள் என்பது நமக்கு தெரியாது. ஆகவே அந்த சத்துணவு அமைப்பாளர்கள் மீதே மக்களுக்கு சந்தேகம் வருகிறது. அதைப் போக்க வேண்டுமென்றால் அந்தப் பொருள்களை பொதுப்பார்வையில் வைக்க வேண்டும்.

இரண்டாவது அவர்களுக்கு கொடுக்கப்படுகிற சம்பளம் போதாது. மற்றவர்களுக்கெல்லாம் சம்பளத்தை உயர்த்துகிறோம். சம்பள கமிஷன்கள் எல்லாம் போடுகிறோம். அந்த அமைப்பாளர் களுக்கு மட்டும் சம்பளம் உயர்த்தப்படவில்லை. அதற்கு என்ன காரணம் சொல்கிறீர்கள் என்றால் அவர்களை பகுதி நேர ஊழியர்கள் என்று குறிப்பிடுகிறீர்களை. அவர்கள் எப்படி பகுதி நேர ஊழியர்களாக கருத முடியும்? காலையில் 8 மணிக்கு வேலைக்கு வருகிறார்கள். (2-1-/2,) 3 மணி வரையில் அவர்களுக்கு வேலை இருக்கிறது. இப்படி இருப்பதால் பகுதி நேர ஊழியர்களாக அவர்களைக் கருதி சம்பளத்தைக் குறைப்பதன் மூலமாக அதிலே அவர்கள் தவறுகளை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே சம்பளத்தை உயர்த்த வேண்டும். 44 பைசா என்பதை இப்போது இருக்கிற விலைவாசி அடிப்படையில் 55 பைசாவாக உயர்த்த வேண்டும்.

[திரு. பொ. உத்திராபதி] [1985 ஜூலை 1

அதேபோல ஊனமுற்றவர்களுக்கு அளிக்கப்படும் சலுகை. அதற்கு வயது வரம்பு வைத்திருக்கிறீர்கள். ஊனமுற்றவர்களுக்கு டாக்டர் சர்டிபிகேட் கொடுக்க வேண்டும். ஆனால் அதிகாரிகள் நேரிடையாகப் பார்த்து இவர்களுக்கு தையல் மெஷின் கொடுக்கலாம், இவர்களுக்கு புத்தகம் கொடுக்கலாம் என்று சலுகையை கொடுத்தால் அவர்களுக்கு உதவி வெகு விரைவில் கிடைக்கும். டாக்டர் சர்டிபிகேட், தாசில்தார் பர்மிஷன், ஆர்.ஐ. மற்றும் வி.ஏ.ஓ. லெட்டர் எனறு இப்படி இவ்வளவுக்கும் ஊனமுற்றவர்கள் நடந்து வருவதற்கு எவ்வளவு செலவாகிறது என்பதை கவனிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் கிராமத்தில் வாழ்பவர்கள் என்பதால் அவர்களுக்கு நன்றாக தெரியும். ஊனமுற்றவர்களை அதிகாரிகளே நேரிடையாகப் பார்த்து சலுகைகளை செய்ய வேண்டும். அந்த அடிப்படையில் எதிர்காலத்தில் செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல விவசாய முதியவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதில் ஆதரவற்றவர்களுக்கு என்று இருக்கிறது. இந்த வார்த்தையையே எடுத்துவிட வேண்டுமென்பது என்னுடைய கருத்து. காரணம் விவசாயத்திலே ஈடுபடுகிற விவசாயத் தொழிலாளி விவரம் தெரிந்த நாள் முதல் மாடு மேய்ப்பதற்கு கம்பு எடுக்கிறான். கடைசியாக ஓய்வு பெறுகிறபோது அவனுக்கு ஒன்றுமே கிடைக்காது. நாட்டிற்கு உழைத்து உணவு அளிக்கிற விவசாயத் தொழிலாளி எந்தவிதமான சொத்தும் இல்லாதவன். அவன் சொத்து என்பது மண்வெட்டியும், அவனுடைய கைகளும் தான். 60 வயது என்று போட்டிருக்கிறீர்கள். இது ரொம்பவும் அதிகம். அதனை 55 வயதாக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு வருடத்திற்கு 140 நாட்கள் தான் வேலை கிடைக்கும். குழந்தைகள் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு வருமானம் கிடைககவில்லை. பெற்ற தாய் தகப்பனை காப்பாற்ற முடியவில்லை. இதனை நாம் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. இந்த் 140 நாட்கள் வேலையை நம்பி தமிழகத்தில் 67 லட்சம் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் 7 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அப்படிபட்ட விவசாயத் தொழிலாளர்களை அநாதைகள் என்று சொல்லாமல், எப்படி அரசு ஊழியர்கள் 58 வயதானால் ஓய்வூதியம் பெறுகிறார்கள் என்று சொல்கிறோமோ அந்த வகையில் செய்து கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயிகளுக்கு, ஆதரவற்றவர்கள் என்ற வார்த்தையை நீக்கிவிட வேண்டும். அவர்களும் இந்த நாட்டிற்காக உழைத்தவர்கள் என்ற அடிப்படையில் ஓய்வூதியம் கொடுக்க அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். 60 வயது என்பதை 55 வயதாக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது 35 ரூபாய் என்று இருப்பதை 50 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அந்தப் பணமும் அவர்கள் அலைந்து வாங்கும்படி இருக்ககூடாது. செக் மூலமாகவோ,



1985 ஜூலை 1] [திரு. பொ. உத்திராபதி]

டிராப்ட் மூலமாகவோ அவர்கள் இல்லத்தை நோக்கி கிடைக்கச் செய்யவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு அலையாமல் அந்தப் பணம் கிடைக்கும். இதனை அமைச்சர் அவர்கள் பரிவாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் குழந்தைகளுக்கு நிறைய சலுகைகள் அளித்திருப்பதாக இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தமிழகத்திலே நாட்டிலே ஏற்பட்டுள்ள வறுமையைப் பயன்படுத்திக் கொண்டு அது தீப்பெட்டித் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, அல்லது கட்டிடம் கட்டும் தொழிலாக இருந்தாலும், அல்லது எந்தத் தொழிலாக இருந்தாலும், இன்றைக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய அந்த வறுமையை பயன்படுத்தி, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக் கூடிய குழந்தைகளை கொத்தடிமைகளாக, 1 ருபாய், 1-50 ரூபாய், 2 ரூபாய் என்று கொடுத்து, வருகிறார்கள். அதற்கு மேலே சம்பளம் கிடையாது. ஆகவே இந்த குழந்தைகளுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்றால், இந்தக் குழந்தைகளை வைத்து யார் கொத்தடிமைகள் போல் வேலை வாங்குகிறார்களோ அவர்களுக்கு எல்லாம் கடுமையான தண்டனை கொடுக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அப்படி இல்லை என்றால், இருக்கின்ற சட்டத்தை வைத்தாவதுஅதை தீவிரமாக அமல்படுத்த வேண்டும். அந்தக் குழந்தைகளுக்கு, அனாதைக் குழந்தைகளுக்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய அந்தக் குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடிய வகையில் சமூக நலத்துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கிராமப்புறத்தில் உள்ள பெண்கள் கர்ப்பிணி ஆன 9 மாதத்தில் இருந்து பிரசவம் ஆகி 2 மாதம் வரை மாதம் 50 ரூபாய் கொடுக்கப்போவதாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியாக அறிவித்தார்கள். ஆனால் இன்னும் அது அமுலுக்கு வரவில்லை. இன்றைக்கு அரசு ஊழியர்களாக இருக்கிற பெண்கள் கர்ப்பிணி ஆனால் பிரசவம் ஆனவுடன், 2 மாதம், 3 மாதம் அல்லது 4 மாதம் வரையிலே முழுச் சம்பளத்தோடு லீவு எடுத்துக்கொள்கிறார்கள். பிறகு போகப் போக பாதிச் சம்பளம் என்ற முறையில் அவர்களுக்குச் சலுகைகள் இருக்கின்றன. அதுவே இன்றைக்குள்ள விலைவாசியில் அவர்களுக்குப் போதவில்லை என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, கிராமபுறத்திலே நடவு வேலை செய்கிற பெண்கள், அதுவும் வருடத்திலே 90 நாட்கள், 60 நாட்கள் வேலை செய்கிற பெண்கள் கர்ப்பிணியானால்—இன்றைக்கு நடைமுறையில் இருப்பதை எடுத்துக்கொள்ளுங்கள், நடவு நட்டுவிட்டு, சாயந்திரம் வீட்டுக்கு வந்து பிரசவம் ஆகிற பெண்கள் கிராமப்புறத்திலே நிறைய பேர்கள் இருக்கிறார்கள். இது நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்தவர்கள் தான் நம்முடைய சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கர்ப்பிணி தாய்மார்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் கிராமப்புறங்களில் பல்வேறு உதவித்தொகை வழங்குகின்ற திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு, இந்த திட்டம் இன்னும் செயல்படுத்தப்பட வில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்த திட்டத்தின் மூலமாகத்தான் கிராமப்புரங்களில் இருக்கின்ற கர்ப்பிணித் த்தாய் மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்கப் படுகிறது.

திரு பொ. உத்திராபதி : மாற்றுத் தலைவர் அவர்களே, கர்ப்பிணி பெண்களுப்கு சத்துணவு மட்டும் ஒருவேளை வழங்கி விட்டால் ......

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாற்றுத் தலைவர் அவர்களே, கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், 7 மாதத்திலிருந்து அவர்களுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது.

திரு. பொ உத்திராபதி : மாற்றுத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையிலும், எங்கள் பகுதியில் இன்னும் கிடைப்பதாகத் தெரியவில்லை, நான் கேட்டுக்கொள்வது மாதம் 50 ருபாய் இவர்களுக்கு கொடுப்பதாக முதலமைச்சர் சொன்னது, நகரத்திலே இருக்கின்ற பெண்கள் சாப்பிடுவதைப் போல, இவர்களும் சாப்பிடவேண்டும் என்று சொன்னார்கள். அது கிடைக்கவில்லை என்று தான் சொன்னேனே தவிர, அது கிடைத் தால் நல்லது என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாற்றுத் தலைவர் அவர்களே, சத்துணவு மட்டும் கொடுக்கவில்லை. அவர்களுக்கு சுகாதார வசதி, அத்தோடு தடுப்பு ஊசிகள் இலவசமாக போடுகின்ற அந்த வகையில், 50 ரூபாய் அவர்களுக்கு அடங்கிவிடும்.

திரு. பொ. உத்திராபதி : மாற்றுத் தலைவர் அவர்களே, பல்வேறு அமைப்புகளின் மூலமாக கொடுப்பதாகச் சொல்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது, கர்ப்ப ஸ்திரி பெண்களுக்கு சலுகை அளிக்க வேண்டும் என்பதுதான்.

அதேபோல் குழந்தைகள் காப்பகம், போன ஆண்டும் சொன்னார்கள். இன்னும் கூட ஆளும்கட்சி உறுப்பினர்கள் சொன் னார்கள். அந்தக் குழந்தைகள் இன்னமும் முழுமையான அளவில் பாதுகாக்கப்படவேண்டும். இந்தச் சத்துணவு மையத்திற்கு, அந்தப் பாலர் பள்ளி இருக்கிற இடங்களுக்கு மட்டும்தான் அந்தச் சின்னக் குழந்தைகள் போகமுடிகிறது. பாலர் பள்ளி இல்லாத இடங்களில் உள்ள பள்ளிகளில் 5 வயதிற்குள்ளே இருக்கிற குழந்தை களை வரவேண்டாம் என்று சொல்லிவிடுகிறார்கள். அப்படிப்





பட்ட இடங்களில் உள்ள அந்தக் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை. 2 கி.மீ. 1 கி.மீ. தூரத்தில் பாலர் பள்ளி இருக்கிறது. 1 கி.மீ. 1/2 கி.மீ தூரத்தில் உள்ள கிராம மக்கள் 2 வயதுக்கு கீழே இருக்கிற குழந்தைகளை அனுப்ப முடியாது. அப்படி ஒரு இடைஞ்சல் இருக்கிறது எனவே நான் கேட்டுக்கொள்வது ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும், அல்லது குறிப்பிட்ட பகுதிகளுககு, குழந்தைகள் காப்பகம் அமைத்து, அந்தக் குழந்தைகளை பாதுகாக்க கூடிய அளவிற்கு ஒரு ஆயாமாரையோ, அல்லது பாதுகாப்புப் பணி செய்யக்கூடிய பாதுகாப்பாளரையோ போட்டால், கிராமப்புறத் தில் இருக்கக் கூடிய பெண்கள் அன்றாடம் நடவு வேலைக்குப் போகமுடியும். இல்லாவிட்டால் அந்தக் குழந்தைகளை ஒரு குறிப்பிட்ட மாதம் வரையிலும்தான் பாதுகாக்க முடியும்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ.செம்மலை) அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நீண்ட காலம் அனுபவம் பெற்ற மாண்புமிகு உறுப்பினர் அக்கா திருமதி பொன்னம்மாள் அவர்கள் சொல்லுகிற போது ஒரு உண்மையான கருத்தை வெளியிட்டார்கள். இந்த உலகத்திலே உண்மையிலே குழந்தைகளை பாதுகாத்து கொழு கொழு என்று வைத்து இருக்கக்கூடிய நாடு எது என்றால் அது சோவியத் ரஷியா என்றும் அதுபோல் தமிழகத்தில் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

நான் கேட்டுக் கொள்வது எல்லாம், சோவியத் ரஷியா மாதிரி இங்கே இப்போது செய்ய முடியாது. காரணம் இப்போது இருக்கிற பொருளாதார அடிப்படையும் இந்த நாட்டு முதலாளி வர்க்கம் இந்த நாட்டின் பொருளாதார சுரண்டல் அமைப்பும்தான்.

நம் நாடு சுதந்திரம் பெற்று 38 ஆண்டுகள் ஆகியும் கூட இந்தியாவில் நாம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். அந்த நிலையிலிருந்து தமிழகத்தை ஒரு மாறுபட்ட மாநிலமாக உருவாக்க வேண்டும். கிராமப்புறத்தில் இந்த குழந்தைகள் காப்பகங்கள் ஒரே நேரத்தில் தமிழகம் முழுவதும் செய்ய முடியும் என்ற அந்த கருத்தோடு நான் பேசவில்லை. அதுவும் குறிப்பாக இந்த நடவு தொழிலில் எங்கு எங்கு அதிகமாக ஈடுபடுகிறார்களோ அந்தப் பகுதியில் குழந்தைகள் காப்பகங்களை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நான் கேட்டுக் கொள்வது எத்தனையோ சலுகைகளை கிராமப்புறத்தில் செய்கிறார்கள். குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லங்கள், குழந்தைகளுக்கு பாலர் பள்ளி, குழந்தைகளுக்கு சத்துணவு, ஊனம் அடைந்தவர்களுக்கு 3 சக்கர வண்டி, ஊனம் உற்ற அனைவருக்கும் பாதுகாப்பு இன்னும் எத்தனையோ சலுகைகள் இதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒன்றில் நீங்கள் முடிவுக்கு வராத வரையில் இந்த கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய மக்களை பொருளாதார சீர் அழிவில் இருந்தும், வறுமைக் கோட்டுக்கு கீழே இருந்தும் அவர்களை பாதுகாக்க முடியாது. காரணம், இன்று தமிழகத்தில் தலை தூக்கி நிற்பது கள்ளும், சாராயமும் ஆகும்.

ஒரு பக்கம் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குகிறீர்கள், ஆனால் அந்தத் தாயும் அந்தத் தந்தையும் குறைந்த பட்சம் வருமானத்தைப் பெற்று வருகிறபோது ஒரு காலத்தில் கள்ளுக் கடை ஒரு ரெவின்யூ வட்டத்திற்கு ஒன்றும், சாராயக் கடை நகரத்திற்கு ஒன்றும் இருந்தது. இப்போது அப்படி சொல்லிக் கொள்ள முடியாது. மாண்புமிகு அமைச்சர்கள் எங்கே பார்த்தாலும் போகிறார்கள், அவர்களுக்கும் தெரியும். 2 பென்சுகள், 2 சோடா பாட்டில்கள், ஒரு பூவம் பழம் தார் வைத்துக்கொண்டு எங்கே பார்த்தாலும் கடைகள் இருக்கின்றன. எழுந்து நின்றால் போதும் எல்லா தெருக்களிலும் கடைகள் இப்போது இருக்கின்றன, இப்போது தாய்மார்களும் குடிக்க ஆரம்பித்து விட்டார்கள், இப்படி ஒரு பக்கம் கள்ளச் சாராயம் மலிந்து இருக்கின்றது.

இன்னொரு பக்கம் சினிமா கொட்டகைகள். முன்பு எல்லாம் சினிமா கொட்டகை எங்கேயாவது ஒன்று இருக்கும். இப்போது ஃப்ரீ லைசன்ஸாக எங்கே பார்த்தாலும் சினிமா கொட்டகைகள் இருக்கின்றன. திருத்துறைப்பூண்டியை எடுத்துக்கொண்டால் மாண்புமிகு அமைச்சர் அம்மா அவர்கள் அங்கே படித்ததாகச் சொல்கிறார்கள். எனக்குத்தெரியாது—இப்போது 6 கொட்டகைகள் வந்து விட்டன. இப்போது திருவாரூர் நகரத்தில் இரவு பகலாக மக்கள் எப்போது பார்த்தாலும் சினிமா கொட்டகையில் நிற்கிறார்கள். அந்த வகையில் கலாச்சாரம் மழிந்து கொண்டு வருகிறது.

அடுத்து லாட்டரி சீட்டுகள். முன்பு எல்லாம் நகரத்தில் விற்பார்கள். இப்போது எங்கு பார்த்தாலும் ரிக்ஷாவில் மைக்கை கட்டிக் கொண்டு தெருத் தெருவாக விற்கிறார்கள். காரணம் இன்றைக்கு மக்கள் எல்லாம் திடீர் என்று பணம் சம்பாதித்து பணக்காரர்கள் ஆக வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

இந்த கள்ளுக்கடைகள், சாராயக்கடைகள், சினிமா, லாட்டரிச் சீட்டுகள் இந்த மூன்றும் தமிழகத்தில் வளர வளர நீங்கள் எவ்வளவு தான் சலுகைகள் அளித்தாலும் மக்களுடைய



அடிப்படை பொருளாதாரத்தை வளர்ச்சி அடையச் செய்யவேண்டும் என்றாலும் அந்த அடிப்படையில் நீங்கள் சமூக நலத்துறை மூலம் செய்தாலும் ஒட்டுமொத்தமாக நான் நம்முடைய தமிழக அரசுக்கு சொல்லிக்கொள்ள விரும்புவது இந்த 3 அமைப்புகளை தமிழகத்தில் குறைந்தபட்சம் நீங்கள் கட்டுப்படுத்தி ஒருகட்டத்திற்கு கொண்டுவராமல் தமிழகத்தில் வரக்கூடிய 3 ஆயிரம் கோடி ரூபாயில் அடிப்படை மக்களுக்கு நீங்கள் எவ்வளவு தான் வாழ்வு அளிப்பதற்காக உயர்ந்த திட்டத்தை தீட்டினாலும் அனேகமாக இந்தத் திட்டங்கள் எல்லாம் போட்ட பின்னாலும் அது எந்த மக்களுக்கு போய் சேரவேண்டும் என்ற நோக்கத்தோடு சட்டத்தை கொண்டு வருகிறோமோ, அறிவிக்கிறோமோ, அது எங்கேயோ சென்று கொண்டு இருக்கிறது. எதிர்காலத்தில் இதை எல்லாம் ஓரளவுக்கு கட்டுப்படுத்தி இந்த தீர்மானங்களை நிறைவேற்றி சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் செய்ய முடியாமல் இருந்தாலும் கூட்டு அமைச்சரவை என்ற முறையில் இதை செய்ய வேண்டும். எனக்குத் தெரிந்த கருத்துக்களை சொல்லியிருக்கிறேன். இந்த கருத்துக்களை எந்த அளவுக்கு தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்களுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

***மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறை மானிய கோரிக்கையின் மீது இந்த மாமன்றத்திலே 8 மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நல்ல முறையில் சமூக நலத்துறையால் தீட்டப்பட்டு இருக்கிற திட்டங்களை பாராட்டியும் அவரவர்கள் கருத்துக்களையும் சொல்லியிருக்கின்றீர்கள்.

அந்த ஆலோசனைகளை ஏற்பதற்கான வழிவகைகளையும் இங்கே உறுப்பினர்கள் உரையாற்றி அமர்ந்திருக்கிறார்கள்.

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னைத் தேர்ந்தெடுத்து சட்டமன்றத்திற்கு அனுப்பிய வலங்கைமான் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மாமன்றத்தில் 8 உறுப்பினர்கள், சமூக நலத்துறையில் தீட்டப்பட்டிருக்கின்ற பெண்களுடைய நலத்தைப் பற்றியும், பெண்களுடைய முன்னேற்றத்தைப் பற்றியும், பெண்களுடைய பாதுகாப்பைப்பற்றியும், பெண்களுக்கு கொடுக்கப்படுகின்ற மறுவாழ்வைப்பற்றியும், குழந்தைகளுக்கு செயல்படுத்துகின்ற திட்டங்களைப் பற்றியும், அதனுடைய முன்னேற்றத்தைப் பற்றியும், அதே போல், ஊனமுற்றோருக்காக தீட்டப்பட்டிருக்கின்ற திட்டங்களைப்பற்றியும், அதனுடைய செயல்பாடுகளைப் பற்றியும், மிகச் சிறப்பாகவும்

இந்த மாமன்றத்தில் சிலர் பாராட்டியும், சிலர் ஆலோசனைகளை வழங்கியும் இருக்கின்றார்கள். பாராட்டிய உறுப்பினர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கிய உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைபட்டிருக்கின்றேன்.

நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த சமூக நலத் துறையில் தீட்டியிருக்கின்ற திட்டங்களைப் பற்றி நாம் பார்க்கின்றபோது, நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தாய் உள்ளத்தோடு, பெண்களின் நலத்திற்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பெண்களின் மறுவாழ்விற்காகவும், பெண்களின் பாதுகாப்பிற்காகவும், குழந்தைகளின் நலத்திற்காகவும், குழந்தைகளுடைய நலனில் அக்கறை காட்டுகின்ற வகையிலேயும், அதைப் போல் ஊனமுற்றோர்கள் இந்தச் சமுதாயத்தில் ஒதுக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையை நீக்கிட வேண்டும் என்ற எண்ணத்தில் மிகச் சிறந்த திட்டங்களை இன்றைக்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்து இருக்கின்றார்கள் என்பதை முதலில் இந்த மாமன்றத்தில் நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவரும், கொள்கை விளக்கக் குறிப்பில் மிகச் சிறப்பான முறையில் விளக்கங்கள் கொடுக்கப் பட்டிருந்தாலும், அந்த விளக்கங்கள் நடைமுறைப் படுத்தப் படுகின்றனவா, செயல் படுத்தப்படுகின்றவா என்ற ஒரு கேள்வியை இங்கே கேட்டு இருக்கின்றார்கள்.

நடைமுறைப்படுத்தப் படுவதையும், செயல் படுத்தப்படுவதையும்தான் நாம் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட முடியும். நடைமுறைப் படுத்தாததையும், செயல்முறைப் படுத்தாததையும் பற்றி நாம் எப்படிக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட முடியும் என்பதை அந்த மாண்புமிகு உறுப்பினர்களிடமே நான் கேட்க விரும்புகிறேன்.

அந்த அளவுக்கு இங்கே பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் குறிப்பிட்டார்கள். நமது மாண்புமிகு உறுப்பினர் அக்காள் பொன்னம்மாள் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். 6 சேவை இல்லங்கள் நடக்கின்றன. அந்த சேவை இல்லங்களிலே இருக்கின்ற பெண்களுக்கு பாதுகாப்பும், தங்குகின்ற வசதியும், கல்வி பெறுகின்ற வசதியும், தொழிற் பயிற்சி பெறுகின்ற வசதியைக் கொடுத்தாலும், பிற்பாடு, அவர்களால் சுயமாக வாழக்கூடிய ஒரு வழிவகையைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

அதற்காகத் தான் படிக்கின்ற மாணவிகளுக்கு படிக்கின்ற வாய்ப்புக்கள் கொடுக்கப்படுகின்றன. தொழிற்





பயிற்சியைப் பெறுகின்றவர்களுக்கு தொழிற் பயிற்சி கொடுக்கப் படுகின்றது. அந்த வாய்ப்புக்களை எல்லாம் அவர்கள் பெற்று பிற்காலத்தில் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் வங்கிகளின் மூலமாக கடன் பெறவும், அவ்வாறு பெற்று, தானகவே சுயமாக நின்று வாழும் வழிவகைக் காகத் தான் இப்படிப்பட்ட திட்டங்கள் இன்றைக்குத் தீட்டப்பட்டு இருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-40)

பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எழுது பொருள் உற்பத்தி, பனை பொருள் தொழில் கள், கிராம நூற்பு மையங்கள், சாக்குக் கட்டி மற்றும் மெழுகுவர்த்திக் கூடம், தீப்பெட்டி தொழில், சயிறு தொழில், பட்டு நூல் எடுத்தல், தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், சிற்றுண்டிச் சாலைகள் என்று குறிப்பிட்டு அவற்றையெல்லாம் அவர்களுக்கு நிரந்தரமாக்கவேண்டும் அல்லது தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யப்படுகிறது. இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள மகளிர் மன்றங்களைப் புதுப்பித்து அவைகளின் மூலமாக வேலைவாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினா பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத்தான இன்றைக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் செய் திருக்கிறார்கள் என்பதைந் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்காகத்தான் ஏழை விதவைகளுக்கும், ஆதரவற்ற பெண் களுக்கும், ஏழை எளிய பெண்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் இலவசமாகத் தையல் இயந்திரங்களைக் கொடுக்கிறோம். வருஷா வருஷம் 1,000 தையல் இயந்திரங்களைக் கொடுத்துக் கொண் டிருக்கிறோம். அத்தனை நபர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அந்தக் கூட்டுறவுச் சங்கங் களுக்கு, இன்றைக்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலை வரவர்கள் ஒரு சிறப்பான திட்டத்தைத் தீட்டி இருக்கின்றார்களே ஏழைச் சிறுவர்களுக்குச் சீருடை வழங்கும் திட்டம், அந்த திட்டத் தின்படி தைக்கின்ற பணியை, பெண்கள் பயனடைகின்ற வகையில் 12 கூட்டுறவுச் சங்கங்களுக்கு அந்த வேலைவாய்ப்பைக் கொடுக்க இருக்கிறோம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப் போல பல திட்டங்களைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். பெண்களுக்கு அளிக்கப்படும் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பணிபுரியும் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் அவர்களுக்கு பாதுகாப்பு இல்லங்களை அரசாங்கமே நடத்த வேண்டும், அதைப் போல தனியாருக்கும் உற்சாகப்படுத்த வேண்டும் என்பதையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் மூலமாக பணிபுரியும் மகளிர் விடுதிகள் ஆறு நடத்தப்படுகின்றன. தனியாரையும் உற்சாகப்படுத்த வேண்டுமென்ற கொள்கை இந்த அரசுக்கு உண்டு ; தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரவர்களுக்கும் உண்டு என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போலத் தனியார்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு தான் 75 சதவீதம் மத்திய அரசின் உதவியுடனும், 15 சதவீதம் மாநில அரசின் உதவியுடனும், 10 சதவீதம் அந்தத் தனிப்பட்டவர்கள் கொடுக்கின்ற பணத்தை வைத்துக் கொண்டும் இந்தப் பணிபுரியும் பெண்கள் விடுதிகளைக் கட்ட வேண்டுமென்ற தன்மையில் தமிழ்நாட்டில் உள்ள பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த அரசு பணிபுரியும் பெண்கள் விடுதி ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல, இன்றைக்கு இன்னொரு திட்டத்தையும் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதாவது, விதவைத் தாய்மார்கள் இருக்கின்றபொழுது அந்தத் தாய்மார்களோடு குழந்தைகளும் இருக்கின்றார்களே, அந்தக் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும், அந்தக் குழந்தைகளுக்கும் கல்வி வசதி அல்லது வேறு ஏதாவது வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் சேவை இல்லம் மூலம் நடத்தப்படுகிறது. ஒரு தாய், இரண்டு குழந்தைகள் அந்தச் சேவை இல்லத்திலே சேர்க்கப்பட்டு, தாய்க்கு எவ்வளவு பாதுகாப்பும், தங்கும் வசதியும், கல்வி வசதியும், தொழில் வசதியும், சீருடை வசதியும் கொடுக்கப் படுகின்றதோ அதைப் போல அந்தக் குழந்தைகளுக்கும் தங்கும் வசதி, கல்வி மற்ற எல்லா வசதிகளும் அரசாங்கத்தின் மூலமாக இரண்டு குழந்தைகளுக்கும் கொடுக்கப்படுகிறது என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்குட்டார்கள், தமிழகத்தில் மிகச் சிறப்பான முறையில் சுய வேலைபிாய்ப்புத் திட்டம்நடத்தப்படுகிறது என்பதையும் இங்கே நான் வறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும்



30 மகளிர் மன்றங்கள் வீதம் 11,250 மகளிர் மன்றங்கள் இருக்கின்றன. இந்த மகளிர் மன்றங்கள் புதுப்பிக்கப்பட்டு, தையல் இயந்திரங்கள் கொடுக்கப்பட்டு, தையல் தைக்கின்ற வாய்ப்புகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

விதவைகளின் குழந்தைகள் படிப்பதற்காகப் பாடப் புத்தகங்கள்கூட இன்றைக்குஇலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. வருமான வரம்பைக் குறைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் ஆரம்பக் கல்வி முதல், மேல்நிலைக் கல்வி வரைக்கும் படிக்கின்ற விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆரம்பப் பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்கு, ரூபாய் 15, நடுநிலைப் பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்கு ரூபாய் 40 உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்கு ரூபாய் 60, மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்கு ரூபாய் 100. இப்படி நாம் கணக்கிட்டு பார்க்கின்ற பொழுது இந்த வருஷம் மட்டும் மொத்தம் 4,000 குழந்தைகள் ஆரம்பப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளிகள் வரைக்கும் இலவசப் பாடபுத்தசங்களைப் பெறுவார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே கொள்கை விளக்கக் குறிப்பேட்டில், பெண்களுக்கான பல திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் பொருளாதார மேம்பாடு பெற்றிருக்கின்றார்களா என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் தமிழகத்தில் பெண்கள் மேம்பாட்டுக் கழகம் என்ற ஒன்றை ஆரம்பித்து, அதன்மூலமாக, பெண்களின் முன்னேற்றத்தையும், பொருளாதார முன்னேற்றத்தையும் கவனித்து, அவர்களுடைய வாழ்கைத் தரத்தையும் நல்ல முறையில் அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த நடப்பாண்டில், 1985—86-ல் 5,000 பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்படும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் செல்லமுத்து அவர்கள், பெண்களுக்குக் கூலி கொடுப்பதைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். சமத்துவமாகப் பாவித்து, ஆண்களுக்கு எவ்வளவு கூலி கொடுக்கிறார்களோ, அதைப்போல பெண்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். அதாவது, விவசாயப் பெண்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். வேறு தொழிலாக இருந்தால் ஒரு ஆண் எந்தத் தொழிலில் ஈடுபடுகின்றாரோ, அதே தொழிலில் ஒரு பெண் ஈடுபட்டிருந்தால், அதற்குச் சமமான ஊதியம் கொடுக்கலாம். ஆனால், விவசாயத் தொழிலாக இருந்தால், அங்கு ஆண்கள் வேறு வேலை செய்கிறார்கள். பெண்கள் வேறு வேலை செய்கிறார்கள். அதைப் போல், கட்டிடத் தொழிலைச் செய்யும் போது, ஆண்கள் வேறு வேலை செய்கிறார்கள். பெண்கள் வேறு

வேலை செய்கிறார்கள். அப்படிப்பட்ட வேலை செய்யும்போது ஆண்களுக்கு வேறுபட்ட சம்பளம்தான் கிடைக்கும் என்பதையும் பெண்களுக்கு ஒரு சம்பளம் தான் கிடைக்கும் என்பதையும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். வரதட்சணைக் கொடுமை, இன்னும் போஸ்டர் கொடுமை, கேவலமாக போஸ்டர் போடுகின்ற கொடுமை போன்றவை பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். இப்படிப் பெண்களைக் கேவலப்படுத்துகிற ஒரு கொடுமையான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதையெல்லாம் ஆராய வேண்டுமென்பது பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் ஆராய்வதற்காக, பெண் காவலர்கள், பெண் நீதிபதிகள் எல்லாம் போட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கொடுமைகளை எல்லாம் ஆராய்வதற்கு ஒரு குழு அமைக்கப்படும். அந்தக் குழு மாவட்டந்தோறும் அமைக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலேயிருந்தும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயிருந்தும் விவர அறிக்கை கேட்டிருக்கிறோம். அந்த விவர அறிக்கை வந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன, என்ன கொடுமைகள் பற்றி சொன்னார்களோ, அவைகளைப் பற்றியெல்லாம் ஆராயப்படும். வரதட்சணைக் கொடுமை பற்றி சிலர் சொன்னார்கள். பெண்களைக் கேவலப்படுத்துகின்ற போஸ்டர்களைப் பற்றி சிலர் சொன்னார்கள். இன்னும் பெண்கள் வேலை வாய்ப்பின்றி படுகின்ற கொடுமைகளைப் பற்றியெல்லாம் சொல்லி, இதைப் பற்றியெல்லாம் ஆராய பெண் காவலர்களையும், பெண் நீதிபதிகளையும் போடவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அந்தக் குழுவை அமைக்கும்போது, அரசு நிச்சயமாக ஆலோசனை செய்யும் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே போல், இங்கே பெண்கள் நிலையினைப்பற்றி மிகச் சிறப்பான முறையில் குறிப்பிட்ட உறுப்பினர்கள், குழந்தைகள் நலனைப் பற்றியும் மிக நல்ல முறையில் குறிப்பிட்டார்கள். தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பெண்கள் நலத்தில் அக்கறை காட்டினாலும் குழந்தைகளையும் கவனிக்க வேண்டும், குழந்தைகள் நலத்தையும் கவனிக்கவேண்டும் அந்தக் குழந்தைகள் பசியில்லாமல் இருக்க வேண்டும், அந்தக் குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு'.

என்பதுபோல் இனாகு கருத்தையும் சொன்னார்கள்.



'கொடிது கொடிது வறுமை கொடிது அதனினும்
கொடிது இளமையில் வறுமை'

என்றும் குறிப்பிட்டார்கள். அதைப் போன்று இதை எல்லாம் ஆராய்ந்து, மருத்துவ நிபுணர்களை வைத்து ஆராய்ந்து, ஒரு குழந்தை நல்ல முறையில் வளருவதற்கு குறிப்பாக கிராமப்புற குழந்தைகளுக்கு, என்னென்ன உணவு கொடுக்கப்பட வேண்டும், என்னென்ன வைட்டமின்கள் கலந்த உணவு கொடுக்கப்பட வேண்டும் என்று அறிந்து, அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கப்படுகிறது. சமூக நலத் துறையின் மூலம் 24 இலட்சம் குழந்தைகள் சத்துணவு பெற்றிருக்கிறார்கள். அதைப்போன்று 84,000 தாய்மார்கள் வேலைவாய்ப்பையும் பெற்றிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-50)

ஒரு திட்டம் ஆரம்பிப்பதை விட அத்திட்டத்தின் மூலம் எத்தனை பேர் பயனடைந்தார்கள், எத்தனை பேர் வேலை வாய்ப்பு பெற்றார்கள் என்று ஒருக்கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் சமூகநலத் துறையின் மூலம் 2 வயது முதல் 4 வயதுவரை இருக்கிற 24 இலட்சம் குழந்தைகளுக்கு ஒருபுறம் சத்துணவு கொடுக்கப்படுகிறது. அதைப்போன்று 84,000 ஏழைப் பெண்கள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், ஆதிதிராவிட பெண்கள் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அந்தக் குழந்தைகளுக்கு சத்துணவு கொடுப்பது மட்டுமல்ல, அந்தக் குழந்தைகளுக்கு சுகாதார வசதி ஏற்படுத்திக் கொடுப்பதோடு, கல்வி அறிவும் புகட்டப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் 39 இடங்களில்தான் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் செயல்படுகிறது. அது இன்னும் விரிவாக்கப்படவேண்டும் என்று கூறினார்கள். அந்த எண்ணத்தோடுதான் அரசு செயல்படுகிறது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சென்னை உலக வங்கி மேம்பாட்டுத் திட்டம், ஊட்டச் சத்து திட்டம், முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் போன்ற எல்லாத் திட்டங்களும் ஒருங்கிணைந்துதான் இன்றைக்கு தமிழ் நாட்டில் மிகச்சிறந்த முறையில் சத்துணவு, கல்வி வசதி, சுகாதார வசதி போன்ற எல்லா வசதிகளும் இந்தத் திட்டத்தின் மூலம் கொடுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று இன்றைக்குத் தடுப்பு ஊசி போடுவதைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு கோவை, மதுரை, பெரியார், தர்மபுரி ஆகிய 4 மாவட்டங்களிலுள்ள இந்தக் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடும் திட்டம் இருக்கிறது. 3 மாதம் முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படும். இந்தப் பருவத்திலுள்ள குழந்தைகளைக் கக்குவான், தொண்டை அடைப்பான், இளம்பிள்ளை வாதம் ஆகிய நோய்களிலிருந்து தடுக்க இந்தத் தடுப்பு ஊசி போடப்படும். இதனால் எத்தனை குழந்தைகள் பயன்பெறுவார்கள் என்று சரியாகச் சொல்ல முடியாவிட்டாலும், சுமார் 4 இலட்சம் குழந்தைகள் இந்த 4 மாவட்டங்களிலும் இந்த நோய்களிலிருந்து தடுக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று முதியோரைப்பற்றி குறிப்பிட்டார்கள். முதியோர் ஓய்வு ஊதியத் தொகையை அதிகரிக்க வேண்டும். இப்போது 35 ரூபாய் கொடுக்கிறோம், இதை அதிகமாக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். முன்பு இருந்த அரசு 20 ரூபாய்தான் முதியோர் ஓய்வு ஊதியமாகக் கொடுத்தார்கள். தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பதவி ஏற்ற பிறகுதான் அதை 35 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தாய்மார்களின் நலனை கவனிப்பதோடு, குழந்தைகள் நலனைக் கவனிப்பதோடு, முதியோரையும் உள்ளத்தில் வைத்து அவர்கள் நலனையும் கவனிக்க வேண்டும்; முதியோரையும் நாம்தான் கவனிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அவர்களுக்கும் சத்துணவு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த வகையில் 2 இலட்சம் பேர் முதியோர் உதவித் தொகையும் பெற்று, சத்துணவும் பெற்று வருகிறார்கள். ஆக, முன்பு இருந்த 20 ரூபாயை 35 ரூபாயாக உயர்த்தியது மட்டுமல்லாமல், சத்துணவும் கொடுக்கப்படுகிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தகுதி படைத்த எல்லோருக்கும் உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு சைதை துரைசாமி அவர்கள் பகுதியில் 700 பேர் இருந்து கொண்டிருப்பதாகவும், அந்த 700 பேர்களுக்கும் முதியோர் உதவித் தொகை கொடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை எல்லாம் நான் ஏற்றுக் கொண்டு இருக்கிறேன் கொள்கை அளவில் ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து முதியோர்களுக்கும் உதவித்தொகை வழங்கவேண்டும் என்று கொள்கை அளவில் ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து எவ்வளவு மனுக்கள் வருகின்றனவோ, அவர்கள் எவ்வளவு பேர்களை



தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்களோ, அத்தனை நபர்களுக்கும் முதியோர் உதவித் தொகையை இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

இனிமேலும் அவ்வாறு கிடைக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு உதவித் தொகையும் கொடுத்து, சத்துணவும் கொடுத்து, வாரம் அரைக் கிலோ அரிசியும் கொடுக்கப்படுகிறது. வருடத்திற்கு இரண்டு முறை வேஷ்டி, சேலையும் கொடுக்கப்படுகின்றது. சத்துணவு பெறாத முதியோர்கள் வாரம் ஒரு கிலோ அரிசி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைபோல குழந்தைகள், ஆதரவற்றோர் போன்றவர்கள் இருக்கின்றபோது அந்தக் குழந்தைகள் பாதுகாக்கப்படவேண்டும், ஆதரவற்றோர்களாக அவர்கள் இருக்கக்கூடாது என்ற எண்ணத்தோடுதான் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் 20 ஆதரவற்றோர் இல்லங்களை அமைத்து, அந்தக் குழந்தைகளுக்கு, உணவுக்காக கொடுக்கப்பட்டு வந்த மாதத்திற்கு 36 ரூபாய் என்பதை 60 ரூபாய் வரையில் இன்றைக்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உயர்த்தி இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு ஊனமுற்றோர் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஊனமுற்றோர்களுக்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள், எத்தனைத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறீர்கள் என்று தான் குறிப்பிலே காணப்படுகின்றதே தவிர, எத்தனைத் திட்டங்களை நீங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். ஊனமுற்றோர் பற்றி ஒன்றை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குத் தமிழகத்தில் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு 20 திட்டங்களை ஊனமுற்றோர்களுக்காக மிகச்சிறப்பான முறையில் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு நடத்திக் கொண்டிருக்கின்றது. அவர்களுக்குச் சிறப்புக் கல்வி, தொழில் கல்வி, மறுவாழ்வு, வேலை வாய்ப்பு உபகரணங்கள், சுய வேலைவாய்ப்பு போன்ற எத்தனையோ திட்டங்களின் மூலமாக இன்றைக்கு தமிழகத்தில் ஊனமுற்றோர் மறுவாழ்வைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவில் பிற மாநிலங்களோடு தமிழகத்தை ஒப்பிட்டு பார்க்கின்றபோது எல்லா மாநிலங்களையும் விட தமிழ்நாடுதான் இந்த ஊனமுற்றோருக்காகத் திட்டங்களை வகுத்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் முன்னணியில் நிற்கின்றது என்பதை நான் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்மை மற்றைய மாநிலங்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. இந்திய அரசே ஊனமுற்றோருக்காக நாம் செய்கின்ற திட்டங்களைப் பார்த்துப் பாராட்டி இருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திமிருமதி, கோமதி சீனிவாசன்) [1985 ஜூலை 1

ஊனமுற்றோருக்காக ஒதுக்கப்படுகின்ற தொகையைப்பொறுத் தவரையில். அது 9 மடங்காக உயர்த்தப்பட்டிருக்கின்றது. எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். சமூக நலத்திற்காக இன்னும் அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார் கள். முன்பிருந்த அரசு நிதி ஒதுக்கீடு செய்ததைவிட, இன்றைக்கு அதிகமான முறையில் சமூக நலத்துறையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய் திருக்கிறார்கள். அப்போது 10 கோடி ரூபாய் என்றிருந்தது, இப்போது 78 கோடி ரூபாய் என்ற அளவுக்கு அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை இங்கே நான் குறிப் பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றைய மாநிலங்களைப் பார்க்கிற போது ஊனமுற்றோர் நலம் எந்த அளவுக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்ற கருத்தை இந்த அவையிலே சொல்லலாம் என்று நினைக்கிறேன். சிறப்புக் கல்வி வழங்கும் பணியைக் கல்வித்துறை ஏற்று, செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. வேலைவாய்ப்பு வழங்கும் பணியை வேலைவாய்ப்புத்துறை ஏற்றுச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. கருவிகள், உபகரணங்கள் கொடுப்பதைப் பொறுத்தவரையில், அந்தப் பணியைச் சுகாதாரத் துறை ஏற்றுச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. இப்படி ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு பணியினைப் பிற மாநிலங்களில் இவ்வாறு தனித்தனி யாகத் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. தமிழகத்திலே சிறப்புக் கல்வி, வேலை வாய்ப்பு, தொழில் பயிற்சி, சுயவேலை வாய்ப்புக்கு உபகரணங்கள் வழங்கும் திட்டம், சுகாதார வசதி இவை அனைத்தும் ஒருங்கிணைந்த வகையில், சமூகநலத்துறையின் கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த மாதிரித் திட்டம் எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 2-00)

அதற்குக் கூட ஒரு உதாரணத்தை இந்த அவையிலே நான் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். இங்கே இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் 14 இடங்களில் மறு வாழ்வு நிலையங் களை மைய அரசினர் நிறுவி உள்ளனர். அந்த 14 இடங்களில் தமிழகத்தில் மட்டும் தான் 5 இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு மண்டல மறு வாழ்வு நிலையங்களை அமைத்து, அவர்களுக்கு சுய வேலை வாய்ப்பு திட்டங்களையும், வேலை வாய்ப்பு திட்டங் களையும் மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்திய அரசு நமக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்பதை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 ஜூலை 1] (திருமதி. கோமதி சீனிவாசன்)

இன்னும் ஒரு கருத்தையும் இங்கே நான் சொல்லலாம் என்று கருதுகிறேன். நாம் 2 கால் இல்லாதவர்களுக்கு 3 சக்கர வண்டி களைக் கொடுக்கிறோம். அதே போல காது கேளாதவர்களுக்கு எந்த மாநிலத்திலும் இவ்வளவு உபகரணங்களைக் கொடுப்பதே இல்லை. ஆனால் தமிழகத்தில் மட்டும் தான் மிக அதிகமான அளவுக்கு உபகரணங்களை ஊனம் உற்றவர்களுக்கு கொடுக் கின்றோம். 15 ஆயிரம் நபர்களுக்கு 60 லட்சம் ரூபாய் மதிப்பில் அந்த உபகரணங்கள்—முக்கியமாக காது கேளாதவர்களுக்கு— கொடுக்கப்படுகின்றன. அதை 3 ஆண்டு திட்டமாக வகுத்து மொத்தம் 45 ஆயிரம் காது கேட்கும் கருவிகளை, காது கேட்காத குழந்தைகளுக்கு கொடுப்போம் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல மத்திய அரசின் உதவியுடன், நமது மாநிலத்தில் செங்கற்பட்டில், ஊனம் உற்றோருக்கான முன்னோடித் திட்டம் ஒன்றை நமது அரசு நடத்திக் கொண்டிருக்கிறது. அதிலும் பம்பாய், கல்கத்தா, கான்பூர், ஹைதராபாத், சென்னை ஆகிய 5 இடங்களை ஊனம் உற்றோர்களுக்காக தேர்ந்தெடுத்து. அவை களில் முன்னோடித் திட்டமாக இதை நடத்தவேண்டும் என்று அமைத்திருக்கிறார்கள்.

அப்போது அமெரிக்காவில் இருந்து ஒரு நிபுணர் குழு, அமெரிக்க அரசின் நிபுணர் குழு இங்கே வருகை தந்து, அந்தத் திட்டத்தைப் பார்வை இட்டார்கள். பார்வை இட்டபோது அந்த அமெரிக்க அரசின் நிபுணர் குழு கூறிய கருத்து என்ன வென்றால், தமிழகத்தில் நிச்சயமாக ஊனம் உற்றோர் மறு வாழ்வுக்கான பணிகள் மிகச் சிறப்பாக, நல்ல முறையில் நடை பெறுகின்றன. இனிமேலும் நடைபெறும் என்று குறிப்பிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

ஏனென்றால் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு, மிக நல்ல முறையில் ஒருங் கிணைந்த முறையில் ஊனம் உற்றோர் நலத் திட்டம் மிகச் சிறப்பாக நடக்கிறது. இங்கே செங்கற்பட்டு மாவட்டத்தில் நடக்க இருக்கிற அந்த முன்னோடித் திட்டத்தின் மூலமாக மருத்துவ வசதி, கல்வி வசதி, உபகரண வசதி, வேலை வாய்ப்பு, சுய வேலை வாய்ப்பு ஆகிய அத்துனை திட்டங்களும் அந்த மாவட்டத்தில் இருக்கிற அனைத்து ஊனம் உற்றோர்களுக்கு அளிக்கப்படும் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்பு கிறேன்.

அதேபோல இன்றைக்கு நமது சமூக நலத்துறையிலிருந்து நமது உதவி இயக்குநர் அவர்கள் வெளிநாடு சென்று வந்தார்கள். அங்கே அவர்கள் சென்றபோது, அங்கு நமது திட்டங்களைப் பற்றியெல்லாம், இங்கிலாந்தில் உள்ளவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

கேட்டபோது, நமது அதிகாரி அவர்கள் நமது திட்டங்களைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னவுடன், மிகவும் அதிசயத்தோடு, ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு சிறப்பான முறையிலா உங்களுடைய இந்தியாவில், உங்களுடைய மாநிலத்தில், ஊனம் உற்றோர்களுக்காக திட்டங்கள் நடக்கின்றன என்று பாராட்டியும் இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அந்த இங்கிலாந்து நாட்டிலும் கூட ஊனம் உற்றோர்களுக்காக பல திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். ஆனால் ஒருங்கிணைந்த முறையில் அவைகள் செயல்படுவதில்லை. ஊனம் உற்றோர்களுக்காக கல்விக்காக ஒரு துறை செயல்படுத்தப்படுகிறது. வேலை வாய்ப்பிற்காக ஒரு துறை செயல்படுத்தப்படுகிறது, சுய வேலை வாய்ப்பிற்காக ஒரு துறை செயல்படுத்தப்படுகிறது. உபகரணங்கள் வழங்குவதற்காக ஒரு துறை செயல்படுத்தப்படுகிறது. இப்படி ஒவ்வொரு துறையும் ஏற்று, அந்தத் திட்டங்களை ஊனம் உற்றோர்களுக்காக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் தமிழகத்தில் மட்டும் தான் ஒருங்கிணைந்த முறையில் மிகச் சிறப்பான முறையில், ஊனம் உற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளும், உபகரணங்கள் வழங்குவது போன்ற வசதிகளும் கொடுக்கப்படுகின்றன என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். சீர்திருத்தப் பள்ளிகளில் உள்ளவர்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் மிகநல்ல முறையில் இங்கே வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

விளம்பரத்திற்காகத்தான் இப்படி எல்லாம் கூறுகிறீர்கள். சத்துணவு, சமூக நலம் இவைகள் எல்லாமே விளம்பரமாகத்தான் இருக்கிறதே தவிர, அதில் நல்ல திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறதா என்று கூட இங்கே கேட்டார்கள். இன்றைக்கு டீ கடை வைப்பவர்கள் கூட விளம்பரத்தைத் தேடுகிறார்கள். ஆகவே இன்றைக்கு அரசாங்கத்தின் மூலமாக என்னென்ன திட்டங்களைத் தீட்டுகிறோம் என்று மக்களுக்குத் தெரியவேண்டும். மக்களுக்குத் தெரிவிக்கவில்லை என்றால் நாம் என்ன திட்டங்களை தீட்டி இருக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியாது. அதை விளம்பரப்படுத்தினால் தான் மக்களுக்குத் தெரியும். நாம் விளம்பரப்படுத்தவில்லை என்றால், அந்தத் திட்டங்களைப் பற்றி மக்களுக்குத் தெரியாது. அந்த வகையில் தான் சில சமயங்களில் நாம் விளம்பரத்தை நாடுகிற ஒரு சூழ்நிலையில் இருக்கிறோம்.

அடுத்து, ஊனமுற்றவர்களுக்கு சிறப்பு விருதுகள் எல்லாம் அளிக்கப்படுகின்றன. அடுத்து சீர்திருத்தப் பள்ளிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். இளம் சிறுவர்கள் பொருளாதாரச் சூழ்நிலையில் குற்றவாளிகளாக்கப்பட்டு, பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, அவர்கள் படிப்பதற்கு மற்றும் தொழில் பயிற்சி பெறுவதற்குள்ள வாய்ப்புகளைப் பற்றி உறுப்பினர்கள்



தெரிவித்தார்கள். அவர்கள் கல்வி கற்று, தொழில் பயிற்சி பெற்று, வெளியிலே வந்த பின்னால் யாருடைய உதவியும் பெறாமல், தாங்களே சுயமாக பணியை மேற்கொண்டு வருமானத்தைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு, இன்றைக்கு அந்தச் சிறுவர்களுக்காக ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அதன் மூலமாக அவர்கள் வேலை வாய்ப்பை பெறுவார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் பல கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் பரிசீலனை செய்து யார் யாருக்கு என்னென்ன வசதிகளைக் கொடுக்க வேண்டுமோ, அவற்றையெல்லாம் துறை மூலம் செய்து கொடுப்போம் என்பதைத் தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

திரு. கே. எம். தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : " மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 78,05,94,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 2—7—1985 காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—08 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

*234. தமிழ்நாடு அரசுத் தேர்வாணைக் குழுவின் 1980–81-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (ஆங்கிலம்.)*

*235. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் 1982–83-ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கையும் கணக்குகளும். [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)*

#### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*140. கோரிக்கை எண். 30—சமூக நலம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985–86 (தமிழ், ஆங்கிலம்).*

*141. கோரிக்கை எண். 44—எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985–86 (தமிழ், ஆங்கிலம்).*

*142. 1985–86-ஆம் ஆண்டு சமூக நலத் துறையின் சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).*



## இணைப்பு I.

*(..............ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பினைக் காண்க.)*

## எழுதுபொருள்-அச்சுசுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

**1. இயக்கக வளர்ச்சி :**

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை துவக்கப்பட்டு 153 ஆண்டுகளாகிறது. 1831ஆம் ஆண்டு அச்சக பிரிவிற்காக 10 பணியாட்களை கொண்டு தலைமைச் செயலக அரசிதழ்களை அச்சிடுவதற்கென மட்டுமே நிறுவப்பட்ட இந்த அச்சகம், பணியாளர்களின் எண்ணிக்கையிலும், அளவிலும் கடந்த ஆண்டுகளில் படிப்படியாக வளர்ந்துள்ளது. மூன்று அச்சகங்கள் சென்னை நகரிலும், ஐந்து வட்டார மற்றும் கிளை அச்சகங்கள் வெளியூர்களிலும் செயற்பட்டு வருகின்றன. தவிர சென்னை இராஜாஜி சாலையில் எழுதுபொருள் கிடங்கு அலுவலகமும், இரண்டு அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும் இயங்கி வருகின்றன, இத்துறையில் மொத்தம் 6,056 பணியாளர்கள் பணி புரிகின்றார்கள். எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் இத்துறையின் தலைவர் ஆவார். இயக்குநருக்கு நிருவாகம் சம்பந்தமாக ஒரு இணை இயக்குநரும், அச்சகம் சம்பந்தமாக ஒரு பொது மேலாளரும், கணக்குகளைப் பொறுத்த வரையில் முதன்மைக் கணக்கு அலுவலரும், எழுதுபொருள் பிரிவிற்காக ஒரு துணை இயக்குநரும் உதவியாகப் பணியாற்றுகின்றனர். இவர்களைத் தவிர, ஒரு உதவி இயக்குநர் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்திற்கு பொறுப்பு வகிக்கின்றார்.

**2. இயக்ககம் :**

எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்ககம், பெரும்பாலும் பணியாளர் நிர்வாகம், பொது நிர்வாகம், தொழில் உறவுகள், இயந்திரங்கள் வாங்குதல், அச்சிடும் துறைக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்தல், எழுதுபொருட்கள், தட்டச்சு இயந்திரங்கள், படி பெருக்கிகள் மற்றும் கணக்கிடும் பொறிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து எல்லா அரசுத் துறைகளுக்கும் வழங்குதல் ஆகியவற்றைக் கவனிக்கிறது. மேலும் மாநில அரசிற்கு அச்சிடுதல் மற்றும் எழுதுபொருள் பற்றிய எல்லா விவரங்களுக்கும் ஆலோசகராகவும் இருந்து வருகிறது இயக்ககத்தில் 233 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

**3. அச்சிடும் பிரிவு :**

*3-1.* எழுதுபொருள்-அச்சுத் துறை கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் அச்சுப் பிரிவுகள் உள்ளன :—

1. அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை.
2. அரசு கிளை அச்சகம் (உயர்நீதி மன்ற வளாகம்), சென்னை.
3. அரசு கிளை அச்சகம் (ஆனைக்காரன் தோட்டம்), சூளை, சென்னை.
4. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.
5. அரசு வட்டார அச்சகம், சேலம்.
6. அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.
7. அரசு வட்டார அச்சகம், விருத்தாச்சலம்.
8. அரசு வட்டார அச்சகம், மதுரை.

3.2. அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை :

இந்த அச்சகம் முதன் முதலாக 1831ஆம் ஆண்டு தலைமைச் செயலகத்தில் பத்து தொழிலாளர்களை மட்டுமே கொண்டு அரசிதழ்களை அச்சிடுவதெற்கென்றே நிறுவப்பட்டது. பிறகு வள்ளலார் நகரில் உள்ள சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. தற்போது இவ்வச்சகம் பணி மேலாளர் கட்டுப்பாட்டின் கீழ் 3,558 பணியாளர்களைக்கொண்டு மூன்று முறை மாற்றுப் பணியில் செயற்பட்டு வருகிறது. இவ்வச்சகத்தில் அச்சிடும் இயந்திரங்கள் மற்றும் புத்தகம் கட்டும் இயந்திரங்கள், அச்செழுத்து கோர்க்கும் இயந்திரம், படிமம் தயாரிக்கும் பிரிவு ''போட்டோ கம்போஸிங்'' இயந்திரம் மற்றும் ரப்பர் முத்திரை தயாரிப்பதற்கான கருவிகள் ஆகியவை முழு அளவில் உள்ளன.

1984-85ஆம் ஆண்டு கீழ்க்கண்ட இயந்திரங்கள் வாங்கப்பட்டன:—

| | | |
|---|---|---|
| 1. | கூர்மைப்படுத்தும் இயந்திரம் (ஜிப்-எட்ஜ் ப்ரோசஷன்) 'கிலடின் ஷார்ப்னர்' .. | 2 |
| 2. | எச்.எம்.டி./ L/P மாடல் சூப்பர் எல்லா வடிவத்திலும் உள்ள தரமான துணைக் கருவிகளுடன் கூடிய எஜிரியா இயந்திரம் .. | 6 |
| 3. | எண்களை அச்சிடும் ரோட்டரி 'சவால்' இயந்திரம் .. .. .. | 1 |



| | | |
|---|---|---|
| 4. | ஜோதி பிராண்டு கம்பி அடிக்கும் இயந்திரம் .. .. .. .. | 3 |

இந்த அச்சகப் பிரிவை நவீனப்படுத்துவதன் ஒரு பகுதியாக பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரத்தை வாங்கும் திட்டத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட இயந்திரங்கள் வாங்க இயக்குநர் அளித்த செயற்குறிப்பிற்கும் அரசு அனுமதி வழங்கி உள்ளது :—

| | | |
|---|---|---|
| 1. | ஆட்டோமெடிக் சிலிண்டர் பிரிண்டிங் மெஷின் | 7 |
| 2. | புரோக்கிராம் கட்டிங் மெஷின் .. .. | 1 |
| 3. | ஸ்விப்ட் 300 டீலக்ஸ் ஆப்செட் மெஷின் .. | 1 |
| 4. | கோர்ஸ் 720 பிளேன் பேப்பர் காப்பியர் .. | 1 |
| 5. | எலக்ட்ரானிக் டைப்ரைட்டர் நெட் வொர்க் 316 | 1 |
| 6. | ஹாண்ட் நம்பரிங் மெஷின் .. .. | 100 |
| 7. | செமி தானியங்கி பேப்பர் கட்டிங் மெஷின் .. | 1 |
| 8. | ரூலிங் மெஷின் .. .. .. | 1 |

1984-85ஆம் ஆண்டில், ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகையிலிருந்து மூன்று 'சிங்கள் ஹெட் ஓயர் ஸ்டிச்சிங்' இயந்திரங்கள் 'புரோக்ராம் கட்டிங்' இயந்திரங்கள் இரண்டினை வாங்கப்பட்டன. தெரிந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களிடம் தேவைக் குறிப்பு வழங்குவதற்காக ஆணைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இது விரைவில் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 85 இலட்சம் ஒதுக்கீடு செய்யக் கருதப்பட்டுள்ளது. இதில் 1985-86ஆம் ஆண்டு ரூ. 25 இலட்சம் மதிப்பில் கீழ்க்கண்ட இயந்திரங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

| | | எண். | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| | (சென்னை மைய அச்சகத்திற்காக.) | | |
| 1. | 'மோனோ டைப் ஸிஸ்டம்' 272 | 1 | 6.00 |
| 2. | 'ஆட்டோமெடிக் புக் பைண்டிங் மெஷின்' | 1 | 7.00 |
| | (மதுரை வட்டார அச்சகத்திற்காக.) | | |
| 3. | 'ஆப்செட்' பிரிண்டிங் | 1 | 11.00 |
| 4 | 'செமி ஆட்டோமெடிக் பேப்பர் கட்டிங் மெஷின்.' | 1 | 1.00 |
| | | | 25.00 |

மைய அச்சகத்தில் அச்சிடும் பணிகளில் பெரும் பகுதி அச்சிட்டு வழங்கப்படுகிறது. தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள், மாநில கணக்காய்வுத் தலைவர் (தமிழ்நாடு), பொதுத் துறை கழகங்கள் ஆகிய துறைகள் மூலம் பெறும் அச்சிடும் பணிகளையும் மற்றும் வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ்கள், மந்தன ஆவணங்கள், வினாத்தாள்கள் போன்ற கடும் மந்தன இனங்கள், நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் நிலைப் படுத்தப்படாத படிவங்கள் ஆகியவை அச்சடிக்கப்படுகின்றன. மைய அச்சகம் 1984-ல் செய்து முடித்துள்ள சில முக்கிய பணிகள் வருமாறு :—

1. நாடாளுமன்றம், சட்டப் பேரவை வாக்காளர் சீட்டுகள்.

2. தமிழ்நாடு சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்களின் விவாதங்கள்.

3. முதலமைச்சரின் மதிய உணவுத் திட்ட விளக்கங்களின் கையேடுகள், நெறிமுறை குறிப்புகள், சிறு வெளியீடுகள், விரிவான உத்தரவுகள்.

4. இடைநிலைப்பள்ளி தேர்வுகள், மேல் நிலைப்பள்ளித் தேர்வுகளுக்குரிய விண்ணப்ப படிவங்கள், நெறிமுறை குறிப்புகள், சிறப்புக் கூடுதல் விடைத் தாள்கள்.

5. பல்லவன் போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச் சீட்டுகள், எல்லா வழித்தட அடையாள வில்லைகள்.

6. பரிசுச் சீட்டுகள்.

7. அட்டவணை நாட்குறிப்பேடுகள், சிறப்பு நாட்குறிப் பேடுகள், அமைச்சர்களின் நாட்குறிப்பேடுகள்.

8. சுவர் நாட்காட்டிகள், மூன்று மாத நாட்காட்டிகள்.

1971ஆம் ஆண்டிற்குப் பிறகு, நாடாளுமன்றத்திற்கும், சட்டப் பேரவைக்கும் ஒன்றாகப் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றது இதுவே முதன் முறையாகும். இதனால் 6.5 கோடி வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. கடும் முயற்சியால் இப்பணி செய்து தரப்பட்டது. மைய அச்சகம், சூளை அச்சகம் ஆகியவற்றோடு இப்பணியை மேற்கொள்ள மதுரை, புதுக்கோட்டை, விருத்தாசலம் ஆகிய இடங்களிலுள்ள வட்டார அச்சகச்களின் வாய்ப்பு வசதிகளைக் கருத்தில் கொண்டு அந்த அச்சகங்களுக்கும் இப்பணி முதன் முறையாக ஒப்படைக்கப்பட்டது. அனைத்துத் தரப்பு தொழிலாளர்களின் முழு முயற்சியாலும் ஒத்துழைப்பினாலும் இப்பணி குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே முடித்துக்கொடுக்கப்பட்டது.



இவ்வச்சகத்தில் தனிப்பட்ட ஒப்பந்தக்காரரால் தொழிலாளர் நலன் கருதி ஓய்வு அறை ஒன்றும், சிற்றுண்டிச் சாலை ஒன்றும் நடத்தப்படுகின்றன. மேலும், இங்கு பணிபுரியும் மகளிரின் குழந்தைகளை பணி நேரங்களில் கவனித்துக்கொள்ள குழந்தைகள் காப்பகம் ஒன்றுள்ளது.

1984 ஏப்ரல் முதல் 1984 நவம்பர் வரையிலான காலத்தில் பணியாற்றுகையில் இறக்க நேரிட்ட 10 பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு ரூ. 100 வீதம் பணியாளர்கள் நல நிதியில் இருந்து ரூ. 1,000 வழங்கப்பட்டுள்ளது. பத்து பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு ரூ. 10,000வீதம் குடும்ப நலநிதி வழங்கப்பட்டுள்ளது.

**3.3. அரசு இளை அச்சகம் (ஆளைக்காரன் தோட்டம்) சூளை, சென்னை :**

இந்த அச்சகம், 1974ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தனியார் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. தற்போது மாத வாடகையாக ரூ. 18,848 கொடுக்கப்பட்டு வருகிறது.

இதனை சொந்தக் கட்டிடத்தில் அமைக்கும் வகையில் சென்னையைச் சுற்றியுள்ள பகுதியில் தகுதியுள்ள இடத்தைத் தெரிந்தெடுப்பது துறையின் பொறுப்பாகும். இந்த அச்சகம் 696 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகம் முக்கியமாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணைக் குழு, காவல் துறை, மருத்துவத் துறை, வணிக வரித் துறை சம்பந்தப்பட்ட அச்சுப்பணிகளைச் செய்து வருகிறது.

டிசம்பர் 1984-ல் நடைப்பெற்ற பொதுத் தேர்தலுக்காக 7 பாராளுமன்ற தொகுதிகளுக்கும், 43 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளுக்கும் சேர்த்து வாக்குச் சீட்டுகள் இவ்வச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கப்பட்டன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ, 20 இலட்சத்தில் ஒரு 'லேத் மிஷின்' இவ்வச்சகத்திற்காக வாங்கப் பட்டது.

பெண் பணியாளர்களின் வசதிக்கென குழந்தைகள் காப்பகம் ஒன்றுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. பணியாளர்களின் தேவைக் காக தனியார் ஒப்பந்தக்காரரால் ஒரு சிற்றுண்டிச் சாலை நடத்தப் பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் இறந்த பணியாளர் 3 பேரின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதியாக ஒவ்வொருவருக்கும் ரூ. 10,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1984ஆம் ஆண்டில் இறந்த பணியாளர் 3 பேரின் வாரிசுதாரர்களுக்கும் தொழிலாளர் நல நிதியில் இருந்து ஒவ்வொருவருக்கும் ரூ. 100 வழங்கப் பட்டுள்ளது.

தொழிலாளர் நல உதவி அலுவலர் ஒருவர் இக்கிளை அச்சகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் நலனைக் கவனித்து வருகிறார்.

இவ்வச்சகத்திற்கு பாதுகாப்பு விருது குழுவினர் மூலம் இவ்வாண்டு ஒரு வெள்ளிச் சுழற் கேடயமும் இரண்டு நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

3.4. கிளை அச்சகம் (உயர்நீதி மன்ற வளாகம்), சென்னை :

1923ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற வளாகத்தில் நிறுவப்பட்ட இக்கிளை அச்சகம் 237 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றுப் பணிகளில் தொடர்ந்து இயங்கி வருகிறது. இக்கிளை அச்சகத்தின் முக்கிய பணி, உயர்நீதி மன்றத்திற்குரிய தினசரி வழக்குப் பட்டியல்கள் மற்றும் இந்திய சட்ட அறிக்கைகள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்குவதாகும். சருவூலம் கணக்குத் துறை தொடர்பான படிவங்களும் இவ்வச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

1984–85ஆம் ஆண்டில் இறந்த பணியாளர் ஒருவரின் வாரிசுதாரருக்கு ரூ. 10,000 குடும்ப நல நிதியாக வழங்கப்பட்டது.

தொழிலாளர் மனமகிழ் மன்றம் ஒன்று செயற்பட்டு வருகிறது. இதற்குத் தொழிலாளர் நல நிதியிலிருந்து விளையாட்டு சாதனங்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டு வருகிறது.

3.5. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை :

இக் கிளை அச்சகம், 1949ஆம் ஆண்டிலிருந்து 256 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் அரசுக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

பொதுப்பணித் துறையினரால் கூடுதல் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு இவ்வச்சகத்திற்கு ஏப்ரல் 1984-ல் ஒப்படைக்கப்பட்டது.

இக் கிளை அச்சகத்தில் பின்வரும் இனங்கள் அச்சிடப்படுகின்றன :—

1. இக்கிளை அச்சகத்தில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களின் அரசிதழ்களை ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சிடும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2. எம்.எப்.சி. படிவங்கள்.

3. ஆதி திராவிடர், பிற்பட்டோர் நலத் துறை ஆகியவற்றிற்குத் தேவைப்படும் படிவங்கள்.



4. தீர்ப்புத் திரட்டு, தமிழ் சட்ட நூல்கள்.

5. 'A' பதிவேடு.

மேற்கூறிய பணியினங்கள் தவிர, மத்திய அச்சகம் ஒப்படைத்துள்ள நிலைப்படுத்தப்பட்டுள்ள, நிலைப்படுத்தப்படாத இனங்களும் அச்சிடப்படுகின்றன.

இவ்வச்சக வரலாற்றில் முதல் முறையாக 1984ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்காக இவ்வச்சகத்தில் 3 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் 18 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் வாக்குச்சீட்டுகள் அச்சடித்து வழங்கப்பட்டன.

இவ்வச்சகத்திற்கு ஒரு ஹாண்ட் பெட் ரோட்டரி ஷிட் நம்பரிங் மெஷினும், மற்றும் 20 எண்ணிடும் இயந்திரங்களும் வாங்கப்பட்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இவ்வச்சகத்திற்கு ஒரு 'சிங்கில் ஹெட் ஒயர் ஸ்டிட்சிங் மெஷின்' வாங்கப்பட்டுள்ளது. மேலும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 'ஹாண்ட் பெட் ஸிலிண்டர் பிரிண்டிங் மெஷின்' ஒன்று வாங்கி நிறுவப்படும் வழங்கல் ஆணை கொடுக்கப்பட்டுள்ளது.

இக்கிளை அச்சகம் தேவையான எல்லா இயந்திரங்களையும் முழுமையாக கொண்டுள்ளது. தொழிலாளர்கள் பயனடைய ஒரு மனமகிழ் மன்றம் மற்றும் கூட்டுறவு கடன்வசதி சங்கம் ஒன்றும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன.

1983–84ஆம் ஆண்டில் அரசு ரூ. 250 ரொக்க பரிசும் ஒரு நற்சான்றிதழ் பத்திரமும் வழங்கியுள்ளது.

3.6. அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி :

இவ் வட்டார அச்சகம், 1965ஆம் ஆண்டிலிருந்து அரியமங்கலம் தொழிற்பேட்டையில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்குச் சொந்தமான நான்கு கட்டிடங்கள் இரண்டு முறை மாற்றும் பணியில் 172 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்திற்கு சொந்தமாகக் கட்டிடம் ஒன்று நிறுவ, துவாக்குடி கிராமத்தில் ரூ. 23,100 செலவில் 3.08 ஏக்கர் பரப்பளவு நிலம் ஏற்கனவே வாங்கப்பட்டுள்ளது. இந்த அச்சகத்திற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

நடப்பாண்டில் இவ்வச்சகத்திற்கு தமிழ்நாடு முழுவதிலும் அரசுத் துறைக்குத் தேவையான பொதுப் படிவங்கள் மற்றும் பணியாளர் பட்டியல் போன்ற நிலைப்படுத்தப்படாத படிவங்கள், உள் துறைக்கான அட்டவணைகள், படிவங்கள் அச்சிடப்பட்டன. இவை தவிர, மதுரை, திருச்சி மாவட்ட அரசிதழ்களும் இவ்வச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

இவ்வச்சகத்தில் ஒரு மனமகிழ் மன்றம் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

**3.7. அரசு வட்டார அச்சகம், சேலம் :**

இவ்வச்சகம், 1966ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மூன்று தனி யார் வாடகை கட்டிடங்களில் 150 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணியில் இயங்கி வருகிறது. இவ்வச்சகத் தை, சொந்தமான கட்டிடத்தில் நிறுவுவதற்காக ரூ. 47.30 இலட் சம் செலவில் புதிதாக கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது

இவ்வாண்டில் கீழ்க்காணும் பணிகள் இந்த அச்சகத்தில் செய்யப் பட்டன :—

1. துறைமுகப் பணி வேலை சம்பந்தமான பணிகள்.
2. பொதுப்பணித் துறை நிலைப்படுத்தப்பட்ட அட்டவணை
3. பொதுப்பணித்துறை நிருவாக அறிக்கை.
4. வாராந்திர அட்டவணை.
5. பவானிசாகர் பயிற்சி நிறுவனக் கையேடுகள்.
6. புள்ளிவிவரக் குறிப்பு.
7. கருவூலக் கணக்கு இயக்குநரின் பிளாங்க் புத்தகங்கள்.
8. உள்ளாட்சி நிதித் தணிக்கை பணியாளர்ப்பட்டி.
9. சட்டத் துறையின் 1973 வருடாந்திர அறிக்கை.
10. பொதுப் பணித்துறை விலை விவர அட்டவணை.
11. சட்டத் துறையின் வாராந்திர அறிக்கை.
12. ''நோய் இல்லா நெறி'' சித்தர் பாடநூல்.
13. 'A' பதிவேடு ஒப்பந்தப் பணி.
14. புள்ளிவிவரத் துறையின் அட்டவணை.
15. தோட்டக்கலை சிறு வெளியீடு.
16. சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக ஈட்டுறுதிப் படி வங்கள்.
17. மாநிலக் கணக்காயரின் பணி விவர புத்தகம்.

இவ்வச்சகத்தில் ஒரு மனமகிழ் மன்றமும் இயங்கி வருகிறது.



**3.8. அரசு வட்டார அச்சகம், விருத்தாச்சலம் :**

இவ்வச்சகம் 1966ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, அரசுக்குக் சொந்தமான கட்டிடத்தில் 158 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணியில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்தில், பொதுப் பணித் துறை, நீதித் துறை, வேலை வாய்ப்பு அலுவலகம், வேளாண்மைத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை, வனம் மற்றும் கால்நடை வளர்ப்புத்துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களை அச்சிடும் பணிகளை மேற்கொண்டுள்ளது. கூடுதலாக, தென் ஆற்காடு மாவட்ட அரசிதழும் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) இவ்வச் சகத்தில் அச்சிடப்படுகிறது.

1984 டிசம்பரில் நடைபெற்ற தேர்தலில், பெரியார் மாவட்டத் தில் அடங்கியுள்ள நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவை தொகுதிகளுக்குத் தேவையான வாக்குச் சீட்டுகள் இவ்வச்சகத்தில் 10 நாட்களில் அச்சிட்டு வழங்கப்பட்டது. இவ்வச்சகத்தில் நீர் சுத்திகரிப்புத் தளவாடம் பொருத்தப்பட்டபின் அழுத்தச்சு தயா ரிக்கும் பிரிவும், தனி அச்சு வார்ப்பு பிரிவு ஒன்றும் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் நலன் கருதி ஒரு மனமகிழ் மன்றமும் கூட் டுறவு கடன் வசதிச் சங்கமும் இயங்கி வருகின்றன.

**3.9. அரசு வட்டார அச்சகம், மதுரை :**

இந்த வட்டார அச்சகம் 1976ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, நல்ல வடிவமைப்புள்ள சொந்தக் கட்டிடத்தில் 213 பணியாளர் களைக் கொண்டு இரண்டு முறைமாற்றுப் பணியில் இயங்கிவரு கிறது.

இவ்வாண்டில், இவ்வச்சகத்தில் வருவாய்த் துறை, சிறைச் சாலைத் துறை, கருவூலத் துறை ஆகிய துறைகளுக்குத் தேவை யான படிவங்களும் மற்றும் மோட்டார் வாகன சட்டம் சம்பந்த மான படிவங்களும் அச்சிடப்படுகின்றன.

1984 டிசம்பரில் நடைபெற்ற நான்கு சட்ட மன்றத் தொகுதி இடைத்தேர்தல்களுக்கும், மதுரை மாவட்டத்தில் அடங்கியுள்ள நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவை தொகுதிகளுக்கான பொதுத் தேர்தல்களுக்கும் வாக்குச் சீட்டுகள் இவ்வச்சகத்தில் அச் சிடப்பட்டன.

இவ்வச்சகத்திற்கு ஒரு ரோட்டரி நம்பரிங் மெஷினும் 20 நம்பரிங் பாக்ஸும் வாங்கப்பட்டுள்ளன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இவ்வச்சகத்தில் ஒரு வெப் ஆப்செட் ஸிங்கில் கலர் பிரிண்டிங் மிஷினும், ஒரு ஹாண்ட் பெட்லெட்டர் பிரஸ் பிரிண்டிங் மெஷினும் வாங்கி நிறுவப்பட்டுள்ளன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இவ்வச்சகத்திற்கு ரூ.11 இலட்சம் செலவில் ஒரு ஆப்செட் பிரிண்டிங் மெஷினும், ஒரு இலட்சம் செலவில் ஒரு செமி ஆட்டோமெடிக் பேப்பர் கட்டிங் மெஷினும் வாங்கி 1985–86ஆம் ஆண்டில் நிறுவக் கருதப்பட்டுள்ளது.

1984–85ஆம் ஆண்டில் இறந்த ஒரு பணியாளரின் சட்டப்படியான வாரிசுதாரருக்கு குடும்ப நல நிதியிலிருந்து ரூ. 10,000-ம், தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ. 100-ம் வழங்கப்பட்டுள்ளது.

4. அரசு வெளியீடு விற்பனை நிலையம், சென்னை :

சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும், சென்னை உயர் நீதிமன்றக் கட்டிட வளாகத்திலுள்ள கிளை விற்பனை நிலையமும், உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் 58 பணியாளர்களுடன் செயற்பட்டு வருகின்றன.

இந்த வெளியீடுகள் விற்பனை நிலையம், சட்டங்கள், விதிகள், விதித்தொகுப்புகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள், மற்றும் பணிப் பதிவேடுகள் போன்ற அரசு வெளியீடுகளை விற்பனை செய்து வருகிறது. இந்திய அரசு வெளியீடுகளுக்கும் இது முகவரமைப்பாகச் செயற்படுகிறது.

1–4–1984 முதல் 30—11—1984 வரையிலான கால அளவில் இந்த வெளியீடு விற்பனை நிலையத்தின் விற்பனைச் சாதனைகள் வருமாறு :—

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | இலவசமாக அரசு அலுவலகங்களுக்கு வழங்கிய வெளியீடுகளின் மதிப்பீடு | 1,01,147.55 |
| 2. | மாநில அரசு மற்றும் மத்திய அரசு வெளியீடுகளின் விற்பனை மதிப்பீடு | 3,31,030.05 |
| 3. | உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள கிளை விற்பனை நிலையத்தில் விற்பனையாகிய மத்திய-மாநில அரசுகளின் வெளியீடுகளின் மதிப்பீடு .. | 50,102.95 |

விற்பனையை அதிகரிக்க 1981ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 'மாலை நேர விற்பனை திட்டம்', மாலை 5-30 மணிவரை நீடிக்கப்பட்டு தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.



5. எழுதுபொருள் பிரிவு, அரசு எழுதுபொருள் கிடங்கு, இராஜாஜி சாலை, சென்னை :

எழுதுபொருள்-அச்சுத் துறையின் எழுதுபொருள் பிரிவு, எழுது பொருட்கள், தட்டச்சுக்கள், படிப்பெருக்கிகள், கணக்கிடும் இயந்திரங்கள் ஆகியவற்றை, தேவைகேற்ப கொள்முதல் செய்து, அரசு அலுவலகங்களுக்கு இலவசமாக வழங்கும் மைய முகவரமைப்பாக இயங்கி வருகிறது. இது துணை இயக்குநர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் 326 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. பொதுத் தேர்தல் தொடர்பான சிறப்பு பணிகளுக்காக கீழ்க்கண்ட பணியாளர்கள் தற்காலிகமாக அமர்த்தப்பட்டார்கள் :—

| | | | |
|---|---|---|---|
| கண்காணிப்பாளர் | .. | .. | 1 |
| உதவியாளர் | .. | .. | 2 |
| இளநிலை உதவியாளர் | .. | .. | 2 |
| தட்டச்சர் | .. | .. | 1 |
| அலுவலக உதவியாளர் | .. | .. | 1 |

1—4—1984 முதல் 31—10—1984 வரையிலான காலத்தில் ரூ. 48,35,324.75 மதிப்பிற்கு எழுது பொருட்கள் வாங்கப்பட்டன. மத்திய அரசின் நிதி உதவி பெறும் அல்லது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு முன்கூட்டியே உரிய தொகை பெற்றுக் கொண்டு எழுது பொருட்கள் வழங்கப்படுகின்றன.

5. 2. எழுதுபொருள் கொள்முதல் :

காகிதம், அட்டை, தட்டச்சுப் பொறிகள், படி பெருக்கிகள், கதர் கைத்தறித் துணிகள், அச்சகம் மற்றும் சிறைச்சாலையில் தயாரிக்கும் பொருட்கள் ஆகியவை நீங்கலாக ஏனைய எல்லா எழுதுபொருள்களும் ஆண்டு தோறும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதன் மூலம் வெளி அங்காடியில் வாங்கப்படுகின்றன.

5. 3. காகிதம், அட்டைகள் கொள்முதல் :

காகிதம், அட்டைகள் ஆகியவை புதுடெல்லியில் உள்ள பொருள் வழங்கல்-விற்பனை நிலைய தலைமை இயக்குநர் செய்யும் ஒதுக்கீட்டின்படி பல காகித ஆலைகளில் இருந்து வீத ஒப்பந்த அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுகின்றன.

பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்குநரின் ஒதுக்கீட்டின்கீழ் வீத ஒப்பந்த அடிப்படையில் வரா சிறப்பு வகைக் காகிதம், அட்டைகள் ஆகியவை போக்குவரத்துத்

துறை ஆணையர் மற்றும் செயலர் அவர்களைத் தலைவராகவும், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர், நிதித் துறை துணைச் செயலர் ஆகியவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட சிறப்புக் கொள்முதல் குழுவின் ஒப்புதல் பெற்று ஒப்பந்த புள்ளிகள், கோருவதன் மூலம் (வெளிப்படையான ஒப்பந்த புள்ளிகள், வரம்பிற்குட்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள்) வெளி அங்காடியில் கொள்முதல் செய்யப்படுகின்றன.

6. பணியாளர்களின் விதிகள் :

பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சிலவசதிகள் குறித்த விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :—

(1) குடியிருப்புகள் :

சென்னையிலுள்ள தண்டையார்பேட்டையில் பணியாளர்களுக்கென 300 வீடுகள் உள்ளன. இந்த வீடுகளில் மின் விசிறி, கம்பிவலை, பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெரு விளக்குகள் ஆகிய வசதிகளும் உள்ளன. இத்துறைப் பணியாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 127 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் மேலும் 232 குடியிருப்புகள் கட்டக்கருதப்பட்டுள்ளது.

(2) தொழிலாளர் நலன் :

தொழிலாளர் நல அலுவலரும், சுகாதார ஆய்வாளரும் குடியிருப்புகளை அடிக்கடி பார்வையிட்டு, குடியிருப்போரின் நலன்களைக் கவனித்து வருகின்றனர். தொழிலாளர்களின் குறைகளைக் களைய தொழிலாளர் நல அலுவர் இத் துறையின் சென்னையிலுள்ள பிரிவுகளுக்கும், வெளியூர்களிலுள்ள பிரிவுகளுக்கும் சென்று வருகிறார். சுகாதாரம் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றதா என்று சுகாதார ஆய்வாளர் மாநகரில் உள்ள எல்லாப் பிரிவுகளுக்கும் சென்று மேற்பார்வையிடுகிறார். ஓய்வு அறை, சிற்றுண்டி அறை, சைக்கிள் நிறுத்துமிடம், வானொலி பிரிவு, நிலை வகுப்புகள் நடத்தும் அறைகள் ஆகியவை அமைக்கப்பட்டு தொழிலாளர்கள் தொடர்ந்து இவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர்.

(3) மருத்துவ வசதி :

மைய அச்சகத்தில் உள்ள மருந்தகத்தைச் சார்ந்த மருத்துவ அதிகாரி வாரம் ஒரு முறை, இயக்ககம், எழுதுபொருள் கிடங்கு, உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள கிளை அச்சகம், ஆணைக்காரன் தோட்டம் ஆகியவற்றிற்குச் சென்று பார்வையிடுகிறார். பணியாளர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் மைய அச்சகத்தில் உள்ள மருந்தகத்தில் நாள்தோறும் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.



(4) பன், தேநீர், பால் இலவசமாக வழங்குதல் :

அரசு மைய அச்சகம், அதன் கிளை அச்சகங்கள் ஆகிய அனைத்திலும் பணிபுரியும் எல்லாப் பணியாளர்களுக்கும், பன், தேநீர், ஆகியவற்றிக்குப் பதிலாக ஒரு நபருக்கு மாதம் ரூ. 10 வீதம், படி வழங்கப்படுகிறது. மேலும், உலோகப் புகையினால் உடல் நல இன்னல்களுக்கு ஆட்படக்கூடிய பணியாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் 250 மில்லி லிட்டர் பாலுக்குப் பதிலாக நாளொன்றுக்கு ஒவ்வொரு பணியாளருக்கும் 0.60 காசுகள் வழங்கப்படுகிறது. இத்துடன் பலவகை ஊட்டச்சத்து மாத்திரைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

(5) பணியாளர் நல நிதி :

பணியாளர்கள் நல நிதியிலிருந்து விளையாட்டுகள், நலப் பணிகள், விடுதலைநாள் விழா, ஆயுத பூஜை முதலியன கொண்டாட தொகை வழங்கப்படுகிறது.

(6) சீருடைகள் :

இத்துறையின் பணியாளர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்கும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுவரை 1,018 பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 953 பணியாளர்களுக்கு சீருடை வழங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(7) பணியாளர் நல நிதி :

பணியாளர் இறக்க நேரின், அவருடைய குடும்பத்தினருக்கு உடனடி நிவாரணமாக ரூ. 100 இந்த நிதியிருந்து வழங்கப்படுகிறது. இதைத் தவிர, இறந்த பணியாளர்களின் சட்டப்படிக்கான வாரிசுதாரர்களுக்கு ரூ. 200 தொழிலாளர் நல நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

இவ்வலுவலகத்தில் வேலையில் இருந்தபோதே இறந்த நான்கு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ. 10,000 வீதம் ஒரு மொத்த தொகை வழங்கப்பட்டுள்ளது.

(8) நலத் திட்டங்கள் :

நலத்திட்டமாக, பெண்கள், துணை வருவாய் பெற உதவும் வகையில் புத்தகம் கட்டுதல், மேலுறை தயாரித்தல் ஆகியவை, சென்னை மாநகரில் உள்ள காவல் துறை நலப்பிரிவுகள், பட்டினப்பாக்கம் மகளிர் மன்றம், உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. சமூக

நலப் பிரிவுகளிடம் ஒப்படைக்கப்படும் பணிகளுக்கு விவர அட்டவணை ஜே—3 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பில் 80 விழுக்காடு வழங்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(9) தொழில் பழகுதல் :

1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தை செயல்படுத்தும் வகையில், வெவ்வேறு வகைத் தொழில்களின் கீழ் 257 தொழில் பழகுவோர் பணிகளுக்கு அரசு அனுமதி அளித்திருப்பதோடு, 45 பதவிகளில் குறுகிய காலப் பட்டயக்கல்வி சான்றிதழ் பெற்றவர்கள் அச்சகப் பிரிவுகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். தொழில் பழகுவோர் சென்னை மாநகரிலும் வெளியூர்களிலும் உள்ள அரசு அச்சகங்களிலும் பணிபுரிய நியமிக்கப்படுகின்றனர்.

(10) கூட்டுறவு சங்கம் :

சென்னை, மைய அச்சகத்தில் இயங்கிவரும், தமிழ் நாடு அரசு அச்சகம்-எழுதுபொருள் துறை பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் (பொறுப்பு வரையறுக்கப்பட்டது) 30—6—1984-ல் உள்ளபடி 2,716 உறுப்பினர்கள் உள்ளனர். அதன் பங்கு மூலதனம் ரூ. 25·25 இலட்சமாகும். இச்சங்கம், உறுப்பினர்களுக்கு 1983—84—ல் 3.30 கோடி கடன் வழங்கியது. ஆனால் 1982-83-ல்ரூ.3. 00 கோடி மட்டுமே கடன் வழங்கியது. இச்சங்கம் 1983—84-ல் ரூ. 4.98 இலட்சம் நிகர லாபம் ஈட்டி, உறுப்பினர்களுக்கு உயரளவு 12 சதவீதம் ஆதாயப் பங்கு வழங்கியது.

(11) கூட்டுறவுப் பண்டகசாலை :

மைய அச்சகத்தில் செயற்படும் தமிழ்நாடு அரசு எழுதுபொருள்-அச்சுத் துறை கூட்டுறவு பண்டகசாலை கட்டுப்பாடு ஏற்பாட்டின் கீழ் வரும் பொருட்கள் உட்பட இன்றியமையாப் பொருள்களை நியாய விலையில் பணியாளர்களுக்கு வழங்குவதன் மூலம் பயனுள்ள வகையில் பணியாற்றி வருகிறது. தற்போது 1,535 உறுப்பினர்களையும் ரூ. 36,810 பங்கு மூலதனத்தையும் கொண்டுள்ளது. இப்பண்டகசாலை அரசிடமிருந்து ரூ. 22,500 பங்கு மூலதன் உதவியைப் பெற்றுள்ளது. உயரளவாக மாதம் ரூ. 200 வரை பொருட்களைக் கடனாக வாங்கிக்கொள்ளும் வசதியும் அனுமதிக்கப்பட்டுள்ளது. நுகர்பொருள் விநியோக அட்டைகளைப் பெற்றுள்ள 554 பேருக்கு, கட்டுப்பாடு ஏற்பாட்டின்கீழ் வரும் நுகர் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 3 முதல் 6 சதவீதம் மட்டுமே ஆதாயம் கிடைக்கும் வகையில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இப்பண்டகசாலை 1—4—1984 முதல் 31—12—1984 வரை ரூ, 9,607 லாபம் ஈட்டி உள்ளது.



(12) சென்னை அரசு அச்சகக்குழு :

இது அச்சகத் தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட ஒரு சங்கமாகும். இச்சங்க உறுப்பினர்களில் எவரேனும் இறக்க நேரிடின் அவருடைய நியமனதாரர்களுக்குக் கிடைக்க வேண்டிய பயன்களைத் தொடர்ந்து இக்குழு வழங்கி வருகிறது. 31—12—1984 ஆம் நாள் நிலவரப்படி இச்சங்கத்தில் 3,512 உறுப்பினர்கள் உள்ளனர். 1984 ஆம் ஆண்டில் இயற்கை எய்திய 65 உறுப்பினர்களின் நியமனதாரர்களுக்கு ரூ. 65 237 வழங்கப்பட்டது.

பொது :

பணியாளர்களின் குறைகளைக் கேட்டு அவற்றைக் களையும் பொருட்டு, எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர், இணை இயக்குநர் ஆகியோர் குறைகளைக் கேட்பதற்காக நேரம் ஒதுக்கி உள்ளனர்.

# இணைப்பு II.

(......ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

சமூக நலத் துறை.

கோரிக்கை எண் 30.

## கொள்கை விளக்கக் குறிப்பு.

1. முன்னுரை :

*1.1.* கோரிக்கை எண் 30-ன் கீழ் 1985-86 ஆம் ஆண்டிற்கு ரூ. 78,05,94,000 நிதி ஒதிக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

*1.2.* மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதும் மற்றும் அவர்களிடம் அன்பு செலுத்துவதும்தான் சமுதாய நாகரீகத்தின் அளவாக அமையும். எந்த ஒரு சமுதாயத்திலும் மகளிர் சரிபாதியாக உள்ளனர். அவர்கள் சமுதாயத்தைப் பேணி காப்பதிலும், அதனைத் தொடர்ந்து உறுதி செய்ய புதிய சந்ததியினரை உருவாக்குகின்றனர். நடக்கும் நிகழ்காலத்தை மகளிர் உருவகப்படுத்தினால் எதிர்காலத்தில் குழந்தைகள் உருவகப்படுத்துவார்கள். மகளிர் மற்றும் குழந்தைகள் புறக்கணிக்கப்பட்டால் எந்த ஒரு சமுதாயமும் நிலைக்கவோ மற்றும் முன்னேறவோ முடியாது.

*1.3.* தமிழர் நாகரீகம் தொன்மை வாய்ந்ததும், போற்றுதற்குரியதும் ஆகும். மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் பேணுதலில் உள்ள கடமையை இவ்வரசு நன்றாக உணர்ந்துள்ளது. அதனால் இரண்டு முதல் நான்கு வயது குழந்தைகளை பசிப் பிணியிலிருந்து விடுவிக்கும் பொருட்டு 1982 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து செயல்படுத்தப் பெற்றுவரும் முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் பாராட்டத்தக்கதுமாகும். அச்சத்துணவு திட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள் போன்றோர் பின்னர் சேர்க்கப்பட்டனர்.

*1.4.* கருவுற்ற மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஆறு மாதத்திலிருந்து இரண்டு வயது வரையிலான குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு முப்பத்தொன்பது (39) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பிரிவின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



அரசு மேலும் பதின்மூன்று ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பிரிவுகளை புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. இதனால் மேற்கண்ட திட்டப்பிரிவுகளில் பலன் பெறும் குழந்தைகள், சிறார்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை கூடுதலாகும்.

*1.5.* அரசின் முன்னுரிமை பணிகள் அவர்கள் வகுத்துள்ள திட்டங்களிலிருந்து தெளிவாகிறது. முதல் முன்னுரிமை உணவு மற்றும் சுகாதார பாதுகாப்பு அளித்தல், அதைத் தொடர்ந்து புகலிடம், கல்வி, தொழில்நுட்ப பயிற்சி அளித்தல், இறுதியாக ஏழை மகளிர்க்கு லாபகரமான வேலைவாய்ப்பு திட்டங்களை உருவாக்குதல். மேற்கண்ட நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு, சமூக நலம் சம்மந்தப்பட்ட துறைகளினால் செயல் படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் சுருக்கக் குறிப்பு பின்வரும் அத்தியாயங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்தியாயம் 2.

## மகளிர் நலம்.

### (1) சிறப்புத் திட்டங்கள் :

2.1. மகளிர்க்கென்றே பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்கள் ஆகியவை அமைத்து, அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் அவர்களுக்குப் பயிற்சியளித்து வேலை வாய்ப்பினை நல்கி, வருமானத்திற்கான வாய்ப்பினையும் கொடுத்து, அவர்களது பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசு உதவி வருகிறது. அவர்களுக்காக கூட்டுறவுத் துறையில் தொழில் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவைகளுக்கு பங்கு மூலதனக் கடன் மற்றும் இயந்திரங்கள், தளவாடங்கள் ஆகியவை கொள்முதல் செய்வதற்கு மான்யத் தொகை, நடப்பு மூலதனக் கடன் மற்றும் நிர்வாக மேற்பார்வை உதவி ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் 5,345 மகளிர் பல்வேறு தரப்பட்ட தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டார்கள். அவர்களில் 3,976 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1985-86 நிதி ஆண்டிற்காக ரூபாய் 20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சில பெரிய தொழிற்கூட்டுறவு சங்கங்களின் அமைப்பு பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 2,2. எழுதுபொருள் உற்பத்தி :

15 தொழில் கூட்டுறவு சங்கங்கள் 750 மகளிர்க்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன. 15 சங்கங்களும் உற்பத்தியை தொடங்கிவிட்டன. இச்சங்கங்கள் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கான பதிவேடுகளை தயாரித்து வருவதுடன் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் பிற்பட்டோர் நலத் துறை பள்ளிகளுக்கான நோட்டுப் புத்தகங்களையும் தயாரித்து அளிக்கின்றன.

### 2.3. பனை பொருள் தொழில்கள் :

பனை பொருள் தயாரிக்கும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு பனை நார் மற்றும் பனைபாய் ஆகியவ வகளை உற்பத்தி செய்யும் 10 தொழில் கூட்டுறவு சங்கங்கள் தர்மபுரி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டு, 250 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டு வரப்படுகின்றது. இந்த 10 கூட்டுறவு சங்கங்களும் உற்பத்தியை ஆரம்பித்து விட்டன.



### 2.4. கிராம நூற்பு மையம் :

மதுரை மாவட்டம், கண்ணேந்தல் கிராமத்தில் ஒரு கிராமப்புற நூற்பு மையம் தொடங்கப்பட்டு, இதன் மூலம் 25 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் வலங்கைமான் என்னுமிடத்தில் மேலும் ஒரு மையம் தொடங்கப் பட்டு, 32 மகளிர்க்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இம் மையம் தொடங்கப்பட்டு, 32 மகளிர்க்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இம்மையம் 1985 ஆம் வருடம், மார்ச் மாதம் முதல் உற்பத்தியைத் தொடங்கி விட்டது.

### 2.5. சாக்குக் கட்டி மற்றும் மெழுகுவர்த்திக் கூடம் :

மதுரை, தஞ்சாவூர், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 2 சாக்குக் கட்டி மற்றும் 3 மெழுகுவர்த்தி உற்பத்திக் கூடங்கள் தொடங்கப்பட்டு, 105 கிராமப்புற மகளிர்க்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திலும் உற்பத்தி தொடங்கப்பட்டு விட்டன.

### 2.6. தீப்பெட்டித் தொழில் :

தீப்பெட்டி தொழிலில் இதுவரை 4.016 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு மகளிர் தீப்பெட்டி சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. பல்வேறு காரணங்களை முன்னிட்டு பெரும்பான்மையான சங்கங்கள் இயங்காமல் முடங்கி விட்டன. தற்போது 49 சங்கங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன, சேலம். திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மேற்கூறிய 49 சங்கங்கள் முழு உற்பத்தியை மேற்கொள்ள ஒவ்வொரு சங்கத்திற்கும் 50 சதவீதம் அதாவது ரூபாய் 4,950-க்கு மிகைபடாது சட்டம் மற்றும் அறுவை இயந்திரங்கள் வாங்க மான்யம் வழங்கப்பட்டுள்ளது. கச்சாப் பொருள்களை வாங்குவதற்கு நிதி உதவியாக ரூபாய் 3,000 வழங்க தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி உத்தேசித்துள்ளது,

### 2.7. கயிறுத் தொழில் :

தஞ்சாவூர் மாவட்டம் நல்லூர் கிராமத்தில் ரூபாய் 6.61 லட்சம் செலவில் ஒரு கயிறு தயாரிக்கும் பயிற்சி நிலையம் தொடங்கப் பட்டுள்ளது. இதுவரை 100 மகளிர்க்கு கயிறு தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்டு தஞ்சாவூரிலுள்ள நல்லூரில் கயிறு தயாரிக்கும் பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவு சங்கம் ஒன்று நிறுவப்பட்டு, உற்பத்தியும் துவங்கப்பட்டு 83 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அரசின் சிறப்புத் தனி திட்டத்தின் கீழ் 150 ஆதி திராவிடர் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டி விரிவாக்கத் திட்டத்தின் பகுதியாக தஞ்சை மாவட்டத்தில்

மெலட்டூர, அரித்துவாரமங்கலம் மற்றும் ஆலங்குடி ஆகிய மூன்று கிராமங்களிலும் 3 கிளைகள் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

**2.8. பட்டு நூல் எடுத்தல் :**

வீணாகும் கழிவுப் பட்டில் இருந்து பட்டு நூல் தயாரிக்கும் 2 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் சேலம் மாவட்டதில் நிறுவப்பட்டு உற்பத்தி தொடங்கப்பட்டு 50 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

**2,9. தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் :**

ஆதரவற்ற மற்றும் விதவை மகளிர்க்கு இலவசமாக வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் மூலம் போதிய வேலை இன்மையால் அவர்களுக்கு வருமானம் கிடைக்க மாநிலம் முழுவதும் மண்டல ரீதியாக சென்னை, ஈரோடு. தஞ்சாவூர் மற்றும் மதுரையில் 4 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப் பட்டுள்ளன. இச்சங்கங்கள் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்பட்டோர் நலத்துறை பள்ளி மாணவர்களுக்கான சீருடைகளைத் தைத்து வழங்குவதோடு, இதர நிறுவனங்களில் தையல் வேலைகளையும் செய்கின்றன. காஞ்சீபுரம், கடலூர், சேலம், வேலூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருபுவனம் முதலிய இடங் களில் 8 பெண்கள் தையல் தொழில்கூட்டுறவு சங்கங்கள் தொடங் கப்பட்டு உள்ளன.

2.10. 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் தகுதியுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கப்படும் என 8-3-1985 அன்று ஆளுநர் உரையில் கூறப்பட்டது. மேற்படி வகுப்புகளில் படிக்கும் 60 இலட்சம் சிறார்களுக்கான சீருடைகள் தைக்கும் பணி மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒப்படைக்கப் படும்.

**2.11. விதவைகள் மூலம் நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகள் :**

ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைகளின் மறு வாழ்விற்காக கல்லூரிகள், தொழிற்சாலைகள் மற்றும் அலுவலக வளாகங்களில் நியாய விலை சிற்றுண்டிச்சாலைகள் நடத்தும் திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடைய முன்வரும் வித்வைகளுக்கு தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக உணவு தானியங்கள் மற்றும் இதரப் பொருட்கள் நியாய விலையில் வழங்கப்படுகின்றன. மேலும் திட்டத்திற்கான மொத்தச் செலவுத் தொகையில் 25 சதவிகிதத்தை மான்யமாக சமூக நலத் துறையும், எஞ்சியுள்ள 75 சதவிகித மூலதனத் தேவையைக் குறைந்த வட்டி விகிதத்தில் கடனாக வங்கியின் மூலம் பெறு வதற்கும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் கீழ்க்கண்டவாறு 72 அலகுகள் தொடங்கப்பட்டு 150 பெண்களுக்கு வலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது,



| வருடம். | மாவட்டம். | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை. | பயிற்சி அளித்தல், |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1982-83 | சென்னை | 20 | கில்டு ஆப் சர்வீஸ். |
| | கோயம்பத்தூர் | 10 | சமூக நல விரிவாக்கப் பணியாளர். |
| | தஞ்சாவூர் | 10 | சமூக நல விரிவாக்கப் பணியாளர். |
| | திருச்சிராப்பள்ளி | 10 | சமூக நல விரிவாக்கப் பணியாளர். |
| | சேலம் | 10 | சமூக நல விரிவாக்கப் பணியாளர், |
| 1983-84 | தஞ்சாவூர் | 10 | சமூக நல விரிவாக்கப் பணியாளர். |
| 1984-85 | சென்னை | 2 | சமூக நல விரிவாக்கப் பணியாளர். |
| | | 72 | |

### (2) மகளிர்க்கான மற்ற தொழிலியல் பயிற்சிகள்,

2.12. தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் துறைகளில் மகளிர்க்கு சுமார் 120 தனியார் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ரூபாய் 3,000-க்கு குறைவாக வருவாய் பெறும் குடும்பத்தில் உள்ள 16 முதல் 30 வயதிற்கு உட்பட்ட மகளிர் பயனடைகிறார்கள்.

**2.13, தட்டச்சு**—இத்திட்டத்தில் பயன் பெறும் மகளிர்க்கு மொத்தம் ரூ. 150 உதவித் தொகையாக பத்து மாதங்களுக்கு அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ரூ. 1.56 இலட்சம் செலவில் 1,000 ஏழைப் பெண்கள் பயன் பெறுகிறார்கள். இதுவரை இத்திட்டத்தின்கீழ் 6,975 பெண்கள் பயனடைந் துள்ளார்கள்.

**2.14. கணக்குப் பதிவு மற்றும் கணக்குத் துறையில் பயிற்சி அளித்தல்**—இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் மகளிர்க்கு மொத்தம் ரூ. 165 உதவித்தொகையாக வழங்கப்பட்டு 6 மாதங்

களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டு தோறும் ரூ. 1.46 இலட்சம் செலவில் சுமார் 1,000 பெண்கள் பயனடைகிறார்கள். இதுவரை இத்திட்டத்தின்கீழ் 2,553 பெண்கள் பயனடைந்துள்ளார்கள்,

**2.15. சுருக்கெழுத்து :**

இத்திட்டத்தின்படி பயிற்சி பெறும் மகளிர்க்கு மொத்தம் ரூ. 220 உதவித் தொகையாக ஓராண்டிற்கு அளிக்கப்படுகிறது. ஆண்டு தோறும் ரூ. 1.01 இலட்சம் செலவில் சுமார் 500 மகளிர் பயனடைகிறார்கள், இதுவரை 1,416 மகளிர் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

தொழிலியல் பயிற்சிக்கு ஊக்குவிப்பு அளிக்கும் வகையில் சென்னையில் செயல்படும் தாவர் பயிற்சிக் கல்லூரியில் ரூ. 75,750 செலவில் 30 பெண்களுக்கு உயர்நிலை சுருக்கெழுத்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**(3) உற்பத்தி மற்றும் பயிற்சி மையங்கள்.**

2.16. தையல், கம்பளி நெசவு, பனை ஓலை, பாய் பின்னுதல், ஜமுக்காளம் நெய்தல், மூங்கில் மற்றும் மெழுகுவத்தி வேலைகளை ஏற்படுத்தி கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் 18-லிருந்து 35 வயதிற்குட்பட்ட மகளிர்க்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியானது வேலைவாய்ப்பினை அளிப்பதோடு தங்கள் குடும்பத்தின் வருமானத்தினை அதிகரிக்கவும் வகை செய்கிறது. இப்பயிற்சியின்போது பயிற்சியாளர்களின் போக்குவரத்து மற்றும் சில்லரைச் செலவினங்களுக்காக மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு வருக்கும் ரூ. 30 உதவித்தொகையாக அளிக்கப்படுகிறது.

2.17. தற்போது 53 உற்பத்தி மற்றும் பயிற்சி கூடங்களும் 4 உற்பத்திக் கூடங்களும் சமூக நலத் துறையின் கீழ் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக 1985-86 ஆம் ஆண்டிற்கு ரூ. 21.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 900 பெண்கள் இவ்வுற்பத்தி மற்றும் பயிற்சி கூடங்களில் பயிற்சி பெறுகிறார்கள். இதில் 4 தையல் பயிற்சி கூடங்கள் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் மகளிர்க்காக ஆரம்பிக்கப்பட்டு முறையே வள்ளிக்கொட்டாய் (வட ஆற்காடு மாவட்டம்) எளிவளவு, முண்டகம்பட்டு மற்றும் அச்சக்காட்டுப்பட்டி (சேலம் மாவட்டம்) ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன.

2.18. மேற்கண்ட மரபுத் தொழில்களைத் தவிர நவீனத் துறைகளில் மகளிர்க்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக மகளிர் வர்த்தக வளர்ச்சித் திட்டம் சென்னை ஐ.ஐ.டி.யில் ஊரக வளர்ச்சி



மைய உதவியோடு அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி 100 ஊரக மகளிர் நவீனத் துறைகளான மின்னணு, இராசயன சோப்புப் பொருட்கள், ஸ்கிரீன் பிரிண்டிங், உணவுப் பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் செய்தல் ஆகிய துறைகளில் பயன் பெறுகின்றனர். இதற்காகும் செலவு ரூ. 31.28 இலட்சமாகும்.

**(4) சேவை இல்லங்கள்.**

**2.19. அரசால் நடத்தப்படும் சேவை இல்லங்கள் :**

சமூக நலத் துறையின் கீழ் தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் திருப்பத்தூர் ஆகிய ஆறு இடங்களில் சேவை இல்லங்கள் இயங்கி வருகின்றன. ஏழை விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதர வற்ற பெண்கள் முறையே 18 முதல் 40 வரை வயதுள்ள பெண் களுக்கு எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதுவதற்கு கல்வி கற்பிப்பது இதன் நோக்கமாகும். தையல், துணிமணி தைத்தல், துணிகளில் வண்ண நூல்களால் பூ வேலை செய்தல், மற்றும் நெசவு செய்தல் போன்றவற்றிற்கு முறையான பயிற்சிகள் இவ்வில்லங்களில் அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் துணிமணி தைத்தல் மற்றும் வண்ண நூல்களால் பூ வேலை செய்தல் போன்ற துறைகளில் ஓராண்டு பயிற்சியை முடித் ததும் அரசு நடத்தும் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு அனுமதிக் கப்படுகிறார்கள். மேலும் இங்கு தங்கி பயிற்சி பெறும் பெண்கள் அவர்களுடைய இரண்டு குழந்தைகளை மூன்று ஆண்டுகள் வரை தங்களுடன் வைத்துக்கொள்ளவும் அனுமதி வழங்கப்படுகிறது. பெண்களுக்கு மாதம் ரூ. 50-ம் குழந்தைகளுக்கு ரூ. 30-ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும் சீருடைக்காகவும் பெண் களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.60-ம், குழந்தைகளுக்கு ஆண்டொன் றுக்கு ரூ. 35-ம், ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு தலா ஆண்டொன்றுக்கு ரூ.15-ம் அதோடு ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகம் வாங்க ஆண்டொன்றுக்கு ரூ. 40-ம் ஒன்பது மற்றும் பத்தாவது படிக்கும் மாணவிகளுக்கு நோட்டுப்புத்தகம் வாங்க ஆண்டொன்றுக்கு ரூ. 60-ம், +1+2 வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு புத்தகம், நோட்டுப் புத்தகம் வாங்க ஆண்டொன்றுக்கு ரூ. 100-ம் வழங்கப் படுகின்றது.

2.20. தாம்பரம் சேவை இல்லத்தில் உடல் ஊனமுற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக தனியாக ஒரு பிரிவும் இயங்கி வருகிறது. பெண்களில் 30 நபரும், குழந்தைகளில் 20 நபரும் இதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

2.21. தாம்பரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய சேவை இல்லங்களில் சுருக்கெழுத்து, தட்டச்சு போன்ற செயலகப் பணிக் கல்வியும் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பிரிவுகளில் 20 பெண்கள்

வரை அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்வதின் மூலம் உயர் கல்வி படிக்க இயலாத பெண்கள் பயன் பெறுகிறார்கள். இப்பயிற்சியில் ஓராண்டு முடித்தவர்கள் அரசு தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். பயிற்சி காலத்தில் அவர்களுக்கு மாதம் ரூ. 20 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இவ்வாய்ப்பினை அளித்ததின் மூலம் அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடிகிறது.

2.22. சேவை இல்லத்திலுள்ள மகளிர்க்கும், குழந்தைகளுக்கும் தற்போது வழங்கப்படும் மாதாந்திர உபகாரச் சம்பளத்தை முறையே ரூ. 50-லிருந்து ரூ. 75 ஆகவும் மற்றும் ரூ. 36-லிருந்து 60 ஆகவும் 1985-86 ஆம் ஆண்டில் உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது.

2.23. எல்லா சேவை இல்லங்களிலும் தையல் பயிற்சி பெறும் இல்லவாசிகளுக்கு 1985-86ஆம் ஆண்டில் பயிற்சி காலத்தில் ஏற்படும் செலவுக்காக தலா ரூ. 250 வீதம் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதற்காக 1985—86-ம் ஆம் நிதியாண்டில் ரூ. 0.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.24 தஞ்சாவூர் சேவை இல்லத்தில் தங்கியுள்ள இல்லவாசிகள் பயன்பெறும் வகையில் போதுமான குடிதண்ணீர் வசதிக்காக 1985-86 ஆம் ஆண்டில் ஆழ்கிணறு ஒன்று ரூ. 95,000 செலவில் அமைத்து கொடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

2.25. 1985-86 ஆம் ஆண்டில் கடலூர் சேவை இல்ல மகளிர் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அவ்வில்லத்தைச் சுற்றி ரூ. 84,000 செலவில் முள்வேலி மற்றும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

2.26. சேவை இல்லங்களில் பத்தாம் வகுப்பு தேர்வு பெற்ற அநேக இல்லவாசிகள் உயர்நிலைக் கல்வி பெறுவதற்கு விருப்பப்படுவதால் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு கடலூர் சேவை இல்லத்தில் 25 இல்லவாசிகள் பயன் பெறும் வகையில் மேல்நிலைக் கல்வி (ப்ளஸ் 1 மற்றும் ப்ளஸ் 2) 1985-86 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க அரசு தீர்மானித்துள்ளது.

**(5) அரசு உதவியுடன் செயல்படும் தனியார் நிறுவன சேவை இல்லங்கள்.**

2.27. மதுரை சேவாஸ்ரம் மற்றும் ஈரோடு கஸ்தூரிபா சேவிகாஸ்ரம் ஆகிய இரண்டு தனியார் நிறுவனங்கள் 1981 ஆம் வருடம் முதல் அரசு மான்ய உதவியுடன் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு சேவை இல்லத்திலும் 40 இல்லவாசிகளுக்கு இரண்டாண்டு 10-ம் வகுப்பு குறுகிய கால கல்விப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 50 வீதம் உதவித் தொகை மான்யத்துடன் ஒருவருக்கு மாதமொன்றிற்கு ரூ. 15 வீதம் தொகுப்பு மான்யமும் அளிக்கப்படுகிறது,



2.28 ஒரு உயர்நிலை ஆசிரியை மற்றும் ஒரு தமிழாசிரியை ஆகியோரின் ஊதியத்திற்கான செலவுத்தொகை மான்யமாக அளிக்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டிற்கு ரூ. 95,870 செலவழிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 1.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(6) சேவை இல்லங்கள் நடத்த தனியார் நிறுவனங்களுக்கு உதவியளித்தல்.**

2.29. சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட பெண்களுக்கு 10 ஆம் வகுப்பு குறுகிய கால கல்விப் பயிற்சி அளிப்பதற்காக காந்தி கிராமத்திலுள்ள கஸ்தூரிபா சேவிகாஸ்ரம் என்ற தனியார் தொண்டு நிறுவனத்திற்கு ஒரு உள் உறுப்பினருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் உதவித் தொகை மான்யமாக அளிக்கப்படுகிறது.

2.30. சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட பெண்களுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் செயலகப் பயிற்சி அளிப்பதற்காக சென்னையிலுள்ள ஸ்திரி சேவா மந்திர் என்னும் நிறுவனத்திற்கு உதவித் தொகை மான்யமாக அளிக்கப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.3 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(7) வருடாந்திர மான்யம்.**

2.31. பல்வேறு சமூகநலப் பணிகளில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனமான இந்திய சமூக நல சங்கத்தின் தமிழ்நாடு கிளைக்கு வருடாந்திர மான்யமாக ரூ. 2,000 ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

**(8) ஆசிரியர் பயிற்சி நிலையம்.**

2.32. சமூக நலத்துறையின்கீழ் இயங்கும் சேவை இல்லங்கள் மூலமும் தனியார் நிறுவனங்கள் மூலமும் பத்தாம் வகுப்பு தேறியவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி தரும் பொருட்டு 1966-67 ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒன்று இளநிலை மற்றும் முதுநிலைப் பிரிவுகளுடன் தொடங்கப்பட்டு பல்லாவரத்தில் இயங்கி வருகிறது. இப்பயிற்சியில் ஒவ்வொரு பிரிவிலும் 40 பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். பயிற்சிக் காலங்களில் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2.33. பயிற்சிக் காலத்தில் மாணவிகளுக்கு தற்போது வழங்கப் படும் மாதாந்திர உதவித் தொகை ரூ. 50-லிருந்து ரூ. 75 ஆக 1985-86 ஆம் ஆண்டில் இருந்து உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

(9) பணிபுரியும் மகளிர் விடுதி.

2.34. அரசால் நடத்தப்படும் பணிபுரியும் பெண்கள் விடுதிகள்.

பணிபுரியும் மகளிர்க்கு பாதுகாப்பும், வசதியும் செய்து கொடுக்கும் பொருட்டு பணிபுரியும் மகளிர் விடுதி கட்டும் திட்டத்தை தமிழக அரசு பல நகரங்களில் செயல்படுத்தி வரு கிறது. அவை சென்னை (கிண்டி, எழும்பூர்), மதுரை, திருச்சி ராப்பள்ளி, ஓசூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 இடங்களில் செயல்படுகின்றன. எழும்பூர் விடுதியில் 35 பெண்களும் மற்ற விடுதிகளில் 50 பெண்களும் அனுமதிக்கப்படுகிறார்கள். மொத்த மாக இவ்வில்லங்களில் 285 பணிபுரியும் மகளிர் தங்கியுள்ளனர். இவ்விடுதியை நடத்துவதற்கென நிர்வாக பணியாளர்கள், ஒரு கண்காணிப்பாளர், இரண்டு சமையல்காரர்கள், ஒரு அடிப்படைப் பணியாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு துப்புரவுப் பணியாளர் ஆகியவர்களின் ஊதியம், விடுதிக் கட்டிட வாடகை ஆகிய செலவினங்களை அரசு மேற்கொள்கிறது. உணவுச் செலவு, மின்சாரக் கட்டணம் மற்ற இதர செலவுகளைப் பணிபுரியும் மகளிரிடமிருந்து சம அளவில் பகிர்ந்து வழங்கும் துறையின் மூலம் பிடித்தம் செய்து ஈடு செய்யப்படுகிறது. விடுதியில் வாடகைத் தொகையும் விகிதாச்சார முறைப்படி பணிபுரியும் மகளிரிட மிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

(10) பணிபுரியும் மகளிர் விடுதி கட்ட மான்யம் அளித்தல்.

2.35. பணிபுரியும் மகளிர் தொண்டு நிறுவனங்களால் நடத்தப் படும் விடுதிகளுக்குக் கட்டிடம் கட்டுவதற்கு மாநில மற்றும் மத்திய அரசுகள் நிதி உதவி அளித்து வருகின்றன. கட்டிடச் செலவில் 15 சதவிகிதம் அல்லது ரூ. 35,000 இதில் எது குறைவோ அதனை மாநில அரசு நிதி உதவி அளிப்பதற்கு வரையறை செய்யப் பட்டுள்ளது. 75 சதவிகிதம் மத்திய அரசு ஏற்கிறது. மீதமுள்ள 10 சதவிகிதம் செலவினைத் தொண்டு நிறுவனங்களே ஏற்க வேண்டும். 1983-84-ம் ஆண்டில் விடுதிகள் கட்டுவதற்கு 14 தொண்டு நிறுவனங்கள் மான்யம் பெற்றுள்ளன. 1984-85-ம் ஆண்டில் திருப்பூரில் உள்ள ஒய்.டபிள்யூ.சி.ஏ. தொண்டு நிறுவனம் 75 சதவிகிதம் ஆன ரூ. 14,61,000-ஐ மத்திய அரசிடமிருந்து மான்யமாகப் பெற்றுள்ளது.



(11) மகளிர் மன்றங்கள்.

2.36. சமுதாய மற்றும் பொருளாதார இடர்பாடுகளைக் களைந்து எறியும் பொருட்டு கிராமப்புற பெண்களைக் கொண்ட ஒரு அமைப்பாக மகளிர் மன்றங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ் வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் 11,250 மன்றங்கள் இருக்கின்றன. மகளிர் மன்றத்தில் அமைப் பாளர்களுக்கு ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் ரூ. 15 வீதம் மதிப் பூதியம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற் கும் ஆண்டொன்றிற்கு ரூ. 4,000 வீதம் சமூக நலத்துறையில் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கொடுக்கப்படுகிறது. இத்தொகை அமைப் பாளர்களின் மதிப்பூதியம், உணவை பாதுகாப்பது, சுகாதாரம், குழந்தைகள் நலம், ஊட்டச்சத்து தயாரித்தல் தொடர்பான செயல்முறை விளக்கம், குழந்தைகள் கண்காட்சி, கல்வி தொடர் பான சுற்றுலா மற்றும் சமுதாயக் கல்விக்கான புத்தகங்கள் வழங்குதல் போன்ற பணிகளுக்கு செலவிடப்படுகிறது.

2.37. மகளிர் மன்றங்கள் மூலமாக பொருளாதார நிலையை ஊக்குவித்தல்.

பலவிதமான பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ள மகளிர் மன்றங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. வருடம் முழுவதும் சிறப் பாக செயல்புரியும் மகளிர் மன்றங்களுக்கு பரிசுத் தொகை பண மாக வழங்கப்படுகிறது. சிறந்த மகளிர் மன்றங்கள் 3 வகையாகப் பிரிக்கப்பட்டு பரிசு வழங்கப்படுகிறது. 1983-84 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு மன்றங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன :—

| வகை. | எண்ணிக்கை. | பரிசுத் தொகையின் மதிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| அ | 19 | ரூ. 1,000 தலா |
| ஆ | 48 | ரூ. 600 தலா |
| இ | 60 | ரூ. 400 தலா |

(12) வழிகாட்டி நிலையம்.

2.38. 1983—84 ஆம் ஆண்டில் சேலம், திருநெல்வேலி, கன்னியா குமரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் நான்கு புதிய வழிகாட்டி நிலையங்கள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்த நான்கும் ஏற்கனவே சென்னை, மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள வழிகாட்டி நிலை யங்களுடன் கூடுதலாக செயல்பட்டு வருகின்றன. ஏறத்தாழ அனைத்து ஏழைப் பெண்களும் எழுத்தறிவு இல்லாதவர்களாகவும்

அரைகுறை கல்வி அறிவு உள்ளவர்களாகவும் இருப்பதனால் சுய வேலை வாய்ப்பு ஒன்றுதான் அவர்களுக்கு வழிகாட்டியாக அமையும். ஆகையால் இவ்வழிகாட்டி நிலையங்கள் முக்கியமாக சுயவேலை வாய்ப்புத் திட்டத்தை வளர்க்க பல்வேறு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடனுதவி பெற்றுத்தர தீவிரமாக பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றன. இதுவரை 25,071 நலிவடைந்த பிரிவில் உள்ள பெண்கள் இச்சுய வேலை வாய்ப்பு திட்டத்தில் வங்கிகள் மூலம் 53.5 இலட்சம் ரூபாய் கடனுதவி பெற்றுள்ளனர்.

2.39. இத்துடன் இவ்வழிகாட்டி நிலையங்களை அணுகும் நூற்றுக்கணக்கான பெண்கள், சமூக நிலையங்கள் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் அவர்களது குழந்தைகளுக்கு இடம் பெறுவதுடன், ஆயுள் காப்புத் தொகை, ஆயுள் வைப்புத் தொகை மற்றும் ஒய்வூதியம் பெறுதல் முதலிய உதவிகளைப் பெற்று வருகின்றனர். 1985–86-ம் ஆண்டிற்கு ரூ. 3.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(13) விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப்புத்தகம் மற்றும் நோட்டுப்புத்தகம் வழங்குவது.**

2.40. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,000-க்கும் கீழ் வருமானம் உள்ள விதவைப் பெண்களின் குழந்தைகள் பயன்பெற இலவசமாக பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் வழங்கும் திட்டம் 1978–79 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. குழந்தைகளுக்கு புத்தகமும், நோட்டுப் புத்தகமும் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகின்றன

ஆரம்பப் பள்ளியில் பயிலும் குழந்தைக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 15.

நடுநிலைப் பள்ளியில் பயிலும் குழந்தைக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 40

உயர்நிலைப் பள்ளியில் பயிலும் குழந்தைக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 60.

இதுவரை 20,583 குழந்தைகள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் 3,000 குழந்தைகள் பயன் பெறும் வகையில் செயல்படும் இத்திட்டத்திற்கு 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 1.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.41 மேல்நிலைக் கல்வி பயிலும் 1,000 குழந்தைகளுக்கு குழந்தை ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 100 மதிப்புள்ள புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் இலவசமாக வழங்குவதற்கு 1981–82 முதல் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. இதுவரை 3.616 குழந்தைகள் இந்தந் திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ரூ. 1 லட்சம் செலவில் 1,000 குழந்தைகள் பயன் பெறும் வகையில் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.



**(14) ஆதரவற்ற விதவைகளின் மகள்களுக்கு திருமணத்திற்கான உதவி.**

2.42. போதுமான பொருளாதார வசதி இல்லாததின் காரண மாக ஆதரவற்ற விதவைப் பெண்கள் தங்கள் பெண்களுக்கு திரு மணம் செய்து வைக்க மிகவும் அவதிப்படும் நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. அவர்களின் அல்லலைத் தவிர்க்கும் பொருட் டுத்தான் ஆதரவற்ற விதவைகளின் மகளிர்க்கு திருமணத்திற்காக உதவும் திட்டம் 1981–82 ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்டது. ஆண்டுற்கு ரூ. 3,000-க்கும குறைவாக வருமானமுள்ள விதவைப் பெண்கள் இதன் மூலம் பயன் பெறுவார்கள். இத்திட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள திருமண வயது 18 முதல் 30 வரை ஆகும். தகுதிபெற்ற விதவையின் ஒரே ஒரு மகள் மட்டுமே இந்த உதவி பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவார்.

2.43. ஒரு நபருக்கு ரூ. 1,000 வீதம் ஒவ்வொரு வருடமும் 1,000 ஆதரவற்ற விதவைகளுக்கு இந்த திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. சென்னை நகரத்தில் சமூக நல இயக்குநராலும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளராலும் இந்த உதவி பெற தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதுவரை 3,553 விதவைகளின் பெண்கள் இந்த திட்டத்தின்கீழ் பயன் பெற்றுள்ளனர். இந்தத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 10.15 இலட்சம் செலவில் 1,015 விதவைகள் பயன் பெறும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**(15) அநாதைப் பெண்களுக்கு திருமண உதவி.**

2.44. மேலே கூறிய ஏழை விதவைகளின் பெண்களுக்கு திரு மண உதவி வழங்குவதுடன், அநாதைப் பெண்களுக்கென்றே திருமண உதவி வழங்கும் திட்டம் 1984–85 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நபர் ஒன்றுக்கு ரூ. 1,000 வீதம் ஆண்டு வருமானம் ரூ. 3,000-த்துக்கு மேற்படாத 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட 1,000 அநாதை பெண்கள் பயன் பெறுவர். ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணிற்கு மட்டுமே இவ்வகையான உதவி வழங்கப்படும்.

**(16) இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்.**

2.45. 20 முதல் 40 வரை வயதுள்ள ஆதரவற்ற ஏழை விதவைப் பெண்டிர் மற்றும் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட பெண்டிர் மற்றும் உடல் ஊனமுற்ற பெண்டிர் மற்றும் ஆண்கள் ஆகியோர் தமது பிழைப்புக்கு வழி தேடும் வகையில் அவர்களுக்கு இலவச மாகத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தை அரசு ஏற்படுத்தி யுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்கள் தையல் கலைத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இத்திட்டம் 1974–75 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1984–85 ஆம் ஆண்டு முடிய 10.289 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1 000 பேர் பயனடையும் வகையில் 1985–86 ஆம் ஆண்டிற்கு ரூ. 7.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 17. விதவை மறுமணத் திட்டம்..

2.46. விதவை மறுமணத் திட்டம் 1975-76 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. விதவை மறுமணம் செய்து கொள்ளும் மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக ரூபாய் 5,000-க்கு எழாண்டிற்குரிய தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் கைம் பெண்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 18 முதல் 20 வயது வரையுள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதி பெற்றவர்களாவர். 1983–84 முடிய 1,094 தம்பதியர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். 1984–85 ஆம் ஆண்டில் 95 தம்பதியர் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தினைத் தொடரும் பொருட்டு 1985–86 ஆம் ஆண்டிற்கு ரூ. 5 இலட்சம் நிதி ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 18. முதியோர் இல்லம்.

2.47. திருச்சிராப்பள்ளியில் முதியோர் இல்லத்தை மீண்டும் 17—1—1985 முதல் துவங்கி நடத்துவதற்கு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த இல்லத்தினால் பயன் பெறும் முதியோர்களின் எண்ணிக்கை 25 ஆகும். மாதம் ரூபாய் 350 வரை வருமானமுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் முதியோர்கள் இந்த இல்லத்திற்கு சேருவதற்கு தகுதியுடையவர்கள். ஒவ்வொரு நபரும் உணவு மற்றும் கட்டிட வாடகைக்கு ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ. 140 செலுத்த வேண்டும்.

### 19. பிச்சைக்காரர்கள் பராமரிப்பு முகாம், மேல்பாக்கம்.

2.48. மேல்பாக்கத்திலுள்ள பிச்சைக்காரர்கள் பராமரிப்பு முகாம் தமிழ்நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சை எடுத்தல் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளியென தீர்ப்பு அளிக்கப்பட்ட பிச்சை எடுப்பவர்களுக்கென்றே நடத்தப்படும் பிச்சைக்காரர் இல்லமாகும். இம்முகாம் 1973 முதல் சமூக நலத் துறையின் பொறுப்பில் இருந்து வந்தது. இக்காப்பு முகாம் 1—12—1984 முதல் சிறைத் துறை தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இதில் 770 ஆடவரும், 180 பெண்டிரும் தங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. தற்போது 291 ஆண்களும் 58 பெண்களும் இவ்வில்லத்தில் தங்கி உள்ளனர். தற்போது இவ்வில்லத்தில் தங்கி இருப்போருக்கு நெசவுத் தொழில், தச்சு வேலை, தையற் தொழில் புத்தகக் கட்டமைப்பு ஆகிய பயனுள்ள வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வில்லத்தின் பராமரிப்பிற்காக 1985—86 ஆம் ஆண்டில் ரூ. 12.13 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



### 20. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்.

2.49. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பதிவு செய்யப்பட்டது. இதற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 1 கோடியாகும். கல்வி, உடல்நலம், வேலை வாய்ப்பு போன்ற எல்லாத் துறைகளிலும் மகளிர் முன்னேற செய்தலே இக்கழகத்தின் முக்கிய நோக்கம் ஆகும். நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களிலுள்ள பெண் தொழில் முனைவர்களை ஊக்குவிப்பதற்காக இக்கழகம் பல்வேறு பயிற்சி முகாம்களை நடத்தியுள்ளது. ஒருங்கிணைந்த தமிழ்நாடு ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ் ரூ. 10 இலட்சம் செலவில் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் நூறு மகளிர் வீதம் கறவை மாடுகள் வழங்குவதற்கு இக்கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இதுபோலவே தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் 16 லட்சம் செலவில் மதுரை மாவட்டத்தில் இருநூறு பெண்களுக்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருநூறு பெண்களுக்கும் ஆடுகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. மகளிர் முன்னேற்றத்திற்காக நார்வேஜியன் நிதி உதவியுடன் சென்னையில 75 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் நவின ஆப்செட் அச்சகம் அமைத்துள்ளது. 100 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் குழந்தைகளுக்காக கல்வி உபகரணங்கள் தயாரிக்க மதுரை மற்றும்'சென்னையில் ரூ. 26.48 லட்சம் செலவில் இரு தச்சுப்பட்டறைகள் நிறுவப்பட்டு வருகிறது. ஒலிபெருக்கி மற்றும் இடைநிலை அலைவரிசை மாற்றுக் கருவிகள் தயாரிக்க ரூ. 5.94 இலட்சத்தில் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் திரை அச்சு மற்றும் பிளாஸ்டிக் வார்ப்புகள் தயாரிக்கும் திட்டம் ரூ. 5.40 லட்சத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக 23 பெண்களுக்கு பயிற்சி தரப்படுகிறது. மத்திய அரசின் ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சி திட்டம், இந்த கழகத்தின் வாயிலாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதனால் 750 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. சுமார் 1,400 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் 17 சிறிய தல திட்டங்களை தொடங்க இக்கழகம் திட்டமிட்டுள்ளது. எதிர்கால திட்டமாக தமிழகத்தில் மகளிர் நிலை குறித்து ஒரு சிறு நூலை வெளியிட இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

### 21, பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிவகாசி பகுதியில் சமுக வளர்ச்சித் திட்டம்.

2.50. சிவகாசி, சாத்தூர் மற்றும் வேம்பக்கோட்டை வட்டாரங்களிலும், சிவகாசி மற்றும் சாத்தூர் நகராட்சிகளிலும் அடங்கிய பகுதியில் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் மற்றும் சிறுவர்களுக்கு சில அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்காக அரசு ஒரு திட்டத்தை தயாரித்தது. இத்திட்டம் 1984-85 1985–86, 1986–87 ஆகிய மூன்று ஆண்டுகளில் மொத்தம் ரூபாய் 136.97 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படும். 'யூனிசெப்' நிறுவனம் இத்திட்டத்திற்காக ரூ. 77.88 இலட்சம் நிதி உதவி

வழங்கும். இந்த மூன்றாண்டுகளிலும் மாநில அரசு இத்திட்டத்திற்காக ரூபாய் 46.41 இலட்சம் செலவினை ஏற்கும். இத்திட்டத்திற்கு பொதுமக்களின் நன்கொடை ரூபாய் 12.68 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் கீழ்க் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்படும்:—

(1) ஒன்பது சிறு சுகாதார மையங்கள் அமைத்தல் ;

(2) சாத்தூரிலும், சிவகாசியிலும் இரண்டு மழலைகள் நல வைத்திய அலகுகள் அமைத்தல் :

(3) வைத்திய அலுவலர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் புத்தறிவுப் பயிற்சி அளித்தல் ;

(4) சாத்தூர் மற்றும் சிவகாசியிலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு நடமாடும் வைத்திய ஊர்திகள் வழங்குதல் ;

(5) ஊட்டச் சத்து நலவாழ்வு மற்றும் சுகாதாரக் கல்வி அளித்தல் ;

(6) பெருமளவில் தடுப்பு ஊசி போடுதல் ;

(7) வாய் வழி உடல் நீர் பாதுகாத்தல் ;

(8) சாத்தூர் மாநகராட்சியில் குடிநீர் குழாய்களை விரிவுபடுத்துதல் ;

(9) முதலமைச்சர் சத்துணவு மையங்களுக்கும், பால்வாடிகளுக்கும் மற்றும் பள்ளிகளுக்கும் குடிநீர் குழாய்களை விரிவுபடுத்துதல் ;

(10) குடிநீர் கைக்குழாய்களை அமைத்தல் ;

(11) கழிப்பிடங்கள் ஏற்படுத்துதல் :

(12) கிராமப் பகுதிகளில் கழிவு நீர் அகற்றுதல் மற்றும் சிமெண்ட் பலகைகள் போடுதல் ;

(13) கொசு ஒழிப்பு ;

(14) 100 முறைசாராக் கல்வி நிலையங்களை அமைத்தல் ;

(15) பணியாளர்களுக்கு கல்வி போதித்தல் ;

(16) தொழிலாளர்களுக்கு தொழில் செய்யும்போது பாதுகாப்பு அளித்தல் ;

(17) அளத்தல், மேற்பார்வை மற்றும் மதிப்பிடு செய்தல் ;

(18) திட்ட அலுவலகத்திற்கு பணியாளர்கள், ஊர்திகள் மற்றும் தளவாடங்கள் வழங்குதல்.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான தலைமைப் பொறுப்பு காமராஜர் மாவட்ட ஆட்சியாளரை சேரும்.



## அத்தியாயம் 3.

### குழந்தைகள் நலம்

3.1. குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து, கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு வழங்குவதற்கு இத்துறையின் பெரும் பாலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சமூக நலத் துறையின் மூலம் 2 முதல் 4 வரையுள்ள குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இணைந்து செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல வளர்ச்சித் திட்டத்தின் மூலம் எல்லா குழந்தைகளின் சுகாதாரம் பராமரிக்கப்பட்டு, அவர்களுக்குபோஷாக்கும் அளிக்கப் பட்டு வருகிறது.

1. மாண்புமிகு முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்,

3.2. தமிழகம் பல வகைகளில் முன்னோடியாகத் திகழ்ந்த பெருமை வாய்ந்தது. அதில் ஒன்றாக மாண்புமிகு முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டில் 1—7—1982 முதல் கிராமப்புறங்களிலும், 15—9—1982 முதல் நகர்ப்புறங்களிலும், 2 வயது முதல் 4 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துக் குறைவு ஏற்படாமல் தடுப்பதற்காகவும், முன் பருவக்கல்வி அளிப்பதற்காகவும் சுகாதாரப் பாதுகாப்பு அளிப்பதற்காகவும் துவக்கப்பட்டது. தற்போது கிராமப் பகுதிகளில் 23,040 குழந்தைகள் நல மையங்களும், நகர்புறத்தில் 5,065 குழந்தைகள் நல மையங்களும் நடைபெற்று வருகின்றன. இத் திட்டத்தில் 2 வயது முதல் 4 வயது வரையுள்ள பயனடைவோர் குழந்தைகள் எண்ணிக்கை 23.3 இலட்சங்களாகும்.

3.3. குழந்தைகளுக்கு பயன் அளிப்பதுடன் ஆயிரக்கணக்கான வேலையற்ற ஏழை மகளிர் பலர் இத்திட்டத்தின் மூலமாக வேலை பெற்றதனால் இத்திட்டம் அவர்களுக்கோர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. குழந்தைகள் நல அமைப்பாளர்களாக பணியமர்த்தப் பெற்றுள்ள 28,106 மகளிரில் தாழ்த்தப்பட்டோர் மலை ஜாதியினர் 5,383 பேரும், விதவைகள் 1,033 பேரும், ஆதரவற்ற மகளிர் 1,173 பேரும் உள்ளனர். அதுபோல குழந்தைகள் நல உதவியாளர்களாக அமர்த்தப் பெற்ற 56,210 மகளிரில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலை ஜாதியினர் 11,463 பேரும், விதவைகள் 7,448 பேரும், ஆதரவற்றோர் 5,603 பேரும், அடங்குவர். ஆக இத்திட்டத்தில் 84,315 மகளிர் குழந்தைகள் நல அமைப்பாளர்களாகவும், குழந்தைகள் நல உதவியாளர்களாகவும் பணியமர்த்தப் பெற்றுள்ளனர்.

3.4. இத்தன்னிகரில்லாத் திட்டம் சமூகத்திற்கு ஊட்டச் சத்து, முன் பருவக்கல்வி சுகாதார பாதுகாப்பு ஆகிய மூன்று நிலைகளில் பயனளித்து போற்றுதற்குரிய பணியைச் செய்துவருகிறது.

3.5. **ஊட்டச் சத்து திட்டம்** :— இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு கீழ்க்கண்ட அளவு பொருள்களைக் கொண்டு தலத்திலேயே தயாரித்த சூடான உணவு அளிக்கப்படுகிறது ;—

| | | |
|---|---|---|
| 1. | அரிசி | 80 கிராம் |
| 2. | பருப்பு | 10 கிராம் |
| 3. | எண்ணெய் | 3 கிராம் |
| 4. | காய்கறி மற்றும் தாளிதம் | 50 கிராம் |

3.6. ஒரு குழந்தைக்கு ஒரு வேளை உணவுக்காகும் செலவு 0.44 பைசா ஆகும். இச்சத்துணவு மூலமாக ஒவ்வொரு குழந்தைக்கும் சுமார் 411 கலோரிகள் தினந்தோறும் கிடைக்கும் என ஊட்டச்சத்து வல்லுநரால் கணக்கிடப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு சுகாதாரமான முறையில் சமைக்கப்பட்டு சூடாகவும், மணமுள்ளதாகவும் கூடிய சத்துணவு தினந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. குழந்தைகள் நல மையங்களில் சமையல் செய்வதற்காக ஒவ்வொரு மையத்திற்கும் ரு. 2,000 மதிப்பிற்கு சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. எரிபொருள்களுக்கான செலவை மீதப்படுத்த குழந்தைகள் நல அமைப்பாளர்கள் வைக்கோல் பெட்டியை உபயோகிப்பது குறித்து அறிவுரைகளுடன் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.

3.7. **முன்பருவக் கல்வி** :—அனைத்துக் குழந்தைகள் நல மையங்களுக்கும் ரூ. 600 மதிப்பிற்கான கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கல்வி உபகரணங்கள் மூலம் மூன்று வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் நல மையங்களில் முன் பருவக்கல்வியை கற்று வருகிறார்கள்.

3.8. **உடல் நலம் பராமரித்தல் தடுப்பு ஊசி, உடல் நலம் சரி பார்த்தல், எடை பார்த்தல்**.— இத்திட்டத்தின்கீழ் குழந்தைகள் நல மையத்தில் உள்ள குழந்தைகளின் உடல் நலத்தினை முறைப்படி சரிபார்ப்பதற்கான பணிகள் பொது சுகாதார மையங்களின் மருத்துவர்கள், நகராட்சி சுகாதார அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குழந்தை நல மையத்தில் முறைப்படி தடுப்பு ஊசிக்கான முகாம்கள் நடத்தப்படுகின்றன. அரசு ஆரம்ப சுகாதார மையங்களின் மருத்துவ அலுவலர்கள் முறைப்படி குழந்தை நல மையங்களைப் பார்வை இடுவதற்காக அவர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. முதற்கண் நடப்பு ஆண்டில் மதுரை, கோவை பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 6 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி போடுவதற்கான தீவிர இயக்கம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

3.9. 'யுனிசெப்' நிறுவனத்தாரின் உதவியுடன் ரூ. 5,68,800 பெறுமான எடைகாட்டும் கருவிகள் 2,400 சத்துணவு மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதர மையங்களில் உள்ள குழந்தைகளின்



வளர்ச்சியை பராமரிக்கும் பொருட்டு 'யூனிசெப்' நிறுவனம் இதர மையங்களுக்கும் எடை பார்க்கும் கருவிகள் வழங்க ஆரம்பித்துள்ளது. குழந்தைகள் எடையைப் பதிவு செய்து அவர்களின் வளர்ச்சிகளை கண்காணிப்பதற்காக மாநிலத்தில் உள்ள குழந்தைகள் நல மையங்களுக்கு சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

3.10. கிராமப்புற குழந்தை நல மையங்களில் உள்ள குழந்தைகள் தங்கள் பற்களை நன்கு கவனம் செலுத்தி பேணிக் காக்க இலவசமாக பற்பொடி வழங்கப்படுகிறது.

3.11. **முதலமைச்சர் சத்துணவு திட்டத்தை ஒய்வூதியம் பெறும் முதியோர்களுக்கும், முன்னாள் படை வீரர்கட்கும் நீட்டித்தல்**.— இத்திட்டத்தின் மூலம் 15–1–1983 முதல் ஓய்வூதியம் பெறும் 2,80,032 பேருக்கு கீழ்க்கண்ட பொருட்களைக் கொண்டு சமைக்கப்பட்ட உணவு ஒருவேளை வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| அரிசி | 200 கிராம் |
| பருப்பு | 15 கிராம் |
| எண்ணெய் | 3 கிராம் |
| காய்கறி மற்றும் தாளிதம் | 50 கிராம் |

மேற்கண்ட இந்த உணவின் மதிப்பு 90 பைசா ஆகும். இத்துடன் ஒய்வூதியம் பெறும் முதியோர்கட்கு ½ கிலோ அரிசி வாரந் தோறும் வழங்கப்படுகிறது. சத்துணவு பெறாத முதியோர்கட்கு வாரம் ஒரு கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

3.12. 1–1–1984 முதல் அரசு இத்திட்டத்தை முன்னாள் படை வீரர் நல நிதியிடமிருந்து ஓய்வூதியம் பெறும் முன்னாள் படை வீரர்கட்கும் அவர் தம் விதவையர்கட்கும் நீட்டித்து உத்தரவு வழங்கியுள்ளது. தற்போது இத்திட்டத்தின்கீழ் 102 பேர் சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு பெற்று வருகிறார்கள்.

**(2) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.**

3.13. குழந்தைகளுக்கும், சமுதாயத்தில் நலிவுற்ற கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் செறிவு மிகுந்த பணிகள் ஒருங்கிணைந்த வடிவில் வழங்குகிற அளவில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குழந்தை பிறப்பதற்கு முன்னாலுள்ள நிலையிலேயே கவனம் செலுத்துவதோடு அது பிறந்து ஆறு வயது வரை அக்குழந்தைக்கு ஊட்டச்சத்து தேவைகள், சுகாதார பராமரிப்பு மற்றும் மனவளர்ச்சி ஆகியவற்றிற்கு தொடர்ந்து உதவி செய்கிறது. இத்திட்டம் முதலில் சென்னை, தளி மற்றும் நிலக்கோட்டை ஆகிய இடங்களில் 1975–76 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1982-83ல் மேலும் 27 இடங்களிலும 1983—84ல் மேலும் 9 இடங்களிலும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. தற்சமயம்

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, வேலூர்' திருவொற்றியூர், சேலம், தஞ்சாவூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், ஆலந்தூர், கும்பகோணம், திருநெல்வேலி, தூத்துக் குடி, நாகர்கோவில், இராஜபாளையம் மற்றும் கடலூர் ஆகிய நகர்ப்புறப் பகுதிகளிலும், மதுரை மாவட்டத்திலுள்ள நிலக் கோட்டை கிராமப்புற பகுதியிலும், தர்மபுரி மாவட்டத்திலுள்ள தளி என்னும் மலைப்பகுதியிலும் சேர்த்து மொத்தம் 39 திட்டப் பிரிவுகள் உள்ளன.

3.14. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஊட்டக்குறைவு மற்றும் அதன் தொடர்பான குறைபாடுகளை எதிர்த்துப் போராட கீழ்க்கண்ட செறிவுப் பணிகள் மூலம் முயற்சி செய்கிறது.—

(1) துணை ஊட்டச்சத்து

(2) பள்ளி முன்னிலைக் கல்வி

(3) மருத்துவ சோதனை

(4) நோய்த் தடுப்பு

(5) மேல் மருத்துவ சோதனை

(6) சமுதாயத்தில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி.

இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் மற்றும் தாய்மார் களுக்கும் 'கேர்' உணவுப் பொருள்களான ஸி.எஸ்.எம்., சாலட் எண்ணெய், பல்கர் கோதுமை வழங்கப்படுகின்றன. இந்த கேர் உணவுப்பொருள்கள் 39 திட்டப்பிரிவுகளுக்கும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் குழந்தை நல மையங்களில் 6 மாதங்கள் முதல் 2 வயது வரையிலான குழந்தைகளுக்கு 80 கிராம் ஐ.சி.எஸ்.எம் மாவினைக் கொண்டு தயாரிக்கப்பட்ட திரவ உணவு வாரத்திற்கு ஆறு நாட்களுக்கு வழங்கப்படுகிறது. கருவுற்ற மற்றும் பாலூட் டும் தாய்மார்கள் வாரப் பங்கீடான 720 கிராம் பல்கர் கோதுமை யும், 42 கிராம் சாலட் எண்ணெய் ஆகியவற்றை வாரத்திற்கு ஒரு முறை பெற்று வீட்டிற்கு எடுத்துச் செல்கிறார்கள். தற்போது 78,040 குழந்தைகளுக்கும் 96,640 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் 'கேர்' நிறுவனம் வழங்கும் ஐ.சி.எஸ்.எம். மற்றும் பல்கர் கோதுமை ஆகியவை வழங்கப்படுகின்றன.

3.15. குழந்தை நல அமைப்பாளர்களுக்கு அவ்வப்போது விரி வான வழிகாட்டியாக இருக்கக்கூடிய அளவில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட செய்தி அறிவிப்பு வெளியீடு ஒன்று 'பிள்ளைக் கனியமுதே' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டு வருகிறது. 1985-86ஆம் ஆண்டு 39 ஒருங்கிணைந்த குழந்தைப் வளர்ச்சிப் பணிகள் திட்ட பிரிவுகளுக்கு ரூ. 395,05 இலட்சங்கள்



நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (1985.. 86) 13 புதிய பணித்திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் துவக் கப்பட உள்ளது.

**(3) சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவி யுடன் தாய்சேய் நலப் பணிகள் திட்டம்.**

3.16. ஆறு மாதம் முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தை களுக்கும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கும் சேவை புரியும் பொருட்டு உலக வங்கியின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட ஓர் ஒருங்கிணைந்த திட்டம்தான் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம். தாய் சேய் நல பணித் திட்டத்தின் கீழ் துணை ஊட்டச் சத்து உடல் நலம் மற்றும் ஊட்டச் சத்துக் கல்வி, சிறப்பு மருத்துவ சோதனை, உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்துக் கல்வி மற்றும் முறைசாராக் கல்வி ஆகிய பல்வேறு திட்டங்கள் அடங்கியுள்ளன.

தற்பொழுது இத்திட்டத்தின் கீழ் சென்னை மாநகரத்திற்குள் 134 குழந்தைகள் நல நிலையங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு நிலையத்திலும் ஒரு குழந்தை நலஅமைப்பாளரும் இரண்டு குழந்தை நல உதவியாளர்களும் பணிபுரிகின்றனர். மேலும் நடமாடும் மருத்துவ நிலயங்கள் மூலம் மூன்று மருத்துவ அலுவலர்கள் தம் உதவி மருத்துவ பணியாளர்களுடன் உடல்நல செயல்முறைத் திட டங்கள் நடத்தி வருகின்றனர். 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் மற்றும் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் 'கேர்' உணவு பொருட்களைக் கொண்டும் இதர குழந்தைகளுக்கு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உள்ளூர் உணவினைக் கொண்டும் ஊட்டச்சத்துணவு அளிக்கப்படுகின்றது.

3.17 சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம் 11-ன் கீழ் 1982-83 1983-84 மற்றும் 1984-85ஆம் ஆண்டுகளில் 283 குழந்தைகள் நல நிலையங்கள் ஆரம்பிக்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட 283 குழந்தைகள் நல நிலையங்களில் தற்போது 46 குழந்தை நல நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. 1985-86ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத் தில் இத்திட்டத்திற்கென ரூ. 42.37 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(4) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.**

3.18. உலக வங்கியின் உதவியுடன் செயல்படும் இத்திட்டத்தின் முதற்கட்டப்பணி கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் முன் னோடித் திட்டமாக 1980ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் துவங்கி யது. பின்னர் இத்திட்டம் மதுரை, இராமநாதபுரம், காமராஜர் பசும்பொன் முத்துராமலிங்கம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, வட ஆற்காடு மற்றும் செங்கற்பட்டு ஆகிய 8 மாவட்டங்களுக்கு படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் கிராம சமு

தாயத்தில் நலிந்த மற்றும் மிகவும் ஏழ்மையான மக்கள் பயன் பெறும் வகையில் மேற்படி 8 மாவட்டங்களில் 9,000 சமுதாய ஊட்டச் சத்து மையங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3.19. இந்த திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. 55.78 கோடியாகும். ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப்பணி முயற்சிகளை திறமையாகவும் பரவலாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இது ஊட்டச் சத்து குறைந்த மிகவும் நலிந்த பிரிவிலரான 6 மாதம் முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகளுக்கு முறையான மற்றும் ஒருமுக நோக்கத்தோடு செயல்படுவதின் மூலம் நிறைவேற்றப்படும்.

3.20. ஊட்டச்சத்து மையம் கிராமங்களுக்கு அனைத்துப் பணிகளையும் தரும் முக்கிய இடமாக உள்ளது. இவை சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் பொறுப்பில் இருந்து வருகின்றன. இவர்களது பணி, ஊட்டச் சத்து மேற்பார்வையாளர்களால் கண்காணிக்கப்படுகிறது. மேலும் வட்டார அளவில் சமுதாய ஊட்டச் சத்துப் பயிற்றுநர்களாலும் வட்ட அளவில் வட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர்களாலும், மாவட்ட அளவில் மாவட்ட ஊட்டச் சத்துத் திட்ட அலுவலர்களாலும் வழி நடத்தப்படுகின்றது. திட்டம் குறித்து மாவட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர்கள் மற்றும் வட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர்கள் மாறுப்பட்ட கால அளவில் வெவ்வேறு பயிற்சி நிறுவனங்களில் 3 வார திட்டப் பயிற்சியும் பெறுகின்றார்கள். இப்பயிற்சி அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலும், பவானிசாகர் குடிமுறைப் பணிகள் பயிற்சி நிலையத்திலும், காந்தி கிராம ஊரகக் கழகத்திலும் அளிக்கப்படுகின்றன. ஊட்டச் சத்துப்பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக பயிற்றுனர்கள் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி அல்லது காந்தி கிராம ஊரகக் கழகத்தில் ஒரு மாத பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்றுநர்கள் சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்களுக்கு வட்டார அளவில் இருமாதப் பயிற்சியளிக்கின்றனர். சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் வேலைத் திறனையும் திட்ட அறிவையும் மேம்படுத்தும் வகையில் தொடர் இடைவெளி உட்பணிப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

3.21. ஆறு மாதம் முதல் 3 வயதிற்குட்பட்ட எல்லா குழந்தைகளின் எடையும் மாதா மாதம் எடுக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சத்துக் குறைவுள்ள குழந்தைகளுக்கும், கருவுற்றவர்களுக்கும், தாய்மார்களுக்கும், இணை உணவு தரப்படுகின்றது. மேலும் குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை வைட்டமின் 'ஏ' திரவமும் நான்கு மாதத்திற்கு ஒரு முறை வயிற்றுப்பூச்சி நீக்கும் மருந்தும் தரப்படுகிறது. பொது சுகாதாரத் துறையின் கீழ் பணியாற்றும் பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் குழந்தைகளுக்குத் தடுப்பு



ஊசிகள் போடுகின்றனர்.

3.22. ஒவ்வொரு 5,000 மக்கட்தொகைக்கும் ஒரு சுகாதாரத் துணை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு ஒரு ஆண் சுகாதாரப் பணியாளரும், ஒரு பெண் சுகாதாரப் பணியாளரும் பணி புரிகின்றனர். அந்த சுகாதாரப் பணியாளர்களின் சேவையை ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலரின் கீழ் பணியாற்றும் சுகாதார மேற்பார்வையாளர்கள் கண்காணிக்கின்றனர் இத்திட்டத்தின் கீழ் எட்டு மாவட்டங்களில் 1 600 சுகாதார துணை நல மையங்களைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதில், 795 மையங்கள் 1984-85ஆம் ஆண்டு முடிவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

3.23 கிராம சமுதாயத்தின் சுகாதாரம் மற்றும் உணவு பழக்கங்களை மாற்றியமைக்கும் முயற்சியில் திட்டம் வெற்றி பெறுவதற்கான ஒரு இன்றியமையாத அமைப்பாக இத்திட்டத்தின் தொடர்புப் பிரிவு கருதப்படுகிறது. கருத்தரங்குகள், பயிற்சி, தகவல் கூட்டங்கள், புத்தறிவுப் பயிற்சி இயக்கங்கள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம் திட்டத்தின் பல்வேறு பணியாளர்களுக்கும் திட்டத்தின் குறிக்கோள், செயல்முறை முதலானவற்றைப் போதித்து வருகின்றது. திரைப்படங்கள், சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள். செய்தித்தாள்கள் ஆகியவைகளைப் பயன்படுத்தித் திட்டம் சம்பந்தமான செய்திகள் பரப்பப்படுகின்றன. ஊட்டச் சத்து, சரிவிகித உணவு, வயிற்றுக்கடுப்பு தடுப்பு, தாய்ப்பால் ஊட்டுதல், நல்ல கண்பார்வைக்கு வைட்டமின் 'ஏ' முக்கியத்துவம் ஆகிய முக்கியமான பணிகளை இச் செய்தித்தொடர்பு பணி செய்து வருகின்றது.

3.24. உலக வங்கி குழு 1985 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் தமிழகத்திற்கு வருகை தந்தது. அக்குழு எல்லா மாவட்டத்திலும் உள்ள திட்டப் பணியாளர்களுக்கு சீரிய முறையில் இத்திட்டம் செயல்படுவது குறித்து திட்டம் சம்பந்தமான அனைத்து அலுவலர்களுக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது. மேலும் இக்குழு எந்த நோக்குடன் இத்திட்டம் செயல்படுகின்றதோ அந்த திட்டத்தின் செயல் விளைவின் பயனை கண்டு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

### (5) பழங்குடியினருக்கான குழந்தை நல நிலையங்கள்.

3.25. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தென்னாற்காடு, வடாற்காடு, சேலம், தர்மபுரி, மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 169 குழந்தை நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன. வட ஆற்காடு, மதுரை, கன்னியாகுமரி நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார் மற்றும் சேலம் மாவட்டங்களில் பழங்குடியினர் மற்றும் ஆதிவாசிகளின் குழந்தைகளுக்காக செயல்பட்டு வந்த 49 பாலர் பள்ளி மையங்கள் 01—07—1982 முதல் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் இணைக்கப்பட்டு நடத்துவதற்கு 1985—86 ஆம் ஆண்டில் ரூ. 43.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (6) பாலர் பள்ளிகள்.

3.26. அரசே கிராமப்புறங்களில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக்க
லாம் என்பதனை கொள்கை அளவில் ஏற்று இதனைப் படிப்படி
யாக செயலாக்கும் பொருட்டு முதற்கட்டமாக 1982-83 ஆம்
ஆண்டில் ஏற்கனவே சமூக நலத் துறையினரால் பராமரிக்கப்பட்டு
வரும் 4,343 குழந்தைகள் நல மையங்களில் நர்சரி பள்ளிகளைத்
திறக்க அனுமதிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 1983-84-ல்
5,000 குழந்தைகள் நல மையங்களிலும் மூன்றாம் கட்டமாக
1984-85ல் 5,000 குழந்தைகள் நல மையங்களிலும் நர்சரி பள்ளி
களைத் திறக்கஅனுமதிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள்நல மையங்களி
லுள்ள அமைப்பாளர்களே மேற்படி நர்சரி வகுப்புகளை நடத்துவ
தற்கு கல்வித்துறையைச் சார்ந்த ஆதாரப் பயிற்சியாளர்கள் மூலம்
சிறப்புப் பயிற்சி அளிக்சப்பட்டுள்ளது. மூன்று முதல் ஐந்து வயது
வரையிலான குழந்தைகளுக்கு கதை மழலையர் பாட்டு மற்றும்
விளையாட்டு மூலம் போதிக்கப்படுகிறது. குழந்தைகள் பொது
அறிவை விரிவு படுத்திக் கொள்ளும் வகையில் ஆக்க உணர்வினை
செம்மைப்படுத்திக்கொள்ளவும், சுகாதாரம் மற்றும் நற்பழக்கங்
களை பின்பற்றவும் போதிக்கப்படுகின்றனர். குழந்தைகள் சுய
வளர்ச்சியை முன்னிட்டு தங்கள் உரையாடல் திறமையினை மேம்
படுத்திக்கொள்ள வலியுறுத்தப்படுகிறது. இக்கல்விக்கான பாடத்
திட்டங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரைக் கொண்ட குழுவால்
வகுக்கப்பட்டுள்ளது. மாண்டிசரி கல்வி நிலைக்கு ஒத்த வகையில்
சிறப்புக் கல்வி உபகரணங்கள் இப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு
வருகின்றன. இச்சீரிய திட்டம் புதிய தலைமுறையை உருவாக்கி
மாநிலத்திற்கும் நாட்டிற்கும் பெருமையைக் கொணரவல்லது
என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1985-86 ஆம்
ஆண்டில் ரூ. 3,877.66 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (7) அரசால் நடத்தப்படும் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள்.

3.27. (அ) 5 வயது முதல் 18 வயது வரையிலான ஆதரவற்ற
குழந்தைகளுக்கு இல்லம் ஒன்றுக்கு 250 நபர்களைக் கொண்ட 4
ஆதரவற்றோர் இல்லங்கள், சமூக நலத் துறையினால் 1984 ஆம்
ஆண்டு செப்டம்பருக்கு முன் நடத்தப்பட்டு வந்தது, அவைகள்
சென்னை, மதுரை, சேலம் மற்றும் கன்னியாகுமரியில் அமைந்
துள்ளன,

(ஆ) 15—08—1984 அன்று மாண்புமிகு முதலமைச்சரின்
அறிவிப்பின்படி குறைந்தபட்சம் 100-ம் அதிகபட்சம் 250 குழந்தை
களை அனுமதிக்கும் வகையில் சென்னையில் மேலும் ஒரு புதிய
குழந்தைகள் பராமரிப்பு இல்லமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன்
படி, சென்னை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கடலூர், தஞ்சா
வூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, ராமநாதபுரம்
ஸ்ரீவைகுண்டம், தர்மபுரி, ஈரோடு, அவிநாசி, உதகமண்டலம்,
மானாமதுரை, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில்
ஒவ்வொன்றாக 16 இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மார்ச்சு
1985 முதல் எல்லா இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன.



(இ) ஆண்டு ஒன்றிற்கு உடைக்காக ரூ. 35-ம் படுக்கை செல
விற்காக ரூ. 20-ம் புத்தகங்களுக்காக ரூ. 25-ம் வழங்கப்படுகின்றன.
உணவிற்கான செலவு குழந்தை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 60
ஆகும். பெண் குற்றவாளிகளின் குழந்தைகளும் இந்த அரசு
ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படு
கின்றனர்,

3.28. இவ்வில்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு இலவச
மாக உணவு, உடை, உறையுள், மருத்துவம் மற்றும் கல்வி வசதி
கள் செய்து தரப்பட்டுள்ளன. 5ஆம் வகுப்பு வரையிலான கல்வியை
அவர்கள் தங்கியுள்ள இல்லங்களிலேயே பெறும் இக்குழந்தைகள்
அதற்கு பிந்தைய கல்வியைப் பெறுவதற்கு அரசு பள்ளிகளுக்கோ,
மாநகராட்சி பள்ளிகளுக்கோ அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

## (8) ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு

3.29. **தனியார் நிறுவனங்களுக்கு மானியம் ;**

ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்து அவர்கள்
வாழும் சமூகத்தில் அவர்களையும் மற்ற குடிமக்களைப்போல வாழ
வைக்கும் நோக்கத்துடன் 1974-75 ஆம் ஆண்டு இத்திட்டம்
தொடங்கப்பட்டது. அவர்களுக்கு போதிய அளவு உணவு, உடை
இருப்பிடம், மருத்துவ வசதி, கல்வி, வாழ்க்கைக்குத் தேவையான
கல்விப் பயிற்சி முதலிய வசதிகளை அளிப்பது இத்திட்டத்தின்
நோக்கமாகும். இத்திட்டம் குடில் முறையை அடிப்படையாகக்
கொண்டது. ஒவ்வொரு குடிலும் 25 குழந்தைகளைக் கொண்டது.
ஒவ்வொரு குடிலுக்கும் ஒரு இல்லத்தாயும் ஒரு சமையற்காரரும்
நியமிக்கப்படுகின்றனர். 50 குழந்தைகள் அடங்கிய இரு குடில்
களுக்கு ஒரு பயிற்சி பெற்ற சமூக ஊழியரும் நியமிக்கப்படுகிறார்.
இவ்வில்லத்தாய்களின் உதவியுடன் 5 முதல் 18 வயது வரையுள்ள
குழந்தைகளுக்கு தமது சொந்த குடும்பங்களில் வசிப்பது போன்ற
உணர்வை ஏற்படுத்தும் வகையில் இச்சேவை செய்யப்படுகிறது.
இத்திட்டத்தினை செயல்படுத்தி வரும் தனியார் தொண்டு நிறு
வனங்களுக்கு வழங்கப்படும் அரசு மான்யத்தை மத்திய அரசும்
மாநில அரசும் முறையே 45:45 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்
கின்றன. மீதமுள்ள 10 சதவிகித செலவுத்தொகையை நிறுவனமே
ஏற்றுக்கொள்ளும். 1-4-1979-லிருந்து மேற் குறிப்பிட்ட
விகிதத்தில் உதவி அளிக்கப்படுகிறது. 1-4-1979-க்கு முன்பு
அனுமதிக்கப்பட்டு தொடங்கப்பட்ட இல்லங்களுக்கான முழு
செலவுத் தொகையையும் (அதாவது 90 சதவிகிதம்) மாநில அரசே
ஏற்றுக்கொள்கிறது. பராமரிப்பு மான்யத்துடன் ஒரு குடிலுக்கு
ரு. 1.50 லட்சம் வீதம் கட்டிட மான்யமும் அளிக்கப்பட்டு வரு
கிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 140 நிறுவனங்கள்
மான்யம் பெற்று வருகின்றன. 10,930 ஆதரவற்ற குழந்தைகள்
இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனர்.

**3.30. தஞ்சை இந்திய குழந்தைகள் நல சங்கத்தினரால் நடத்தப்படும் குழந்தைகள் நல இல்லத்திற்கு மான்யம் அளித்தல்.** [1985 ஜூலை 1

தஞ்சையிலுள்ள இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தினரால் நடத்தப்பட்டு வரும் குழந்தைகள் நல இல்லத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு சீர்திருத்தப்பள்ளித் துறையிலிருந்து சமூக நலத்துறைக்கு மாற்றப்பட்டு இவ்வியக்கத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 30,000 பராமரிப்பு மான்யமாக வாங்கப்பட்டு வருகிறது.



1985 ஜூலை 11] அத்தியாயம் 4.

### உடல் ஊனமுற்றோர் நலம்

4.1 மொத்த மக்கட்தொகையில், ஊனமுற்றவர்கள் குறிப்பிடத்தக்க விழுக்காடு அமைந்துள்ளார்கள். அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கவும், இயல்பான மற்றும் பயனுள்ள வாழ்க்கைக்கு வழி காட்டவும் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசின் முயற்சியும் உதவியும் பெருமளவு தேவைப்படுகிறது.

4.2. இம்மாநிலத்தில் உள்ள ஊனமுற்றோர்களின் நலனுக்காக இவ்வரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது. மருத்துவம், வாழ்க்கைத் தொழில், பொருளாதார மற்றும் சமூக மறு வாழ்விற்கு உதவுவதே இத்திட்டங்களின் முக்கிய பணிகளாகும். ஊனமுற்றவர்கள் நலனுக்காக ஒதுக்கப்படும் மொத்த ஒதுக்கீடு ஆண்டு தோறும் உயர்கிறது. 1985-86 ஆம் ஆண்டில் ரூபாய் 186.81 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4.3. 1984-85 ஆம் ஆண்டு முடிய 85,225 ஊனமுற்றவர்கள் அரசினரால் வழங்கப்பட்ட பல்வேறு சலுகைகளினால் பயன் அடைந்துள்ளனர்.

4.4. ஊனமுற்றவர்கள் மறு வாழ்வுக்கென கல்வி, வாழ்க்கைத் தொழில் பயிற்சி, வேலை வாய்ப்பு, சுயவேலை வாய்ப்பு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் போன்ற திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு :—

### (1) உடல் ஊனமுற்றோருக்கு கல்வி வசதிகள்.

4.5. ஊனமுற்றோருக்கு (பார்வையற்றோர், காது கேளாதோர், உடல் ஊனமுற்றோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோர்) தனிக் கவனிப்பும், கல்வி வசதியும் தேவைப்படுகிறது. மேலும் சாதாரண குழந்தைகளைவிட இவர்களுக்கு கல்வி அளிப்பது மாறுபட்டது. அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு சிறப்பு செய்முறை நுட்பம் தேவைப்படுகிறது.

4.6. சிறப்புத் தேவைகளை கருத்திற்கொண்டு ஊனமுற்றோர்க்கான சிறப்புப் பள்ளிகளையும் பயிற்சி நிலையங்களையும் அரசு நடத்துகிறது. தற்போது 51 சிறப்புப் பள்ளிகள் மற்றும் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

| வரிசை எண். (1) | நிறுவனத்தின் பெயர். (2) | அரசுப் பள்ளிகள். (3) | மானியம் பெறும் நிறுவனம். (4) | நகராட்சி பள்ளிகள். (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|
| 1. | பார்வையற்றோர் பள்ளி | 11 | 9 | .. | 20 |
| 2. | காது கேளாதோர் பள்ளி | 9 | 11 | 2 | 22 |
| 3. | மன வளர்ச்சி குன்றியோர்க்கான பள்ளி .. .. .. | 1 | 2 | . | 3 |
| 4. | தொழுநோயால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான பள்ளி .. | .. | 1 | .. | 1 |
| 5. | உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி .. .. .. | 1 | 1 | . | 2 |
| 6. | ஆசிரியர் பயிற்சிப் பள்ளி .. | 1 | 2 | .. | 3 |
| | | 23 | 26 | 2 | 51 |

4.7. சுமார் 4,500 உடல் ஊனமுற்ற சிறுவர்கள் இலவச தங்கும் வசதி மற்றும் உணவு வசதிகளுடன் சிறப்புக் கல்வி பெறுகின்றனர்.

4.8. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 4.00 லட்சம் செலவில் கீழ்க் கண்ட சிறப்புப் பள்ளிகளில் புதிய உயர் வகுப்புகள் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளது :—

(அ) 7-ம் வகுப்பு துவக்குதல் (1) அரசு காது கேளாதோர் பள்ளிகள், சிதம்பரம் மற்றும் புதுக்கோட்டை.

(2) அரசு பார்வையற்றோர் பள்ளிகள், சேலம் மற்றும் திருவாரூர்.

(ஆ) 9-ம் வகுப்பு துவக்குதல் (1) அரசு காது கேளாதோர் பள்ளிகள், தர்மபுரி.

(2) அரசு பார்வையற்றோர் பள்ளிகள், திருச்சிராப்பள்ளி.

(இ) 11-ம் வகுப்பு துவக்குதல் அரசு காது கேளாதோர் பள்ளி, தஞ்சாவூர்.



**4.9. அரசு பார்வையற்றோர் பெண்கள் பள்ளி, திருச்சிராப் பள்ளி.**—9 வயதிற்கு மேற்பட்ட பார்வையற்ற பெண்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு தனியாக ஒரு பெண்கள் பள்ளி அமைக்கவும், அப்பள்ளிக்கு பெண்கள் ஆசிரியைகளையே பொறுப்பாக நியமிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி 1985–86-ல் திருச்சிராப்பள்ளியில் ரூபாய் 2.57 இலட்சம் செலவில் 1 முதல் 9 வகுப்புகள் கொண்ட ஒரு பெண்கள் சிறப்புப் பள்ளி அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

### (2) பார்வையற்றோருக்கான பிரெய்லி எழுத்து முறை வட்டார அச்சகம், பூவிருந்தவல்லி.

4.10. பள்ளியில் கற்பிக்கும் பல்வேறு பாடங்களை நான்கு தென்மாநில மொழிகளில் அதாவது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் ஆங்கிலத்தில் பிரெய்லி எழுத்து முறையில் அச்சிடுவதற்கு தனி அச்சகம் ஒன்று பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த அச்சகம 4 தென் மாநிலங்களுக்குத் தேவையான பார்வை யற்றோர் படிப்பதற்குரிய பிரெய்லி எழுத்து முறையில் தேவை யான புத்தகங்களை அச்சிடுகிறது. மேற்படி அச்சகத்தைப் பராமரிப்பதற்கான செலவை முதலில் தமிழ்நாடு அரசு முழுமை யாக ஏற்றுக்கொள்கிறது. அதன்பின் இச்செலவு மேற்குறிப்பிட் டுள்ள நான்கு தென்மாநில அரசுகளால் விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொள்ளப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.79 இலட்சம் திட்ட மதிப்பீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (3) ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை.

4.11. ஒன்பதாம் வகுப்பும், அதற்கு மேலும் பயின்று வரும் ஊனமுற்ற மாணவர்கட்கும், தொழில் நுட்பத் துறையில் பயிற்சி பெறும் ஊனமுற்ற மாணவர்கட்கும் இந்திய அரசு திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

4.12. அவர்களது கல்விக்கேற்ப உதவித் தொகை மாதம் ரூ. 60-ல் இருந்து ரூ. 170 வரை மாறுபடுகிறது.

4.13. 1984–85 ஆம் ஆண்டு முடிய 9,025 நபர்கள் மொத்தம் ரூ. 65 இலட்சம் உதவித் தொகை பெற்று பயனடைந்துள்ளனர்.

4.14. மத்திய அரசால் வழங்கப்படும் உதவித் தொகை தவிர தமிழக அரசு ஒன்று முதல் எட்டு வகுப்பு வரை கல்வி பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வாங்க ஆண்டு தோறும் ரூ. 25 வீதம் உதவித் தொகை வழங்குகிறது.

4.15. ஒவ்வொரு வருடமும் 8,000 மாணவர்கள் பயனடைகின்றனர். இதுவரை 32,000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

4.16. 1985–86 ஆம் ஆண்டில் ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்கென ரூ. 18.87 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (4) மன வளர்ச்சி குன்றியோருக்கான நிறுவனம்.

4.17. சென்னைக்கு அருகிலுள்ள குரோம்பேட்டையில் தமிழக அரசு 25 மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளைக் கொண்ட நிலையத்தினை பிப்ரவரி 1984-ல் ஆரம்பித்துள்ளது. இம்மாதிரியான திட்டம் அரசால் முதன் முறையாக நடத்தப்படும் திட்டமாகும்.

4.18. இந்நிலையத்தின் முக்கியமான நோக்கம் ஏழை புத்தி சுவாதீனமற்ற குழந்தைகளுக்கு கல்விப் பயிற்சி மற்றும் மருத்துவ வசதி அளிப்பதுடன் தங்கும் இடமும், உணவும் இலவசமாக வழங்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

4.19. 1985–86 ஆம் நிதி ஆண்டுக்கு இத்திட்டத்திற்கு ரூ. 3.73 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்து.

### (5) பார்வையற்ற, காது கேளாத, மன வளர்ச்சி குன்றியோருக்கு போதிப்பதற்கான ஆசிரியர்களுக்கு பயிற்சி.

4.20. பார்வையற்ற, காது கேளாத, மன வளர்ச்சி குன்றியோருக்கு போதிப்பதற்கான ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அரசினரால் திறம்பட செயல்படும் நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

4.21. தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு சென்னை 6-ல் உள்ள லிட்டில் ப்ளவர் காது கேளாதோர் மேல்நிலைப் பள்ளியின் மூலம் காது கேளாதோருக்கு போதிப்பதற்கான போதனை முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வோராண்டும் 14 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1985–86 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பாலவிஹார் நிறுவனத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் 20 ஆசிரியர்களுக்கு மன வளர்ச்சி குன்றியோரை பயிற்றுவிப்பதற்கான சிறப்புப் பயிற்சி வழங்கும் பொருட்டு மான்யம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக 1985–86 ஆம் ஆண்டிற்கு ரூ. 45,600 நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4.22. பார்வையற்றோருக்கு போதிப்பதற்கான சிறப்புப் பயிற்சி அளிப்பதற்கான வட்டார பயிற்சி மையம் ஒன்று பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இயங்கிவருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 12 ஆசிரியர்களுக்கு சிறப்



புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பயிற்சியாளர்களை தென்மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் மற்றும் ஆந்திரம் பங்கீடு செய்து கொள்கின்றன. 1985–86 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூபாய் 0.77 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4.23. மேற்படி நிறுவனத்தில் தமிழக அரசு 15 ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுக்கும் பொருட்டு ஒரு சிறப்புப் பிரிவினை நடத்தி வருகிறது. இதற்காக 1985–86 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.09 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (6) சிறப்புப் பள்ளிப் பிள்ளைகளின் உணவு செலவினத்தை உயர்த்துதல்.

4.24. உடல் மற்றும் மனநிலை ஊனத்திற்கான காரணங்களில் ஊட்டச் சத்துக் குறைவும் ஒன்றாகும். இதனைக் கருத்தில் கொண்டு சிறப்புப் பள்ளியில் பயிலும் பார்வையற்ற காது கேளாத உடல் ஊனமுற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கு உணவு வழங்குவதில் தனிக் கவனம் தேவைப்படுகிறது.

தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு மாதத்திய உணவுத் தொகையான ரூபாய் 45, ரூபாய் 60 வரையிலான வீதத்தில் ஊட்டச் சத்துணவு வழங்குவது மிகவும் சிரமமானதாக உள்ளது. உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளதை கருத்தில் கொண்டும், ஊட்டச் சத்துணவு வழங்கவும் பார்வையற்ற, காது கேளாத, உடல் ஊனமுற்ற மற்றும் மன வளர்ச்சி குன்றிய சிறப்புப் பள்ளிக் குழந்தைகள் அனைவருக்கும் உணவுச் செலவினை மாதம் ஒரு குழந்தைக்கு ரூபாய் 90 என உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது. 1985–86-க்கு இதற்கான மொத்தச் செலவு ரூபாய் 6.30 இலட்சங்களாகும்.

### (7) ஊனமுற்றோருக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி.

4.25. தொழிற் பயிற்சி பெறாத ஊனமுற்றவர்களை பணியில் அமர்த்துவது என்பது கடினமான ஒன்றாகும். அவர்களுக்கு வேலை வாய்ப்பிற்கு தகுதியான சிறப்பு பயிற்சியை அளித்தல் வேண்டும். எனவே, அரசு ஊனமுற்றவர்களுக்காக உணவு, உறைவிடம் கூடிய சிறப்பு பயிற்சி மையங்களை நடத்தி வருகிறது. இதனால், இப்பயிற்சி பெறும் ஊனமுற்றவர்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கொண்ட குறிப்பிட்ட பயிற்சியில் தகுதிபெற்று வேலை வாய்ப்பிற்கு தகுதியுடையவர்களாகிறார்கள். அரசினரால் நடத்தப்படும் தொழிற்பயிற்சிகளின் விவரங்கள் பின் வருமாறு :

### (8) நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி பணிமனை, முட்டுக்காடு.

4.26. செங்கற்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் உள்ள ஊனமுற்றோர்க்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம்

1975 ஆம் ஆண்டில் ரூபாய் 30 லட்சம் செலவில் தொடங்கப்பட்டது. முச்சக்கர வண்டி, அலமாரிகள், சக்கர நாற்காலிகள் போன்ற இரும்பு சாமான்கள் வடிவமைப்பதிலும், உற்பத்தி செய்வதிலும் 77 ஊனமுற்றவர்களுக்கு முதலில் பயிற்சி அளிக்கப்பட்டது. 1980 முதல் உற்பத்திக் கூடமாக இந்நிலையம் இயங்கி வருகிறது.

4.27. பயிற்சி பெற்ற பல ஊனமுற்றோர் அரசு நிறுவனங்களான அரசு அச்சகம், போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்வாரியம் இதர பொதுப்பணித்துறை மற்றும் சமூக நலத் துறைகளில் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். தற்பொழுது, இந்நிலையத்தில் ஆறு ஊனமுற்றவர்கள் தகுந்த பணியிடங்களுக்காக காத்திருக்கின்றனர்.

4.28. 1985–86 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 10.65 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(9) பார்வையற்றோர்க்கான அரசு தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி.**

4.29. கிண்டியில் 1967 ஆம் ஆண்டு முதல் வயது வந்த பார்வையற்றோர்களுக்கு எளிய பொறியியல் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிப்பதற்காக ஒரு எளிய பொறியியல் திட்டம் இயங்கி வருகிறது. பார்வையற்றோருக்கு அளிக்கப்படும் பயிற்சி தொழில் தேவைக்கேற்ப போதுமான அளவு திறமை பெறவும் அவர்களது வேலை வாய்ப்பினை அதிகரித்துக்கொள்ளவும் போதுமானதாக இல்லை. எனவே, 1982–83 ஆம் ஆண்டு முதல் அரசு, பார்வையற்றவர்களுக்குத் தகுந்த, தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலில் அவர்களுக்குப் போதுமான திறமை ஏற்படவும் வேலை வாய்ப்பை அளிக்கவும் தொழிற் பயிற்சி மையமாக மாற்றி அமைத்து பயிற்சி பெற மேற்படி பயிற்சித் திட்டத்தை பொறிப் பகுதி பொருத்துதல், புத்தகம் கட்டுதல் மற்றும் மின்கம்பி சுற்றுதல் ஆகிய மூன்று பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 30 பார்வையற்ற நபர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக ரூபாய் 0.59 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(10) தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாதோர்க்கென தனிப்பிரிவு ஏற்படுத்துதல்.**

4.30. காது கேளாதோர் போதுமான தேர்ச்சித் திறம் பெறவும் வேலை வாய்ப்பிற்கான தகுதியை அதிகரித்துக் கொள்ளும் நோக்குடன் அரசு, கிண்டி மற்றும் மதுரையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் முழுவதும் காது கேளாதவர்க்கான சிறப்புப் பிரிவிற்கு அரச அனுமதி அளித்ததின் பேரில் பொறிப் பகுதி பொருத்துபவர், மற்றும் மின்கம்பி சுற்றுபவர் ஆகிய தொழில்



களில் 1981–83 ஆண்டுகளில் 30 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்
பட்டது. பயிற்சி காலம் இரண்டு ஆண்டுகளாகும்.

4.31. தொழிற் பயிற்சி மையங்களில் காது கேளாதோாக்கு
பயிற்சி அளிக்கும் இத்திட்டம் 1984–85 ஆம் ஆண்டில் தொடரப்
பட்டு 10 நபர்கள் பயனடைந்தனர். 1985–86 ஆம் ஆண்டு வரவு
செலவு திட்டத்தில் இத்திட்டத்திற்காக ரூபாய் 0.41 லட்சம்
ஒதுக்கப்பட்டுள்ளது.

**(11) ஊனமுற்றோர்க்கு வேலை வாய்ப்பு :**

தன்னம்பிக்கை அடையச்
4.32. தனித்து இயங்கவும் மற்றும் திட்டத்தின் குறிக்
செய்வதே ஊனமுற்றோரின் மறுவாழ்வு
கோளாகும். அவர்கள் வாழ்க்கையை அவர்களே நடத்திச் செல்ல
வருமானம் கிடைக்கும் பணியில் அமர்த்துவதாலும், சுயவேலை
வாய்ப்பிற்கு உதவி செய்வதாலும் இக்குறிக்கோள் நிறைவேறும்.

4.33, சுயவேலை மற்றும் வேலை வாய்ப்பிற்காக கீழ்க்கண்ட
திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**(12) ஊனமுற்றோக்கு பெட்டிக் கடைகள் அமைப்பதற்கு உதவி அளித்தல் :**

4.34. வங்கிகள் மூலம் குறைந்த விகித வட்டியில் கடனுதவி
பெற்று சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் ஊனமுற்றவர்
களுக்கு பெட்டிக் கடைகள் அமைக்க உதவி செய்யப்படுகிறது.
அவ்வாறு உதவி பெறுபவர்களுக்கு பெட்டிக் கடைகளின் மதிப்
பீட்டைப் பொருத்து ரூபாய் 250 முதல் ரூபாய் 500 வரை அரசு
மான்யம் அளிக்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டு முதல் 1984-85
ஆம் ஆண்டு வரை 914 ஊனமுற்றோருக்கு பெட்டிக் கடைகள்
அமைக்க ரூபாய் 3.91 இலட்சம் அரசு மான்ய உதவி
அளித்துள்ளது. இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டில் தொடர்ந்து
செயல்படும். அதற்காக 1985-86 ஆம் ஆண்டில் வரவு-செலவு
திட்டத்தில் ரூபாய் 0.94 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(13) பயிற்சி பெற்ற ஊனமுற்றோரை தொழில் பழகுவோராக நியமனம் செய்தல் :**

4.35 ஏற்கனவே பல்வேறு பிரிவுகளில் பயிற்சி பெற்று,
வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள ஊனமுற்றவர்
களை பணியில் அமர்த்தும் நோக்குடன் தனியார் தொழிலகங்களில்
வேலை வாய்ப்பு அளிப்போருக்கு எவ்வித செலவுமின்றி ''சிறப்பு
தொழில் பழகுவோர் திட்டம்'' என்ற புதுமையான திட்டம் 1979-
80-ல் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, ஊனமுற்றவர்
தொழில் பழகுநராக மாநிலத்தில் உள்ள பல்வேறு தொழில் நிறு
வனங்களில் அமர்த்தப்பட்டு, அரசால் மாதம் ஒன்றுக்கு ரூபாய்
150 வீதம் ஒரு வருடத்திற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.
பயிற்சியின் முடிவில் சம்பந்தப்பட்ட நிறுவனம் ஊனமுற்றோரை
நிரந்தர ஊழியராக எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பயிற்சித்

திட்டத்தின் மூலம் 1,327 ஊனமுற்ற நபர்கள் பயனடைந்துள்ளனர். 1985-86 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 3.00 இலட்சம், இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(14) சென்னை சாந்தோமில் உள்ள பார்வையற்ற மகளிருக்குத் தொழிற் கூடங்களுடன் கூடிய மறுவாழ்வு இல்லம் :**

4.36. பார்வையற்ற மகளிருக்காக சென்னை சாந்தோமில் 1978 முதல் தொழிற்கூடங்களுடன் கூடிய ஒரு மறுவாழ்வு இல்லம் இயங்கி வருகிறது.

4.37. வறுமையில் வாடி, ஆதரவு அளிக்க யாரும் இல்லாத 40 வயதுக்கு குறைந்த பார்வையற்ற மகளிர் கல்வித் தகுதி எதுவாயிருப்பினும் அவர்கள் இந்த இல்லத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, ஆறு மாதகாலப் பயிற்சிக்கு மாதம் ரூபாய் 50 வீதம் உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. நெய்தல், சாக்கட்டி செய்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

4.38. பயிற்சி முடிந்ததும், அவர்களுக்கு இல்லத்திலேயே வேலை அளிக்கப்பட்டு, தினமும் அவர்கள் செய்யும் வேலைகளுக்கேற்ப ஊதியம் வழங்கப்படுகிறது. இது வரை 174 பார்வைற்ற மகளிர்க்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

4.39. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூபாய் 2.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(15) மண்டல மறுவாழ்வு மையங்கள் :**

4.40. ஊனமுற்றோர் மறுவாழ்வு, பெறுமளவு பிரச்சினையாகவும் இயற்கையிலேயே சிக்கலாகவும் உள்ளது. இப்பிரச்சினையை வெவ்வேறு நிலைகளில் விஞ்ஞானம் மற்றும் தனிப்பட்ட அமைப்புகளின் மூலம் தீர்க்கும் நோக்கத்துடன் அரசு உலக ஊனமுற்றோர் ஆண்டான 1981-ல் தனிப்பட்ட அமைப்புகளை அவர்களுக்காகவே நிறுவியது. இந்திய அரசால் நடத்தப்படும் ஊனமுற்றோர் வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிலைய அமைப்பைப் போன்ற இந்நிறுவனம் மண்டல மறுவாழ்வு நிலையமாக இயங்கி வருகிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், மற்றும் வேலூர் ஆகிய இடங்களை தலைமையகமாகக் கொண்டு மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கி இந்த மண்டல மறுவாழ்வு நிலையங்கள் செயல்படுகின்றன. பிரதி மாதம் ஒவ்வொரு மண்டல மறுவாழ்வு மையமும் 100 ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு உதவி அளிக்கிறது. 1984-85 ஆம் ஆண்டில் 3,603 ஊனமுற்றவர்கள் மாநிலத்தில் உள்ள மண்டல மறுவாழ்வு மையங்கள் மூலம் பயனடைந்துள்ளனர். 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் 12.91 இலட்சம் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**(16) வேலையற்ற படித்த பார்வையற்றோருக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை அளித்தல் :**

4.41. 1981, உலக ஊனமுற்றோர் ஆண்டில் அரசால் விரிவுபடுத்தப்பட்ட வேலையற்றோர் நிவாரணத் தொகையாக மாதம் ரூ. 50 வழங்கும் திட்டம், எஸ்.எஸ்.எல்.சி. அல்லது ஐ.டி.ஐ. சான்றிதழ் பெற்ற வேலை வாய்ப்பு உயிர் பதிவேட்டில் மூன்று வருடமாக தொடர்ந்து பதிவு செய்து 40 வயதிற்கு குறைந்த (தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர்க்கு 45 வயதுக்குள்) படித்த பார்வையற்றவர்க்கு அரசு விரிவுபடுத்தியது. இத்திட்டம் அரசு நிறுவனங்களில் எந்த ஒரு தொழிலிலும் பயிற்சி பெற்ற மற்றும் வேலை வாய்ப்பு உயிர் பதிவேட்டில் உள்ளவர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

4.42. சமூக நலத்துறை நிதி ஒதுக்கீட்டின்கீழ், வேலைவாய்ப்பு பயிற்சி துறை இயக்குநரால் மற்ற வேலையில்லா நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.43. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 106 பார்வையற்றோர்கள் பயனடைந்துள்ளனர். 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(17) ஊனமுற்றோருக்கு கருவிகள் வழங்குதல்.**

4.44. ஊனமுற்ற நபர்களின் ஊனத்தின் தன்மைக்கேற்ப முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் மற்றும் காதொலி கருவிகள் வழங்கப்படுகின்றன.

4.45. முச்சக்கர வண்டிகள்.—உறுப்பு நலம் குறைந்த ஊனமுற்ற ஏழைகளுக்கு இலவசமாக முச்சக்கர வண்டிகள் வழங்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் 1,696 முச்சக்கர வண்டிகள் ரூ. 25 இலட்சம் செலவில் இலவசமாக வழங்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 8,707 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

4.46. சக்கர நாற்காலிகள்.—வாத நோயினால் பாதிக்கப்பட்ட உடல் ஊனமுற்வர்களுக்கு 1981-82 ஆம் ஆண்டு முதல் சக்கர நாற்காலிகள் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 400 மனுதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

4.47. காதொலி கருவிகள்.—18 வயதுக்குக் குறைந்த பள்ளிக்கு செல்லும்/செல்லாத காது கேளாத குழந்தைகளுக்கு காதொலி கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றது. இதுவரை 3,304 காதொலி கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

4.48. 1984-85 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள காது கேளாத அனைவருக்கும் இலவசமாக 15,000 காதொலி கருவிகள் வழங்க ரூ. 60 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளிக்கு செல்லும் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4.49. மனுதாரர்களைத் தேர்வு செய்ய எல்லா மாவட்டங் களிலும் மருத்துவ பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன. 1984-85 ஆம் ஆண்டில் 4,000 காதொலி கருவிகளும், மீதியுள்ள காதொலி கருவிகள் 1985-86 ஆம் ஆண்டும் வழங்கப்படும்.

4.50. 1985-86 ஆம் ஆண்டில் ஊனமுற்றோருக்கு கருவிகள் வழங்க ரூ. 23.50 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(18) உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு பயணச் சலுகை வழங்குதல் :**

4.51. உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு வீட்டிலிருந்து பள்ளிக்கு மற்றும் மருத்துவ மனைக்குச் சென்று திரும்பிவர அரசுக்குச் சொந்தமான போக்குவரத்து பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர) இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. மேலும் இலவசப் பயண பேருந்து சலுகை மூலம் அரசு போக்குவரத்து கழகத்திற்கு ஏற்படும் நிதி இழப்பை சமூக நலத்துறையின் மூலம் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 12,485 மாணவர்கள் பயனடைந் துள்ளனர். 1985-86 ஆம் நிதியாண்டுக்கு ரூ. 4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 3,000 மாணவர்கள் பயனடைவர்.

**(19) தொண்டு நிறுவனங்களுக்கு மான்யம் வழங்குதல் :**

4.52. தனியார் நிறுவனங்களுக்கு அரசின் மூலம் மான்யம் வழங்கப்படுகிறது. 8 முதல் 14 வயதிற்குட்பட்ட ஊனமுற்ற குழந்தைகளுக்கு (கண் பார்வையற்றவர், காது கேளாதவர், வாய் பேசாதவர், உறுப்பு நலம் குறைந்தவர், சித்த சுவாதீனமற்றோர் மற்றும் தொழுநோயினால்) பாதிக்கப்பட்டவர்களுக்கு மான்யம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் ரூ. 30 வீதம் மான்யம் அளிக்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் பதினொன்று தொண்டு நிறுவனங்களுக்கு மான்யம் அளிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டுக்கு ரூ. 1.07 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(20) செங்கற்பட்டில் ஒரு முன்னோடித் திட்டம் (மாவட்ட மறுவாழ்வு மையம்) எனப் பெயருடன் நிறுவுதல்.**

4.53. இந்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டு, தமிழ்நாடு அரசு சமூக நலத்துறையின்கீழ் நிருவகிக்க செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு முன்னோடித் திட்டம் ஒன்று ('மாவட்ட மறுவாழ்வு மையம் எனப் பெயருடன்) நிறுவும் செயற்குறிப்பு உள்ளது. இம்முன்னோடித் திட்டம், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியை தலைமையிடமாகக் கொண்டு, மருத்துவம், வாழ்க்கைக் கல்வி, சமூக பொருளாதார நிலைகளில், ஊனமுற்றவர்களுக்கு ஒரு விரிவான மறுவாழ்வுப் பணியினை அளிக்க உள்ளது. இத்திட்டத்திற்காக ஆகும் மொத்த செலவு ரூ. 60.60 இலட்சம் ஆகும்.



4.54. பார்வையற்றவர்கள், காது கேளாதார், உடல் ஊனமுற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள், மற்றும் தொழு நோயில் குணமடைந்தவர்கள் போன்ற எல்லா ஊனமுற்றவர்களும் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைய முதலில் இம்மாவட்டத்தில் உள்ள, இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் துவங்கப்படும். பின்னர், மாவட்டம் முழுமையும் பயன்பெறும் வகையில் மாவட்டத்தில் உள்ள, அனைத்து ஊனமுற்றவர்களும் இத் திட்டத்தின்கீழ் கொணரப்பட்டு தேவையான மறுவாழ்வு அளிக்கப் படும்.

4.55. இத்திட்டம் கிராம நிலை, ஆரம்ப சுகாதார நிலை மற்றும் மாவட்ட நிலை என மூன்று கட்டங்களாக செயல்படும். ஊனமுற்றோர்கள் பணிக்காக தேவைப்படும் கூடுதல் உள்ளமைப்பு வசதிக்காக மாவட்டத்தில் ஏற்கனவே உள்ள உள்ளமைப்பு வசதிகளைக் கொண்டு உருவாக்கப்படும்.

4.56. இந்திய அரசு, இத்திட்டத்தை நிருவகிக்க மொத்த மதிப்பீடு செலவான ரூ. 60.60 இலட்சத்தில், 1984-85 ஆம் ஆண்டிற்கு ரூ 10.00 இலட்சம் வழங்கியுள்ளது. வாஷிங்டனில் உள்ள அமெரிக்க ஐக்கிய அரசின் தேசிய ஊனமுற்றோர் ஆராய்ச்சி நிலையம், பி.எல். 480 நிதியின்கீழ் இத்திட்டத்திற்கு நிதி அளிக்க உள்ளது. விரைவில் இத்திட்டம் செங்கற்பட்டு மாவட்டத்தில் நிறுவப்படும்.

**(21) தமிழ்நாடு மாநில ஊனமுற்றோர் வாரியம் :**

4.57. சமூக நல அமைச்சரின் தலைமையின்கீழ் இயங்கும், மாநில ஊனமுற்றோர் வாரியம், ஊனமுற்றவர்களின் நல திட்டங்கள், மறுவாழ்வு ஆகியவற்றை உருவாக்க அரசுக்கு அறிவுரை கூறுகிற ஒரு நிறுவனமாக செயல்படுகிறது. ஊனமுற்ற வர்களின் நலத் திட்டங்களை உருவாக்குவதற்கு கருத்துருக்களைக் கூற ஒரு வல்லுநர் குழு இவ்வாரியத்தில் உள்ளது. இவ்வாரியத் திற்கு சமூகநல இயக்குநர் தலைமையில் உள்ள ஒரு சார்நிலைக்குழு உதவி புரிகிறது. ஊனமுற்றவர்கள் சுயவேலை வாய்ப்பு உதவிக் காகவும் இவ்வாரியம் மான்யங்கள் வழங்குகிறது.

4.58. இவ்வாரியத்திலிருந்து நிறுவனங்கள் தங்கள் வளர்ச்சிக் காக ரூ. 12,000 மான்யமாக பெறுகிறது. 107 ஊனமுற்ற நபர்கள் சுயவேலை வாய்ப்பிற்காக மான்யம் பெற்றுள்ளனர்.

4.59. அரசு 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறப்பு பரிசு குலுக்கலில் பெறப்பட்ட நிகர விற்பனைத் தொகை ரூ. 22 இலட்சத்தை அரசு வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் ஊனமுற்றோர் நலத் திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்காக, இவ்வாரியத்திற்கு ஒதுக்கியது. இந்நிதியிலிருந்து ரூ. 1 இலட்சம் காட்பாடியில் உள்ள வொர்த் டிரஸ்ட் நிறுவனத்திற்கு ஊனமுற்ற வர்களுக்கு வேலை வாய்ப்பு திறனை உருவாக்கும் நிலையத்திற்கு உபகரணங்கள் இயந்திரங்கள் வாங்க அளிக்கப்பட்டது.

### 4.60. புதிய திட்டங்கள்.

கீழே குறிப்பிட்டுள்ள புதிய திட்டங்கள் 1985-86-ம் ஆண்டில் செயல்படுத்தப் படுகின்றன:—

| வரிசை எண். | திட்டங்களின் பெயர். | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் லட்சத்தில்) |
| 1 | தனிப் பள்ளிகளில் உயர்நிலைத் தரங்களை அறிமுகப் படுத்தல். .. .. .. .. | 3.17 |
| 2 | தமிழ் நாட்டில் தனிப் பள்ளிகளிலுள்ள குழந்தைகளுக்கான உணவுக் கட்டண விதத்தை உயர்த்தல். .. | 6.30 |
| 3 | தஞ்சாவூரிலுள்ள கேட்புச் சக்தியற்றோர் அரசுப் பள்ளியில் வகுப்பைத் தொடங்குதல். .. .. | 0.83 |
| 4 | திருச்சியில் பார்வை இழந்த சிறுமியருக்கு ஒரு பள்ளியை நிறுவுதல். .. .. .. .. | 2.57 |
| 5 | சமூக நலத்துறையின் கீழ் வரும் சமூக சேவை இல்லங்கள் அனைத்திலும் நடத்தப்படும் தையல் பிரிவிலுள்ள அனைவருக்கும் ஒரு மொத்தத் தொகை வழங்குதல். .. | 0.34 |
| 6 | தஞ்சாவூர் சமூக சேவை இல்லத்தில் துளைக் கிணறு தோண்டுதல். .. .. .. .. | 0.93 |
| 7 | பல்லாவரத்திலுள்ள சேவை இல்லம், ஆசிரியர் பயிற்சி நிலையங்களிலுள்ள பெரியவர்கள், குழந்தைகளுக்குப் பயிற்சி உதவித்தொகையை உயர்த்தல். .. .. | 2.72 |
| 8 | கடலூர் சமூக சேவை இல்லத்தில் மேல்நிலை வகுப்பு தொடங்குதல் .. .. .. .. | 0.53 |
| 9 | கடலூர் சமூக சேவை இல்லத்திற்குச் சுற்றுச் சுவர் சங்கிலி வேலி அமைத்தல் .. .. .. | 0.84 |
| 10 | அரசு மன வளர்ச்சி குறைந்தோர் பள்ளிக் குழந்தைகளுக்கான உணவுக் கட்டணங்களை உயர்த்தல் .. | 0.41 |

## தமிழ்நாடு சமூக நல வாரியம்.

5.1. தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாட்டின் தொண்டு நிறுவனங்களது மேம்பாட்டு வளர்ச்சியில் முக்கியமான பங்கு வகித்து வருகிறது, மேற்படி வாரியம் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப் படுகிறது.

5,2, முக்கிய நோக்கங்கள் கீழ்க்கண்ட வாறு அமையும்.—(1) சமூக நல அமைப்புகளை ஆரம்பித்து, உயர்வடையச் செய்தல்.

(2) தனியார் சேவை நிறுவனங்களின் பணித் திறனை வளர்ப்பதற்கு தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியளித்தல்.

(3) உதவி திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

5.3, தமிழ்நாடு சமூக நல வாரியம், மத்திய சமூக நல வாரியத் திடம் இருந்து பண உதவி பெற்று, தொண்டு நிறுவனங்களின் மூலம் குழந்தைகள். ஊனமுற்றவர்கள் மற்றும் மாதர்கள் ஆகியோரது மேம்பாட்டுக்காக பணியாற்றுகிறது, சுமார் 50 விழுக்காடுகள் முதல் 90 விழுக்காடுகள் வரை தொண்டு நிறுவனங் களுக்கு பண உதவி செய்யப்படுகிறது, எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது, சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 விழுக்காடுகள் கூட பண உதவி செய்யப்படு கிறது

5.4, தற்போதைய தமிழ்நாடு சமூக நல வாரியம் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்று அலுவலக உறுப்பினர்கள் உட்பட 32 உறுப்பினர்களை கொண்டதாக திருத்தியமைக்கப்பட்டது,

5.5. 1984–85-ம் ஆண்டில் 3,423 தொண்டு நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ, 112,43 இலட்சம் பண உதவி செய்யப்பட்டது.

விவரம்,

| | வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும், | அலகு எண். | அனுமதிக்கப் பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| | (1) | (2) | (2) |
| 1 | திட்ட கால உதவி .. .. | 33 | 2.78 |
| 2 | வருடாந்திர உதவி .. .. | 225 | 4,56 |



| | வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | அலகு எண். | அனுமதிக்கப் பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 3 | மகிலா மண்டல் உதவி .. | 35 | 1.29 |
| 4 | சத்துணவுத் திட்டம் .. .. | 104 | 5.00 |
| 5 | குழந்தைகள் காப்பகத் திட்டம் .. | 666 | 44.99 |
| 6 | நகர்ப்புற விரிவாக்கத் திட்டம் .. | 2 | 0.13 |
| 7 | விடுமுறை முகாம் .. .. | 44 | 2.20 |
| 8 | குறுகிய கால கல்விப் பயிற்சி (1 வருடம்/2 வருடம்) .. | 14 | 3.24 |
| 9 | வாழ்க்கைத் தொழிற்பயிற்சி .. | 100 | 16.88 |
| 10 | பணி புரியும் மகளிர் தங்கும் விடுதி | 9 | 0.46 |
| 11 | சமூகப் பொருளாதாரத் திட்டம்— | | |
| | (அ) உற்பத்தி அலகுகள் .. | 10 | 9.07 |
| | (ஆ) சேவை முனைப்புத் திட்டம் | 2 | 0,20 |
| | (இ) பால்வளத் திட்டம் .. | 57 | 11,90 |
| | (ஈ) சுயவேலை வாய்ப்புத் திட்டம் .. .. | 6 | 0.60 |
| 12 | குடும்ப நல புத்தறிவுப் பயிற்சி முகாம் .. .. | 2.000 | 6.00 |
| 13 | கிராமப்புற மகளிர் பயிற்சி திட்டம் .. .. | 25 | 1,13 |
| 14 | மாநில அரசு மான்யம் .. | 64 | 2.00 |
| | மொத்தம் .. | 3,423 | 112,43 |

## அத்தியாயம் 6.

### முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டம்.

6,1. ஆதரவற்ற உற்றார் உறவினர் யாரும் இல்லாத வயது முதிர்ந்த முதியோர்களுக்கு. சமூக பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு அரசு 1–4–1962 முதல் முதியோர் உதவித் தொகை திட்டத்தினை ஏற்படுத்தி அமுல் படுத்தி வருகிறது. முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் திங்கள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரொக்கமாக 35 ரூபாய் 1–4–1982 முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

6.2. இத்திட்டத்தின்படி, கீழ்க்கண்ட இனத்தைச் சார்ந்த முதியோர்கள் பயனடைந்து வருகின்றனர் :—

(அ) ஆதரவற்ற முதியோர்களுக்கு முதியோர் உதவித் தொகை திட்டம்,

(ஆ) ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கான முதியோர் உதவித் தொகை திட்டம்.

(இ) ஆதரவற்ற விதவைகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

(ஈ) ஆதரவற்ற விவசாயிகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்,

(உ) ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு முதியோர் உதவித் தொகைத் திட்டம்,

6.3. ஆதரவற்ற முதியோர்களுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.—இத்திட்டம் 1962 முதல் செயலாக்கப்பட்டு வருகிறது. ஆதரவற்ற 65 வயதும் அதற்கும் மேற்பட்ட முதியோர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றனர், இத்திட்டத்தின் மூலம் 1–1–1985 வரை இம்மாநிலத்தில் 1,42.729 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

6,4. ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.—உடல் ஊனமுற்றவர்களுக்கும் முதியோர் உதவித் தொகை வழங்கும்பொருட்டு 1974 முதல் முதியோர் உதவித் தொகைத் திட்டம் விரிவாக்கப்பட்டு செயல் பட்டு வருகிறது. இதன் மூலம் 45 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற உடல் ஊனமுற்ற நபர்கள் பயன் பெறுகின்றனர். ஆனால். கண் பார்வையற்ற நபர்களுக்கு வயது வரம்பு எதுவும் இன்றி உதவித் தொகை வழங்கப்படுகிறது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட அளவிலான குழுக்களையும் அரசு அமைத்துள்ளது. இக்குழுக்களில். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட மருத்துவ அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்கள். உடல் ஊனமுற்றோர் அனுப்பும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து



அவ்விண்ணப்பதாரர்களின் வயது குறித்த விதிகளைக் கருதிப் பாராது. ஒவ்வொரு விண்ணப்பதாரரின் இடர்பாட்டை மட்டுமே கருதிப் பார்த்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்க அனுமதிக்கும். இம்மாநிலத்தில் 1–1–1985 முடிய 17,406 நபர் களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

6.5. ஆதரவற்ற விதவைகளுக்கான முதியோர் உதவித் தொகை திட்டம்.—அரசு 1975 முதல் முதியோர் உதவித் தொகை திட்டத்தினை விரிவுபடுத்தி ஆதரவற்ற விதவைகளுக்கும் உதவித் தொகை வழங்கி வருகிறது. 40 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற விதவைகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறு கின்றனர். இம்மாநிலத்தில் 1–1–1985 முடிய 79,826 நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட் டுள்ளது.

6.6, ஆதரவற்ற விவசாயிகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.—முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் மூலம் வேளாண்மைத் தொழிலாளர்களும் பயன் பெறும் பொருட்டு இத்திட்டத்தினை விரிவு படுத்தி 15–3–1981 முதல் செயற்படுத்தி வருகிறது. இதன் மூலம் 60 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதர வற்ற, எத்தொழிலும் செய்ய இயலாத நிலையில் உள்ள வேளாண் மைத் தொழிலாளர்கள் பயன் பெறுகின்றனர். இம்மாநிலத்தில் 1–1–1985 முடிய 40,527 விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற அரசு ஆணையிட்டுள்ளது,

6.7. முதியோர் உதவித் தொகையை கணவனால் கைவிடப் பட்ட பெண்களுக்கு விஸ்தரித்தல்.—30 வயதிற்கு குறையாத ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு, முதியோர் உதவித் தொகையை விஸ்தரிக்க சில வரையரைக்குட்பட்டு 3–5–1984 ஆம் நாளிட்ட சமூக நலத்துறை அரசு ஆணை எண் 1465-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

6.8. கைத்தறி ஜனதா வேட்டிகள் மற்றும் சேலைகள் இலவச மாக வழங்குதல்.—முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு கைத்தறி ஜனதா வேட்டி மற்றும் சேலைகள் இலவசமாக ஆண்டிற்கு இரண்டு முறை (சுதந்திர தினம் மற்றும் பொங்கல்) வழங்கும் திட்டம் 1979 ஆம் ஆண்டு சுதந்திர தினம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1–5–1984 அன்று வேட்டி களும், சேலைகளும் முதியோர் உதவித் தொகை பெறுபவர் களுக்கும் மற்றும் காத்திருக்கும் பட்டியலில் உள்ள ஆதரவற் றோருக்கும் வழங்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டில், 1,47,600 வேட்டிகளும், 4,66,454 வண்ணச் சேலைகளும். 60,539 வெள்ளை சேலைகளும் ரூ. 1,33,41,156 செலவில் வழங்கப்பட்டது.

## இணைப்பு

அத்தியாயம் 7. [1985 ஜூலை 1

### சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை.

7.1. சீர்திருத்தப்பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை முக்கியமாக இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒன்று 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள சீர்திருத்தப் பள்ளிகள். மற்றொன்று 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு/பாதுகாப்பு இல்லங்கள் ஆகும்.

7.2. தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் (1920) கீழ் குற்றம் புரிந்த இளங்குற்றவாளிகள், ஆதரவற்றோர், கட்டுக்கடங்காச் சிறுவர்கள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நெறி பிறழ்ந்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் பெண்டிர் ஆகியோரை சீர்திருத்தப் பயிற்சி அளித்து கல்வி, வாழ்க்கை தொழிற்கல்வி அளிப்பதோடு அவர்களை பொறுப்பேற்று மறுவாழ்வு அளிக்கும் முக்கிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதை இத்துறை கடமையாகக் கொண்டுள்ளது. இத்துறை பிற்காப்பு நிறுவனங்களிலிருந்து விடுதலை பெறும் இல்லவாசிகளுக்கு பிற்காப்பு வசதிகளை அளிக்கிறது.

7.3. சமூக நலத்துறை இயக்குநர், சீர்திருத்தப்பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை இயக்குநராகவும் கூடுதல் பொறுப்பேற்று உள்ளார். ஒரு இணை இயக்குநர் சமூக நலத் துறை இயக்குநருக்கு, சீர்திருத்தப் பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையில் நிர்வாக பணிகளில் உதவி புரிகிறார். தென் மாவட்டங்களிலுள்ள நிறுவனங்களை திறமையாக மேற்பார்வை செய்ய மதுரையில் ஒரு மண்டல் அலுவலகம் சீர்திருத்தப் பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை துணை இயக்குநரைக் கொண்டு இயங்கி வருகிறது.

### (1) தமிழ்நாடு குழந்தைகள் சட்டம், 1920 மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள்.

7.4. 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின்கீழ் 22 சீர்திருத்தப் பள்ளிகள் (நீண்டகால வரையற்ற நிலையங்கள்) இம்மாநிலத்தில் உள்ளன. இவற்றில் 9 பள்ளிகள் அரசினராலும் எஞ்சிய 13 பள்ளிகள் தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களால் ஒப்படைக்கப்படும் சிறுவர்களை பராமரிப்பதற்கு அரசினரால் இத்தனியார் நிறுவனங்களுக்கு மானிய உதவி அளிக்கப்படுகின்றன. மன நிலை பாதிக்கப்பட்ட குழந்தைகள், சென்னை பாலவிகார் நிறுவனத்தின் கீழியங்கும் சீர்திருத்தப் பள்ளியில் பொறுப்பேற்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றனர்.



7.5. இம்மாநிலத்தில் 14 வரவேற்பு இல்லங்கள் (குறுகிய கால வரையரை நிலையங்கள்) உள்ளன. இவ்வரவேற்பு இல்லங்கள் நீதிமன்றங்கள் முன் விசாரணையேற்கும் சிறுவர் சிறுமியரை விசாரணைக் காலங்களில் பொறுப்பேற்கின்றன. இவ்வரவேற்பு இல்லங்கள் சீர்திருத்தப் பள்ளிகளின் நுழைவாயில்களாகும். இவ் வரவேற்பு இல்லங்களில் ஒன்பது அரசின்ராலும், ஏனைய ஐந்து வரவேற்பு இல்லங்கள், குழந்தைகள் பாதுகாப்பு சங்கம். விடுதலை பெற்ற கைதிகள் உதவி சங்கம் ஆகிய தனியார் நிறுவனங்களால் அரசினரின் நிதி உதவியுடன் நடத்தப்படுகின்றன. வரவேற்பு இல்லங்களிலுள்ள இல்லவாசிகள் விசாரணை முடிந்தபின் சீர்திருத்த பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றார்கள்.

### (2) சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டம் 1956-ம் அதன்கீழ் இயங்கும் நிறுவனங்களும்.

7.6. அரசினர் விழிப்பு / காப்பகங்கள் (நீண்ட கால வரையரை) 1965 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சேர்க்கப்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கு புகலிடமும் பயிற்சியும் அளிக்கின்றன. ஆறு அரசினர் மகளிர் காப்பகங்கள் இத்துறையில் உள்ளன. இவற்றைத் தவிர எட்டு (குறுகிய காலம்) மீட்பு இல்லங்கள் நீதிமன்ற விசாரணைக் காலங்களில் சிறுமியர் மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பேற்கின்றன. இக்குறுகிய கால வரையரையுள்ள நிறுவனங்கள் நீண்ட கால வரையரையுள்ள பாதுகாப்பு இல்லங்களுக்கு அடிப்படை நிறுவனங்களாகும்.

### (3) பிற்காப்பு இல்லங்கள்.

7.7. மூன்று பிற்காப்பு இல்லங்கள் (சட்டத்தின்பாற்படாத) உள்ளன. இவற்றுள் இரண்டு சிறுவர்களுக்காகவும், ஒன்று சிறுமியர் மற்றும் பெண்டிருக்காகவும் இயங்கி வருகின்றன. பெண்களுக்கான ஒரு இல்லம் வேலூரிலும், சிறுவர்களுக்கான இரண்டு இல்லங்கள் ஆத்தூரிலும் (செங்கற்பட்டு மாவட்டம்) மதுரையிலும் இயங்கி வருகின்றன. இவ்வில்லங்கள் சீர்திருத்த இல்லங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு தொழில் கல்வி பயிற்சியை தொடர்ந்து அளித்து வருகின்றன.

7.8. உடைகள், உள்ளடக்கிகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் பயிற்றுவிக்கும் ஒரு தொழில் பிரிவு வேலூர், அரசினர் மகளிர் பிற்காப்பில்லத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அகதிப் பெண்கள் மற்றும் உள்ளூர் பெண்களும் இந்நிலையத்தில் பயிற்சிக்கென தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(4) கல்வி :

7.9. அனைத்து சீர்திருத்தப் பள்ளிகளும், 8 ஆம் வகுப்பு வரை கல்விப் பிரிவுகளைக் கொண்டவையாகும். செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளி மற்றும் சென்னை அரசினர் பெண்கள் சீர்திருத்தப் பள்ளிகளில் உயர்நிலைப் பள்ளிப் பிரிவுகளில் மாணவர்களுக்கு உயர்கல்வி கற்பிக்கப்படுகிறது. உயர்கல்வியில் நாட்டமுள்ள மாணவர்கள் மேல்நிலைப் பள்ளி கல்லூரி / தொழிற்பயிற்சி நிலையங்கள்/பல் தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

(5) வாழ்க்கைக் கல்வி :

7.10. கீழ்க்குறிப்பிட்ட வருவாய் தரக்கூடிய தொழில் பயிற்சி இல்லவாசிகளின் இல்ல நீக்கத்திற்குப் பின் அவர்களின் மறுவாழ்விற்கு இலகுவாக அமையும் பொருட்டு அளிக்கப்படுகின்றன.

(அ) சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் காப்பகங்கள் :—

(1) தச்சு.

(2) தையல் மற்றும் பூ வேலை.

(3) நெசவு.

(4) பாய் நெசவு.

(5) கருமாரப் பணி.

(6) உலோகப் பணி.

(7) தோட்டம் மற்றும் வேளாண்மை.

(8) கொத்து வேலை.

(9) புத்தகம் கட்டுதல்.

(10) இசைக் கருவி.

(11) மாட்டுப் பண்ணை.

(12) சோப்பு தயாரிப்பு.



(ஆ) பிற்காப்பு இல்லங்கள் :—

(1) புத்தகம் கட்டுதல்.

(2) கருமாரப்பணி.

(3) தையல்.

மேற்கண்ட தொழிற் பிரிவுகளில் சென்னை அரசினர் பெண்கள் சீர்திருத்தப் பள்ளி மற்றும் தஞ்சாவூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளிகளின் தையற்கூடங்களும், செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளியின் தச்சு மற்றும் நெசவுத் தொழிற்கூடங்களும் இயந்திரமயமாக்கப்பட்டு மின் பொறிகள் உதவியால் உற்பத்தி செய்ய மாணவர்களுக்குப் பயிற்று விக்கவும் இல்ல நீக்கம் பெற்று வெளியேறி அவர்கள் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற வசதியும் செய்யப்பட்டுள்ளது. தச்சு பிரிவினை இயந்திரமயமாக்கும் திட்டம் தஞ்சாவூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளி மற்றும் இராணிப்பேட்டை அரசினர் மகளிர் காப்பகத்தில் ஒரு மின் கலவைக் கூடம் தொடங்கவும் அரசினரால் ஆணையிடப்பட்டு இத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சென்னை அரசினர் மகளிர் காப்பகம் மற்றும் ஸ்திரீ சாதனாவில் ஒரு மின்விசை சலவைத் தொழிற்கூடம் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

7.11. ஒரு குழந்தைகள் காப்பகம், சென்னை அரசினர் பெண்கள் சீர்திருத்தப் பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட மாணவிகள் இப்பள்ளியிற் பயிற்சி பெறுகின்றனர்.

7.12. சென்னை அரசினர் மகளிர் காப்பகத்திலும், ஸ்திரீ சாதனாவிலும் 20 இல்ல வாசிகளுக்கென இல்லவியல் பயிற்சி ஒன்று துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கான காலம் ஆறு மாதங்கள் ஆகும்.

7.13. பற்றவைப்பு மற்றும் உற்பத்தி தொழிற்கூடம் ஒன்றினை இராணிப்பேட்டை அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளியில் ரூ. 5.34 லட்சம் செலவில் துவங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

7.14. ஒழுக்க நெறியைப் பறிகொடுத்தவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க தமிழ்நாடு 'நவநிதி' ஒன்று துவங்க 1984-85 ஆம்

ஆண்டில் அரசினர் ஆணை பிறப்பித்துள்ளனர். இந்நிதி உதவி மகளிர் காப்பகங்களிலிருந்து விடுதலை பெறும் பெண்களுக்கு வழங்கப்படும். ஆண்டொன்றுக்கு ரூ. 5 லட்சம் தொடர் மான்ய மாக இந்நிதிக்கு வழங்கப்படும். இதில் ரூ. 2.50 லட்சம் அரசின் நேரிடை மானியமாகவும், ரூ. 2,50 லட்சம் தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதியினின்று மானியமாகவும் வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் ஐம்பது விடுவிக்கப்பட்ட இல்லவாசிகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவர். 1985-86 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

### (6) சீர்திருத்தப் பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள்

7.15. 1980—81-ம் ஆண்டு முதல் பல்வேறு சீர்திருத்தப்பள்ளி மாணவர்களுக்கு இடையே உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டியினால் மாணவர்களின் திறமை உயர்வதுடன் அவர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு, சகோதரத்துவம், தலைமைப் பொறுப்பு ஆகிய பண்புகள் வளர வாய்ப்பளிக்கப்படுகிறது.

### (7) இளங் குற்றவாளி வழிகாட்டி நிலையங்கள்.

7,16. சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய மூன்று இடங் களில் உள்ள இளங்குற்றவாளி வழிகாட்டி நிலையங்கள் இளைஞர் நீதிமன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனுப்பும் சிறுவர், சிறுமியரை பற்றிய மனநிலை அறிக்கைககளை அளித்து வருவ துடன் சிறுவர்களிடையே விளங்கும் குற்றவியல் தன்மை பற்றி ஆய்வுகளும் மேற்கொள்கின்றன, இவ்வழிகாட்டி நிலையங்கள் அருகிலுள்ள வரவேற்பு இல்லங்களின் கோரிக்கைகளை கவனிக் கின்றன. இந்நிலையங்களின் மீதான செலவினம் அரசினரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வழிகாட்டி நிலையங்கள் செயற்குழுக்களால் நடத்தப்படுகின்றன,

### (8) மறுவாழ்வு,

7.17. இல்லவாசிகள், நிறுவனங்களில் சீர்திருத்தப் பயிற்சி பெற்ற பின்னர் அவர்களை சமுதாயத்தில் அமர்த்துவதன்



மூலமாக மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. மறுவாழ்வு அளிக்கப் படும் முறைகளாவன :—

(1) விருப்பமுள்ள (ஆதரவற்ற) பெண்களுக்கு திருமண ஏற்பாடு செய்தல்.

(2) வேலைவாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தருதல்.

(3) வேலைத் திறமையுள்ள மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற தொழிற்கல்விக்கேற்ற கருவிகள் வழங்குதல்.

இத்திட்டங்கள் மூலம் விடுதலை பெறும் இல்லவாசிகள் பொருளீட்டி அமைதியாக வாழ்க்கை நடத்த வகை செய்யப்படு கிறது.

7.18. திருமணம் செய்துகொள்ளும் மணமக்களுக்கு அவர்கள் குடும்பம் துவங்க ரூ. 1,000 மற்றும் திருமணச் செலவுகளுக்கு ரூ. 100-ம் அரசினரால் வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டு களில் (1—1—1982 முதல் 31—12—1984 முடிய) 15 இல்லவாசி களுக்கு திருமணம் செய்யப்பட்டு மறுவாழ்வு அளிக்கப் பட்டுள்ளது.

7.19. சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின் கீழுள்ள சீர்திருத்த நிறுவனங்களில் இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகளின் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு அம்சமாக, சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின்கீழ் உள்ள நிறுவனங் களில் ஏற்படும் காலியிடங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின்கீழ் வராத நேரடி நியமனங்கள் அனைத்தும் அவ்வில்லவாசிகளுக்கே ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

7.20. சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண் காணிப்புத் துறையின்கீழ் தனியாக ஒரு நன்னடத்தை அலுவலர் பிரிவு செயல்பட்டு வருகின்றது. மாநிலம் முழுமைக்கும் செயல் படும் வகையில் அப்பிரிவின்கீழ் எட்டு நன்னடத்தை அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இல்லவாசிகள் சீர்திருத்த நிலையங் களில் சேருவதற்கு முன்பும், இல்லத்தை விட்டுச் சென்ற பிறகும் அவர்களை நல்வழிப்படுத்த இந்நன்னடத்தை அலுவலர்களின் பணி பயன்படுத்தப்படுகின்றது. இந்நன்னடத்தை அலுவ லர்கள் இளங்குற்றவாளிகள், பெண்கள் மற்றும் சிறுமியர் ஆகியோரின் பிற்காப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கும், முன்னாள் இல்லவாசிகளை பணியிலமர்த்த உதவுவதற்கும், இல்லவாசிகள் சமூகத்தில் நல்ல குடிமக்களாக திகழ்வதற்கும் உதவும் வகையில் பணியாற்றி வருகின்றனர்.

### (9) வரவு-செலவு.

7.21. இத்துறையின் 1985–86 ஆம் ஆண்டின் வரவு–செலவு மதிப்பீடு (பணியாளர் சம்பளங்கள் உள்ளிட்டது) ரூ. 1,79.25 லட்சம் ஆகும். மானிய உதவியாக தனியார் நிறுவனங்களுக்கு செலுத்தப்படும் தொகை ரூ. 8.37 லட்சம் ஆகும்.

### (10) புதிய திட்டங்கள்.

7.22. கீழ்க்குறிப்பிட்டுள்ள புதிய திட்டங்கள் 1985-86 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளன :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (அ) அரசினர் வரவேற்பு இல்லங்கள். மீட்பு மனைகள் மற்றும் பிற்காப்பு இல்லங்களின் இல்லவாசிகளின் உணவுச் செலவினம் மீதான வரம்பினை நீக்குதல். | 2.16 |
| (ஆ) தனியார் வரவேற்பு இல்லம் மற்றும் மீட்பு மனைகளுக்கு உணவுச் செலவினத்திற்கு வழங்கப்படும் தலா செலவினத் தொகை ரூ. 1.75-லிருந்து 2.50-க்கு உயர்த்துதல். | 0.61 |
| (இ) திருச்சிராப்பள்ளி, குழந்தைகள் உதவிச் சங்கத்தின் கீழியங்கும் வரவேற்பில்லத்தினை அரசினர் ஏற்று நடத்துதல். | 1.94 |
| (ஈ) வேலூர். வடாற்காடு மாவட்டம் குழந்தைகள் உதவிச் சங்கத்தின் கீழ் இயங்கும் வரவேற்பு இல்லத்தினை அரசினர் ஏற்று நடத்துதல். | 1.91 |
| (உ) பஞ்சப்பள்ளி, அரசினர் முதுநிலை மற்றும் இளநிலை சீர்திருத்தப் பள்ளியில் சமையலறை உணவுக்கூடம் கட்டுதல், முகப்பு வாயில் மற்றும் பழுது பார்த்தல். | 3.68 |
| மொத்தம் .. | 10.30 |



7.23. புதிய திட்டங்களை செயல்படுத்துவதன் நோக்கமாக இத்துறையின் நிறுவனங்களில் பயிலும் மாணவ மாணவியர் மற்றும் பெண்டிருக்கு விரிவான கல்வி மற்றும் தொழிற்கல்விப் பயிற்சியினை மேம்படுத்தவும், உணவுச் செலவினத்தை உயர்த்தி இல்லவாசிகளுக்கு நல்ல முறையில் உணவு வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் சில சீர்திருத்தப் பள்ளிகளில் வாழ்க்கைக் கல்வி (பயிற்சி) தொழிற்கூடங்கள் ஆகியவற்றையும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 3,50 லட்சம் மொத்த இலக்கில் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது.

136407
சென்னை-600 008

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras 3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tirunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Com pany, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Javakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores. No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1,
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Pathaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gur gaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.